**FORMULA HONDA**

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...

**ATHEESAN (SHAN) SARVANANTHAN**
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465


# தாய் வீடு

THAIVEEDU | ஏப்பிரல் 2010 | HOME & LIVING


**FREE REAL ESTATE CLASSES**

வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

**SELVA VETTYVEL**
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

## மக்கள் முகாம்களில் : அரசியல்வாதிகள் மேடையில்

# வருகிறது தேர்தல்



எங்கள் தோப்புப் பனைமரம் | மகப்பேற்றிற்குப் பின்னான மனச்சோர்வு

**RAMAN APPLIANCES**
Air Conditioning & Heating

எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்

General Contractors For:
- Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
- Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
- Security Alarm

Tel: 416.332.1989
Cell: 647.893.4414

Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
**Gary Anandasangaree**
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

**BUYING, SELLING,**
INVESTING & MORTGAGE NEEDS CALL
**SUN SANMUGATHAS**
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

Mortgage and Finangial Service
**Theven Kankesu**
Mortgage Agent
Fsco Lic#M08008759
416 939 8789
theven.kankesu@gmail.com

Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
PMCI MORTGAGE CANADA INC.
One Source For Many Type of Properties & Mortgages
**Mohan Subramaniyam**
Broker of Record
416.321.2300

**Ahilan Thanabalasingham**
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
**மகேன் சிங்கராஜா**
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002



"MAKING YOUR DREAM HOME COME TRUE"

HOMELIFE HIGHER STANDARDS

மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"



## HomeLife Today Realty Ltd., Brokerage*

*Independently Owned and Operated

31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6

Phone: 416-298-3200 Fax: 416-298-3440

Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com


Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com

### Finch/Morningside


**$439,000**
4 Bedrooms, 3 Washroom Detached Location! Location!, Brazillian Cherry Hardwood Floors, Central Vac Fenced Yard & Dishwasher.

### Kennedy / Eglinton



**$409,000**
4 Bedrooms, 3 Washroom Townhouse Double Door Entrance, Oak Staircase, Parquet Floor In Living Room, Walk Out To Deck.

### Markham/Denison



**$329,000**
3+1 Bedrooms, 3 Washrooms For A Large 3 Bdrm + Den, Incl -1 Locker, 2 Parking Spaces Ttc At Doorstep, Shopping & 5 Major Banks & Costco

### Markham/14th Avenue


**$22 / Sq.Ft**
Excellent Opportunity! New Town Square Super High Density Area Surrounded By Commercial & Residential Areas! In Brand New Plaza.

### Mavis/Derry



**$369,800**
3 Bedrooms, 3 Washroom Spacious Bright Semi In High Demand Family Neighbourhood, Close To Heartland. Hardwood Flooring & Ceramics Main Flr.

### Mavis/Sombrero



**$389,900**
3 Bedrooms, 4 Washrooms Beautiful&Sunny,OpenConcept First Flr,Oak Staircase,Stainless Steel Appliances,Huge Master Bedroom,Cathedral Ceiling

### Finch/Neilson


**$305,300**
4+3 Bedrooms,2 Washrooms Close To Schools&All Night Ttc, Separate Entrance To Bsmnt. All Appliances In 'As Is' Condition.

### Derry/Mavis


**$389,900**
3+1Bedrooms, 2 Washrooms, Hardwood On Main Floor, Close To Hwy 407,401& 410. Very Good Size Kitchen, Finished Basement.

### Mavis/Derry


**$399,900**
3+1 Bedrooms, 3 Washrooms Gorgeous Detached HomeWith Income Potential! Located In The Sought,9ft Ceiling,FreshlyPainted, Open Concept,Finished Basement

### Tapscott/Passmore


**$327,000**
3 Bedrooms, 2 Washrooms Beautiful 3 Bedroom Home, Open And Bright.Separate Entrance To Full Basement A Short Walk To School.

### Ellesmere/Military Trail


**$339,000**
3 Bedrooms, 2 Washrooms 7 Oakes Backsplit Bungalo,New, Oak Floors Through Out, Newer Kitchen,2nd Flr Bathroom,Close To 401, Ttc And Scar Campus.

### Morningside/Mclevin


**$288,000**
3+1 Bedrooms, 2 Washrooms New Roof 2007,New Kitchen With Granite Countertop 2008, NewAppliances 2007, 02 New Washrooms, New&Huge Deck.

### Markham/Highglen



**$499,900**
4+3 Bedrooms, 4 Washrooms Great House 2320-S/F As Per Builder Plan, Open Concept, Double Door Entrance, Lots Of Upgrading, Close To Shopping.

### Steeles/Mccowan


**$479,900**
4+2 Bedrooms, 4 Washrooms Excellent And Solid House, Located In High Demand Area In Markham, Prof Finished Basement With Separate Ent.

### Markham/Steeles


**$449,900**
4+2 Bedrooms, 4 Washrooms Detached House All Brick 2-Storey Home With Partially Finished Basement, Interlock Drive Way, 1 Fair To Ttc.

### Markham & 16th Avenue


**$449,000**
4 Bedrooms, 3 Washrooms Fabulous Fully Detached, Demand Location,Fabulous Price, Elegant Fireplace, & Kitchen, Walk To Markham Go Station.

### Eglinton & Brimley



**$299,999**
3+1 Bedrooms, 2 Washrooms Detached Bungalow, Newer Roof, Jacuzzi, New Fridge & Stove On M/Floor, Large Play, HouseNext To Ttc/School.

### Markham Rd/Bur Oak Ave


**$379,900**
3 Bedrooms, 2 Washrooms Semi-Detached Home In the Heart At Greensborough Open Concept Kitchen With Upgraded Cabinet & Ceramic Backsplash

### Steeles/Brimley


**$349,000**
3 Bedrooms, 2 Washrooms Detached house in demand Location, Long Driveway For 2 Car Parkingng, Renovated Countertops, Walk to Steeles.

### Church/Ninth Line


**$420,000**
3+1 Bedrooms, 3 Washrooms Fully Detached Home In Orig, 3 Bedrms Plus Fin. Bsmt, Sunny Master Bedroom, Close To School, Hospital, Viva Bus.

* 5% Down, 2.10%(Variable) Interest 35 years Amortization

Thinking of a career change?
Or just starting out in Real Estate?



www.Homelifetoday.com

HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU

Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com

VN Financial Service
Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்து-வத்தைச் சிதைத்துச் சீர்குலைப்பதற்கான சதிமுயற்சிகள் தாயகத்தில் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலைக்கு மத்தியில், எமது மக்கள் தமது வரலாற்றுக் கடமையைச் செவ்வனவே செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தமது உரிமைகளுக்காகப் போராடும் ஒரு சிறுபான்மை இனத்தில் ஏற்படுகின்ற பிளவுகள் அவர்களின் நீதியான, நியாயமான போராட்டத்தைப் பின்தள்ளிவிடும் என்பது வரலாறு பலதடவைகள் கண்ட உண்மை. இத்தகைய நிலைமை எந்தக் காரணத்தைக் கொண்டும், அந்தப் போராட்டத்திற்கு உதவப்போவதில்லை. பிளவுகள் அந்தப் போராட்டத்தை, அதன் நியாயங்களைப் பலவீனமாக்கும்.

‘எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் போதும்’ என்னும் நிலையில் பல பிரிவுகளாகத் தமிழர்கள் பிரிந்தும் பிரிக்கப்பட்டும் உள்ளனர். பல தீய சக்திகள் உள்ளும் புறமுமாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தமிழ் மக்கள் துணிச்சலுடன் பயன்படுத்த வேண்டும்! தமிழினம் ஒற்றுமையாக நின்று, தன் முன் வரும் சவால்களைச் சந்திக்கவேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்களுக்கெனக் கட்டுறுதியான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தமிழ் மக்கள் தெரிவு செய்யவேண்டும்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), கருணா (கனடா), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல், பிரணவன்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தொரன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியால் விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
ஒட்டாவா விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253


Tel : 416-646-3422, 416-400-6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

இணைந்துகொள்ளுங்கள்
‘தாய்வீடு’ facebookஇல்
www.facebook.com/thaiveedu

# தேர்தல் ஒன்று வருகிறதம்மா...
# தேடி எடுப்போம் முத்துக்கள்!!!




இன்றைய குழப்பமான அரசியற் பின்னணியில் தேர்தல் என்பது சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒன்று என்பதும், அதன் வழி பொருத்தமானவர்களையும் தேவையானவர்-களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விருப்புடன் தேர்தலை மக்கள் எதிர்நோக்க வேண்டும்.




## உயிர்த்தெழுவதற்காக உறங்கிக்கொண்டிருப்போர்

நிமால் நாகராஜா

மரணத்தை நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்க, அல்லது முற்றிலுமாக வெற்றி கொள்ளும் ஒரு யுத்தத்தை விஞ்ஞானிகள் NANO ரோபோ ஆராய்ச்சி மூலம் ஆரம்பித்து விட்டார்கள்.




## மகப்பேற்றிற்குப் பின்னான மனச்சோர்வு

புஸ்பா கனகரட்ணம்

மகப்பேற்றுக்கு பின்னால் ஏற்படும் சாதாரணமான மனச்சோர்வு நிலை பலநாட்கள், வாரங்கள் என நீடித்து அதிகரித்துக் கொண்டு வந்தால் நிச்சயம் துறைசார் உதவி பெற்ப்படல் வேண்டும்.




## சக்தி விரயங்களைத் தடுக்க Energy Audit

- பிரபா சின்னா

வேலைத்திட்டத்திற்குப் பணம் குறைவு என்று, முழுமையாக வேலை தெரியாதவர்களிடம் கொடுக்கப்படும் வேலை, எதிர்பாராத செலவுகள் செய்யவேண்டியும், திருப்தியில்லாத முடிவை பெறவேண்டியும் இருக்கும்.




## புதைந்து கிடக்கும் உயிர் கொல்லிகள்

- குமணன் தம்பிஐயா

அப்பாவி உயிர்களையும் கால்நடைகளையும் காவுகொள்ளும் இக் கண்ணிவெடிகள் மிகவும் மோசமானவையாகவும் பாதிப்புகளை அதிகம் தருவனவாகவும் காணப்படுகிறது.

விமானப் பயணம் — கந்தையா செந்தில்நாதன் — 9
உரிமைக் காப்புறுதி — கருணா கோபாலபிள்ளை — 11
உணவுப் பழக்கமும் தெரிவும் — சிவாஜினி பாலராஜன் — 13
புதிய வீடுகள் — வேலா சுப்ரமணியம் — 19
மார்பகத்திற்கு மசாஜ் — சசி நரேன் — 21
வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் நிர்ணயித்தல் — செந்தூரன் புனிதவேல் — 23
உங்கள் வீட்டை விற்பது எப்படி? — S.K. பாலேஸ் — 27
கோளாறுக்குள்ளாகும் புதிய வாகனங்கள் — சிவ பஞ்சலிங்கம் — 38
தீராத சுவாசத் தடை நோய் — கந்தையா பரநிருபசிங்கம் — 41
கேரள மக்களின் வாழ்க்கையும்... — மாறன் செல்லையா — 46
குழந்தைகள் மீதான கொடுமைகளும் பின்விளைவுகளும் — மஞ்சுளா ராஜலிங்கம் — 48
நவீன இதழியலின் முகங்கள் — சேரன் — 61
நாடகத்தின் வேரும் வளர்ச்சியும் — ஞானம் லேம்பட் — 73
எங்கள் தோப்புப் பனைமரம் — பொ.கனகசபாபதி — 79
தமிழ் எழுத்துக்கள் கல்லில் இருந்து கணினி வரை — பொன் பாலராஜன் — 80

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# தேர்தல் ஒன்று வருகிறதம்மா... தேடி எடுப்போம் முத்துக்கள்!!!

- அ. கணபதிப்பிள்ளை -

பொதுத்தேர்தல் வருகிறதென்றாலே எல்லோருக்கும் குதூகலம்தான். கொடிகள் கட்டுவதும் கோஷங்கள் போடுவதும், வீடு வீடாகச் சென்று குசலம் விசாரிப்பதும் பொதுக்கூட்டங்களுக்கு ஆட்சேர்ப்பதும் அவர்களைக் கொண்டுசென்று இறக்குவதும் மேடைகள் போடுவதும் நையாண்டியாகப் பேசுவதும் மதிற்சுவர்களில் எழுதுவதும் வாக்குவாதப்படுவதும் வழக்கமாகி விடுகிறது.

ஆட்சியிலிருப்பவர்களுக்கு இத்தேர்தல் ஒரு மதிப்பீட்டுக் காலம். பாராளுமன்றக் கதிரைகளை மீண்டும் கைப்பற்றிவிட வேண்டும் என்ற தீர்மானத்தில் விசிறிவிடப்படும் உறுதி மொழிகள் எங்கும் புத்தகவடிவிலும் துண்டுப் பிரசுரங்களாகவும் மலிந்து கிடக்கும். தேர்தல் நியமனத்துக்குத் தங்களைத் தயாரித்து அதில் தோற்றுப் போனவர்களும் வெற்றிபெற்றவர்களும் தங்களிடையிலான மனக்கசப்புக்களை ஓரளவு மறைக்கமுயன்று கொண்டிருக்கும் வேளையிது. புதிய அணியில் சேருவதும் புதிய அணியை உருவாக்குவதும் பழைய சித்தாந்தந்தங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதும் புதிய சித்தாந்தங்களை உருவாக்குவதும் ஆகிய தேர்தற் செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்தும் அங்கத்தவர்களை மிகவும் சுறுசுறுப்பாக இருக்கச் செய்யும் தேர்தல் காலத்தின் கடைசி வாரங்களை நோக்கி நடைபோடுவது பல சுவையான நிகழ்வுகளைக் காணவைக்கும் காலமாகும்.
மாதமோ ஏப்பிரல். சூரியனின் நேர்க்கிரணங்கள் தலையில் பட்டு சோம்பலை வரவழைக்கும் மாலைப் பொழுதுகள். பங்குனி மாதம் பகல் வழிபோறவரைப் பார்ப்பதும் பாவம் என்று பகலை விலக்கி வைக்கும் காலத்திலும் தேர்தல் மும்முரத்தில் ஈடுபடும் சளைக்காத கட்சி அங்கத்தவர்கள். புதுவருடப்பிறப்பை எதிர்பார்த்துப் புது அங்கத்தவர்களைத் தெரிந்தெடுக்கத் தேடி ஓடும் வாக்காளப் பெருமக்கள். அவர்களைக் கவர்ந்திழுக்க எந்த வழியையுமே பின்பற்றத் தயங்காத கட்சித்தலைமையும் தேர்தற் செயலாளர்களும். எப்படி மக்களை கவர்ந்து தங்கள் பக்கம் இழுக்கலாம் என்று திட்டம்போட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கிறவர்களின் இரவுபகல்கள் கால இலக்கு நோக்கி மெல்ல நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தேர்தலில் யாரைத் தெரிந்தெடுக்கலாம் என்ற குழம்பிய சிந்தனையுடனும் கோட்பாட்டுக்கும் யதார்த்தத்துக்கும் இடையே போராடிக் கொண்டிருக்கும் மகாஜனங்களுக்குத்தான் இது கடினமான காலம், மூச்சடக்கி முத்தெடுக்கும் முக்கியமான காலம். வாய்மூடி மௌனியாகி மனத்திலுள்ளதை மறைமுகமாகப் புள்ளடியாக்கிவிட்டு அடுத்த ஆறாண்டு காலத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிட வைக்காத பொருத்தமான செயலைச் செய்தோம் என்ற பெருமிதத்துடன் தேர்தல் சாவடிகளைவிட்டு வெளியேறும் காலம் மக்களின் பொற்காலப் பொழுதுகள்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் 14ஆவது பொதுத்தேர்தல் ஏப்பிரல்மாதம் 8ஆம் திகதி 2010இல் இலங்கை முழுவதற்குமாக நடைபெறவிருக்கிறது. இலங்கைப் பாராளுமன்றத்தில் 225 அங்கத்தினர் இடம் பெறுகிறார்கள் 196 அங்கத்தவர்கள் தேர்தற் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டும். 29பேர் தேசியப் பட்டியலிலிருந்தும் நியமனமும் செய்யப்படுவார்கள். 1978 செப்ரெம்பர் 7இல் 14வது திருத்தச் சட்டத்தின்மூலம் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த தேசியப்பட்டியல் நியமன முறையானது இன்று எத்தனையோ பேருக்கு மந்திரிப் பதவிகளையும் ஆட்சியைத் தக்க வைக்கும் வாய்ப்பையும் கொடுக்கிறது.

> “இன்றைய குழப்பாமான அரசியற் பின்னணியில்
> தேர்தல் என்பது சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒன்று.
> அதன் வழி
> பொருத்தமானவர்களையும் தேவையானவர்களையும்
> தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விருப்புடன்
> தேர்தலை
> மக்கள் எதிர்நோக்க வேண்டும்.”

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை நடைமுறைக்கு வந்ததும் இலங்கையில் தேர்தல் நடைமுறையில் மக்களின் முழுப்பங்களிப்பு இருப்பதாகவே கருதப்பட்டது. ஒரு குழுவினர் பெறும் மொத்த வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கான பிரதிநிதித்துவமும் தேசியப் பட்டியல் அங்கத்தினர் ஒதுக்கீடும் அமைந்திருக்கும். இது தனித் தேர்தல் தொகுதி அங்கத்தினர் தெரிவு முறையிலிருந்து வேறுபட்டது. குறிப்பாக அங்கத்தினர் பெரும்பான்மை வாக்குப்பெறுவதற்கு ஏற்ப அவரின் பாராளுமன்ற ஆசனம் உறுதிப்படுத்தப்படுகிறது. அத்துடன் இம்முறைமூலம் நாடு தழுவிய வாக்களிப்பில் குறைந்த சதவீத வாக்குகளைப்பெற்ற கட்சியானது கூடப் பதவியினைப்பெறக்கூடிய வாய்ப்பிலிருந்தது, விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையில் அத்தகைய நடைமுறை இருப்பதில்லை.

எதிர்வரும் 6 வருடங்களுக்கு 196 பேரைத் தெரிந்தெடுக்க நடக்கும் தேர்தலில் 7620 பேர் போட்டியிடுகிறார்கள். இதில் ஒன்பது மாகாணங்களுக்கும் 4 பேர் வீதம் 36 பேரும் மொத்தச் சனத்தொகை அடிப்படையில் 160 பேருக்கான ஆசனங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 22 தேர்தல்கள் மாவட்டத்தில் 38 கட்சிகளும் 310 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தலில் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படும் கட்சிகள் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி, ஜனநாயக தேசியமுன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளடக்கிய அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவையாகும். இக்கூட்டுக்கள் தனியாக இயங்கும் காரணத்தினால் இவை பெறப்போகும் மொத்த வாக்குகளும் அவற்றின்மூலம் பெறப்படும் ஆசனங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கை பலகட்சிமுறை கொண்ட ஜனநாயக நாடாக இருக்கின்ற பொழுதிலும்கூட தொடர்ந்து இரு கட்சி ஆட்சிமுறைதான் நடை முறையிலிருக்கிறது எனக் குறிப்பிட முடிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி இரண்டும் காலத்துக்குக் காலம் தமது நிலையினைப் பலப்படுத்திக்கொள்ள ஏனைய சிறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொள்வதும் அதன்வழி ஆட்சி அமைத்துக்கொள்வதும் நடைமுறையில் இருந்து வருகிறது. பல சிறுபான்மைக் கட்சிகளை ஆட்சியில் சேர்த்துக்கொள்ளுவதன்மூலம் தேசிய அரசாங்கம் என்ற கோட்பாட்டை இன்னமும் இலங்கை அரசு பின்பற்றி வருகிறது. பல்வேறு புற அழுதங்களுக்கு முகங்கொடுப்பதற்கும் ஒற்றுமைப்பட்ட இலங்கையில் ஒற்றையாட்சிமுறையின் கீழ் திருப்தியான ஆட்சி நடத்தப்படுவதாகக் காட்டப்படுவதற்கும் இத்தேசிய அரசாங்கம் என்ற கொள்கை உதவி புரிவதாக இருந்திருக்கிறது.

இரு கட்சி முறையில் ஒரு கட்சி மிகப் பெரும்பாலான அங்கத்தவர்களைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டவிடத்தும்கூட விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் தேசியப் பட்டியலும் இணைக்கப்படுவதற்மூலம் சிறுபான்மை இனத்தவருக்கு மந்திரிப் பதவிகளையும் அங்கத்துவத்தையும் வழங்குவதன் மூலம் தேசிய அரசாங்கம் என்ற கருத்தினை வரியுறுத்திக் காட்டுவதற்கு இருகட்சி அரசியல் முறை தனது பங்களிப்பினைச் செய்து வந்திருக்கிறது. இருகட்சியாட்சி முறையில் தொடர்ந்து செல்வாக்கும் குடும்பப் பாரம்பரியமும் கொண்ட கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களின் வாரிசுகளே பிரதமர்களாக வருகின்ற வாய்ப்பினைப் பெறுகின்ற நிலைமை தான் தொடருகின்றது. அதற்கு உதவுவதாகவே விகிதாசார பிரதிநிதித்துவ வாக்களிப்பு முறையும் அமைந்திருக்கிறது.

உண்மையில் விகிதாசாரம் பிரதிநிதித்துவ வாக்களிப்பு முறைமூலம் பாராளுமன்ற அங்கத்துவத் தெரிவில் மாற்றத்தை ஏற்படுத்த மக்களுக்கு வாய்ப்புக்கள் இருக்கின்றபொழுதிலும்கூட ஆட்சி மாற்றம் என்பது இது அல்லது அது என்ற வரையறைக்குள் கொண்டுவரப்படுவதனால் நீண்ட காலமாக இலங்கை மக்கள் அதற்குத் தங்களை இனமாக்கிக்கொள்ளுகிறார்கள் என்ற நிலைமையே தொடர்கிறது.

மக்கள் ஐக்கிய முன்னணி, ஹெல உறுமய போன்ற கட்சிகளின் எழுச்சி குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தையே உள்வாங்கியிருந்தமை கடந்த தேர்தலில் காணமுடிந்தது. குறிப்பாக 2004ல் ஹெல உறுமய 9 அங்கத்தினரைப் பெற்றிருந்தது. மக்கள் ஐக்கிய முன்னணி மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் இணைந்திருந்தால் 12 பேரை அக்கூட்டுக்கு அதிகமாகப் பெற உதவி செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலத் தேர்தல்களில் தேர்தல்கூட்டு மிகவும் முக்கியமாகவிருந்தது. இலங்கைப் பாராளுமன்ற ஆட்சியில் காலத்துக்குக் காலம் பொதுப்பிரச்சினைகள் முக்கியம் பெறுவது வழக்கம். கடந்த முப்பது வருடங்களாக விடுதலைப்புலிகளை அழிப்பது, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற இரு கொள்கைப் பிரகடனங்கள் முக்கியம் பெற்றிருந்தன. பொருளாதார வளர்ச்சி என்பதற்குப் பதிலாகப் போருக்கான நிதி ஒதுக்கீடுதான் அதிகமாக இருந்தது. மக்கள் போர் என்ற மாயையினுட் தள்ளப்பட்டு பொருளாதார இக்கட்டுக்களைச் சமாளித்து நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தினுள் தள்ளப்பட்டிருந்தார்கள். இந்நிலையில் புலி எதிர்ப்பாளர்கள் கட்சி பேதமின்றி ஒன்றுபட்ட குழுவாக மாறிய நிலை உருவாக்கம் பெற்றது. இரு கட்சி ஆட்சிமுறையின் கீழும் இரு தேர்தற்கூட்டுக்களே பரிணாமம் பெற்றிருந்தன. இலங்கையில் இரு கட்சிமுறை ஆட்சியிலிருப்பதும் தேசிய அரசாங்க உத்திகளும் சிறுபான்மையினரைக் கவர்ந்திழுக்கும் முயற்சிகள் நடைமுறையில் இருந்த பொழுதிலும்கூட மூன்றாவது பெரிய அணியின் செயற்பாடு இடம்பெற்றிருப்பது நீண்ட காலமாக நடைமுறையிலிருந்து வருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தாலும் அதன்கூட்டும் அதில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களும் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற அரவிலக்கணத்தைப் பெற்றிருந்தனர். விடுதலைப்புலிகளைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக வரையறை செய்திருந்த தமிழர்கள்கூட தமிழர் கூட்டணி அங்கத்தவர்களைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக அங்கீகரித்திருந்தார்கள். இதன் மூலம் இலங்கையில் தேர்தல்காலங்களில் மூன்றாவது முக்கியத்துவம் வாய்ந்தவிடயம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதனைச் சிங்கள மக்களுக்கும் தெளிவுபடுத்துவதாக அந்தக் கூட்டு அமைந்திருந்தது.

தமிழர் கூட்டமைப்புப் பெற்றிருந்த 6.84 வீத வாக்குகளைப் போல் ஜாதிக ஹெல உறுமயவும் 5.97 சதவீத வாக்குகளைப் பெற்று வளர்ச்சியடைந்தமை நாலாவது முக்கியத்-



5ம் பக்கம் பார்க்க...

துவம் வாய்ந்த விடயம் தீர்க்கபட வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டியிருந்தன. புலி எதிர்ப்பு, பயங்கரவாத்துக்கெதிரான போர், தமிழருக்கான சுயநிர்ணயம், சிங்களமும் பௌத்தமும் பாதுகாப்பும் ஆகிய நாலு விடயங்களினால் பொருளாதார அபிவிருத்தி, மக்கள் மேம்பாடு என்பன பின்தள்ளப்பட்ட விடயங்களாகவே இருந்து வந்தன.

தேர்தலில், முன்னர் ஐக்கியதேசியக்கட்சி மூன்றின் இரண்டு பங்கு அங்கத்தவர்களைப் பெற்று அரசியற் திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்ததுபோல் இம்முறை சுதந்திரக் கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையினைப் பெற்று அரசியற் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதனை மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது. 13வது திருத்தச் சட்டத்தில் தமிழ் ஆட்சிமொழி, ஆங்கிலம் இணைப்புமொழி, மாகாண சபைகள் உருவாக்கம் என்பன இடம்பெற்றிருந்தன. 1987 நவெம்பர் 14ஆம் திகதி உருவாக்கப்பட்ட இத் திருத்தம் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்டிருந்தாலும், இதுவரை அதன் உட்கிடக்கைகள் சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தலையிடியாகவே இருந்தது. நீதி மன்றத்தின் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. 1988 டிசெம்பர் 17இல் உருவான 16வது திருத்தச் சட்டம் நிர்வாகம் தொடர்பான மாற்றத்துக்கு அத்திவாரமிட்டது. இத்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஒரு திடமான அத்திவாரம் இடப்பட வேண்டும் அதற்காக வடக்கு கிழக்கு இணைந்த மாகாண நிர்வாக அலகு உருவாக்கம் பெறப்பட வேண்டும் என்ற அவசியம் மக்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

நடைமுறை அரசாங்கம் கேட்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பிரதிநித்துவம், நடப்பிலிருக்கும் அரசியற்திட்டத்தில் மாற்றம் எற்படுத்த வேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு ஒப்பாக அமையும் என்ற கரிசனை முக்கியம் பெறுகிறது. அரசியற் திட்டத்தில் மாற்றம் எதனை அடிப்படையாகக் கொண்டது? முன்னரே கொண்டுவரப்பட்டிருந்த சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதா, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை நீக்குவதா, விருப்பு வாக்கு முறையினால் ஏற்படும் சிக்கல்களான கட்சி விரும்பாதவர்கள் முன்னிலைக்குக் கொண்டுவரப்படுதல், பணமுள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெறுதல் ஆகியனவும் ஒழிக்கப்படுதல், தேசியப் பட்டியல் என்ற பெயரில் உள்நுளைவுகள் என்பனவெல்லாம் நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டாலும் இன்னமும் எத்தனை வெளித்தெரியாத விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்ற வினா எழாமல் இருக்க முடியாது. நல்லன நடக்கும் என்ற உறுதிப்பாட்டாளர்கள் இப்பெரும்பான்மையால் கொண்டுவரப்படும் மாற்றம் சிறுபான்மையினரின் விருப்பு வெறுப்புக்கெதிராகப் பயன் படுத்தப்படமாட்டாது என்பதனை அடிநாதமாகக் கொண்டிருப்பார்கள்.

இலங்கையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் வடக்குக்கிழக்கு மலையகம் கொழும்பு ஆகிய பகுதிகள் முக்கியமாக அவதானிக்கப்படுவதாக உள்ளன. யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை (திகாமடுல்ல) ஆகிய தேர்தல் மாவட்டங்களும் மலையக மாவட்டங்களான நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை என்பனவும் கொழும்பு மாவட்டமும் தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உள்ளார்ந்த வளம் கொண்டவை.

அம்பாறையில் 7 பேரும் யாழ்ப்பாணத்தில் 9 பேரும் வன்னியில் 6 பேரும் திருகோணமலையில் 4 பேரும் மட்டக்களப்பில் 5 பேரும் தெரிவு செய்யப்படவேண்டும். அத்துடன் அக் கட்சிகளுக்கான தேசியப்பட்டியல் அங்கத்தவர்களும் நியமனம் பெறவிருக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் அதிகளவில் கட்சிகளும் சுயேட்சையாளர்களும் போட்டியிடுகிறார்கள். என்ற நிகழ்வு முக்கியத்துவம் பெறுகிறது. தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்ட (கிடைத்த) சுதந்திரம் இது அதை அனுபவிக்கிறார்கள் எனக் குறிப்பிடுவதா, தமிழர்களிடையிலான சித்தாந்தம் பரந்துபட்டுவிட்டதா, தமிழர் வாக்குகள் குளப்பப்படுகின்றனவா, தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கையின் தேசியக் கட்சிகள் ஆதிக்கம் பெற்றுவிட்டனவா, போட்டியாளர் / வேட்பாளர்கள் விலைக்கு வாங்கப்பட்டு விட்டனரா அல்லது தமிழர்களிடையே ஒற்றுமை இன்மையா என்ற வினாக்களுக்கு விடை தேட முனைவது இத்தகைய பல்வழிப் போட்டிகளுக்கு விளக்கத்தைக் கொடுக்கும்.

யாழ்ப்பாணத்தில் 15 கட்சிகளும் 12 சுயேட்சைக் குழுக்களுமாக 324 பேர் போட்டியில் குதிக்கின்றனர். வன்னியில் 11 கட்சிகளும் 9 சுயேட்சைக் குழுக்களும் 306 பேர் குதித்திருந்தனர். மட்டக்களப்பில் 17 கட்சிகளும் 27 சுயேட்சைக் குழுக்களுமாக 217 பேரும் அம்பாறையில் 17 கட்சிகளும் 49 சுயேட்சைக் குழுக்களுமாக 660 பேரும் போட்டியிடுகின்றனர். இது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பல்கோட்பாட்டுக் கலாசாரப் பின்னணியைப் பிரதிபலித்துக் காட்டி நிற்கிறது.

இந்தத் தேர்தலில் மேலே குறிப்பிட்ட நான்கு கூட்டுக்கள் முக்கியம் பெற்றிருந்தாலும் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை தமிழர் விடுதலைக் கூட்டணியான தமிழரசுக் கட்சிதான் முக்கியப்படுத்தப்படும் நிலை தோன்று கிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூட்டணியின் செல்வாக்கை எதிர்த்து நின்று போட்டியிட்ட சிவாஜிலிங்கம் 9,662 வாக்குகளையும், இடதுசாரியான விக்கிரமபாகு கருணாரத்தின 7,055 வாக்குகளையும் தொழிலாளர் கட்சி 14,220 வாக்குகளையும் பெற்றிருந்தமை சிறுகட்சிகளுக்கும் சுயேட்சைகளுக்கும் இந்தத் தேர்தலில் அதிகவாக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையைப் பொய்யாக்கிவிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செய்வது சரியா என்ற வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழியில்தான் தமிழர்கள் ஆயுதவழியிலும், அறவழியிலும் ஒன்றுபட்டிருந்தார்கள். அதனால் அவர்களது கொள்கையில் எந்த வெறுபாடும் ஏற்படப்போவதில்லை என்ற உண்மை அவர்களுக்குப் பலமாக இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை தனிநாடு, சுயாட்சி, சுயநிர்ணயம் என்ற பெரிய கோட்பாட்டுடனான நிர்வாக அலகைக்கொண்டதாக இருந்தாலும் தமிழரசுக்கட்சியின் சமஸ்டிமுறையினை அத்திவாரமாகக் கொண்டிருந்தவை அவை.

சமஸ்டியையும் (கூட்டாட்சி) தனிநாட்டுக் கோரிக்கையினையும் புறந்தள்ளிவிட்ட இராஜபக்சவும் அவரது சகாக்களும் அதிகாரப் பரவலாக்கம் என்ற ஒரு அடிப்படை நோக்கத்துக்கு எதிரானவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளவில்லை. கூட்டணியினர் ஒன்றுபட்டுக் காட்டப்போகும் வெற்றியானது அதிகாரப் பரவலாக்கத்துக்கான அவசியத்தை வெளி உலகுக்குக் காட்ட உதவும் என்ற நம்பிக்கை தமிழர்களிடையே இருப்பது தெரிந்தது.

சுயேட்சைக்குழுக்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதவரையில் தேர்தலின் பன்முகப் போட்டி இருக்கும் என்பது வெளிப்படை. செல்வாக்கான பலரை இத்தேர்தல் உள்ளுக்கு இழுத்திருக்கிறது. இது கடந்த தேர்தல்போல் 22 இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை இக்கூட்டணிக்குக் கொடுக்கா விட்டாலும் கணிசமான அளவு வெற்றியினை அவர்கள் பெறக்கூடும் என்பதனையே இந்த நான்கு கூட்டுக்களின் வரலாற்றுத் தன்மை வெளிக்காட்டி நிற்கிறது.

நீண்ட காலமாகத் தமிழர்கள் எதனை விரும்புகிறார்கள் என்று வெளியே சொல்லப்பட்டு வந்தாலும் இன்றைய குழப்பாமான அரசியற் பின்னணியில் தேர்தல் என்பது சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒன்று என்பதும் அதன் வழி பொருத்தமானவர்களையும் தேவையானவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விருப்புடன் தேர்தலை மக்கள் எதிர்நோக்க வேண்டும்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

J & S ACCOUNTING SERVICE
INCOME TAX SPECIALIST
J&S
FOR ALL YOUR PROFESSIONAL ACCOUNTING SERVICE
* CORPORATE TAX
* PERSONAL TAX
* BOOKKEEPING
* HST FILING
* PAYROLL SERVICE
* FINANCIAL STATEMENT PREPARATION
* BUSINESS START UP ASSISTANCE
* BUSINESS REGISTRATION
* INCORPORATING A BUSINESS
* PREPARING BUSINESS PROPOSAL
* BUSINESS VALUATION
* CRA AUDIT REPRESENTATION
* GST / PST / WSIB RETURNS
* CORPORATE TAX PLANING AND PREPARATION
INCOME TAX & RRSP
FREE CONSULTATION WITH APPOINTMENT
J&S ACCOUNTING SERVICE
15 YEARS OF EXPERIENCE
PLEASE CALL:
JEYA PILLAI, CGA
OR SUE SRI, CMA
Excellence! SERVICE
Tel: 416-826-5306
Email: jsaccountingservice@hotmail.com

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

**பெகோனியா / Begonia**
செல்லையா சந்திரசேகரி 14

**வாடகைக்கு விடுவதற்கு முன்...**
கிருபா கனகசபை 24

**மருத்துவக் கேள்வி பதில்**
இராஜசேகர் ஆத்தியப்பன் 28

**பங்குச்சந்தையில் முதலிடுவது எப்படி...?**
கண்ணன் காங்கேசு 30

**ஆயிரம்... ஆண்டுகள் வாழும் ஆவணப்படுத்தல்...**
ராகவன் 32

**வங்குரோத்து நிலை..**
வி. சிறி 37

**ஆடாத ஆட்டமெல்லாம்**
திரு மகேசன் 44

**Financial Planning And Time Management**
சக்திவேல் 47

**மீராப் பாட்டி**
குமார் புனிதவேல் 56

**Ontarioவின் புதிய வரியும் பொருளாதாரமும்**
அலன் சிவசம்பு 57

**நாம் தேடும் ஒருவர்**
சாந்தி அரவிந்தன் 58

**தெரிந்து கொண்டு முடிவெடுத்தல்**
ராகுலன் 59

**கண்டியின் கடைசித்...**
பொன் குலேந்திரன் 62

**"தாய்வீடு" ஒன்றுகூடல்**
கந்தசாமி கங்காதரன் 69

**சிந்திக்கச் சில நிமிடம்**
கதிர் துரைசிங்கம் 70

**நானும் ஒரு 'கலாபூக்ஷணம்'தான்!**
'சோக்கெல்லோ' சண்முகம் 70

**சிந்துவெளி நாகரீகம்**
முருகேசு பாக்கியநாதன் 74

**"ஆண்மீகம்" மட்டுமல்ல ஆன்மீகம்**
சத்குரு வாசுதேவ் 76

**ஒஸ்கார் விருது விழா**
குரு அரவிந்தன் 77

**ஏறாவூரில் றெயினில் ஏறியவர்கள்**
கே.எஸ். பாலச்சந்திரன் 82

**மறக்கமுடியாத ஆசிரியர்கள்**
அ.முத்துலிங்கம் 87

**கப்பல், சமுத்திரம், பெண்**
தேவகாந்தன் 89

**இயற்கையைப் பேணிய இதயங்கள்**
வி. கந்தவனம் 92

**'பொப்பிசைத் திலகம் எஸ். இராமச்சந்திரன்**
ப.ஸ்ரீஸ்கந்தன் 94

**நகைச்சுவைக்கலைஞர் 'கிளவுன்' சுந்தரம்**
ஏ.எஸ். மகாலிங்கம் 97

**தவணைக் காப்புறுதி**
சிறீதரன் துரைராஜா 99

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***






**HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE***

Independently owned and Operated REALTOR ™

31 Progress Avenue Suite 210 ★ Toronto, ON M1P4S6

Phone: 416-298-3200

| Win.Church/Britannia | Mavis/Bristol | Taunton/Baycliffe |
|---|---|---|
|  |  |  |
| $340,000 | $379,900 | $384,900 |
| 3 Bedrooms, 3 Washrooms Semi-Detached, Well Maintained Home. Hardwood & Ceramic On The Gr Floor. BstAppartment, Sep Entrance. | 3 Bedrooms, 4 Washrooms Townhome-City Classified As a Semi. Professionally Finished Basement Transit. Close To Hwy 401/403. | 4 Bedrooms, 3 Washrooms About Less 5 Years. Fully Detached, All Brick.2 Staircase To Basement. Excellent Location! |
| 9th Line/ Hooverpark | Wilson & Coldstream | Promotional Offer 2010! |
|  |  | For all my Buyers & Sellers I will pay Your Lawyer Fee & Moving Expense* |
| $394,900 | $425,000 | |
| 3 Bedrooms, 3Washrooms Fabulous Detached Home In Desirable Area Of Stoufville. Modern Large Eat-In Kitchen W/Breakfast Bar, Backsplash. | 4 Bedrooms, 4 Washrooms Elegant 18Mths Old Home With Stripped Oak Flooring On Main Fl and Stairs, Italian Tiles, Walnut Cabinetry. | |

**VALLIKKANNAN MARUTHAPPAN**
Salesperson
DIRECT:
416-623-4989/416-880-6051

ALPHAWEB SOLUTIONS.CA / PHONE: (416) 238-7288

* 5% Down, Current Variable Rate and 35 years Amortization

* Some conditions apply - Offer ends at December 31, 2010.
** Not intended to solicit buyers or sellers already under contract

# RBC MORTGAGE SPECIALIST



- 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
- Switch your mortgage to RBC and save
- We will pay your legal & Switch fees on Switches*
- Builder rate hold up to 18 months
- Cash back options available*
- New Immigrants Programs
- Self-Employed? No income verification*
- Consolidate your debts to one low monthly payment

As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the **time** and **place** that is **convenient** for you.

**Ram Krish**
Mobile Mortgage Specialist

Tel: **416-526-4996**

Email: ram.krish@rbc.com

RBC

* Some conditions apply.



- digi Media -

# உயிர்த்தெழுவதற்காக உறங்கிக்கொண்டிருப்போர்



நிமால் நாகராஜா

இடம்: அமெரிக்க மாநிலமான *ARIZONA* இலுள்ள *Scottsdale* எனும் நகரம்.

பூச்சியத்திற்கு கீழே 200°c குளிரில், நைட்ரஜன் கலவையினுள் மீண்டும் உயிர்த்தெழுவதற்காய் தூங்கிக் கொண்டிருக்கும் 93 மனிதர்கள். இவர்கள் எல்லோரும் மிகப்பெரிய தொகையினை ALGOR எனும் அமைப்பிற்கு செலுத்தியவர்கள். தங்கள் இறப்பின் பின் கவனமாக பதனம் செய்யப்பட்டு உறக்க நிலையில் இருப்பவர்கள். தங்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு தொழில்நுட்பம் எதிர்காலத்தில் வரும் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இடம்: கனடா, மொன்றியல் நகரிலுள்ள *E'COLE* தொழில் நுட்ப கல்லூரியின் ஓர் பரிசோதனைக் கூடம்.

பரிசோதனை உபகரணம் ஒன்றில், ஐயாயிரம் பக்ரீரியாக்கள் போர்வீரர்களைப் போல் கட்டளைக்காக அணிவகுத்து காத்து நிற்கிறார்கள். காந்த விசையினால் கட்டுப்படுத்தப்படக்கூடிய இந்த சின்னஞ்சிறிய தொழிலாளர்களின் வேலை ஒரு நுண்ணிய பிரமிட்டை கட்டிமுடிப்பது தான். விஞ்ஞானிகள் கணணி ஒன்றினால் காந்த விசைகளை திசை திருப்பி இந்த பக்ரீரியாக்களை அசையச் செய்கின்றார்கள். சின்னஞ்சிறு துணிக்கைகளை இந்த பக்ரீரியாக்கள் தூக்கிச் செல்கின்றன. 15 நிமிட நேரத்தில் பிரமிட் கட்டி முடிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு இடங்களிலும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று பெரிதும் தொடர்புபட்டவை அல்ல. முதலாவது CRYOGENIC எனப்படுகின்ற இறந்த மனிதர்களை மீண்டும் உயிர் பெறச் செய்யலாம் என்ற நம்பிக்கை சம்பந்தப்பட்டது. இரண்டாவது எதிர்காலத்தில் மருத்துவ உலகில் சாதனைகள் செய்ய பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்ற NANO ROBOTS எனப்படுகின்ற சின்னஞ்சிறு ரோபோ பற்றிய ஆராய்ச்சி சம்பந்தப்பட்டது. அப்படியானால் NANO ROBOTSஇற்கும் CRYOGENIC கொள்கைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? மீள் எழுதலுக்காய் காத்திருக்கும் அந்த மனிதர்களின் எதிர்பார்ப்பு எல்லாம் NANO ரோபோ ஆராய்ச்சிகள் மிகப் பாரிய வெற்றியை பெற வேண்டும் என்பது தான். இந்த விசித்திரமான நம்பிக்கை பற்றி விளங்க வேண்டும் என்றால், முதலில் நாங்கள் NANO ரோபோக்களை பற்றி சற்று தெரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக மருத்துவ உலகில் புற்று நோய் ஒரு சவாலாக இருந்து வருகின்றது. இந்நோய்க் கிருமிகளை அழிப்பதற்கு பல்வேறு முறைகளை கைக்கொண்ட போதிலும் எவையும் மிகப்பெரிய வெற்றியைத் தரவில்லை. புற்று நோய்க்கிருமிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக தாக்கி அழிப்பதே நிலையான வெற்றியாக அமையக் கூடும். இதற்கு மிகச் சின்னஞ்சிறிய, நுண்ணிய போர்வீரர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் தோள்களில் மருந்துகளை தூக்கிக் கொண்டு நோய்க்கிருமிகளை தேடிச் செல்வார்கள். காணும் இடங்களில் எல்லாம் கிருமிகளை அழிக்கத் தொடங்குவார்கள். இவ்வாறான போர் வீரர்கள் NANO ரோபோக்கள் எனப்படுகிறார்கள். ஒரு NANO என்பது ஒரு மீற்றர் நீளத்தை ஒரு பில்லியனால் பிரிக்க வருகின்ற நீளம் ($10^{-9}$ m). இந்த ரோபோக்களை, கலங்களில் சத்திர சிகிச்சை செய்வதற்கும், கலங்களை சீர்செய்வதற்கும் கூட பயன்படுத்தலாம். மேலே சொல்லப்பட்ட ஐயாயிரம் பக்ரீரியாக்களும் இவ்வகையான ரோபோக்கள் தான். இந்த NANO ரோபோ ஆராய்ச்சிகள் இன்னும் மிகவும் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தாலும், எதிர்காலத்தில் இந்த தொழில்நுட்பம் பெரு வெற்றியளிக்கும் என்றே விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

சரி, இப்போது CRYOGENIC கொள்கை பற்றி சற்றுப் பார்ப்போம். இதை அறிவதற்கு முன்னால் நாங்கள் இறப்பு என்றால் என்ன என்பதற்கு சரியான வரைவிலக்கணத்தை சொல்ல விட வேண்டும். நீண்ட நெடுங்காலமாக இறப்பு என்றால் மூச்சு நிற்பதுதான் என்று நம்பப்பட்டு வந்தது. அறிவியல் வளர வளர மூச்சு மட்டும் நின்றால் போதாது, இதயமும் இயங்குவதை நிறுத்தினால் தான் மரணம் என்று வரையறுக்கப்பட்டது. தற்போது இவை இரண்டும் மட்டும் போதாது, மூளையும் தனது செயல்பாட்டை நிறுத்தினால் தான் முற்று முழுதான மரணம் என திட்டவட்டமாக கருதப்படுகிறது. ஆனால் CRYOGENIC கொள்கையானது இதையும் மறுதலிக்கிறது. இக்கொள்கையின்படி ஒருவருடைய நீண்டகால நினைவுகள், அவருடைய ஆளுமை பற்றிய தரவுகள் எல்லாம் மூளையின் ஒரு விசேட பகுதியிலேயே சேமித்து வைக்கப்படுகின்றன. மூளை தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டவுடனேயே இத்தரவுகளும் அழிந்து போவதில்லை (இதை தற்போதைய மருத்துவ விஞ்ஞானமும் ஒத்துக் கொள்கிறது). மாறாக இந்தத் தரவுகள் நீண்ட நேரத்திற்கு மூளையில் அப்படியே இருக்கின்றன. இந்த தரவுகளும் அழிந்து போனால் மட்டுமே முற்றுமுழுதான மரணம் என்று இவர்கள் வாதாடுகிறார்கள். இந்த தரவுகள் அழிய முன்பு உடலை பதனம் செய்துவிட்டால், ஏதோ ஒரு எதிர்காலத்தில் புதிய தொழில் நுட்பம் இவர்களை உயிர்த்தெழ வைத்துவிடும் என்று நம்புகிறார்கள். இப்போது நாங்கள் எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கும் இறப்பு உண்மையான இறப்பு இல்லை, ஒருவர் முழுமையாக இறக்க முன்பாகவே அவரை கைவிட்டு விடுகிறீர்கள் என வேறு சொல்லிக் கொள்கிறார்கள்.

> “ தங்கள் இறப்பின் பின் கவனமாக பதனம் செய்யப்பட்டு உறக்க நிலையில், தங்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் தொழில்நுட்பம் எதிர்காலத்தில் வரும் என்ற நம்பிக்கையில் 93 மனிதர்கள் பூச்சியத்திற்கு கீழே 200°c குளிரில், நைட்ரஜன் கலவையினுள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ”

இந்த CRYOGENIC கொள்கையினை நம்பு கின்றவர்கள் உலகத்தில் பல அமைப்புகளை உருவாக்கி இருக்கின்றார்கள். இவைகளில் ALGOR LIFE EXTENSION FOUNDATION எனும் இலாப நோக்கமற்ற அமைப்பே பெரியது. ஏற்கனவே பதனம் செய்யப்பட்ட 93 பேரைத் தவிர சுமார் ஆயிரம் பேர் வரை இந்த அமைப்புடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இவர்கள் 150,000 அமெரிக்க டொலர்களை கட்டணமாக செலுத்தியிருக்கிறார்கள். ஒருவர் இறந்தவுடன் ALGOR அமைப்பு உடலை பொறுப்பெடுத்துக் கொள்ளும். உடலிலுள்ள இரத்தம் முழுமையாக வெளியேற்றப்பட்டு ஒரு விசேட திரவம் குருதிக் குழாய்களில் நிரப்பப்பட்டு நைற்றஜன் திரவம் அடைக்கப் பட்ட பெரிய தாங்கிகளில் உடல் மிகக் கவனமாக பராமரிக்கப்படுகிறது. இந்த வகை பராமரிப்பு உடலை பல நூற்றாண்டுகளுக்கு பழுதடையாமல் வைத்திருக்கும் வல்லமை வாய்ந்தது.

எவ்வாறு இந்த உடல்களை மீள் எழுப்புவது?

எதிர்காலத்தில் NANO ரோபோ ஆராய்ச்சிகள் வெற்றியடைந்தவுடன் இந்த உடல்களின் குருதிக் குழாய்களுக்குள் இருக்கின்ற திரவம் அகற்றப்பட்டு, குழாய்களுக்குள் இந்தச் சின்னஞ்சிறு ரோபோக்கள் அணிவகுத்து செல்வார்கள். இவர்கள் உடலின் ஒவ்வொரு கலங்களையும் பழுது பார்க்கத் தொடங்குவார்கள். மூளையிலுள்ள கலங்களை பழுது பார்ப்பது தான் மிகவும் சிரமமான வேலையாக இருக்கும். ஒரு சாதாரண மனித மூளையினுடைய அமைப்பை ஒரு கணணியில் சேமித்துவைக்க வேண்டுமானால் $10^{25}$ bits memory தேவைப்படும். ($10^{9}$ என்பதே ஒரு பில்லியன் bits என்றால் $10^{25}$ bits எவ்வளவு என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்) தற்போதைய தொழில் நுட்பத்தின்படி மூளையினுடைய கலங்கள் எல்லாவற்றையும் திருத்துவதற்கு 100 மில்லியன் அதி விசேட கணணிகள் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டும். மிக மலைப்பாக இருந்தாலும் கணணித் துறையின் வளர்ச்சியை எடுத்துக் கொண்டால் இன்னும் 50 வருடங்களுக்குள் இவ்வளவு வேலையையும் ஒரு கணணியே செய்து முடித்துவிடும் வாய்ப்பு இருக்கிறது. உடலில் முழுக்கலங்களையும் திருத்திய பின்பு மூளையின் நிரந்தர memoryஇல் இருக்கின்ற தரவுகளை மற்றைய பாகங்களுக்கு தரவிறக்கம் செய்து விட்டால் உடலை மீள் எழுப்பிவிடலாம் என CRYOGENIC ஆதரவாளர்கள் நம்புகிறார்கள்.

அண்மையில் மொன்றியலில் வெற்றியளித்த பக்ரீரியாக்களை வேலை வாங்கிய நிகழ்வானது NANO ரோபோ ஆராய்ச்சிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாகவே நோக்கப்படுகின்றது. இத்துறையின் எதிர்கால வெற்றியானது மரணத்தை மிக நீண்ட காலத்திற்கு ஒத்திப்போடும் என்றும் நம்பப்படுகிறது. மரணத்தை ஒத்தி வைக்க, அல்லது முற்றிலுமாக வெற்றி கொள்ளும் ஒரு யுத்தத்தை விஞ்ஞானிகள் ஆரம்பித்து விட்டார்கள் என்று ஒரு விஞ்ஞானி அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார். இன்னும் நூறு வருடங்களுக்குள் அந்த யுத்தம் நடக்கும் என்றும் அவர் எதிர்வு கூறியிருந்தார். உயிர், மறுபிறப்பு பற்றிய நமது நம்பிக்கைகளை விஞ்ஞானம் கேள்விக்குள்ளாக்கும் காலம் விரைவில் வரக்கூடும். எது எப்படியிருப்பினும், இருப்பும், இறப்பும் பற்றிய வாழ்வின் சிக்கலான ரகசிய பக்கங்களை விஞ்ஞானிகள் புரட்டத் தொடங்கி விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

nimal.nagaraj@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations
Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed


To Buy, Sell & Lease Home, Business & Investment Properties
முதல் பரிசு BMW 300 SERIES CAR
இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE
மூன்றாம் பரிசு 42" LCD TV
மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்
நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?
எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன
அதிஷ்ட குலுக்கல்
August 29, 2010
Morningside / Staines
$449,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 full Washroom. 2 Bedroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
Markham / Highglen
$499,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 3 Full Washroom & ½ Washroom Basement Apt with 3 Bedroom Location.. Location... Location...
Midland / Ellesmere
Gas Station
$2.2 Mil
Good Investment Property Corner of Midland & Ellesm Gas Station lease until 2025 Great Investment for User Investment
Brimley / Brimorton
$419,000
Detached Bungalow house 3 bedroom and 2full W/Rs Ravine WALK OUT Basement apt with separate entrance, Modern Upgrades
Markham / Passmore
$396,800
Semi Detached 2 storey Brick Home 3 bedroom with 2 full washrooms Approx 5 Yrs New Lots of upgrades, Convenient location. Step to school
McCowan / Highglen
$485,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 Full Washroom & ½ Washroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
Neilson/Finch
$179,900
3 storey condo Town house with 3bedrooms and 2 washrooms walk out basement, Totally Reno.. Renovated Townhome Top to Bot.. kitchen step to TTC and school convenient location
Oshawa Uoit
$289,900
Brand New Detached brick 2 Storey 4 bedrooms/ 2 full washrooms 5 Mins walk to UOIT Durham College Approx 2000 square feet Close to all Amenities
Middlefield / Finch
$184,900
Middlefield & Finch Condo 2 Bedrooms with 1 Full washroom Laminated floors , Great Layouts Step to GTA square Mall, Temple and TTC bus stop
Markham / Steeles
Building 'A'
$349,900
For sale or lease. Brand new 2 retail stores available High traffic area, Many Usage Facing Markham Road Exterior and interior entrances
Kennedy / Ellesmere
$159,900
3 Bedroom Condo 2 Full washrooms Location Location Location...... Step TTc, school & shopping, Minute to 401 Highland Farm., Rona, Metro, One Bus to Eglinton Station...
Scarboro Town Centre
Condo For Lease
$1300
1+1 Bedroom Condo 1 Full washrooms Location Location Location...... Step TTc, school & shopping, Minute to 401 Tridel Condo, Superb View Pool., Gym., Party Room.. and more
Markham / Steeles
$359,900
Detached 2 Storey Brick Home Well Maintained 3 Bedroom with Full Washroom & ½ Washroom Basement Partially Finished Location.. Location... Location...
Denison / Old Kennedy
$549,900
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 4 full Washroom. 2 Bedroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
McCowan / Finch
$359,900
Semi Detached 2 storey Brick Home 3 bedroom with 2 full washrooms 2 Half Washroom Lots of upgrades, Convenient location.
McCowan/ Brimorton
$409,900
Detached Bungalow house 3 bedroom and 2full W/Rs Finished Basement apt with separate Ent. Totally Renovated Bungalow A+++
Midland / Lawrence
$389,900
2storey Newer Town house with 3bedrooms and 3 washrooms walk out basement with 1 Bedroom Convenient Location TTC, RT School, Shopping and all other amenities
Markham / Eglinton
$579,800
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 full W/room and Library Room Over 3000 Sft on 57 Frontage Lot Location.. Location... Location...
Gnan & Judy
REAL ESTATE
HOMELIFE
HIGHER STANDARDS
Gnanendran Narasingham
Sales Representative
CELL: 416.937.8090
Judy Gnanendran
Sales Representative
CELL: 416.629.9797
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
OFFICE: 416.321.6969

# விமானப் பயணம்

## இதயம் மலர்கிறது - 20



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

பயணம் என்று கூறும் பொழுது எல்லோரது மனதிலும் உவகை பொங்குவது வழமை. விட்டுப் பிரிந்த உறவினர்களை, நண்பர்களை, அயலவர்களைப் பார்க்கப் போவதாயின் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதனை மனப்பூர்வமாக வரவேற்பதுடன், ஆரவாரத்துடன் அதற்குரிய ஆயத்தங்களையும் செய்யத் தொடங்கி விடுவார்கள்.


இப்படியாக மகிழ்வுடன் ஆரம்பிக்கும் பயணங்கள் இடையூறின்றி நல்லபடியாக அமைவதற்கு எப்படி எம்மைத் தயார் செய்தல் வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பிரயாணத்திற்குரிய ஆயத்தங்களை நேர காலத்துடன் செய்து வைப்பது பல சிரமங்களைத் தவிர்ப்பதற்கு உதவும். கடவுச் சீட்டுகளின் காலாவதியாகும் திகதியானது பிரயாணச் சீட்டுப் பெறப்படும் நேரத்தில் ஆறு மாதங்களிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். அல்லாதுவிடின் அவசரமவசரமாகக் கடவுச் சீட்டுப் பெறும் காரியத்தில் அவற்றை உடனே பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது நேர அவகாசம் கிடைக்காது மிகுந்த களைப்படைய நேரிடலாம். களைப்புடன் விமானப் பிரயாணம் செய்யும்போது வெகுசிலருக்கு விமானத்தில் பறக்கும் பொழுது மயக்கம், தலைச்சுற்று என்பன ஏற்படலாம். மிகுந்த களைப்பு, யோசனை, நரம்பியல் தாக்கு, நீரிழிவு, இரத்த அழுத்தம், காக்கை வலிப்பு, குருதிச் சோகை போன்ற பல காரணங்களில் ஏதாவதொன்றோ இரண்டோ இதற்குக் காரணமாகலாம்.

இதை ஏன் நான் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால், இப்படி ஏதாவது மயக்கம் சில நிமிட நேரங்களிற்கு விமானத்தில் பறந்துகொண்டு இருக்கும்பொழுது ஏற்படுமாயின் நீங்கள் மறுபடியும் விமானத்தில் திரும்பி வருவதற்கு தகுதி வாய்ந்த வைத்தியர் ஒருவரின் சான்றிதழ் தேவைப்படும். மீண்டும் விமானத்தில் திரும்பி வருவதற்கு உங்கள் உடல் நிலை இடங்கொடுக்குமா என்ற மருத்துவச் சான்றிதழ் (FIT To Fly – Medical Certificate) வழங்கப்பட வேண்டும். அவ் விமான நிறுவனத்தால் அனுப்பப்படும் படிவங்கள் வைத்தியரினால் நிரப்பப்பட்டு, அப்படிவத்தில் கேட்கப் பட்ட பல பரிசொதனைகள் செய்யப்பட்ட பின்பு அவ் வைத்தியரினால் அந்த நபர் மீண்டும் விமானத்தில் சுகமாகப் பிரயாணம் செய்ய முடியும் என்று உறுதிசெய்து கையொப்பமிடுதல் வேண்டும்.

விமானத்தில் பணி செய்பவர்களுக்குத் தகுந்த முதலுதவிப் பயிற்சி கொடுக்கப்பட்டு இருந்தாலும் அவர்களால் காரணங்களைக் கண்டு பிடிக்க முடியாது. நாட்பட்ட வியாதியுடையவர்கள் தங்கள் வியாதிகள் பற்றிய குறிப்பையும், உட்கொள்ளும் மருந்துகளின் பெயர்களையும், அளவுகளையும் குறிப்பிட்டு ஒரு தாளில் எழுதி தமது சட்டைப் பையிலோ, உடன் பயணம் செய்யும் உறவினருடனோ கொடுத்து வைக்கலாம். இது பலவித சிரமங்களைத் தவிர்க்கும். நோயாளியின் விபரங்கள் தெரிந்தால் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்புகொண்டு வைத்தியர்களின் ஆலோசனைகளை உடனுக்குடன் பெறுவார்கள். விமானம் தரையிறங்கும் மட்டும் அந்த நோயாளிக்குரிய சேவைகளைச் செய்வார்கள்.

இப்படி ஏதாவது திடீர் சுகவீனங்கள் ஏற்படும் பொழுது விமான ஊழியர்கள், விமானத்தில் யாராவது வைத்தியர்கள் இருக்கிறீர்களா என்று கேட்பார்கள். விமானத்தின் முதலுதவிப் பெட்டியில் இரத்த அழுத்தமானி, Stethescope போன்ற தேவையான முதலுதவிப் பொருட்கள் உண்டு. இவற்றைப் பாவித்து இரத்த அழுத்தம், இருதயத் துடிப்பில் உள்ள பிரச்சினைகள் சிலவற்றைக் கண்டறிந்தாலும் வேறு சில நோய்களைக் கண்டறிய முடியாது. இருதயத்தாக்கு, பாரிசவாதம் என்பவற்றைக் குணங்குறிகளை வைத்து ஓரளவு கூறிவிடலாம். ஆனால் உறுதிசெய்யப் பல பரிசோதனைகள் தேவைப்படும். உதாரணமாக நீரிழிவு (நோயாளிக்கு குருதியில் குளுக்கோசின் அளவு கூடினாலும் மயக்கம் வரும், குறைந்தாலும் மயக்கம் வரும்). விமானத்தில் குருதி




வெல்லத்தின் அளவை அளக்கும் கருவி காணப்படவில்லை. இதனால் மிகவும் தலைச் சுற்றுள்ள சுய நினைவுடன் இருக்கும் ஒருவருக்கு இனிப்புப் பானம் குடிக்கக் கொடுப்பார்கள். பயணம் செய்பவர்களிடம் என்ன மருந்து எப்போது எடுக்கப்பட்டது. என்ன சாப்பிட்டார்கள் போன்ற விபரம் இருக்குமாயின் முதலுதவி செய்பவர்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும். அதே நேரத்தில் மீளப் பிரயாணம் செய்யும் பொழுது பலவித பரிசோதனைகளுக்கு ஆளாகி வைத்தியரின் சான்றிதழ் பெறவேண்டிய அவசியம் அநேகம் எற்படுவதில்லை. எந்தவொரு காரணமுமின்றி ஒருவர் மயங்கினால் அந்த நபர் மீளவும் திரும்பப் பிரயாணம் செய்யும் பொழுது வைத்திய அத்தாட்சிப்பத்திரம் தேவை. இதன் காரணத்தால் நீரிழிவு, இரத்த அழுத்தம், அதிக கொலெஸ்ரோல், தொய்வு, காக்கை வலிப்பு போன்ற நோயுள்ளவர்கள் தமது நோய் விபரங்களையும், அவற்றிற்கு எடுக்கும் மருந்தின் பெயர்கள், பிரயாணங்கள் என்பவற்றைத் தமது கைப்பையில் அல்லது சட்டைப் பையில் வைத்திருப்பது நல்லது. தேவை ஏற்படும் பொழுது விமான ஊழியர்கள் முதலுதவிச் சிகிச்சை செய்யும்போது உதவியாக இருக்கும்.

குருதிச் சோகை (Anaemia) உள்ளவர்களும் கவனமாக இருப்பது நல்லது. இவர்களின் குருதியில் பிராணவாயுவைக் காவிச்செல்லும் செங்குருதிச்சிறு துணிக்கைகள் (RBC) குறைவு. விமானம் தரையில் நிற்கும் பொழுது அதன் கூடத்தினுள் வளிமண்டல அமுக்கம் சராசரியாக 76mm/Hgஆக இருக்கும். அப்பொழுது பிராணவாயுவின் பகுதியமுக்கம் (Partial Pressure) சரியான அளவில் இருப்பதனால், பிராணவாயுவானது குருதியல் கரையும் வீதம் சரியானதாகவும் உடற் திசுக்களுக்குப் போதியதாகவும் காணப்படும். இத்தகைய அமுக்கத்தில்கூட குருதிச் சோகை உடையவர்கள் பாரிய வேலை செய்யும் பொழுது பிராணவாயுவின் அளவு போதியளவு உடல் முழுவதும் கடத்தப்படாமல் களைப்படையலாம்.

விமானம் மேலே எழும்பிப் பறக்கும்பொழுது கூடத்தினுள் உள்ள அமுக்கம் குறைவடைய பிராண வாயுவின் கரைதிறன் குறையும். இதனால் குருதிச்சோகை மிகுதியாக உள்ளவர்கள் அவஸ்த்தைப்படுவார்கள். இதன் காரணத்தால் விமானத்தின் கூடத்தினுள் செயற்கை முறையில் பவன அமுக்கத்தைப் பேணுவார்கள். இவ் அமுக்கம் அங்குள்ள பிரயாணிகள் தங்கள் அலுவல்களை எந்தவித களைப்புமின்றிப் புரியக்கூடியதாக இருக்கும். அதாவது 8,000 அடி உயரத்தில் பவன அமுக்கம் எதுவோ அந்த அளவில் அவ்வமுக்கம் பேணப்படும்.

விமானங்களின் வகையைப் பொறுத்து அவை 45,000 அடிக்கும் 60,000 அடிக்கும் இடையில் உள்ள உயரங்களில் பறக்கும். இந்த உயரங்களில் மனிதர்களின் உடல் அவஸ்தைப்பட்டு விரைவாக இறந்துவிடும். ஆனால் 8,000 அடி உயரத்தில் இருக்கக் கூடிய பவன அமுக்கத்தை விமானத்தினுள் பேணினால் எல்லாப் பிரயாணிகளும் தங்கள் உடற் தொழிற்பாட்டில் எவ்வித குழப்பங்களுமின்றி இயல்பாக இயங்கக்கூடியதாக இருக்கும். விமானத்தினுள் அமுக்கத்தைப் பேணுவது என்பது மிகவும் சிரமமான பொறிமுறை. இதன்காரணத்தால் தொடர்ச்சியாக விமானம் தரையிறங்குமட்டும் அதே அமுக்கத்தைப் பேணுவதற்கு 8,000அடி உயரத்தில் உள்ள பவன அமுக்கம் விமான இயந்திரங்களுக்கு அதிகளவு விவகாரத்தை ஏற்படுத்தாது தொடர்ச்சியாக அதே அமுக்கத்தைப் பேண உதவுவதாலும் மனிதர்கள் சுகமாக இயங்குவதற்குப் போதுமாக இருப்பதாலும் விமான சேவை நிறுவனங்கள் இந்த அமுக்கத்தைக் கட்டாயமாகப் பேணுவார்கள்.

### விமானப் பயணமும் காதடைப்பும்

விமானப் பயணத்தின் போதோ அல்லது பயணத்தின் பின்போ சிலருக்குக் காதடைப்பு, உட்காதுத் தொற்று நோய் என்பன ஏற்படலாம். காதின் அமைப்பை விளங்கிக் கொள்வது பூரண விளக்கத்தை ஏற்படுத்தும்.

காதின் அமைப்பை வெளிக்காது, நடுக்காது, உட்காது என்று பிரிக்கலாம். காதில் உள்ள செவிப்பறை (Eardrum) வெளிக்காதையும், நடுக்காதையும் பிரிக்கின்றது. வெளிக்காது சுற்றாடலில் ஏற்படும் ஒலிகளை கிரகித்து புனல் போன்ற அமைப்பூடாக செவிப்பறையை அதிர வைக்கிறது.

நடுக்காதையும், வெளிக்காதையும் பிரிக்கும் செவிப்பறை ஒலிகளினால் அதிரும் பொழுது அவை முறையே செவிப்பறையென்பு, சம்மட்டியுருவென்பு, பட்டடையுருவென்பு ஆகிய சிறு என்புகளை அதிர வைக்கின்றன. இவ் என்புகளில் ஏற்படும் அதிர்வுகள் நீள்வட்டச் சாளரம் எனப்படும் உட்காதுப் பகுதியின் சிறு துவாரத்தினுள் கடத்தப்படுகின்றன. நடுக்காதில் உத்தேக்கியின் குழாய் என்னும் சிறிய குழாய் தொண்டையின் பிற்பகுதியில் திறப்பதனால் நடுக்காதினுள் உள்ள பவன அமுக்கமும், வெளிக்காதில் உள்ள பவன அமுக்கமும் இக்குழாயின் ஊடாகச் சமப்படுத்தப்படுகின்றது. விமானம் மேலே கிழம்பும் பொழுதும், கீழே தரையிறங்கும்பொழுதும் அடிக்கடி எச்சில் விழுங்குவது வெளிக்காதினதம், நடுக்காதினதும் பவன அமுக்கத்தைச் சரி செய்ய உதவும்.

அடுத்து உட்காதைப் பார்த்தோமானால் அங்கு அரைவட்டக் கால்வாய்களும், நத்தைச் சுருளும் இருப்பதைக் காணலாம். அரைவட்டக் கால்வாய் எமது சமநிலையைப் பேணுவதற்கும், நத்தைச் சுருள் உபகரணம் ஒலிகளைச் சரிவர உணர்ந்து கேட்பதற்கும் உதவுகின்றன.

விமானம் மேலெழும்போதும், தரை இறங்கும் பொழுதும் விழிப்பாக இருப்பது நல்லது. அப்பொழுது நாங்கள் அடிக்கடி எச்சிலை விழுங்குவதன் மூலமோ அல்லது இனிப்பு வகைகளை உமிழ்ந்து உண்பதன் மூலமோ வெளிக்காதினனுதும், நடுக்காதினதும் பவன அமுக்கத்தைச் (தொண்டையின் பின்புறத்தினூடாகச்) சமப்படுத்துவதன்மூலம் காதடைப்பை நீக்குவதற்கு உதவலாம்.

வெளிக்காது அல்லது நடுக்காதின் அமுக்கம் கூடுதலாக இருந்தால் மெல்லிய சவ்வினாலான செவிப்பறை ஒருபுறம் தள்ளப்பட்டு புடைப்பாக நிற்கும் பொழுது ஒலிகளின் அதிர்வுகளிற்கு ஏற்ப அதிரமாட்டாதாகையால் காதும் கேட்கமாட்டாது. இது தற்காலிகமானதே. இருபக்கமும் பவன அமுக்கம் சரிவரும் பொழுது காது கேட்கத் தொடங்கும். ஆனால் சில சமயங்களில் இத்தகைய பவன மாற்றம் நடைபெறும்பொழுது தொண்டையில் உள்ள முழாயினூடாகக் கிருமிகள் நடுக்காதை அடைந்துவிடும். அப்பொழுது நடுகாதுக்கிருமித் தொற்று ஏற்பட்டுவிடும். இப்படியாக ஏற்பட்டுவிட்டால் சில கிழமைகளுக்குக் காது கேட்பது குறைந்து காணப்படும். கிருமி கொல்லி மருந்துகள் வைத்திய ஆலோசனைப்படி உட்கொள்ளும் பொழுது படிப்படியாக மீண்டும் காது கேட்கத் தொடங்கும்.

### விமானப் பயணமும் குருதி கட்டிபடுதலும்

முதியவர்கள், நீரிழிவு நோய் இரத்த அழுத்த நோய் போன்ற நோயுடையவர்கள் நீண்ட நேரம் விமானத்தில் உட்கார்ந்து பயணிக்கும் பொழுது அவர்களின் கால்கள் மடித்த நிலையில் காணப்படும். குருதி ஓட்டம் மெதுவாகச் செல்லும். இச் சந்தர்ப்பங்களில் காலில் உள்ள நாளங்களில் குருதியானது கட்டிபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். கட்டிகளின் அளவையும், அவைகள் நீந்திச் சென்ற இறுதியில் அடைபடும் இடத்தையும் பொறுத்து ஏற்படக்கூடிய அபாயம் வேறுபடும். இதன் காரணத்தால் கால்களை அடிக்கடி நீட்டி மடிப்பது, விமானம் நிதானமாகப் பறக்கும் நேரங்களில் எழும்பி உலாவருவது இத்தகைய கட்டிபடுவதைத் தடுப்பதற்கு உதவிபுரியும்.

விமானப் பயணத்தின் பொழுது எமது உடலாரோக்கியம் நல்லபடியாக இருக்கும்பொழுதுதான் நாம் சென்றடையும் இடங்களிலும், மகிழ்வுடன் நாம் வந்த காரியங்களை ஆற்றுவதற்கு எமது உடலும், உள்ளமும் இடமளிக்கும்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
**தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி**
**Dr. Kandiah Senthilathan**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.


வீடு வாங்க விற்க
LAND
St Clair /Pharmacy
$499,900
Mavis/Derry
$359,900
3 Bedrooms 3 Washroom
Finished Basement
Kuga Raveendrarajah
Broker
Direct: 416-843-8585
Mathan
Selvendarakumaran
Sales Representative
Direct: 416-625-2870
SOLD
$359,900
3 Bedrooms 2 Washroom
Finished Basement
Bovaird/Worthington
$424,900
4 Bedrooms 3 Washroom
Finished Basement
$79,900
Davis Dr / Yonge
Cafe
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200
*Independently Owned and Operated, Realtor


எமக்கென்று ஒரு தனிக்குடில்
சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்
TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT
MAILVAGANAM (MIKE) AHILAN
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-220-1184
VINCE SINNADURAI
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-917-9462
416.438.1688
Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6
RBC Financial Group

# உரிமைக் காப்புறுதி
# (Title Insurance)



கருணா
கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

தாய் வீடு வாசகர்களுக்கு அன்பு கலந்த வணக்கம் பல. அண்மையில் சிறுவர் பாடசாலை ஒன்றிற்கு செல்லும் சந்தர்ப்பம் எட்டிய போது நான் அவதானித்த சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அன்று சிறுவர் தொடக்கம் ஆண்டு 8 வரை உள்ள பாடசாலையில் பரிசளிப்பு விழா. இதில் ஒழுங்கான பழக்கவழக்கமுள்ள அதாவது அன்பான, கரிசனையான, உதவும் எண்ணமுள்ள மற்றும் சண்டைகள் அற்றவர்களில் ஒருவரை ஒவ்வொரு வகுப்பிலும் தெரிந்தெடுத்திருந்தார்கள். இதில் வியப்பு என்னவென்றால் ஒரேயொரு ஆண் பிள்ளையைத் தவிர மீதமெல்லாம் பெண் பிள்ளைகளே. அது மாத்திரமன்றி "Black History Monthஇல் பெரிதும் பரிசில்களைப் பெற்றவர்கள் அவ்வினத்தினராகவே காணப்பட்டனர். சுமார் 15-20 பிள்ளைகளில் எம்மவர் எவரும் வராதது வருத்தத்திற்குரியது. இதிலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? எமது பிள்ளைகளை நாம் வளர்ப்பதில் தவறு செய்கிறோமா அல்லது எமது கலாச்சாரம் சீர்கெட்டு கிடக்கின்றதா? எவ்வளவோ திறமைகளை தம்மகத்தே கொண்ட எம் சிறார்களை நாம் எவ்வாறு முன்னிலை படுத்தப்போகிறோம் என்பது கேள்விக்குறியே? கொலை என்பது எம்மினத்தின் சாபக்கேடு. அதிலும் கொடூரமான முறையில் இடம்பெறும் திட்டமிட்ட கொலைகளும் சமுதாய சீர்கேடுகளும் இன்றைய எமது சிறார்களையும் பாதிக்கும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழர் தமிழர் என்று பெருமைப்படும் நாம் எமது அடுத்த தலைமுறையையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு "தாய் வீட்டில்" Title Insurance / உரிமைக் காப்புறுதி பற்றிய ஓர் விளக்கத்தினை அவதானிப்போம்.

உரிமைக் காப்புறுதி இன்று கடைாவில் மிகவும் பிரபல்யமாக பேசப்படும் ஓர்வகை காப்புறுதி. உரிமைக் காப்புறுதி என்றால் என்ன? இது உங்களுக்கு தேவையான ஒன்றா? நீங்கள் பெற்றுக்கொள்ளும் உரிமைக் காப்புறுதி உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதா என்பனபோன்ற விபரங்களை அவதானிப்போம்.

பொதுவாக வீடுகள்/சொத்துக்கள் வாங்கும் வேளைகளில் இவ்வகைக் காப்புறுதிகள் பெறப்படும். இதன் நோக்கங்கள் என்ன? இதன் பின்னணி என்ன என்பதனை அறிந்துகொள்வதே இன்றைய நோக்கம்.

"Title is the legal term for Ownership of Property" அதாவது உங்கள் வீட்டின் Title உங்கள் பெயரில் பதியப்படுவதைப் போல உங்கள் சொத்தின் பெயரில்/பெயருக்கு காப்புறுதி செய்து கொள்வதே உரிமைக் காப்புறுதி எனப்படும். வீட்டு உரிமையாளர்கள் இரண்டு நோக்கத்திற்காக 'Title'இனை பாதுகாக்கின்றனர். ஒன்று Titleஇனை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு மற்றையது மீண்டும் இலகுவாக வீட்டினை சந்தையிலிடுவதற்கு. வீடொன்றினை வாங்குவதற்கு முன்னர் அதன் முன்னையை உரிமையாளர் எவ்வாறு அவ்வீட்டிற்கெதிராக கடன்களையோ அன்றி வரி செலுத்துதலையோ மேற்கொள்ளாமல் இருந்தார் என்பது தேடுதலின் மூலம் (Title Search) பெறப்படும். இத்தேடுதலில் மேலும் அவ்வீட்டின் சொந்தக்காரரின் பெயர், இதற்கு முதல் அவ்வீட்டினை வைத்திருந்தவர்களின் விபரங்கள். வீட்டிற்கு எதிராக பதிவு செய்யப்பட்ட Mortgage, செலுத்தாமல் தவறிய வரிகள், மற்றும் உரிமையாளருக்கு எதிராக தீர்க்கப்பட்ட கடன்கள், இன்னும் பல.

வீடொன்றினை விற்பதற்கு முன்னர் இவற்றை உரியவர்கள் தீர்த்தாலேயன்றி புதிதாக வாங்குபவர்கள் உங்கள் கடன்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. Mortgage போன்றவை வாங்குபவர்கள் கொடுக்கின்ற பணத்தினை செலுத்துவதன் மூலம் சரி செய்யப்படும். ஆகவே சொத்து ஒன்று பெறப்படும் வேளைகளில் Title ஆனது அச் சொத்தினை பரிசிலனை செய்து பெற்றுக்கொள்வதற்கு துணைநிற்கின்றது. அதாவது பெற்றுக் கொள்பவர் வீண் சுமைகளை விற்பவர்களிடம் இருந்து பெற தேவையில்லை.

மேலே கூறியது போல் எல்லாவிதமான தரவுகளும் Titleஇல் பதிவு செய்யப்படுமா என்பது ஓர் கேள்வி? உதாரணமாக உத்தரவு பெறப்படாமல் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் அதாவது கார் தரிப்பிடம் அமைத்துக் கொள்வது Deck செய்துகொள்வது போன்றவை. பின்னர் அவற்றை அகற்ற வேண்டிய சூழ்நிலையில், பாதிப்படைபவர் நிட்சயம் அவ்வீட்டினை வாங்கியவராகவே காணப்படுவார். இதுபோன்ற சந்தர்ப்பங்களும் மற்றும் Titleஇல் காணப்படும் தவறான நடவடிக்கைகளுக்கான பதிவுகளும் ஒரு சொத்தின் மதிப்பினை குறைத்து மதிப்பிட காரணியாக அமையும். அது மட்டுமன்றி அவ்வகை வீடுகளை சந்தையிலிடுவதே சற்று சிரமமான காரியமாக காணப்படும்.

மேற்படி உரிமைக் காப்புறுதி யாரைப் பாதுகாக்கின்றது? பொதுவாக வீடு வாங்குபவர்களுக்கே இக் காப்புறுதி பெறப்படுகின்றது. இருப்பினும் அவ் வீட்டிற்கு எதிராக கடன் வழங்குபவர்கள் அதாவது Mortgage வழங்குபவர்கள் இவ்வகை காப்புறுதி இன்றி கடன் வழங்குவதற்கு தயங்குவார்கள். அனேக Mortgage நிறுவனங்கள் கடன் வழங்கும் நிபந்தனைகளில் ஒன்றாக இவ்வகை காப்புறுதியினை கோருவது வழக்கம். இதனால் பிற்காலத்தில் ஏதிர் பாராத முறையில் ஏற்படும் இழப்புக்கள் மற்றும் வீட்டிற்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து உரிமையாளரும், Mortgage நிறுவனங்களும் தம்மை பாதுகாத்துக் கொள்ளும்.

> "அடமானக்கடன் நிறுவனங்கள்
> கடன் வழங்கும் நிபந்தனைகளில் ஒன்றாக
> இவ்வகை காப்புறுதியினை கோருவது வழக்கம்.
> இதனால் பிற்காலத்தில் ஏதிர்பாராத முறையில் ஏற்படும்
> இழப்புக்கள் மற்றும் வீட்டிற்கு எதிரான
> நடவடிக்கைகளிலிருந்து
> உரிமையாளரும், அடமானக்கடன் நிறுவனமும்
> தம்மை பாதுகாத்துக்கொள்ளும்."

## உரிமைக் காப்புறுதி (Title Insurance) இனால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடைமுறைகளில் சில.

Survey Irregularities.
Forced Removal of existing Structures
Claims due to farvd.
Unregistered easements and right of way.
Lack of pedestrian or vehicular access.
Work Orders
Zoning and Set back non-compliance or deficiencies.
இன்னும் பல.

மேலே தரப்பட்ட செயன்முறைகளுள் அடங்குவதற்கு நீங்கள் பெற்றுக்கொள்கின்ற காப்புறுதியின் பெறப்பட்ட நாள், சம்பவங்கள் இடம் பெற்றதற்கு முன்னதாக காணப்பட வேண்டும். ஏனைய காப்புறுதி நடைமுறைகளைப் போலவே இவ்வகையும். இது பற்றிய மேலதிக விபரங்கள் அதாவது Title Insurance பாதுகாக்காத செயன்முறைகளை வழக்கறிஞர்களிடம் முன்கூட்டியே கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

இதன் அடுத்த படியாக, இவ்வகை காப்புறுதிகள் எவ்வளவு காலத்திற்கு எமக்கு பாதுகாப்பினை வழங்கும் என்பது? ஒரு சொத்தின் பெயர் மாற்றப்படாமல் இருக்கின்ற காலம் வரைக்கும் இவை தொடரும் அது மட்டுமன்றி சிலவகை காப்புறுதிகள் உரியவர் இறக்கின்ற பட்சத்திலோ அன்றி தனது பங்கினை கணவன்/மனைவிக்குள் மாற்றும் வேளைகளில் கூட தொடர்ந்திருக்கும்.

மாறாக ஒரு வீட்டின் பெயரில் Mortgage இருப்பின் இக்காப்புறுதிகள் உரிமையாளரை பாதுகாக்கின்ற அதேவேளை அவ்Mortgage ஆனது Titleஇல் பதியப்பட்ட காலம் வரைக்கும் Mortgage நிறுவனத்திற்கும் சேவை வழங்கும்.

சாதாரண காப்புறுதிகளைப் போலல்லாமல் Title Insurance காப்புறுதிக்குரிய கொடுப்பனவுகள் (Payments) ஒருமுறையே மேற்கொள்ளப்படும். அதாவது வீடு வாங்கும் வேளைகளில் பொதுவாக கொள்வனவாளர்கள் இதனை மேற்கொள்வர். இதற்குரிய செலவுகள் கொள்வவைாளர்களாலேயே மேற்கொள்ளப் படும். Mortgage நிறுவனங்களை இணைத்துக் கொள்வதற்காக செய்யப்படும் காப்புறுதிகளுக்கு சிறிதளவு மேலதீக தொகை அறவிடப்படுவதும் உண்டு.

உரிமைக் காப்புறுதி ஆனது ஒருவகை அத்தியாவசிய பாதுகாப்பு என்பதைவிட, மனஅமைதி கருதி பெற்றுக்கொள்ளப்படுவதும் உண்டு. வீடு கொள்வளவு வேளைகளில் ஏற்படும் இறுதிநேர சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கு இவை மிகவும் பயனளிக்க வல்லது. தேடுதல்களில் வெளிப்படும் வீடு சம்மந்தப்பட்ட விரும்பாத செயன்முறைகள் இவ்வகை காப்புறுதிகளினால் சீர் செய்யப்படுவதனால், இவைமூலம் இறுதி நேர சிக்கல்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

காப்புறுதிவகைகள் எவ்வகையாயினும், எதிர் பாராத வேளைகளில் ஏற்படும் எதிர்பாராத இழப்புக்களை ஈடு செய்வதற்காக அமல் படுத்தப்படுவதே. சிறிதளவு தொகையில் பெருமளவில் மனநிம்மதி கிடைக்குமெனின் அதுபற்றி நாமும் அறிந்து அப்பயனைப் பெறலாம். நீங்கள் வீடு வாங்கும் வேளைகளில் (வீடு/புதுவீடு/Condo/விடுமுறை வீடுகள்) உங்கள் வழக்கறிஞர்களின் உதவியுடன், நீங்கள் பெற்றுக்கொள்ளும் Title Insurance பற்றிய பூரண விளக்கத்தினைப் பெற்று அனுபவியுங்கள்.

நன்றி நேயர்களே மீண்டும் ஆக்கபூர்வமான பல கருத்துக்களுடன் இணைந்து கொள்வோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■





**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Sales Representative

**Call Me @ 416 616 8751**

"An award-winning realtor with 14 years experiance".




**Markham & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**McCowan & Highglen**
2-Storey Detached
4+1 Bedrooms - 5 Washrooms
Newly Finished Basement




**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft




**Markham & Tapscott**
Industrial Condo. Unit
Approx. 800 Sq. Ft
Well Maintained Complex




**Neilson & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**McCowan & 16th**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Finished Basement

**HomeLife**
Landmark Realty Inc.,
brokerage
*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE
HIGHER STANDARDS





**Justin William**
Broker
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
Broker
**Cell: 416.817.8479**



**Sasi Chelvaratnam**
Sales Representative
**Cell: 416.725.1125**

வீடு நோக்கி ஓடி வந்த நம்மையே, நாடி நிற்குதே அநேக நன்மையே !

# மாபெரும் இலவச அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

# ஆவணி 29, 2010.










ஆவணி 15, 2010 இற்கு முன் எம்மிடம் வீடு அல்லது வியாபார நிலையம் வாங்கியவர்கள், மேலும் வாங்குபவர்கள், விற்றவர்கள் அல்லது மேலும் விற்பவர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள்.

**1st Prize: Brand New BMW 2010 Model 3 series**
**2nd Prize: Vacation Package to Cuba for a week for 2 Persons.**
**3rd Prize: 42" LCD TV**
**10 Consolation Prizes.**

*Our way to say thanks to our clients...*

**Lucky Draw Is Absolutely Free For Our Valuable Clients.**

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# உணவுப் பழக்கமும் தெரிவும்

சிவாஜினி
பாலராஜன்



தாயின் வயிற்றில் கருவாக உருப்பெற்றது முதல் மரணம் வரையில் இயங்கும் உடலுக்கு வலுவினைக் கொடுக்கவும், இவ் உடலில் ஏற்பட்ட காயங்கள் ஆறுவதற்கும், கலங்களின் புதுப்பித்தலுக்கும், அனைத்துக்கும் உரிய மூலப்பொருட்கள் உணவின் மூலமே கிடைக்கின்றன. இதே உணவுப் பொருட்கள் தான் தேவையற்ற அளவிற்கு உடற்பருமனையும் அதிகரிக்கச் செய்கின்றன. இவ்வாறு, கரு உருவாகும்போதே ஏற்பட்டு மரணம் வரை நிகழும் இத் தேவையினை நிவர்த்திப்பது மாத்திரமல்ல, நல்லவற்றைத் தெரிவு செய்து தீயனவற்றைக் கழிப்பதும் எமது தலையாய கடனகின்றது.

உணவுத் தெரிவானது மிகவும் சிக்கலான விடயம். நாவுக்கு சுவையானவற்றைத் தெரிந்து கொள்வதும் சுவையற்றவற்றினை விலக்கி விடுவதும் நமது பழக்கமாகி விடுகின்றது. உணவுப் பழக்கங்களை பொறுத்தளவில், இது ஆளுக்கு ஆள் மாறுபடும். சிலர் சைவ உணவுப் பிரியர்கள். சிலர் அசைவ உணவுப் பிரியர்கள். அதிலும் கூட சிலருக்குக் கீரை-பிடிக்கும், சிலருக்கு வெண்டைக்காய் பிடிக்கும். சிலருக்கு ஆட்டிறைச்சி பிடிக்கும், சிலருக்குக் கோழி இறைச்சி பிடிக்கும். தனிப்பட்ட உணவு விருப்பங்களுக்கு ஏற்ப, வயிறும் அவ்வகை உணவுகளுக்குப் பழகிவிடுகின்றது.

வெவ்வேறு இனத்தவர்களுக்கு அல்லது சமுகத்தினருக்கு வெவ்வேறு வகை உணவினை உண்ணுதலும் பரிமாறுதலும் வழக்கமாக இருக்கின்றது. இவ் வழக்கங்கள் ஒரு புறமாக இருந்த போதிலும் பல இளையோருக்கு உணவு என்பது ஒரு மிகப் பெரிய பிரச்சினை. உடல் அழகையும் மினுக்கத்தினையும் கருத்திற்கொண்டு உணவு வகையினை சிறப்பாகத் தெரிந்தெடுப்போருக்கு மத்தியில் சாப்பாட்டினை ஒறுத்து உடம்பை வருத்தி மெலிந்து ஒட்டி உலர்ந்து இருக்கும் சிலருடன் எதைப்பற்றியுமே கவலை கொள்ளாது நாவிற்கு இதம் தருபவற்றினை மட்டுமே உண்டு பூசினிப் பழம்போல் இருப்பவர்களும் பலர் உண்டு. மேலும் இந்த இளையோரில் பலர் நீர் அருந்துவது என்பது குதிரைக் கொம்பு போல் என்றுதான் சொல்லவேண்டும். நீருக்குப் பதிலாக அவர்கள் அருந்துவது என்னமோ கண்டபடி நிறமும் செயற்கைச் சுவையும் சேர்க்கப்பட்ட நீர்தான்.

இவ்வாறு உணவு அருந்துதலிலும் தெரிவிலும் உள்ள வேறுபாடுகளுக்கிடையில் முதலில் எங்களைப் போல் வயது வந்தவர்கள் அதுவும் இதய நோய் வந்தவர்கள், நீரிழிவு நோய் உள்ளவர்கள் பலர் உணவினைத் தெரிந்து உட்கொள்வதில் மிகவும் சிக்கலான ஒரு கட்டத்தில் இருப்பது கண்கூடாகத் தெரிகின் றது. எனக்கு சலரோகம் நான் சோறு சாப்பிடுவதில்லை ஆட்டாமாவில் புட்டவித்து சாப்பிடுவேன் என்று சொல்வார்கள். என்னத்துடன் புட்டினை சாப்பிடுவீர்கள் என்று கேட்டால் எனக்கு நல்ல உருளைக் கிழங்கு குழம்பு இருந்தால் போதும். ஆட்டாமா புட்டும் உரு ளைக் கிழங்கு குழம்பும் மிகவும் தூக்கலாக இருக்கும் என்கிறார். கேட்டுக் கொண்டிருந்தவருக்கு தூக்கிவாரிப் போட்டது. உருளைக் கிழங்கு கறியும் ஆட்டாமா புட்டும் எப்போ இவரது குருதியில் சர்க்கரை அளவினைத் தூக்கி விடப் போகின்றது என்பதனை எதிர்பாராமலேயே சோறு சாப்பிடாமல் ஆட்டாமா புட்டினை உண்பதனைக் கூறினார்.

மேலும் இதய நோயினால் பீடிக்கப்பட்டு (Heart attack) மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த ஒருவரைப் பார்க்கப் போனபோது, அவருடைக்கு பக்கத்தில் இருந்த அவரது உடைமைகள் வைக்கும் அலுமாரியினைப் பார்த்த போது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அங்கே அந்த லாச்சியினுள் ஒரு பத்துப் பதினைந்து இடியப்பமும் (மிகைப் படுத்திக் கூறுவதாக நினைக்க வேண்டாம் முற்றிலும் உண்மைதான்), சம்பலும் கோழிக் கறியும் ஒளிந்து கொண்டிருந்தது. வைத்திய சாலையில் இருக்கும் வரையில் அவர்கள் தரும் உணவினை உண்பது நல்லது. எங்களுக்கு அது கடினமாக சமாளித்துக் கொண்டு போவது நல்லது என்பது பலரது அபிப்பிராயம். ஆனால் அவரோ நான் கோழி இறைச்சியும்





இடியப்பமும் தான் சாப்பிடுகிறேன் உவங்கள் ஆஸ்பத்திரியிலேயே பட்டரும் பாணும் தாறாங்கள். பட்டரில் கொலஸ்ட்டோல் கூட அல்லவா என்றார். மேலும் அவர்கள் வைத்திய சாலையில் தரும் சாப்பாடு கால்வயிற்றிற்குப் போதவில்லை, மருந்துக் குளிசைகளை எடுத்து விட்டு எவ்வாறு அரை வயிறு கால்வயிற்றுக்கு சாப்பிடுவது என்பது அவரது கேள்வி. பார்த்தீர்களா இந்த உணவு எங்கெங்கு யார் யாரை சிக்கலில் இழுத்து விடுகின்றது என்று.

ஆரோக்கியம், அழகு எதனை எடுத்துக் கொண்டாலும் உணவின் தரமும் உணவுத் தெரிவும் முதற்காரணியாக அமைகின்றது. கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உணவுத் தெரிவும் அதனால் இளம் சமுதாயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அளவுக்கதிகமான உடற்பருமனும் மிகவும் முக்கியமான அதேசமயம் பயங்கரமான விளைவுகளினைத் தந்து கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

உணவு வகையினைத் தெரிவு செய்யும் போது புரதம், கொழுப்பு, மாப்பொருள் போன்றவற்றினைக் கருத்திற் கொள்ள வேண்டும். பொதுவாக எங்கள் உணவில் மாச் சத்து அதிகமாகக் காணப்படுகின்றது. நோய்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டின் அளவுக்கதிகமான மாப்பொருள், கொழுப்பு பொருட்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். மாப்பொருள் அதிக அளவில் உட்கொள்ளப்படும் போது மேலதிக மாப்பொருள் உடலில் கொழுப்பாகச் சேமிக்கப்படுகின்றது. வெள்ளை மா (white flour) மண்ணிறமான மா (whole wheat flour) அதே போல் வெள்ளை அரிசி தவிடுள்ள அரிசி இரண்டினையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மண்ணிற மாவும் அதே சமயம் தவிடுள்ள அரிசியும் மேலதிக Vitamin E, Thiamin, Riboflavin, Niacin, Vitamin B6, Folacin, Potassium, Magnesium, Iron போன்ற உடலுக்குத் தேவையான கனிமங்களைக் கொண்டிருக்கும். ஆனால் ஒன்று இந்த வெள்ளை மாவிலான சாப்பாடு அல்லது வெள்ளை அரிசிச் சோறு நாவிற்கு இதமாக இருக்கும்.

பச்சை அரிசியினையும் புழுங்கல் அரிசியினையும் ஒப்பிட்டால் புழுங்கல் அரிசியானது சமிபாடடைவதற்கு பச்சை அரிசியிலும் பார்க்கக் கூடுதலான நேரத்தினை எடுக்கும். இக் காரணத்தினால் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு இது நல்லது. இரண்டுமே ஓரளவு மாச்சத்தினைக் கொண்டிருந்த போதிலும் தவிடு நீக்காத அரிசியில் உள்ள தவிடு அதன் சமிபாடடையும் நேரத்தினை தாமதிக்கச் செய்கின்றது. இவ்வாறு சமிபாடடைய நேரம் எடுக்கும் போது குருதியில் சீனிச் சத்தின் அளவு சேர்வதற்கு நேரம் கூடுதலாக எடுக்கும். இதேபோல் தான் சிலர் சோறு சாப்பிடாது ஆட்டாமாவில் இடியப்பம், புட்டு என்று பலவிதமான சாப்பாடுகளைச் செய்து சாப்பிடுவார்கள். ஆட்டாமா எனப்படும் போது அங்கு புழுங்கல் அரிசியினை விட சமிபாடடையும் வீதம் சிறிது துரிதமாகவே இருக்கின்றது.

தனியாக அழகினை மட்டும் கருத்திற் கொண்டு உணவினைத் தெரிந்தெடுக்க விரும்பின் எதிர் மறைக் கலோரி உணவுகளைத் (Negative Calorie food) தெரிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு Negative Calorie food என்னும் போது அங்கு கலோரி அளவு கழிக்கப்பட வில்லை. இவ்வாறு ஒருவிதமான உணவே இல்லை. அப்படியானால் ஏன் இவ் வாறு பெயர் வந்தது. அதாவது ஒவ்வொரு உணவிலும் எவ்வளவு கலோரி உண்டு என்பது எமக்குத் தெரியும். அதே போல அவ் உணவினை சமிபாடடையச் செய்வதற்கும் குறிப்பிட்ட கலோரி சக்தி தேவைப்படுகின்றது. பார்க்கப் போனால் பொதுவாக உணவிலுள்ள சக்தியானது அது சமிபாடடையத் தேவையான சக்தியினை விடக் கூடுதலாகவே காணப்படும். இதனால் இது சமிபாடடைத்து மேலதிகமான சக்தியானது எமது உடலில் சேகரிக்கப்பட்டு தேக்கப்படுகின்றது. ஆனால் சில உணவு வகைகள் சமிபாடடைவதற்கு அவ் உணவிலுள்ள சக்தியிலும் பார்க்கக் கூடுதலான சக்தி தேவைப்படும். அவ்வாறு மேலதிக சக்தி தேவைப்படும் போது எமது உடலில் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டதிலிருந்து எடுத்துப் பாவிக்கப்படும். இது தான் Negative Calorie உணவு எனப்படும். Celery, Asparagus, Broccoli, Lettuce, Radish போன்ற மரக்கறி வகைகளும் Melon, Grapefruit, cranberry போன்ற பழவகைகளும் எதிர்மறைக் கலோரி உணவுக்கு உதாரணங்களாகும்.

மேலும் உடல் பருமன் அதிகமாகின்றது என்பவர்கள் மேற்கூறியபடி எதிர்மறைக் கலோரி உணவினை அதிகமாக உண்ண வேண்டும். அத்துடன் மரபியல் கூட் ஒரு காரணம். பெற்றோரில் யாராவது பருமனாக இருக்கலாம் அல்லது நீங்கள் அதிகம் உண்பவர்களாக அதே சமயம் உடலுழைப்பு குறைவாக இருக்கலாம். மேலும் மன அழுத்தம், Sleep Apnea, உயர் இரத்த அழுத்த சிகிச்சைகளின் விளைவு, தைராய்டு பிரச்சனை உள்ளவர்கள் ஆகியோருக்கும் உடல் பருமன் அதிகமாகும். இதே போல சில உணவு வகைகள் உடலில் சர்க்கரையின் அளவு கொலஸ்ட்ரோலின் அளவு என்பதனை அதிகரிக்காது. ஆகவே நமது தெரிவு மிக மிக முக்கியமானது மாத்திரமன்றி கவனமானதாகவும் இருக்க வேண்டும்.

pon.balarajan@thaiveedu.com


■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


# அழகிய பூஞ்செடிகள்

# பெகோனியா / Begonia

### வீட்டுத் தோட்டம் - 26



செல்லையா சந்திரசேகரி

## அறிமுகம்:

பெகோனியா, குடும்பம் (Begoniaceae) பெகோனியேசியேயைச் சேர்ந்தது. இது, பூக்கும் செடிகளில் பத்தாவது இடமாக மிகக் கூடிய இனங்களைக் கொண்ட வர்க்கமாகும். உயர் வெப்ப, வெப்ப காலநிலைகளில் வளரக்கூடியவை. மத்திய அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆபிரிக்கா, தென் ஆசியா போன்ற நாடுகளில் கூடுதலாகக் காணப்படும்.

மூன்று வகையான பெகோனியாவைக் காண்கின்றோம். கிழங்குள்ளவை, சாதாரண-மானவை, மிகவும் அரிதாக ஆண்டுதோறும் நிலைகொள்ளும் வகை. சாதாரணமானவை வருடந்தோறும் வளரும் செடிகளாகும். இவற்றின் இலைகள் பலவிதமான ஓரங்களையும் வேறுபட்ட சமமற்ற பக்கங்களையும் கொண்டு காணப்படும். பூக்கள் வெள்ளை, செம்மஞ்சள், மஞ்சள், சிவப்பு, ரோஸ் போன்ற நிறங்களில் தோற்றமாகக் காட்சி தரும்.



## செடியின் வளர்ச்சி நிலைகள்:

பலதரப்பட்ட மண் வளங்களில் நிலை கொண்டு வளரக்கூடியவை. வளர்ச்சிக்குரிய தரையானது நீர் ஓட்டமுள்ளதாக இருக்கவேண்டும். தோட்டப்பயிருக்குரிய மண் அவசியமாகும். இதன்மேல் 2-4 அங் இயற்கைப் பசளைகளான இலைவகை, கூட்டுப்பசளை சேர்க்க வேண்டும். ஓரளவு பீற் மொஸ் சேர்க்க வேண்டும். இவற்றை மண்வெட்டியால் மேற் படை மண்ணோடு சேர்த்துக் கலக்கவேண்டும். இளவேனீர்க்காலம் அதாவது குளிர்ப்பிரதேசங்களில், கடைசி இரவுப்பனியுறைவு முடிந்த பின்னர், நடுகையை மேற்கொள்ளலாம். இவற்றைப் பாத்திரங்களிலோ, சாடிகளிலோ, தூங்கும் கூடைகளிலோ அல்லது நிலத்திலோ நடலாம். செடிகள் கூடுதலாகப் பூக்களைத் தருவதும் எதிர்கொள்ளும் வளர்ச்சிக்கு தேவையான போசணையை கிளங்குகளில். சேமிப்பதும் அவற்றினது சிறந்த இயல்பாகிறது. அநேக வளர்க்கும் பிரியர்கள் ஆரம்பத்திலேயே சமநிலையான பசளையைப் பயன் படுத்துவர். எனவே செடிகள் கூடுதலாக



சாடியில் பெகோனியா வளர்த்தல்

வளர்ச்சியை மேற்கொண்டு நன்கு பூக்களையும் தந்துவிடும். பின்னரும் தொடர்ந்து பசளை அளிக்கவேண்டும். செடிகளை நன்கு கவனித்து வர வேண்டும். நன்கு செழிப்பாக செடிகளை வைத்திருக்க விரும்புபவர்கள் ஆரம்ப வளர்ச்சியின்போது பக்க முளைகளைக் களைந்தும் மாதமொருமுறை பசளை போட்டும் மண்வளத்தை ஈரமாக வைத்தும் பேணவேண்டும். கூடுதலான நீர் செடிக்குப் பாதகமாக அமையும். அடிக்கடி பழுத்த பூக்களையும் இலைகளையும் காய்ந்த தண்டுகளையும் வெட்டிவிடவேண்டும். இத்துடன் நீளமான தண்டுகளைக் கத்தரித்து செடிகளை அழகாக வைத்திருக்கவேண்டும். அநேகமாக, நவம்பர் மாதம்வரை செடிகளைப் பராமரிக்கலாம். பின்னர், இலைகள் மஞ்சள் நிறமாகி மடிந்து விடும். இந்நிலையில், நீர் விடுவது குறைக்கப்பட வேண்டும். அப்போது செடியானது உறங்கு நிலைக்கு வந்துவிடும்.

## பூக்கள்:

பூக்கள் மிகவும் எடுப்பாக இருப்பதால் எல்லோராலும் கவரப்படுபவை. செடிகளுக்கு கூடுதலான வெளிச்சம் தேவை. இருந்தும், சில இனங்கள் வெப்பமான காலநிலையிலும் ஓரளவு சமாளிக்கக் கூடியவையாக இருக்கும். வருடமுழுவதிலும் நன்கு வளர்ந்து பூக்களைத் தருபவை. ஆனால் கிழங்குகள் மூலம் பயிரிடப்படும் இனங்கள் பூக்கும் தன்மையை சில காலம் இழந்து உறங்கு நிலையை அடையும். இவ்வேளை கிளங்குகள் எடுக்கப்பட்டு ஓரளவு குளிர் சார்ந்த பதநிலையில் பாதுகாக்கப்பட்டு பின்னர் உரிய காலம் வரும்போது ஊன்றப்படும்.

## நோயின் தாக்கம்:

தாக்கம் குறைவாக இருந்தாலும், இலைகளில் புள்ளிகள் காணப்படுதல், திறிப்ஸ், பேன் வகைகளின் பாதிப்புகள் ஏற்படுத்துவதுண்டு. இவற்றை (remethrin) றெஸ்மேத்திறின் கட்டுப் படுத்தும். இத்தோடு, பங்கசு, மைல்டியூ தாக்கமும் உண்டு.

sekari.s@thaiveedu.com

■ ■ ■





### Family: Poaceae

## மூங்கில் மரம்

**(Botanical name: Bambusa multiplex : Eng.name: Bamboo)**

மூங்கில் புல் இனத்தைச் சார்ந்த ஒரு தாவரமாகும். புல் வகையிலேயே மிகவும் பெரிதாக வளரக்கூடிய ஒன்றாகும். இராட்சத மூங்கில் இனம் மிகவும் பெரிய மரமாகும். இது, மிக வேகமாக ஏறக்குறைய 40 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியதும், 60 செமீ உயரம் ஒரு நாளில் வளரக்கூடியதுமாகும். ஒரு மூங்கில் வயது 60 ஆண்டுகள் வாழக்கூடியது. இது கடல் மட்டத்தில் 4000 மீற்றர் உயரமுள்ள பிரதேசங்களில் நன்றாக வளரும். உலகம் முழுவதிலும் 1200க்கும் மேற்பட்ட இனங்கள் வளர்க்கப்படுகின்றன. மூங்கில் உற்பத்தியில் சீனா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பங்களதேஸ், பிலிப்பையின்ஸ், நேப்பாளம் போன்ற நாடுகள் முன்னிலையில் நிற்கின்றன.


அண்மையில் சிறிய மூங்கில் வகைகள் அதிஷ்டமானவை என்ற ரீதியில் வீடுகளில் உட்புறமாக வளர்க்கின்றனர். நல்ல வாழ்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை கடந்த 4000 ஆண்டுகளாக ஆசிய மக்கள் பலரிடத்தும் இருந்து வந்தன.

பின்தங்கிய நாடுகளில், மூங்கில் குடிசை வீடுகள் கட்டுவதற்காக மரமாகவும், கட்டிடம் கட்டும் தொழில்களிலும், பலதரப்பட்ட கைவினைப் பொருள்கள் செய்வதற்கும், ஏனைய பல தொழில்களிலும் பயன் படுத்தப்படுகின்றன கிழக்காசியா, தென் ஆசியா, இந்தியா போன்ற நாடுகளில் மரக்கூழ் செய்வதற்கும் காகிதத் தொழிற்சாலைகளில் பலதரப்பட்ட கடதாசிகள் செய்வதற்கும் பயன்படுகின்றன.

■ ■ ■




**$89,000.00**



**Finch / Driftwood**
Condo Apt, 1 Bedroom,1 Washroom, Recently Renovated Kitchen, Washroom, New Appliances, Absolute Move-In Condition, Steps To TTC, Schools, Shopping Malls

**$124,000.00**



**Finch / Driftwood**
Condo Apt, 2 Bedrooms,2 Washrooms, Recently Renovated Kitchen, Washroom And Bedrooms, New Appliances, Absolute Move-In Condition. Steps To TTC, Schools, Malls

**$224,000.00**



**Major Mack/Jane**
Sale Of Business, Well Known Restaurent For Sale. Easy To Manage, Right Next Across Canada's Wonderland. Great Opportunity.

**$ 439,900.00**



**Finch/Morningside**
Ditached 2 Storey, 4+2 Bedrooms, 4 Washrooms, Location! Location!Location! Greenpark Built Full Brick. Basement Finished With Two Bedrooms With Seperate Entrance

**$599,000.00**



**McCowan / 16th Ave**
Ditached 2 Storey, 4 Bedrooms, 4 Washrooms, Excellent Location In Markham! High Demand Area. 9" Ceiling, Oak Staircase "Open Concept" Living Room With Coffered Ceiling

## புதியதோர் உலகுக்கான திறவுகோல்

## குணசேகர் நாகலிங்கம்
Sales Representative
Direct: **416-402-4545**

## சுஜாதா குணசேகர்
Sales Representative
Direct: **416-569-5086**





**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: 416-298-3200 , Fax: 416-298-3440
E-mail: sujatha.homelife@gmail.com
*Independently Owned and Operated.

HOMELIFE HIGHER STANDARDS

We do not intent to solicit currently listed properties.



# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



**Best Rates**

### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

## Siva Ratnasingam

*Lic: M08002133*
*Brokerage # 11156*
SENIOR MORTGAGE CONSULTANT
***2005,2006,2007,2008 Diamond Award Winner***
**416.520.1214**



**Nanthini Singarajah, AMP**

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**
- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**
- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

**RAPID SECURITY**
WE PROTECT YOU
"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
- Commercial
- Residential
- Retail
- Healthcare
- Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

**New Midwest auto collision**
**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com

Contact Person:
**Ruban or Shan**





Alphaweb 416-238 7222

# வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க...

**Listing of the Week!**




3 Bedrooms, 3 Washrooms
Spacious Semi In High Demand Area
Gorgeous Open Concept Design.
Close To All Amenities.
Backyard Has 5 Springler Zones




4+2 Bedrooms, 4 Washrooms
Location! Location! Location!




4 Bedrooms, 3 Washrooms
Less 5 Years 2475 Sq.Ft.




4 Bedrooms, 4 Washrooms
The Great Green Park Built




3 Bedrooms, 3 Washrooms
Close To Parks, Transit, And Schools



**Hariharan Nadarajah**
*Sales Representative*
**Direct: 416-856-4276**
**Office: 416-298-3200**
E-Mail: harisells@gmail.com

**HomeLife Today Realty Ltd., Brokerage**
INDEPENDENTLY OWNED AND OPERATED
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

HOMELIFE HIGHER STANDARDS

*Call* ***Hariharan Nadarajah*** *for information on homes available in area of your choice*

## Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam** B.Com.
*Sales Representative*
**416-726-8055**
argaccountax@rogers.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*

**1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3**

**Bus: (416) 321-6969**
**Fax: (416) 321-6963**

*Independently own and operated

**$214,900**



Midland & Danforth
2+1 br Condo. Close to TTC, shopping, Go, school. Gym, pool, tennis, squash, billiards, sauna and other facilities in building.

**$284,900**



Markham & Sheppard
3 br townhouse. Corner unit. Close to TTC, school, library & shopping. Upgraded kitchen, hardwood flooring, wood staircase, large underground parking spaces.

**$339,000**



Bellamy & Lawrence
3+2 br Detached Bungalow. Close to TTC. Hardwood floors, pot lights, separate entrance to finished basement, glass covered sunroom. 4 car parking on driveway.

**$399,900**



Markham & 14th Ave
3+2 br Link. 2 br basement Apartment w/ seperate enterance. Gorgeous property w/ Upgrades. Hi efficiency furnace, hardwood and ceramic floors.

**$519,900**



16th & 9th Line
4 br Detached. Finished basement apartment. Very clean home in desirable makrham location. Hardwood floors, no sidewalk.

**$549,900**



9th Line & 14th Ave
4 br Detached. Close to school and shopping. Lots of upgrades! Hardwood flooring, 9 ft ceiling.

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

**(416) 726-8055**

encore®
at equinox
401 & McCowan



**Exclusive**
**VIP sales event by appointment only**

**SAVE**
**before the sales event**

ஏப்பிரல் மாதம் 3ம், 4ம் திகதி சனி, ஞாயிறு தினங்களில் மாலை 2 மணிமுதல் 5 மணி வரை

**Karaikudi Chettinad Restaurant**
1225 Kennedy Rd.,
Scarborough, ON
(Between Lawrence & Ellesmere)
உணவகத்தில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

(சிற்றுண்டிகள் வழங்கப்படும்)

மேலதிக தொடர்புகளுக்கு

**Ahilan Thanabalasingham**
Sales Representative
**416.617.1767**
Office: 905.471.0002
Fax: 905.471.7441



RE/MAX
**Dynasty Realty Inc., Brokerage**
Independently owned and operated

# புதிய வீடுகள்

## வீடும் விடியலும் - 50



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

எதிர்வரும் சில அத்தியாயங்களில் புதிய வீடுகள் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை எவை, தரம் உயர்த்தும் போது (Upgrade) கவனிக்க வேண்டியவை எவை, புதிய வீட்டுரிமையாளர்களின் வீட்டு உத்தரவாதம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பன பற்றி ஆராய்வோம்.

புதிய வீடுகளைக் கொள்வனவு செய்வது என்பது கனடாவில் மிகச் சாதாரண ஒரு நிகழ்வு ஆகி விட்டது. மிகக் குறைந்த வட்டி வீதத்தைச் சாதகமாகப் பயன் படுத்தி கட்டிட அமைப்பாளர்கள் பலரும் ஏராளமான வீடுகளைக் கட்டிக் கொண்டே போகிறார்கள். வீடு வாங்குபவர்களுக்கும் குறைந்த வட்டி வீதம், அவர்களது கொள்வனவுச் சக்தியை அதிகரிக்கும் மிகப் பெரிய காரணியாக விளங்குவதால் புது வீடுகளை வாங்கிக் கொண்டே போகிறார்கள். எங்கோ ஆரம்பித்த புது வீடுகளின் விலை தற்போது விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. சாதாரண அளவிலான ஒரு புதிய வீட்டை $500,000.00 டொலருக்கு குறைந்து வாங்குவது கடினம் என்ற நிலைக்கு வந்து விட்டது.

தற்போதய கால கட்டத்தில் புதிய வீடு வாங்கும் தன்மை நுகர்வோர் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகிறது. பலவித வசதிகள், வீடுகளின் அமைப்பு, கவர்ச்சி, இலகுவில் அடமான ஒழுங்குகள் செய்யக்கூடிய வசதிகள், உத்தரவாதம், ஒருவகை கௌரவம், குறைந்த வட்டி வீதம் போன்ற பல காரணிகளால் புதிய வீடுகளில் உள்ள நாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது என்று கூறலாம். ஆனால் புதிய வீடுகளை ஓடி ஓடி வாங்கினாலும் அதற்குரிய முழுப்பலனையும் வீட்டுரிமையாளர்கள் பெறுகின்றார்களா? என்பது கேள்விக் குறியாக அமைகிறது. புதிய வீடுகளைப் பற்றியும், நடைமுறைகள் பற்றியும் சட்டதிட்டங்கள் பற்றியும் நுகர்வோர் அறியாது இருப்பதால் கட்டிட அமைப்பாளர்கள் (Builders) இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் பெரிதும் பாதிக்கப் படுவது அப்பாவி வீட்டு உரிமையாளர்கள் தான்.

நாங்கள் நேர்மையாக நடக்கிறோம் அதுபோல எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்று எண்ணும் நல்ல மனம் கொண்ட அப்பாவி நுகர்வோர் தான் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள். "கனடாவில் எதுவும் கேட்டால் தான் கிடைக்கும்" என்பதை மறந்து விடக்கூடாது. கண் விழித்த படி இருக்கவே விழியைத் தோண்டக் கூடியவர்கள் வெளிநாடுகளில் மிக அதிகம். எனவே நாம் எவ்வளவு விவேகமாக நடந்து கொள்கிறோம் என்பதில் தான் எங்களது வெற்றி தங்கியிருக்கின்றது.

### புதிய வீடுகளுக்கான உத்தர வாதம் / NEW HOME OWNER'S WARRANTY PROGRAM

ஒன்ராறியோவில் புதிய வீட்டுரிமையாளர்களைப் பாதுகாக்கவும், அவர்களது நலன் பேணவும் "TARION" என்ற தனியார் கூட்டுத் தாபனம் கடந்த 30 வருடத்திற்கு மேலாக சேவை செய்து வருகின்றது. வட அமெரிக்காவிலே மிகப் பயனுள்ள நல்ல திட்டங்களைக் கொண்ட ஸ்தாபனமாக இது கருதப்படுகிறது.

ஒன்ராறியோவில் கட்டிட நிர்மாணத்திற்குரிய வரையறைகளும், பிரமாணங்களும் சட்ட ரீதியாக அரசாங்கத்தினால் வரையறுக்கப் பட்டிருக்கிறது.

கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்டிருக்கும் கட்டட அமைப்பாளர்கள் இத்தகைய விதி முறைகளில் இருந்து வழுவாது செயற்படுவதை உறுதி செய்வதோடு நுகர்வோரையும் பாதுகாப்பதே இக் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும். கடந்த காலங்களில் 190 மில்லியன் டொலருக்கு மேலாக முறைப்பாடுகளின் மேல் திருத்த வேலை செய்வதற்காக இக்கூட்டுத்தாபனம் செலவிட்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இத்தகைய உத்தரவாதங்களைப் பெறுவது எப்படி, பலன் அடைவது எப்படி என்பது பற்றி சற்று உற்று நோக்குவோம்.

பொதுவாக புதிய வீடு வாங்கும் போது வீட்டிற்கான விலையுடன் இத்தகைய உத்தரவாதத்திற்கான கட்டணமும் அறவிடப் படுகிறது. வீட்டிற்கான விலை என்பது ஆரம்பத்தில் ஒன்றாக இருக்கும். ஆனால் முடிவில் மறை முகமாகப் பல கட்டணங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை பலரும் நடைமுறையில் கண்டிருக்கலாம். அதில் இக்கட்டணமும் ஒன்று. பொதுவாக closingக்கு ஒரு $10,000 தேவை என்று பலரும் கதைப்பதை அறிந்திருக்கலாம். புது வீடாக இருந்தால் Landscaping, Driveway, Warranty, Land Transfer Tax, Lawyer fee போன்ற பல கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். பின்வரும் பெறுமதி அடிப்படையில் Home Ownersக்கான உத்தரவாதக் கட்டணம் அறவிடப் படுகிறது.

வீடு கைக்கு வரும் போது (On Closing) பல வித புத்தகங்கள், Manuels, என்பவற்றோடு "HOME OWNERS INFORMATION PACKAGE" என்று ஒரு சிறிய புத்தகம் தரப் படும் அதில் உத்தரவாதம் சம்பந்தமான பொதுவான பல தகவல்களைப் பெறலாம். அதன் மாதிரிப் படம் இங்கே தரப்படுகிறது




புதிய வீடுகளுக்கான உத்தர-வாதம்

புதிய வீடு வாங்குபவர்களின் விகிதாசாரம் அதிகரித்துக் காணப்படுவதாலும், புதிய வீடுகளில் இருக்கக் கூடிய உத்தரவாதம் பற்றிச் சகலரும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாது இருப்பதாலும், பல அடிப்படை அம்சங்களை உணர வைக்கும் விதத்தில் தொடர்ந்து வரும் இதழ்களில் பல பயன் உள்ள விடயங்கள் வெளிவர இருக்கின்றன.

புதிய வீடு வாங்குபவர்களுக்கு இருக்கக்கூடிய உத்தரவாதத்தை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

- கட்டுப்பண உத்தரவாரம் (Deposit Protection)
- தரமற்ற மூலப் பொருள்களுக்கெதிரான உத்தரவாதம். (Protection against defects material)
- தரமற்ற வேலைக்கெதிரான உத்தரவாதம். (Protection against defects workmanship)

**III TARION** — PROTECTING ONTARIO'S NEW HOME BUYERS

**Enrolment Fee Calculation Table**
(Effective January 1, 2010)

**All Homes (Freehold & Condominium Units)** Tarion's GST No. - 121546931 RT0001

| Sale Price Range (Excluding GST) | Unit Enrolment Fee | + | 5% GST | + | 8% RST | = | Total Enrolment Fee |
|---|---|---|---|---|---|---|---|
| Up to $ 100,000.00 | $535.00 | + | $26.75 | + | $42.80 | = | $604.55 |
| $100,000.01 - 150,000.00 | $580.00 | + | $29.00 | + | $46.40 | = | $655.40 |
| $150,000.01 - 200,000.00 | $650.00 | + | $32.50 | + | $52.00 | = | $734.50 |
| $200,000.01 - 250,000.00 | $720.00 | + | $36.00 | + | $57.60 | = | $813.60 |
| $250,000.01 - 300,000.00 | $790.00 | + | $39.50 | + | $63.20 | = | $892.70 |
| $300,000.01 - 350,000.00 | $860.00 | + | $43.00 | + | $68.80 | = | $971.80 |
| $350,000.01 - 400,000.00 | $930.00 | + | $46.50 | + | $74.40 | = | $1,050.90 |
| $400,000.01 - 450,000.00 | $1,000.00 | + | $50.00 | + | $80.00 | = | $1,130.00 |
| $450,000.01 - 500,000.00 | $1,070.00 | + | $53.50 | + | $85.60 | = | $1,209.10 |
| $500,000.01 - 550,000.00 | $1,150.00 | + | $57.50 | + | $92.00 | = | $1,299.50 |
| $550,000.01 - 600,000.00 | $1,200.00 | + | $60.00 | + | $96.00 | = | $1,356.00 |
| $600,000.01 - 650,000.00 | $1,250.00 | + | $62.50 | + | $100.00 | = | $1,412.50 |
| $650,000.01 - 700,000.00 | $1,300.00 | + | $65.00 | + | $104.00 | = | $1,469.00 |
| $700,000.01 - 750,000.00 | $1,350.00 | + | $67.50 | + | $108.00 | = | $1,525.50 |
| $750,000.01 - 800,000.00 | $1,400.00 | + | $70.00 | + | $112.00 | = | $1,582.00 |
| $800,000.01 - 850,000.00 | $1,450.00 | + | $72.50 | + | $116.00 | = | $1,638.50 |
| $850,000.01 - 900,000.00 | $1,500.00 | + | $75.00 | + | $120.00 | = | $1,695.00 |
| $900,000.01 - 950,000.00 | $1,550.00 | + | $77.50 | + | $124.00 | = | $1,751.50 |
| $950,000.01 - 1,000,000.00 | $1,600.00 | + | $80.00 | + | $128.00 | = | $1,808.00 |
| greater than $1,000,000.00 | $1,650.00 | + | $82.50 | + | $132.00 | = | $1,864.50 |

For more details refer to Tarion Builder Bulletin 27 at www.tarion.com

மேற்குறிப்பிடப்பட்ட தரமற்ற மூலப் பொருள் களுக்கெதிரான உத்தரவாதமும், தரமற்ற வேலைக்கெதிரான உத்தரவாதமும் 30 நாட்கள், ஒருவருடம், 2 வருடம், 7வருடம் என்ற கால அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இதுபற்றி அடுத்து வரும் கட்டுரைத் தொடர்களில் விரிவாக ஆராயப்படும்

### கட்டுப் பண உத்தரவாதம்:

தனி வீட்டு உரிமையாளர்களோ, அல்லது Condominium உரிமையாளர்களோ கட்டிட அமைப்பாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, வீடு கட்டத்தொடங்க முதலே ஒரு தொகைப் பணத்தைக் கட்டுப் பணமாகச் செலுத்த வேண்டி இருக்கும். அத்தகைய ஒப்பந்தத்தில் வீடு கட்டி முடித்துக் கையளிக்கப்படும் திகதி குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் ஏதாவது காரணங்களினால் குறிப்பிட்ட திகதியில் வீடு கையளிக்கப் பட முடியாது போனால், அதாவது கட்டிட அமைப்பாளர்களினால் தாமதப் படுத்தப் பட்டால் நீங்கள் கட்டிய பணத்தை மீளப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் கட்டிட அமைப்பாளர்கள் குறிக்கப் பட்ட திகதிக்கு 65 நாட்களுக்கு முன்னதாக எழுத்து மூலம் அறிவித்து 120 நாட்கள் வரை தாமதப் படுத்தக் கூடிய உரிமை கட்டிட ஒப்பந்த காரருக்கு உண்டு என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

கட்டிட அமைப்பாளர்கள் இத்தகைய விதிகளை மீறும் பட்சத்தில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி 2003ம் ஆண்டிற்குப் பின்னர் அத்தகைய கொள்வனவு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால் $40,000.00 டொலர் வரை மீளப் பெற உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப் பிட்ட திகதிக்கு முந்திய ஒப்பந்தங்களுக்கான உத்தரவாதம் $20,000.00 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய வீடுகளின் விலை அதிகரித்துக் கொண்டு போகும் காரணத்தினால் கட்டுப் பணத்தை மீளப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் சந்தர்ப்பம் மிக அரிதாகவே உள்ளது. அவ்வாறு நுகர்வோர் கட்டுப்பணத்தை மீளப் பெற்று ஒப்பந்தத்தை இரத்துச் செய்தால் மிக்க பலன் அடைவது கட்டிட ஒப்பந்த காரராகவே இருக்கும். ஏனெனில் தற்போதய சந்தை விலைக் கேற்ப அதிக தொகைக்கு அதே வீட்டை விற்று விட முடியும் என்பதோடு உங்கள் கட்டுப் பணம் அவர்களுக்குச் செய்யும் தொழிலுக்கு ஒரு முதலீடாகவும் பயன் படுத்தப்பட்டு விடும்.

22ம் பக்கம் பார்க்க...







# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**






Medical Office,
Professional Finished
Kennedy/Finch
**List: $399,000**



BRAMPTON
Bovaird/Chinguacoucy
1,211 Sq Ft
$ 320 for sale OR
**$30.00 Per Sq Ft for lease**



MARKHAM
**$25.00** Sq Ft Net
Markham/Highland



MARKHAM
Riverwalk Dr/9th Line
4 Bedroom 4 Washroom
**$629,900**



TORONTO
**$ 240,000** 1,440 Sq Ft
Markham Rd
Steeles Ave

---


# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust

HOMELIFE







Neilson / Finch
4+1 Bedrooms
3 Washroom Finished
Basement




**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom

CONVENIENCE/VARIETY
$95,000
Plus Stock
IN OSHAWA



**HomeLife Today Realty Ltd.,** Brokerage*

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

நாம் அழகாய் இருக்க

# மார்பகத்திற்கு மசாஜ்

# (Breast Massage)

இது மசாஜில் மிக முக்கியமான ஒன்று பெண்களுடைய அழகையும் பெண்மையையும் எடுத்துக் காட்டும் ஒரு அங்கம். நம் நாட்டில் பெண்கள் இது பற்றிப் பேசவே கூச்சப்படுவார்கள். இது சரியான வளர்ச்சி இல்லாததால், பலருக்கு மனவேதனை மிகுதியாக இருக்கும். எல்லா விதத்திலும் அழகாக உள்ள ஒரு பெண்ணுக்கு மார்பகங்கள் மட்டும் வளர்ச்சி இல்லாமல் சிறியதாகவும் அழகு இல்லாமலும் இருப்பதுண்டு. ஏன் வளர்ச்சி இல்லாமல் இருக்கிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளலாம்.

இதில் இரண்டு விடையங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. ஒன்று பரம்பரை மற்றையது ஹார்மோன் பற்றாக்குறை.

அவரவர்களுடைய பரம்பரையைப் பொறுத்து வளர்ச்சி வித்தியாசப்படும். முக்கியமாகத் தாயார், தகப்பனாரின், சகோதரிகளுக்கு எவ்வாறு மார்பு, உள்ளதோ அதைப் பொறுத்ததாகும்.

ஹார்மோன் பற்றாக்குறையினாலும் இக்குறை ஏற்படலாம் மார்பகங்களுக்கு தேவையான வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் என்சைம்கள் (Enzyme) இல்லாவிட்டாலும் இக்குறை ஏற்படலாம். மேற்கூறிய குறைகளைப் போக்க உணவினாலும் தேகப் பயிற்சியினாலும், மசாஜினாலும் ஒரளவிற்கு முயற்சி செய்யலாம்.

இந்த மசாஜை அவரவர்களே செய்து கொள்ளலாம். ஹார்மோன் பற்றாக் குறையானால் டாக்டரிடம் ஆலோசனை பெற்று நிவர்த்தி செய்து கொள்ளலாம். இந்தப் பயிற்சிகள் மார்பகங்கள் சிறிதாக உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, மார்பகங்கள் பெரிதாக இருந்து பின்னர் சரிந்திருக்கலாம். அவ்வாறு உள்ளவர்களும் இப்பயிற்சியால் நல்ல வடிவம் கொடுக்கலாம்.

மார்பகங்களைக் கழுத்திலிருந்து வரும் சதைதான் தாங்கிக் கொண்டிருக்கிறது (Natural Body). ‘இயற்கையான உடல்’ என்று சொல்வார்கள். மார்பகங்கள் தசையால் ஆனது அல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மார்பகங்களின் நடுப்பகுதியான பால் சுரக்கும் சுரப்பியைக் சுற்றி சதைப் பற்றுள்ள திசுக்கள் சேர்ந்திருப்பதால் அந்த இடம் ஒரு பரிமாணத்தைக் கொடுக்கிறது. அதனுடைய முகப்புத் தோற்றம் சருமத்தினால் மூடி இருப்பதனால் பார்ப்பதற்கு மார்பகங்கள் ஒரு வடிவமாகத் தோன்றுகின்றன. அசையும் வண்ணம் பொருந்தியவை நம்முடைய மார்பகங்கள்.

Breast Developing Cream (பிரஸ்ட் டெவலப்பிங் கிரீம்) அல்லது எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தடவி கீழ்க்கண்ட மசாஜை முதலில் செய்யலாம்.

- இரு மார்பகங்களின் நடுப் பாகத்திலிருந்து மேல் தாடையை நோக்கிக் கீழிருந்து மேல் நோக்கி மசாஜ் செய்ய வேண்டும்.
- தோளிலிருந்து ஆரம்பித்து வட்டமாகச் சுற்றி மார்பகங்கள் இரண்டும் சேரும் இடம்வரை மசாஜ் பண்ணவேண்டும்.
- மேல் வயிற்றில் இருந்து மார்பகங்களை நோக்கி மசாஜ் செய்ய வேண்டும் மார்பகத்தின் அடிப்பாகம் வந்தவுடன் கையை அகற்றிவிட வேண்டும். இது மார்பகத்தின் அடிப்பாகத்தைத் தூண்டி விடுவது போல் இருக்கும்.
- முச்சை உள்ளுக்குள் இழுத்து உங்கள் வசதியைப்பொறுத்து அரை நிமிடத்துக்குப் பிறகு மெதுவாக உள்ளே இழத்த காற்றை வெளியே விட வேண்டும்.
- இரண்டு கைகளையும் முன்னும் பின்னுமாக சுழற்ற வேண்டும். கால் அசையாமல் ஸ்கிப்பிங் செய்யும் போது கை எப்படி அசையுமோ அது போல் அசையும்படி செய்ய வேண்டும்.
- கைகளைத் தலைக்கு மேல் தூக்கி இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்துப் பிறகு கீழே கொண்டு வர வேண்டும்.
- தலையைப் பின்புறமாகச் சாய்த்துப் பிறகு முன்னுக்கு கொண்டு வர வேண்டும்.
- மார்பின் நடுவில் இரண்டு கைகளையும் சேர்த்து வணக்கம் செய்வது போல செய்து முழங்கை நன்கு பின்னுக்குச் செல்லும் வரை பிரித்து, திரும்பவும் கைகளைச் சேர்க்க வேண்டும்.

இதுபோன்ற பல பயிற்சிகள் உள்ளன. ஆனால் இவற்றைச் செய்தாலே நல்ல பலன் கிடைக்கும். இதனைப் படுத்துக் கொண்டும் செய்யலாம். உட்கார்ந்து கொண்டும் செய்யலாம். இப்பயிற்சியை தினமும் செய்வது நல்லது. குறைந்தது 10 நிமிடமாவது செய்யலாம்.



சசி நரேன்
Cosmetologist & Aestheticia


இரவு படுக்கைக்குப் போகும் முன் மார்புக் கச்சையை அகற்றி விட்டுப் படுக்க வேண்டும். பஞ்சு வைத்த மார்புக் கச்சையை உபயோகிப்பது அவ்வளவு நல்லதல்ல.

நம்முடைய உடம்பில் ஐந்து விதமான ஹார்மோன்கள் இருக்கின்றன.
அவையாவன:

- Androgen - அன்ட்ரொஜன் (ஆண்களுக்கு)
- Estrogen – எஸ்ட்ரொஜன் (பெண்களுக்கு)
- Thyroid - தைராய்டு.
- Steroids - ஸ்டெராய்ட்ஸ்.
- Insulin - இன்சுலின்.

மேற்கண்டவற்றில் இரண்டில் ஏதாவது குறைபாடு இருந்தால், ஆண்களைப் போல் பெண்களுக்கும் முடி வளருவது, மார்பகங்கள் வளர்ச்சியடையாமல் இருப்பது போன்ற குறைகளும் தோன்றும். இதை நிவர்த்தி செய்ய மருந்துகளும் மாத்திரைகளும் நிறைய உள்ளன. உங்கள் குடும்ப வைத்தியரிடம் ஆலோசனை பெற்று இதைச் சரி செய்து கொள்ளலாம்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■




# வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் நிர்ணயித்தல்



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

அண்மையில் எனது நண்பர் ஒருவர் "காப்புறுதி கட்டணத்தை எப்படி நிர்ணயிக்கிறீர்கள்?" என்று கேட்டார். இந்தக் கேள்வி எனக்குப் புதிதல்ல. காப்புறுதி முகாமைத்துவத்தில் இருக்கும் என்னிடம் இந்தக் கேள்வியைப் பலரும் கேட்டு உள்ளார்கள். இதுபற்றி ஒரு தெளிவான விளக்கத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

காப்புறுதி என்பது வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத நாட்டங்களைக் ஈடுசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதற்கான கட்டணத்தை முன் அனுபவத்தின் துணைகொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. பல அமைப்புக்கள் இந்தச் சேவையை வழங்க முற்படுவதால் இயன்றவரை கட்டணத்தைக் குறைவாக வைத்திருப்பது முக்கியமாகிறது.

ஒரு காப்புறுதியின் கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளைக் கவனத்தில் கொள்ளுவதவசியம். முதலாவதாக வீட்டுக் காப்புறுதியைக் கவனிப்போம்.

## வீட்டுக் காப்புறுதி:

### 1 - இடம் அல்லது ஸ்தானம்:

இது ஒரு முக்கிய காரணியாக வீட்டுக் காப்புறுதிகளில் இருப்பது வியப்பில்லை. அதிகம் களவுகள், நெருப்புகள் போன்ற அனர்த்தங்கள் நடக்கும் சுற்றாடலில் இருக்கும் வீடுகளுக்குக் காப்புறுதிக் கட்டணம் அதிகமாகவே இருக்கும்.

### 2 - வீட்டின் வயது / அளவு மற்றும் சிறப்பம்சங்கள்:

பழைய வீடுகள் கூடிய பிரச்சினைகளை முகம் கொடுப்பதனால் பழைய வீடுகளுக்குக் காப்புறுதிக் கட்டணம் அதிகமாயிருப்பது இயல்பானதே, மேலும் அவற்றின் அளவு, அதாவது பெரியவீடுகளில் நெருப்புப் போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகையில் கூடிய செலவினம் வருவதனால் அவற்றிற்கான கட்டணம் மிகையாக இருக்கும். வீட்டில் உள்ள தன்மைகள் உதாரணமாக வீடு குளிர்படுத்தப்பட்டிருந்தால், இதுபோன்ற சிறப்பம்சங்கள் இருப்பின் கட்டணம் சற்று மிகையாக இருக்கும்.

### 3 - கட்டிடத்திற்காகப் பாவிக்கப்பட்ட கட்டடப்பொருட்கள்:

உதாரணத்திற்கு கல்லால், அல்லது செங்கற்களால் கட்டிய சுவர்கள் இருப்பின் அவை Dry wall சுவர் வீடுகளிலும் வித்தியாசமாக இருக்கும். டொரண்டோ மொன்றியல் போன்ற நகரங்களில் பெருமளவு வீடுகள் Shingle எனும் கூரையினால் அமைந்திருப்பினும் மரப்பட்டையால், இரும்புத்தகட்டால் அமைந்த கூரை வீடுகளும் உண்டு என்பதை மறந்து விடலாகாது. எனவே கட்டிடப்பொருட்களினால் காப்புறுதிக் கட்டணம் வித்தியாசப்படும்.

### 4 - உஷ்ணப்படுத்தும் உலைகள்:

கனடாவில் உள்ள வீடுகள் அனைத்துமே குளிர் காலத்தில் உஷ்ணப்படுத்வேண்டியிருக்கும். இந்த உலைகள் மூன்று வகையான எரிபொருட்களைப் பாவிக்கும். அவை மின்சாரம், இயற்கைவாயு எரி எண்ணை. இதையும்விட சூரிய உலை பாவித்தும் வீடுகள் சூடாக்கப்படுவதை மறந்துவிடலாகாது இந்த உலைகளின் எரிபொருள், வயது ஆகியவையும் ஒரு தாக்கத்தைக் காப்புறுதி கட்டணத்தில் ஏற்படுத்தும்.

### 5 - கழிவுநீர் தேக்கம் (Sewer back up):

நீரினால் காற்றினால் ஏற்படும் அனர்த்தங்களும் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும் உதாரணத்திற்கு மிகப்பழைய வீடுகள் உள்ள பகுதியில் கழிவு வாய்க்கால்கள், குழாய்கள் பழசாகி பழுதடைந்து மீண்டும் மீண்டும் செலவை ஏற்படுத்துமாகையால் இத்தகைய பகுதியில் காப்புறுதி கட்டணம் மிகையாகக் காணப்படும்.

### 6 - சொந்தப் பாவனைப் பொருட்களும் உடமைகளும்:

சொந்தப் பாவனைப் பொருட்கள், மற்றும் உங்கள் தனிப்பட்ட உடமைகளின் பெறுமதி ஆகியனவும் கட்டுப்பணத்தை நிர்ணயிப்பது இயல்பானதே. அதிலும் பொதுவாக ஒரு காப்புறுதி மொத்தமாகத் தனிப்பட்ட உடமை இத்தனை ஆயிரம் எனக் குறிப்பிடினும் சில பொருட்களின் வரையறை நிர்ணயித்திருப்பார்கள். உதாரணத்திற்கு நகைகள் இரண்டாயிரம் அல்லது ஐயாயிரம் என ஒரு வரையறை வகுத்திருப்பார்கள். அதற்கு மேலான நகை வீட்டில் வைத்திருப்பதனால் மேலதிக கட்டணத்தை அறவிடுவது இயல்பானதே. இதேபோலவே வேறுபல பொருட்களுக்கும் வரையறை உளது.

### 7 - சுற்றாடல்:

நீங்கள் வதியும் இடத்தில் பல களவுகள், தீ, வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் இடம் பெறுமானால் அப்பகுதிகளில் உள்ள அனைத்து வீட்டுக் காப்புறுதிக் கட்டணங்களும் சற்று அதிகமாகவே இருப்பது இயல்பாகும். இத்தகைய சுற்றாடலில் வீடுகள் மலிவாகவும் இருக்கும். எனவே மலிவாக வீடு வாங்கலாம் என்பதற்காக இத்தகைய சற்றாடலில் வீடு வாங்குவது வேலியில் ஓடும் ஓணானை சட்டைக்குள் விட்டு விடுவதுபோல் இருக்கும்.

### 8 - தீ, களவு:

Alarmகளையுடைய வீடுகளுக்குக் கழிவு கொடுப்பது வளமையாகும். காரணம் இத்தகைய வீடுகளில் தீமைகள் நடந்தாலும் அதனால் ஏற்படும் நட்டம் சொற்பமாகவே இருக்கும்.

### 9 - தீயணைக்கும் படைநிலையத்திற்கும் வீட்டிற்குமான தூரம்:

தீயணைக்கும் படைநிலையத்திலிருந்து வீட்டின் தூரமும் காப்புறுதிக் கட்டணத்தை நிர்ணயிக்கும். டொரண்டோ, மொன்ரியால் போன்ற பெரு நகரங்களில் வீடுகள் அனைத்துமே தீயணைக்கும் படை நிலையத்திலிருந்து ஒரிரு கிலோமீட்டர் தூரத்திற்குள்ளேயே இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் நிர்ச்சூத்திரம் (Hydrant) வீட்டிற்கு நூறு யார் தூரத்திற்குள் இருப்பதைக் காணலாம். ஆனால் நாடளாவிய விதத்தில் பார்க்கையில் பெருமளவு வீடுகள் தீயணைக்கும் படை நிலையத்திலிருந்து பல கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அப்படி தீயணைக்கும் படை நிலையம் தூரத்தில் அல்லது நீர்ச்சூத்திரம் தூரத்தில் இருப்பின் கட்டணம் அதிகமாயிருக்கும்.

### 10 - நிலக்கீழ்ப் பகுதி (பேஸ்மன்ட்) வாடகைக்கு விடல்:

நிலக்கீழ்ப் பகுதி (பேஸ்மன்ட்) வாடகைக்கு விடப்பட்டிருக்கும் வேளைகளில் அதற்கான சிறுதொகைக் கட்டணத்தைப் பெறப்படும். அப்படி அறிவித்துக் கட்டணம் செலுத்தப்படுவதால் அங்கு ஏற்படும் அனர்த்தங்களுக்கும் நஷ்டஈடு தரப்படும் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

### 11 - நம்பிக்கைச் சுட்டு எண் (Credit Score):

நம்பிக்கைச் சுட்டு எண். ஏது வீட்டு அடமானக்கடன், கடன் அட்டை போன்றவற்றிற்குப் பாவிக்கப்படும் நம்பிக்கைச் சுட்டு எண் (Credit Score) எதற்காக என்று கேட்க இடம் உண்டு. அனுபவத்தில் காப்புறுதி அமைப்புக்கள் குறைந்த நம்பிக்கைச்சுட்டு எண் உடையவர்கள் வீட்டில் கவலையீனம் காரணமாகப் பல அனர்த்தங்கள் நிகழ்வதை அவதானித்துள்ளார்கள். இதன் நிமிர்த்தம் நம்பிக்கைச்சுட்டு எண் குறைவாக உள்ளவர்களுக்குக் காப்புறுதிக்கட்டணத்தைக் கூட்டிவைத்துள்ளார்கள்.

### 12 - கடந்தகாலத்தில் காப்புறுதியில் இருந்து பணம் பெற்றவர்கள்:

கடந்தகால அனுபவம். அதாவது முன்பு காப்புறுதியில் இருந்து பணம் பெற்றவர்களுக்குக் கட்டணத்தைச் சற்றுக்கூட அறவிடுவார்கள். அதேவேளை தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு ஒருவித அனர்த்தமும் இல்லாது இருப்பின் பத்து வீதக் கழிவும் கொடுப்பார்கள். இங்கு இன்னும் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். குட்டக்குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன் என்ற வாக்குக்கமைய அடுத்தடுத்துக் காப்புறுதியில் பணம்பெற விளைந்தால் ஒரு நிலையில் அவர்கள் காப்புறுதியை நிறுத்திவிடுவார்கள். இந்நிலையில் வேறு அமைப்பில் காப்புறுதி பெறுவதும் கடினம். இந்நிலை வராது தவிர்ப்பது யாவர்க்கும் நலம்.

### 13 - எத்தகைய காப்புறுதியை நீங்கள் பெறுகின்றீர்கள்:

எத்தகைய காப்புறுதி வேண்டும் என்பதிலும் கட்டணம் நிர்ணயிக்கப்படும். உதாரணத்திற்கு நஷ்டஈடு செய்கையில் புதிய பொருளின் விலை (Replacement Cost Guarantee) அல்லது இழந்த பொருளின் தற்போதைய விலை (actual Cash value) என்ற விதத்தில் ஈடு செய்யப்படலாம். உதாரணத்திற்கு 1990 ஆண்டு $1000இற்கு வாங்கிய உங்கள் தொலைக்காட்சி உபகரணம் இன்று இருபது வருடப் பழைமையானதால் $50ஐ கூட பெறமாட்டாது. ஆனால் அதற்காகப் புதிது வாங்குவதனால் இன்று $1500இற்குமேல் வரும். எனவேதான் புதிய பொருளின் விலையில் நட்ட ஈடு வழங்குவதைப் பலரும் விரும்புவர்.

### 14 - ஒரு காப்புறுதி அமைப்புடன் ஒன்றிற்கு மேற்பட்ட காப்புறுதிகள் வைத்திருத்தல்:

இறுதியாக ஒரு காப்புறுதி அமைப்புடன் ஒன்றிற்கு மேற்பட்ட காப்புறுதிகள் வைத்திருப்பின் அதற்காக சிலவிகிதக் கழிவு தரப்படும் என்பதனை மறக்கலாகாது.

மேலே நான் வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது எனச் சுருக்க மாய்த் தந்துள்ளேன். அடுத்த இதழில் வாகனக் காப்புறுதிக்கட்டணம் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது என்பதனைப் பார்ப்போம்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium

Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**Tel: 647 262 9430**

# புதிய வீடுகள்...

19ம் பக்கத் தொடர்ச்சி...

கட்டுப்பணத்தை திருப்பி எடுப்பதை விட அவ்வாறு வீடு தாமதமாகிக் கையளிக்கப் பட்டால் அதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு கிடைக்கக் கூடிய உத்தரவாதம் அல்லது நட்ட ஈடு என்ன? என்பதே அடுத்த கேள்வியாக அமைகிறது.

## எப்போது? எவ்வளவு காலத்திற்கு? தாமதப்படுத்தலாம்?

ஒரு கட்டிட அமைப்பாளர் கட்டிட வேலையை முடிக்க மேலதிக நேரம் தேவைப் படும் பட்சத்தில், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக முடிவுத்திகதியைத் தள்ளிப் போடலாம். அவ்வாறு செய்து பிந்தியதால் ஏற்படக் கூடிய செலவுகளுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

## பாரிய தாமதம் (15 நாட்களுக்கு மேல்)

கட்டிட அமைப்பாளர்கள், கொள்வனவு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட திகதிக்கு ஆகக் குறைந்தது 65 நாட்களுக்கு முன்னதாக எடுத்து மூலம் கொள்வனவாளர்களுக்கு அறியப் படுத்துவதன் மூலம் ஆகக் கூடியது 120 நாட்கள் வரை முடிவு திகதியைத் தள்ளிப் போடலாம். அச் சந்தர்ப்பத்தில் புதிய முடிவு திகதியும் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

## சிறு தாமதம் (15 நாட்களுக்குள்)

கட்டிட அமைப்பாளர்கள் முடிவு திகதிக்கு ஆகக் குறைந்தது 35 நாட்களுக்கு முன்னர் கொள்வனவாளர்களுக்கு அறியப்படுத்துவதன் மூலம் 15 நாட்கள் வரை தாமதப் படுத்தலாம்.

முன்னரே தாமதப்படுத்தப் பட்டிருந்தால் மொத்தத் தாமதம் 120 நாட்களுக்கு மேலாக இருக்கக் கூடாது என்பது விதிமுறையாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முக்கிய குறிப்பு:

கட்டிட அமைப்பாளர்கள் திட்டமிட்டு நாளுக்காக நாட்களைத் தள்ளிப்போடுவதற்கு உங்களிடம் கையெழுத்துப் போடும்படி புதிய படிவங்களையோ கடிதங்களையோ அனுப்பலாம். அவை பழைய ஒப்பந்தத்தை முறித்து புதிய ஒப்பந்தத்தை இரகசியமாகத் திணிக்கும் செயலாகக் கூட இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் நட்ட ஈடு கோரும் உரிமை அற்றுப்போகிறது என்பதை மறந்து விட வேண்டாம். எனவே மீண்டும் கைச்சாத்திட முன் சட்ட வல்லுனர் ஒருவரை நாடி சரியாகப் புரிந்து கொண்டு கைச்சாத்திடவேண்டியது மிகவும் அவசியமானது.

முன்னறிவித்தல் எதுவும் இன்றியும், நட்ட ஈடு இன்றியும் 5 நாட்கள் வரை முடிவுத் திகதியைத் தாமதப் படுத்தும் உரிமை கட்டிட அமைப்பாளர்களுக்கு உண்டு.

velasubramaniam@thaiveedu.com


■ ■ ■

# வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
® INDEPENDENTLY OWNED AND OPERATED




2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony



1 Bedroom, 1 Washroom
Investment Potential For Startups



2+1 Bedrooms, 2 Washrooms
Close To The Highway



4+1 Bedrooms, 4 Washrooms
Over 3000 Sqft With Breaktaking View



3 Bedrooms, 3 Washrooms
Steps To Lake And Park



3 Bedrooms,3 Washrooms
Near To Hwy 401, 407



4 Bedrooms, 3 Washrooms
New Home In Desirable Location



2 Bedrooms, 2 Washrooms
Walk To Schools, Transit



**இரஞ்சன் பிரான்ஸிஸ்**
Sales Representative
Bus: 416.284.5555
Dir: 416.816.1220

# Tax Time!

**வருமான வரி படிவங்கள் செய்து தரப்படும்**

**செல்வா / இரஞ்சன் பிரான்ஸிஸ்**

**416.816.1220**

To Fill any Forms (Sponsors, ODSP, Tax & etc...)

880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

# முழு நேர வீடு விற்பனை முகவர்

**Saturday April 3rd - 2 - 6 pm**

Century 21
Affiliate Realty Inc. Brokerage*
416.290-1200
PUNCH SOCKALINGAM
Broker
416.786.2463





# OPEN HOUSE

**14 Bobolink Ave.**
**Finch & Morningside**
4 Bedrooms, 3 Washrooms
Close to School & TTC


Shiamala Ratnasabapathi
Sales Rep.

**Saturday April 3rd - 2 - 6 pm**




# OPEN HOUSE

**5 Turtledove Grve**
**(Markham & Steeles)**
4 Bedrooms, 4 Washrooms
Finished Basement Close to School & TTC

**PUNCH SOCKALINGAM - 416-786-2463**

# வாடகைக்கு விடுவதற்கு முன்...

## வாடகைக்குக் கொடுத்தவர் வாடகைதாரரின் இடத்திற்குள் செல்ல முடியுமா?

சில முக்கியமான காரணங்களின் கீழ் வாடகை குடியிருப்பு சட்டத்தின் படி வாடகைக்கு விட்டவர் வாடகைதாரரின் இடத்திற்குள் செல்ல முடியும். ஆனால் அது சம்பந்தமான தகவலை வாடகையாளருக்கு எழுத்து மூலம் 24 மணி நேரத்திற்கு முன்னரே தெரிவிக்க வேண்டும். இதற்கு சில விதிவிலக்குகள் உண்டு. அவசர நிலையின்போதோ அல்லது வாடகைதாரரின் அனுமதியின் பேரிலோ. வாடகைக்குவிட்டவர் தன்னுடைய இடத்திற்குள் செல்லமுடியும்

## அவர் சட்டத்திற்கு புறம்பாக சென்றால் என்ன நிகழும்?

வாடகைதாரர் அது பற்றிய புகாரை அரசு நிர்வாக ஆணையத்திடம் புகார் செய்யலாம். நிர்வாக சபை பற்பல உத்தரவுகளை அளிக்க முடியும். உதாரணமாக வாடகைதாரர் வாடகை பணத்தை குறைத்துகட்ட முடியும் அல்லது வாடகைக்கு விட்டவர் மீது அபராதம் விதிக்கப் படலாம். வழக்கை விசாரிப்பவர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

## வாடகைக்கு வருபவரிடம் ஒரு செல்லப் பிராணி இருந்தால், வீட்டை அவருக்கு வாடகைக்கு தர மறுக்க முடியுமா?

செல்லப்பிராணி கொண்டுவருவது வாடகைக்கு விடுபவருக்கு பிடிக்கவில்லை என்றால் அவர் வாடகைக்கு விட மறுக்கமுடியும்.

## வாடகைக்கு விடுபவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்:

- வாடகைக்கு விடுபவரின் பழுதுதீர்க்கும் கடமை. வாடகைக்கு கொடுத்தபின் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல்.
- வாடகைதாரரின் நியாயமான இன்பங்களில் வாடகைக்குவிட்டவர் குறுக்கிடாதிருத்தல்.
- வாடகைக்குவிட்டவர் வாடகைதாரரை சதா தொந்தரவு செய்யகூடாது.
- வாடகைதாரரின் அனுமதியின்றி பூட்டுக்களை மாற்றுதல் கூடாது.
- வாடகைதாரரின் தனிமையில் தலையிடாமல் இருத்தல் வேண்டும்.
- நோட்டீஸ் அனுப்பாமல் வீட்டிற்குள் செல்லுதல், விற்பனையாளர்கள் வீட்டிற்குள் நுழைதல் போனறவை தவிர்க்கப்படல்.
- ஒப்பந்தம் முடிவுறும் காலத்தில் வாடகையை ரத்து செய்யகோரி நோட்டீஸ் அனுப்புதல்.

நாளாந்த அல்லது வாராந்த வாடகைக்கு விடுபவர் வாடகையாளரை 28 நாட்களிற்கு முன் முன்னறிவித்தல் கொடுத்தே வெளியேற்றமுடியும். மாதாந்த வாடகைக்கு விடுபவர்கள் வாடகையாளரை 2 மாதத்திற்கு முன் முன்னறிவித்தல் கொடுத்தே வெளியேற்றமுடியும். மேலும் வாடகை காலம் முடியும் கடைசி நாளில் அந்த திகதி இருக்க வேண்டும். அனைத்து வாடகைக்காலங்களும் வாடகையாளருக்கு நோட்டீஸ் அனுப்பிய 60 நாள்களுக்குள் முடிவுறாது. நோட்டீஸ் அனுப்புவதற்கான காரணம் கீழ் வருமாறு இருக்கலாம்.

நான், என்னுடைய வாழ்க்கை துணை, குழந்தைகள், பெற்றோர், வாழ்க்கை துணையின் பெற்றோர்.

மற்றும் மேற்கண்டவர்களைப் பராமரிப்பவர்.

## ஒரு குடியிருப்பு வளாகத்தை விலைக்கு வாங்குவது மற்றும் விற்பது சம்பந்தமான ஒரு ஒப்பந்தம் செய்து அதில் நான் கையெழுத்து இட்டிருக்கிறேன். கீழ்கண்ட நபர் அந்த வீட்டில் குடியேற விரும்புகிறார்.

விலைக்கு வாங்கியவர், விலைக்கு வாங்கியவரின் வாழ்க்கை துணை குழந்தைகள். பெற்றோர். வாழ்க்கை துணையின் குழந்தை. வாழ்க்கை துணையின் பெற்றோர்.

**தொடர் 2**

இவர்களுடன், இவர்களைப் பாதுகாக்கும் மற்றும் நலன்களைக் கவனித்துக் கொள்பவர்.

## வாடகைதராமல் இருப்பதனால் வீட்டை வெளியேறும்படி




## நோட்டீஸ் அனுப்புதல்.

வாடகைக்கு இருப்பவருக்கு நீங்கள் நோட்டீஸ் அனுப்புவதற்கு முன் கீழ்வரும் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில்களை தெரிந்து கொள்ளுங்கள் இல்லையென்றால் உங்கள் நோட்டீஸ் செல்லாததாக ஆகிவிடும்.

- ஒப்பந்த காலம் முடிவுறும் சரி யான தேதியை நீங்கள் எழுதி இருக்கிறீர்களா?

(உங்கள் வாடகைதாரர் மாதந்தர அல்லது வருடாந்தர வாடகை தருகிறார் என்றால் நீங்கள் குறைந்தது 14 நாள்கள் நோட்டீஸாவது அனுப்பவேண்டும். அவர் தினந்தோறும் அல்லது வாரந்தர வாடகை தருகிறார் என்றால் நீங்கள் குறைந்தபட்சம் 7 நாள்கள் நோட்டீஸாவது அனுப்ப வேண்டும்.

நாள்களின் எண்ணிக்கையை நீங்கள் கணக்கிடும் போது நோட்டீஸ் அனுப்பிய திகதியையும் சேர்க்காதீர்கள். உதாரணமாக நீங்கள் ஏப்பிரல் 3ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பியிருக்கிறீர்கள் என்றால் 14 நாள்கள் நோட்டீஸின் அவகாச காலம் ஏப்பிரல் 4ஆம் தேதியிலிருந்து ஆரம்பித்து, ஏப்பிரல் 17ஆம் தேதி முடிவுறும். நீங்கள் தபால் அல்லது பதிவுத் தபால் மூலம் நோட்டீஸ் அனுப்பியிருந்தால் நோட்டீஸின் கால அவகாசத்துடன் மேலும் சில நாள்களைக் கூட்ட வேண்டி வரும்.)

- நீங்கள் சட்டப்பூர்வமான நோட்டீஸ் தயார் செய்து அனுப்ப வேண்டும்.
- உங்கள் வீட்டில் வசிக்கும் வாடகைதாரரின் பெயரை நீங்கள் சரியாக எழுத வேண்டியது அவசியம்.
- ஒன்றிற்கும் மேலான வாடகைதாரர் உங்கள் வீட்டில் வசித்துவந்தால் அனைவரின் பெயர் களையும் நீங்கள் எழுத வேண்டும்.
- உங்கள் வீட்டின் முழு முகவரியையும் நீங்கள் குறிப்பிட வேண்டும்.
- நீங்கள் வாடகைக்கு கொடுத்திருக்கும் வீட்டின் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் நீங்கள் குறிப்பிடவேண்டும்.
- வாடகைதாரர் உங்களுக்கு எவ்வளவு வாடகை நிலுவை வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் சரியாக கணக்கிட்டு எழுத வேண்டும்.
- கார் நிறுத்துவதற்கான கட்டணம் மற்றும் cable கட்டணம் ஆகியவற்றையும் நீங்கள் குறிப்பிட வேண்டும்.



கிருபா கனகசபை
- வீடு விற்பனைப் பிரதிநிதி

நீங்கள் நோட்டீஸில் சரியான திகதி எழுதி இருக்கிறீர்களா மற்றும் கையொப்பம் இட்டிருக்கிறீர்களா என்பதை கவனிக்க வேண்டும்.

## வாடகைதாரர் வெளியேற்றப்பட்ட பின் அவர்கள் விட்டுச் சென்ற உடமைகளை என்ன செய்யவேண்டும்?

வாடகைதாரர் ஏன், எதற்காக மற்றும் எப்படி வீட்டை விட்டு வெளியேறினார் என்பது போன்ற பல விடயங்களை பொறுத்து இது அமையும். விட்டுச் சென்ற உடமைகளை வீட்டின் உடமைக்காரர் அதை Dispose செய்யமுதல் பல விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டி வரும்.

## விட்டுச் செல்லப்பட்ட வீடு

## முன்னறிவித்தலின்றி வாடகைதாரர் வீட்டைவிட்டு வெளியேறி விட்டால், வாடகைக்கு விட்டவர் வீட்டின் பூட்டுக்களை மாற்றி விட்டு, தன்னுடைய வீட்டை வேறு ஒருவருக்கு வாடகைக்கு விடமுடியுமா?

வாடகைதாரரை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வீட்டை விட்டு வெளியேறியது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும். அவர் உண்மையிலேயே வெளியேறிவிட்டார் என்று அறிந்தவுடன் அது சம்பந்தமாக வாடகைக்குவிட்டவர் அரசு நிர்வாக ஆணையத்திடம் (Board) விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். இது சட்டப்படி கட்டாயம் இல்லாமல் இருந்தாலும் வாடகைதாரர் உண்மையில் வீட்டை காலி செய்துவிட்டு வெளியேறாமல் இருந்தால். அவர் வாடகைக்கு விட்டவர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கமுடியும்.

## கவனத்தில் வையுங்கள்.

வீடு சம்பந்தமான ஒவ்வொரு பிரச்சினைக்கும் முழுமையான தீர்வுகள் இதில் தரப்படவில்லை. உங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் உங்கள் வீடு விற்பனை முகவரிடமோ அல்லது சட்ட ஆலோசகரிடமோ ஆலோசனை பெறலாம்.

உசாத்துணை:
The land lord and tenant board – Ontario, Canada.

kirew.kanagasabai@thaiveedu.com

■ ■ ■

இணைந்து கொள்ளுங்கள்

'தாய்வீடு' facebookஇல்

www.facebook.com/thaiveedu


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
RE/MAX
Elaguppillai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225
Bus: 905-470-9800
Email: esrinathan@yahoo.com
7800 Woodbine Ave, Penthouse, Markham, On
RE/MAX
Realtron realty Inc., Brokerage.
Independently Owned and Operated
To Buy or Sell your Home, Business, Investment Property for the Right Price please call me...
Eglinton/Kennedy
$216,000
2+1 Bedrooms, 2 Washrooms Penhouse Unit, Bright & Spacious, Upgraded 2 Bedrmms
Eglinton & Brimley
$299,999
3+1 Bedrooms, 2 Washrooms Detached Bungalow Next To Ttc/School
9th Line/16th Ave
$319,900
3 Bedrooms, 3 Washrooms Beautiful Well Maintained Freehold Townhome
Brimley/Highglen
$335,000
3+1 Bedrooms, 3 Washrooms High Demand Area. Close To Shop, School, Park.
Neilson/Finch
$344,900
3 Bedrooms, 3 Washrooms Absolutely Immaculate Acorn Built Freehold Townhome
Morningside / Finch
$374,900
3 Bedrooms, 3 Washrooms Prime Location, Detached House On A Premium Lot
Markham / Steeles
$379,900
3 Bedrooms, 3 Washrooms Absolutely Gorgeous. Double Door Entrey
Mccowan/Highglen
$384,900
3 Bedrooms, 2 Washrooms All Brick! Remington Built! Most Desired Location In Markham!
Markham/Ecson
$425,000
4 Bedrooms, 3 Washrooms Location! Location! Location! Very Well Maintained, All Brick
Hwy 7 & 9th Line
$429,000
3 Bedrooms, 3 Washrooms Charming Well Maint Det Home 1808 Sf & 9 Ft Ceiling
Markham/Steeles
$429,900
4 Bedrooms, 3 Washrooms All Brick 4 Bedroom Home, Hardwood On Main Floor
Nightstar/Mantis
$429,900
4 Bedrooms, 3 Washrooms Bright, Beautiful Detached 2 Storey Home With Four Bedroom
16th Ave/ 9th Line
$435,000
3 Bedrooms, 3 Washrooms Spacious Modern Detached Home Finished Basement
Markham/Dennison
$439,000
4 Bedrooms, 3 Washrooms Great Family Home Located At Markham & Dennison.
Brimley/Denison
$449,000
4+2 Bedrooms, 5 Washrooms Excellent Opportunity To Own Absolutely Gorgeous
Whit/Stouff
9th Line/ Hooverpark
$394,900
3 Bedrooms, 3 Washrooms Fabulous Detached Home In Most Desirable Area Of Stoufville.
Stouffville
Hoover Park/ Ninth Line
$429,999
4 Bedrooms, 3 Washrooms Quality Detached Four Bdrm Mattamy Home!
Whit/Stouff
9th Line/Reeves Way Blvd
$434,900
4 Bedrooms, 3 Washrooms Corner Lot Only Few Months Old, Starlane Home,Long Front Porch
Ajax
Salem/Taunton
$369,900
4 Bedrooms, 3 Washrooms Beautiful Great Gulf Home In A Sought After Neighbourhood
Commercial
Gas Stations
$599,000
Have An Open Mind And Want To Make Money. More Efforts Can Give You More Revenues
I Can also assist you with: Mortgage, Home Inspection, Real Estate Lawyer



# Lokan Sundaram
## 416 450 3984

எல்லோரையும்போலவே
ஒரே சந்திப்பில்
உங்கள் Real Estate, Mortgage
தேவைகளை பூர்த்திசெய்ய
என்னை அழையுங்கள்
லோகன் சுந்தரம்

**CENTUM METROCAP FINANCIAL**
Lokan Sundaram
Mortgage Broker
Lic. No. M08000182

Broker
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

HOMELIFE HIGHER STANDARDS
**Homelife/Future**
Realty inc. Brokerage
*Higher Standard Agents... Higher Results!*



# $200,000
# ஆயுட் காப்புறுதி

It's time to review your policies.

புகை பிடிக்காத 40 வயது ஆணுக்கு
**Only $20.52** Monthly
புகை பிடிக்காத 40 வயது பெண்ணுக்கு மாதம் **$18.90** மட்டுமே

**10 Year Term Life insurance** (Renewable and Convertible)



**So... Why wait?** Call me to get the rate for your age.

**KEN KIRUPA** 759 Warden Ave., Toronto, ON
Life Insurance Broker

CELL 416-294-9322
OFFICE 416-759-5453

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
Canada Protection Plan

E & O E

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?


S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

## லிஸ்ரிங் ஒப்பந்தம் (Listing Agrement)

வீடு விற்க விரும்புவரும், விற்பனை முகவரும் கொள்ளும் ஒரு பாதுகாப்புத் தான் இந்த ஒப்பந்தம். இது முகவர்களையும், விற்பனைப் பிரதிநிதிகளையும் உங்கள் உடமைகளை விற்க அதிகாரம் அளிக்கும்.

மேலும், இவ் ஒப்பந்தம் உங்களிற்கும், வீட்டு விற்பனை முகவருக்கும் உள்ள அடித்தளமாக விளங்கும். மேலும் இது முகவருடைய அதிகாரத்தை வரையறுக்கின்றது.

மேலும் அது உங்கள் வீட்டைப் பற்றிய முழு-விபரத்தையும் கொடுக்கின்றது. இது முகவர்களிற்கு வீடு வாங்க விரும்புவோரின் கேள்வி-களிற்கு பதில் அளிக்க உதவுகின்றது.

மேலும் இந்த ஒப்பந்தம் உங்கள் வீட்டின் ஆரம்ப நிலையை நிர்ணயிப்பதற்கும், பேரம் பேசுவதற்கும் உதவுகின்றது.

## தனித்துவ அல்லது பன்முக லிஸ்ரிங் சேவை (Exclusive Listing or multiple listing service)

நீங்கள் உங்கள் முகவரை தேர்ந்தெடுத்ததின் பின் உங்களிற்கு என்ன விதமான லிஸ்ரிங் விருப்பமெனக் கேட்பார்.

ஒரு பிரத்தியேக லிஸ்ரிங் வீட்டு முகவருக்கும், விற்பனைப் பிரதிநிதிக்கும் உங்கள் வீட்டை வாங்குவதற்கு தக்க ஒருவரை தேர்ந்தெடுக்கும் உரிமையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க உதவுகின்றது.

ஒரு பன்முக லிஸ்ரிங் உங்களிற்கும் முகவருக்கும் இடையிலுள்ள ஒரு பிரத்தியேக லிஸ்ரிங் ஆகும். ஏனெனினும் இது உங்கள் முகவருக்கு உங்கள் சொத்தை M.L.S முறையிலோ அல்லது வேறு முகவரின் உதவி மூலமாகவோ, உங்கள் வீட்டை வாங்கக்கூடிய ஒருவருக்கு அனுமதியளிக்கின்றது. இன்னொரு முகவர் இந்த விற்பனையில் ஈடுபட்டால் நீங்கள் முன்பு ஒத்துக் கொண்ட தரகுத் தொகையைக் கொடுக்க வேண்டும். அத்-தொகை இரண்டு முகவருக்குமிடையில் பங்கிடப்படும்.

அநேகமாக உங்கள் முகவர்கள் நீங்கள் விற்க இருக்கும் வீட்டை M.L.S முறையில் பதியும்படி கேட்டுக் கொள்வார்கள். காரணம் உங்கள் வீட்டிற்கு குறுகிய காலத்தில் அதிக விளம்பரம் கிடைக்கின்றது. ஒரு M.L.S லிஸ்ரிங் முறை கூட்டுறவு முறையில் சகல முகவர்களையும் ஒத்துழைக்கச் செய்து உங்கள் வீட்டை வாங்குவதற்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறது.

## பிரத்தியேக லிஸ்ரிங் அல்லது பன்முக லிஸ்ரிங் சேவை

உங்கள் முகவரை நீங்கள் தேர்ந்தெடுத்ததின் பிறகு அவர் உங்களிடம் எந்த லிஸ்ரிங்கை விரும்புகிறீர்கள் எனக் கேட்பார். ஒரு பிரத்-தியேக லிஸ்ரிங், தரகுப் பணத்தையும், தன்னுடைய பிரதிநிதிகளின் பெயரையும் குறிப்பிட்டிருக்கும். நீங்கள் அதற்குப் பதிலாக லிஸ்ரிங் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டது போல தரகுப் பணத்தைக் கொடுக்க சம்மதிப்பீர்கள். இந்தக் தரகுத் தொகை லிஸ்ரிங் ஒப்பந்த காலத்தில் உங்கள் வீட்டை யார் விற்றாலும் (நீங்களே விற்றாலும் கூட) அந்த முகவருக்கு தரகுப் பணத்தைக் கொடுத்தேயாக வேண்டும்.

ஒரு பன்முக லிஸ்ரிங் உங்களிற்கும் முகவருக்குமிடையிலுள்ள பிரத்தியேக லிஸ்ரிங் ஆகும். ஆனால் அதில் உங்கள் வீட்டை M.L.S முறையில் வீட்டை விற்பதற்கு வேறு முகவரின் உதவியை நாடும்படி குறிப்பிடப்-பட்டிருக்கும். முகவருக்கு கொடுக்க வேண்டிய தரகுத் தொகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டது போலவே இருக்கும். ஆனால் தரகுத் தொகை-யை அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள். உங்கள் முகவர் உங்கள் வீட்டை M.L.S முறையில் விற்க முயல்வது, உங்கள் வீட்டிற்கு அதிக பட்ச சந்தையை ஏற்படுத்திக் கொள்வதற்கே. M.L.S Listing முகவர்களிற்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுறவு ஒப்பந்தம் என்றும் கூறலாம்.

லிஸ்ரிங் ஒப்பந்தம் ஒன்றைப் பார்ப்போம்

உங்கள் வீட்டை விற்பதற்கு உங்கள் வீட்டு முகவருடன் ஒரு லிஸ்ரிங் ஒப்பந்தம் செய்யும் போது அதில் உள்ள வீட்டைப் பற்றிய விபரங்களையும், ஒப்பந்தத்தின் விதிகளையும் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பார்கள். ஒப்பந்-தங்கள் பலவகை இருந்தாலும் பொதுவாக எல்லோரும் ஒரே மாதிரியான படிவத்தையே உபயோகிப்பார்கள். அதில் ஆரம்பத்தில் வழக்கமான பொது விபரங்கள் தேவைப்படின் சேர்க்கப்படும். முகவர்கள் உபயோகிக்கும் படிவங்கள் Oreaஇன் படிவங்களையே ஒத்தி-ருக்கும். (Orea = Ontrio real estate association)

## அதிகாரம்

இப்பகுதி உங்களிற்கும் உங்கள் வீட்டுவிற்-பனை முகவருக்கும் உள்ள சட்ட ரீதியான உறவைப் பற்றிக்கூறுகின்றது. அத்துடன் அந்த உறவிற்குரிய காலத்தையும் இரு பகுதியி-னரும் செய்ய வேண்டிய கடமையைப் பற்றியும் கூறுகின்றது.

## வீட்டு முகவரின் பெயரைக் குறிப்பிடுதல்

உங்கள் வீட்டை விற்கும் முகவர் எந்த முகவருக்கு ஏஜன்றாக வேலை செய்கிறாரோ அவர்களின் அலுவலகப் பெயர் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும்.

## கால எல்லை

குறிப்பிட்ட காலத்திற்கு நீங்கள் உங்கள் முகவருக்கு உங்கள் வீட்டை விற்கும் அதிகாரத்தை கொடுக்கிறீர்கள். இந்த அதி-காரம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படும் போது ஆரம்பித்து குறிப்பிட்ட தினம் இரவு 11 மணி 59 நிமிடத்திற்கு முடிவுறும்.

## விலை

உங்கள் வீட்டை விற்கும் விலை எண்ணிலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கும். உங்கள் வீட்டின் பெறுமதியை உங்களிற்கு பெற்றுத் தருவதில் உங்கள் முகவர் ஆர்வம்காட்டுவார்.

## வீட்டு விற்பனைத் தரகுப்பணம்

இது உங்கள் வீட்டின் பெறுமதியின் ஒரு குறிப்பிட்ட விகிதமாகும்.

## பிற விபரங்கள்

இதில் நீங்களும், முகவரும் செய்து கொள்ள வேண்டிய விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உங்கள் வீடு விற்பனையைப் பற்றிய விசாரணைகள் அனைத்தும் உங்கள் விற்பனை முகவர் சார்ந்த வீடு விற்பனை நிலையத்தின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட வேண்டும். உங்கள் வீட்டை பார்க்க விரும்பும் வாடிக்-கையாளருக்கு நியாயமான நேரம், காண்பிக்க வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இரண்டாவது முகவர் விற்பனையின் இறுதிக் கட்டத்தில் ஈடுபட்டால், அவருக்கு புறோக்கி-றேச்சில் இருந்து தரகுப்பணம் கொடுக்கப்படும்.

## உங்கள் வீட்டைப் பற்றிய விபரங்கள்

இங்கு உங்கள் வீட்டின் விபரம் பூரணமாகக் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும் இந்த விபரங்கள் மிகவும் சரியாக இருக்க வேண்டும். ஏனெனில் இது உங்கள் வீட்டு விற்பனையின் அடித்தளமாக அமையலாம். இந்தப் பகுதியை முடிப்பதற்கு முகவர் உங்கள் வீட்டை முழுவதுமாக பார்வையிடுவார். வீட்டு பத்திரங்களாகிய வரைபடங்கள், நில அள-வைப் படங்கள் முதலியவைகளையும் பார்-வையிடுவார்.

## கட்டிடத்தின் வயது

வீடு வாங்குபவர்கள் அந்த வீட்டின் வயதை அறிய முயல்வார்கள். உங்களால் அது சொல்ல முடியாவிட்டால் உங்கள் முகவர் அதைக் கணித்துக் கொள்வார்.

## தரையின் அளவு

இது உங்கள் வீட்டின் வெளிப்புற அளவாகும். ஒரு கொண்டோவில் பல்கனீஸ், வாகனம் நிறத்தும் இடங்கள் பொதுவாக இதில் சேர்க்-கப்படவதில்லை.

## கட்டிடத்தின் மாதிரி

இதில் கட்டிடத்திற்க உபயோகிக்கப்பட்ட பொருட்களின் விபரம் கொடுக்கப்பட்டிருக்கும்.

## விலையும் குறைந்தபட்ச வைப்பு நிதியும்

இங்கு குறைந்தபட்ச வைப்பு நிதியை முகவருடன் கலந்து ஆலோசித்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

## அறைகளின் அளவும்

முகவரிடம் பழைய வீட்டு வரைபடம் இருந்தாலும், இங்கு முகவர் முக்கியமான விடயங்களைத் தனது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்வார். முக்கியமாக வாடிக்-கையாளரது அன்புப் பிராணிகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வைக்கப்பட்டு இருக்கும்.

## விற்பனைக்கு அல்லாத பொருட்கள்

உதாரணமாக: சுவர் தரைக்கம்பளம், சுவரில் பதிக்கப்பட்ட மின் உபகரணங்கள். Microwave, Dishwasher விற்பனைப் பட்டியலில் சேர்க்-கப்பட்டிருக்கும்.

## ஈடுபற்றிய விபரம்

உங்கள் வீடு ஈட்டில் இல்லாவிட்டால் clear பதம் முகவரால் குறிப்பிடப்படும். விற்பவர்களின் முழுப் பெயரும் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

## முடிக்கும் திகதி

வீடு விற்கும் சரியான திகதியை தீர்மானிப்பது கடினம். எனவே நீங்களும் முகவரும் கை-யொப்பம் இட்ட நாளில் இருந்து கணக்கி-டப்பட வேண்டும்.

## கையொப்பம்

காணிப்பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட அனைவரும் கைஒப்பமும் தேதியும் இடவேண்டும். நீங்கள் விவாகமானவரானால் உங்கள் சொத்து ஒன்றாரியோ குடும்பச் சட்டத்தின்படி ஒரு தம்பதியின் பேரில் இருந்தாலும் தம்பதி-கள் இருவரும் ஒப்பந்தத்தில் கைஒப்பம் இட வேண்டும்.

ஒன்றாறியோ வீடு விற்பனை முகவர் சங்கத்தின் (OREA) வெளியீடான "How to sell your Home" என்னும் புத்தகத்திலிருந்த தொகக்கப்பட்டது. (அலகு 6)

skbales@thaiveedu.com

■ ■ ■


Condo Townhouse

Victoria Park & N Of St. Clair
2 - Bedrooms,
3 - Washrooms








House for Sale

Church & Delaney
4 Bedrooms,
3 Washrooms

Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

# மருத்துவக் கேள்வி பதில்



**இராஜசேகர் ஆத்தியப்பன்**

**டாக்டர், எங்களுக்குத் திருமணமாகி பத்து வருடங்கள் ஆகின்றன, குழந்தை இல்லை. எங்கள் பிரச்சினை குறித்த காரணங்கள் மற்றும் தீர்வுகளை விவரமாக கூற வேண்டுகின்றேன்.**

**சக்தி பரன்**

ஹார்மோன் குறைபாடு இருக்கும் பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தியாகாமல் போய்விடும். இதனால் குழந்தைப்பேறு பாதிக்கப்படும். சில பெண்களுக்கு கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாமல் இருக்க வாய்ப்புண்டு. கருக்குழாய் அடைப்பு இருந்தால் கருத்தரிக்க வாய்ப்பே இல்லை. ரத்தசோகை, புரதச் சத்துக் குறைவு ஆகியவையும் மலட்டுத்தன்மைக்கு காரணங்களாகின்றன.

ஆணுக்கு விந்தணு குறைபாடு இருந்தாலோ அல்லது பெண்ணுக்கு கருமுட்டை பாதிப்பு இருந்தாலோ அவற்றை மருந்து கொடுத்து சரிப்படுத்தி விடலாம். கருக்குழாயில் அடைப்பு இருந்தால் அதற்குச் சிறப்பு வைத்தியம் தேவை.

ஒரு பெண்ணைத் தாயாக்க வேண்டுமானால் ஆணுக்கு கீழ்க்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும்:

- உடலுறவின்போது வெளிப்படும் விந்தின் அளவு குறைந்தது 2 மில்லி லிட்டர் இருக்க வேண்டும்.
- விந்தில் உயிரணுக்களின் எண்ணிக்கை 20 மில்லியன் இருக்க வேண்டும்.
- 70 சதவீதத்திற்கு மேலான உயிரணுக்கள் உயிர்த்தன்மையுடன் இருக்க வேண்டும்.
- 30 சதவீதத்திற்கு மேலான அணுக்கள் உருச்சிதைவில்லாமல் இருக்க வேண்டும்.
- விரைவாக ஊர்ந்து செல்லும் அணுக்களின் எண்ணிக்கை 25 சதவீதத்துக்கு மேலாக இருக்க வேண்டும்.

இப்படி இருந்தால் மட்டுமே அவர் தகுதி உடையவர் ஆவார்.

புரதச் சத்து, வைட்டமின் ஈ மற்றும் பி காம்ப்ளக்ஸ் குறைவான உணவுகளை உண்டு வரும் ஆண்களுக்கு விந்தணுக்கள் குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம். அதேபோல் சிகரெட் புகைக்கும் ஆண்களுக்கும் ஆண்மைக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. ஏனெனில் சிகரெட்டில் இருக்கும் நிகோட்டின், உயிரணுக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதோடு, விந்தணுக்கள் ஊர்ந்து செல்லும் தன்மையையும் பாதிக்கிறது.

டெஸ்டோஸ்டிரான் ஆணுக்குப் பாலியல் இச்சையைத் தூண்டி, உடலுறவு கொள்ள உந்துவது டெஸ்டோஸ்டிரான் என்னும் ஹார்மோன்.

விந்தணுவகத்தில் இரண்டு தனித்தனிப் பகுதிகள் உள்ளன. ஒன்றில் விந்தணு உற்பத்தியாகும். மற்றொன்றில் டெஸ்டோஸ்டிரான் உற்பத்தி ஆகும். இந்த ஹார்மோன் உற்பத்தி குறையும்போது ஆணுக்குப் பாலியல் இச்சை குறைய ஆரம்பிக்கும்.

எனவே ஆணுக்கும் பெண்ணிற்கும் உடலுறவில் நாட்டம் இருப்பது மிக முக்கியம். பாலுறவில் நாட்டமில்லையென்றால், அதற்கு டெஸ்டோஸ்டிரான் குறைபாடுதான் காரணம் என்பதை இரத்தப் பரிசோதனை மூலம் கண்டறிந்து விட முடியும். தகுந்த சிகிச்சையின் மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தியாக்கவும் முடியும்.

மாதவிடாய் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட திகதியிலோ, குறைந்தோ அல்லது நாள் தவறியோ ஏற்படலாம். குறைந்தது 21 நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது அதிகபட்சமாக 35 நாட்களுக்கு ஒரு முறையோ ஏற்படுவது சாதாரணம் என்று கருதப்படுகிறது. ஒருவருக்கு மாதவிடாய் ஏற்படும் தினத்திலிருந்து 5 அல்லது அதற்கு மேற்பட்ட தினங்களுக்கு மாதவிடாய் ஏற்படவில்லை எனில் தாமதமான மாதவிடாய் என்றும், 6 வாரங்களுக்கு நீடித்தால் மாதவிடாய் தவறியது என்றும் பொருள்

## கவலை

கவலையோ, மன அழுத்தமோ இருந்தால் மாதவிடாய் தாமதமாவதற்கும் தவறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கிறது. அல்லது கடுமையான காய்ச்சல், பாலியல் உறவால் ஏற்பட்ட கிருமியின் தாக்குதல், கடுமையான உடல் எடையிழப்பு அல்லது எடை கூடுதல், கடுமையான உடற்பயிற்சி இவைகளாலும், விரதம் போன்றவற்றாலும் கூட மாதவிடாய் சுழற்சி பாதிப்படையும்.

## ஹார்மோன் சமச்சீரின்மை:

இது அரிதாகவே ஏற்படும் ஒரு காரணமாகும். சில சமயங்களில் கருத்தடை மாத்திரைகளை நிறுத்தியிருந்தீர்களானால் தற்காலிகமாக ஹார்மோன்கள் சமன்நிலை குலையும். இதனால் மாதவிடாய் தவறும். தைரொய்டு சுரப்பி, கபச் சுரப்பு, அட்ரினல் சுரப்பிகள் மற்றும் கருசூலகம் ஆகிய பிரச்சினைகளால் அரிதாக மாதவிடாய் பிரச்சினைகள் ஏற்படலாம்.

நீரழிவு பெண்களை ஓரளவு பாதிக்கும். ஆண்களுக்குத்தான் பாதிப்பின் அளவு அதிகரிக்கும். சிறு வயதில் அதாவது 13 வதில் இருந்து 19 வயதிற்குள்ளாக அம்மை நோய் தாக்கிய ஆண்களுக்கு விந்து அணுக்களில் பாதிப்பு ஏற்படும்.

**டாக்டர், எனக்கு பிறப்புறுப்பு 'மரு' (genital warts) அக்கிக் கொப்பளங்கள் (genital herpes) இருக்கின்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது. என்ன செய்யலாம்?**

**டால்டன்.**

முதலில் பிறப்புறுப்பு 'மரு' (genital warts) அக்கிக் கொப்பளங்கள் (genital herpes) என்றால் என்னவெண்று பார்ப்போம்.

பிறப்புறுப்பு 'மரு' (genital warts) இந்த நோயைக் கொடுக்கும் நுண்கிருமியின் பெயர் 'ஹ்யூமன் பாப்பில்லோமா வைரஸ்' என்பதாகும். பிறப்பு உறுப்பில் மரு (பரு) போன்று உருவாகும். அக்கிக் கொப்பளங்கள் (genital herpes) - இந்த விஷ அக்கிப் புண்கள் ஹ்யூமன் சிம்ப்ளெக்ஸ் வைரஸ் என்ற நுண் கிருமியால் வருவதாகும்.

பொதுவாக பால்வினை நோய் பற்றிய சந்தேகம் வந்துவிட்டால் கீழ் கண்ட பரிசோதனைகள் செய்து கொள்வது நலம்.

- Gram staining பரிசோதனை செய்தல். (வெட்டை நோய்க் கிருமிகள் கண்டறிய)
- antigen detection சோதனை. (Chlamydia கிருமிகள் கண்டறிய)
- Tzanck smear அக்கிப் புண்களின் திரவத்தில் ஸ்டெயின் கலந்து பரிசோதனை. (பல உட்கருக்கள் கொண்ட பெரிய செல்கள் இருப்பது அறிய)
- I.G.G, I.G.M பரிசோதனை. (Herpes கிருமிகளுக்கு எதிரான Antibodies இருப்பதை அறிய)
- V.D.R.L பரிசோதனை. (Syphilis கிருமிகள் இருப்பது உறுதிப்பட அறிய)
- T.P.H.A சோதனை. (சிபிலிஸ் கிருமிகள் இருப்பது உறுதிப்பட அறிய)
- எலிசா சோதனை. (எச்.ஐ.வி - எய்ட்ஸ் நோய் அறிய)

இம் முறைப் பரிசோதனைகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

**டாக்டர் எனக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கின்றது. இது என்ன விதமான பாதிப்பை ஏற்படுத்தும்?**

60 மில்லியன் வட அமெரிக்கர்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினையை மிகச் சுலபமாக கேட்டு விட்டீர்கள். சாதரணமானவர்களை விட உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு இதய நோய்கள் (Heart attack ) வருவதற்கான சாத்திய கூறுகள் 5 மடங்கு அதிகம். பக்கவாதம் (stroke) வருவதற்கான சாத்திய கூறுகள் 7 மடங்கு அதிகம்.

நாம் உப்பைக் குறைத்து உணவு முறையை மாற்றி அமைப்பது நல்லதொரு வாழ்க்கை முறையை பின்பற்ற உதவுவதோடு இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் வராமல் பாதுகாக்கும்.

**டாக்டர், பெரும்பாலான சீன மருந்துகளை தேநீர் போல அருந்த சொல்கிறார்களே இது நல்ல பலனைத் தருமா?**

**- கோமஹி சின்னசாமி**

இம்மாதிரி மருத்துவ முறை நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

மிக நல்ல பலனைத் தரக் கூடிய மூலிகைக் குடிநீர் பற்றி கீழே தரப்படும் செய்திகளை பாருங்கள். இது எப்பொழுதும் உங்களுக்கு உதவி செய்யும். சித்தர்களின் வாக்குப்படி மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் நீர்கள் நோய் தடுப்பில் சிறப்பிடம் பெறுகின்றன. உணவுக்கு உணவாகவும், மருந்துக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன. இச்சுவை நீர்களை காலை, மாலை வெறும் வயிற்றில் உட்கொள்வதால் விரைவில் பலன் கிடைக்கிறது. சாதாரண சுவைநீர்கள், மூலிகை சேர்வதால் நோய் தடுக்கும் சுகநீராய் மாறுகிறது.

## ஆவாரம்பூ நீர்

"ஆவாரைப் பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ" என்ற பழமொழிக்கு ஏற்ப நீரிழிவுக்கு ஆவாரைப்பூவின் அற்புதத்தை அறியலாம். மஞ்சள் நிறமுள்ள இப்பூ தங்கச்சத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆவாரம்பூ சுவை நீர் நீரிழிவு, பெரும்பாடு, குடற்புண், நீர்க்கடுப்பு, வெள்ளைப்போக்கு ஆகியன வராமல் தடுக்கிறது. நூறு மில்லி நீரில் பத்து ஆவாரம் பூக்களை போட்டு காய்ச்சி, வடிகட்டி, காய்ச்சிய பாலில் கலந்து இனிப்பு சேர்த்து (தேவையெனில்) கோப்பித்தூள் அல்லது தேயிலைத்தூள் கஷாயத்தில் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் குடிக்கவும்.

## கரிசாலை நீர்

சிறுநீரக செயலிழப்பு, அதிக இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், காச நோய், வெண்புள்ளி, எலும்பு தேய்மானம் ஆகியன வராமல் கரிசாலை சுவைநீர் தடுக்கிறது. மேற்சொன்ன ஆவாரம்பூ சுவை நீர் தயாரிப்பதுபோல் ஆவாரம்பூத் தூளுக்குப் பதிலாக கரிசாலைதூளை இரண்டு கிராம் போட்டுக் கொள்ளவும். தினசரி காலையில் மட்டும் கரிசாலைச்சுவை நீர் அருந்தி வரவும்.

## செம்பருத்தி நீர்

செம்பருத்தி பூ நீர் இதய சுவர் ஓட்டை, இதய வால்வு, தேய் மானம், வழுக்கை, இரத்த சோகை ஆகியன வராமல் தடுக்கிறது. இது மாதவிடாய் கோளாறுகளை சரி செய்கிறது. குடல் இறக்கம், கர்ப்பப்பை இறக்கம் ஏற்படாதும் தடுக்கிறது.

காய்ச்சிய பாலை அடுப்பிலிருந்து இறக்கி வைத்து அதில் அடுக்கு செம்பருத்திப்பூ இதழ்கள் ஐந்து போட்டுப் பத்து நிமிடம் பாலை மூடி வைத்து பின் வடிகட்டி விட வும். பால் சிவப்பாகி இருக்கும். இனிப்பு சேர்த்து வடிகட்டி காலையிலும், மாலையிலும் குடிக்கவும். சளி தொந்தரவு உள்ளவர்கள் பால் காய்ச்சும் போது தோல் நீக்கிய சிறு துண்டு இஞ்சியை நசுக்கி சேர்த்துக் கொள்ளவும்.

## நன்னாரி நீர்

"தோன்றும் மழலைகள் உத்தாமணி வேரால், தோல் நோய்கள் மடிவது நன்னாரி வேரால்" என்பதன் மூலம் நன்னாரியின் நற்பண்பை நவிலலாம். நூறு மில்லி நீரில் ஐந்து கிராம் நன்னாரி வேரை நசுக்கிப் போட்டு கொதிக்க வைத்து காய்ச்சி வடிகட்டிய கருமை நிற கஷாயத்தை காய்ச்சிய பாலில் கலந்து உபயோகிக்கவும்.

## துளசி நீர்

குடல் காய்ச்சல், மஞ்சள் காமாலை, மலேரியா, காலரா நோய்கள் வராமல் துளசி சுவை நீர் தடுக்கும். மேலும் குடல்வால் அழற்சி ஏற்படாது. காய்ச்சிய நூறு மில்லி சூடான பாலில் இரண்டு கிராம் துளசி இலை பொடியைக் கலந்து, மூடி வைத்து பத்து நிமிடங்கள் சென்றபின், கோப்பி அல்லது தேனீர்க் கஷாயம் சேர்த்து வடிகட்டி தினசரி காலையில் மட்டும் குடிக்கவும். அடிக்கடி பல ஊர்களில் தண்ணீர் குடிப்போரும், தொற்று நோய்கள் பரவும் காலங்களிலும் இந்த துளசி சுவை நீரை பயன்படுத்தி பலன் பெறலாம்.

## வல்லாரை நீர்

யானைக்கால், வலிப்பு, மலடு, பக்கவாதம், மூலம், மூட்டுவலி, இரத்தக்குழாய் தடிப்பு போன்ற நோய்கள் வராமல் வல்லாரை சுவை நீர் தடுக்கும். "காய சித்திக்கு புளியாரை கபால கோளாறுக்கு வல்லாரை" என்பார்கள். வல்லாரை இலைப்பொடி இரண்டு கிராம் எடுத்து மேற்கண்டுள்ள துளசி சுவை நீர் தயாரிப்பதுபோல் வல்லாரை சுவை நீர் தயாரித்துக் கொள்ளவும். காலை, மாலை இரு வேளையும் குடிக்கவும். எல்லோருக்கும் என்றும் ஏற்றது வல்லாரை சுவை நீராகும். இச்சுவை நீர்கள் குறிப்பிட்டுள்ள நோய்கள் வராமல் தடுக்கவும், குணப்படுத்தவும் கூடியது. எனவே நோயுள்ளோரும், பயன்படுத்தி பயன் பெறலாம்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

**Tutoring**

**Grade 1-7: English, Math, Science & Social science Grade**

**8- 11: English & Math**

**ஜீவா**

**B.A (Hons), M.Sc, Ph.D**

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

**(647) 291 1357**

# KERALA AYURVETHA

# கேரளா ஆயுர்வேதா

314 - 4005 – Don mills Road /Steels
416 995 0416/www.ayurvetha.com/ayurvetha@gmail.com




டாக்டர். இராஜசேகர் ஆத்தியப்பன்,
M.D., F.H.M.S.S.,

VITILIGO - LEUCODERMA - வெண் புள்ளிகள், தீராத தோல் வியாதிகள் குணமாகின்றது. ஆண்களின் அணுக்கள் எண்ணிக்கை இரண்டு மாதங்களில் அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்த மூலிகை இரகசியம்.

- வெண்புள்ளி - Viteligo.
- காளான்படை - Psoriasis.
- படர் தாமரை.
- கண்டமாலை.
- சொறி, சிரங்கு.
- கரப்பான்.
- கட்டி.
- அடங்காத தோல் நோய்கள்.
- அரையாப்பு.
- கிரந்தி.
- காலாணி.
- குட்டம்.
- செற்றுப் புண்.
- படுக்கைப் புண்.
- முகப் பரு
- தேமல்.
- தலை பொடுகு (சொடுகு).
- யானைத்தோல் சொறி.
- தவளைச் சொறி.
- பித்த வெடிப்பு.
- கால் ஆணி.
- நரம்பு சிலந்தி.
- மேக நோய்.
- தோல் புற்று நோய்.
- முடி உதிர்தல்.
- வெள்ளைப்படுதல்.
- கர்ப்பப் பை கட்டிகள்.
- உதிரப் போக்கு.
- மாதவிடாய் வலி.
- கரு தங்காமை.

போன்ற பிரச்சினைகளுக்கு மருந்துகள் தயாரித்து வழங்குவோர்.

## ஜீவ சப்தம் ஆஸ்ரமம் மருத்துவமனை, குற்றாலம், தென் இந்தியா.

இந்தியாவில் தங்கி சிகிச்சை பெற முன்பதிவு செய்யவும்
001 91 81447 88248,

கனடாவில் டாக்டர் இராஜசேகர் ஆத்தியப்பன், M.D.,F.H.M.S.S.,
416 995 0416.

# பங்குச்சந்தையில் முதலிடுவது எப்படி...?

பங்குச் சந்தை பற்றிய இந்தக் கட்டுரைக்கு இவ்வளவு வரவேற்பு இருக்கும் என்று இதை எழுதும் போது நான் எண்ணியிருக்கவில்லை. பலர் E-mail மற்றும் தொலைபேசி மூலம் தங்கள் வரவேற்பையும் கருத்துக்களையும் கூறியிந்தார்கள் எல்லா நல்ல உள்ளங்களுக்கும் நன்றி.

சென்ற முறை பங்குகள் என்றால் என்ன எப்படி உருவானது, பங்குகள் வாங்க முன் கவனிக்க வேண்டிய, சந்தையில் மாற்றங்கள் நிகழ்த்தும் காரணிகள் என பலவற்றை பார்த்தோம்.

நல்ல பங்குகள் வாங்கமுன் அறிந்து கொள்ள வேண்டியவற்றின் தொடர்ச்சியாக volume என்றால் என்ன என்று பார்ப்போம்,

ஒரு பங்கின், குறிப்பிட்ட நாளில் நடைபெறும் வியாபாரத்தின் மொத்த எண்ணிக்கை volume ஆகும். Volume கூடுதலாக உள்ள பங்கை வாங்கினால் பங்கின்விலை உயரும் போது இலகுவாக விற்கக்கூடியதாக இருக்கும் மேலும் நல்ல Volume உள்ள பங்குகளின் விற்பனை விலைக்கும், வாங்கும் விலைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்காது (Bid & Ask) இதன் மூலம் ஓரளவு லாபத்துடனோ அல்லது குறைந்த அளவு நட்டத்துடனோ நாம் நமது பங்குகளை விற்றுவிட முடியும்.

இதுவரை பங்குச் சந்தையில் அடிப்படைப் பகுப்பாய்வு (Pandamental analysis) பற்றி ஒரளவு அறிந்து கொண்டோம். Technical analysis (தொழிநுட்பப் பகுப்பாய்வு) என்றால் என்ன என்று பார்ப்போம்.

### Technical analysis (தொழிநுட்பப் பகுப்பாய்வு)

## தொடர் 2

நல்ல நிறுவனத்தையும் அதன் நல்ல பங்குகளையும் அறிந்து கொண்டோம் என்பதால் உடனே ஓடிப்போய் பங்குகளை வாங்கிவிடாதீர்கள். நல்ல நேரத்தில் பங்குகள் வாங்க வேண்டும். (நல்ல நேரம் என்றால் வெள்ளி திசை வரும் வரை wait பண்ணத்தேவையில்லை. பாதிப்பேர் பங்கே வாங்க முடியாது வெள்ளை முடிதான் வரும்)

நல்ல நேரம் என்பது சரியான நேரத்தையும் குறிக்கும். சரியான நேரத்ததை எப்படிக் கண்டுபிடிப்பது, இப்போதான் எமக்கு Technical analysis தேவைப்படுகிறது. அதாவது எதை வாங்க வேண்டும். எதை விற்க வேண்டும். என்பதை Fundamental analysis இல் தெரிந்து கொள்ளலாம். எப்போது வாங்க வேண்டும் எப்போது விற்க வேண்டும் என்பதை தெரிவிப்பது Technical analysis.

### Technical analysis - தொழில் நுட்பப் பகுப்பாய்வு

முதலில் Technical Analysis எப்படி உருவானது என்று பார்ப்போம் அதாவது Techinical Analysisஇன் தந்தை Charles Dow அவர்கள் 1880ம் ஆண்டளவில் Wall Street Journal என்ற பத்திரிகையினை ஆரம்பித்து அதன் முதன்மை ஆசிரியராக இருந்தார். (அத்தோடு Co-Founder of Dow Jones and Company). அவர் சில குறிப்பிட்ட பங்குகளை (Sector) தொகுத்து அதன் ஏற்ற இறக்கங்களை ஆராய்ந்து அதற்கென தனியான குறியீட்டை உருவாக்கினார். இதனை இப்போது நாம் Dow Theory என்கிறோம். (இனி வரும் இதழ்களில் விரிவாக பார்க்கலாம், இல்லை! எனக்கு இப்போதே வேண்டும் என்று ஒற்றை காலில் நின்றால் Wikipediaவில் பார்க்கவும்)

பங்குச்சந்தையில் இரண்டு வகையாக பணம் எடுக்கலாம்.

- நீண்டகால முதலீடு (Long term inversment)
- குறுகியகால வியாபாரம் (Sort term trading)

Technical Analysis என்பது Trading செய்வதற்கான வழிமுறைகள் பற்றிய ஆராய்வு. பங்குச் சந்தையில் விலைகள் ஏறி இறங்கிக் கொண்டே இருக்கும். (இல்லாவிட்டால் சந்தையை மூடிவிட்டு வீட்டிற்கு போகவேண்டியதுதான்) இந்த மாற்றத்தினை வைத்து குறைந்த இழப்புகளோடு கூடுதலாக வருமானத்தை பெறும் வழி.

### Trading செய்வதற்குமுன் தெரிந்துகொள்ளவேண்டியன.

- எப்போதும் சந்தையின் போக்கில் நாம் போக வேண்டும். (Trading with the Trend).
- சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்க வேண்டும் - பங்குகளை வாங்கும் அல்லது விற்கும் நேரம் சரியாக கணித்து வாங்கவேண்டும். (வாங்கிய பங்குகளை விற்காமல் அப்படியே வைத்திருந்தால் சிலநேரம் Account தான் மிஞ்சும்).
- பங்குகளின் விலைகள் தீர்மானிக்கப்படுவது அவற்றின் கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையிலான அளவைப் பொறுத்தது (Supply and Demand).
- தனி ஒருவரை விட சந்தைக்கு அதிகம் தெரியும் - நாம் சேகரிக்கும் தகவல்களுக்கு மேலாக எம்மை விட விபரம் தெரிந்தவர்கள், முக்கிய தகவல்களுக்கு அருகில் இருப்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.
- சந்தை இயங்குவது ஆசையிலும் பயத்திலும்தான் (Fear and Greed).

கண்ணன் காங்கேசு



அடுத்தமுறை சந்தையில் நடைபெறும் சில விடயங்களால் எவ்வாறு சில உருவ அமைப்புகள் ஏற்படுகின்றது அவற்றை வைத்து எப்படி Technical Analysis செய்யலாம் என்று பார்ப்போம்.

முடிவாக ஒரு குட்டிக் கதையை படியுங்கள்.

ஒவ்வொரு நாளும் காலை விடியும் போது, காட்டில் உள்ள சிங்கத்திற்கு தெரியும் இன்று ஏதாவது ஒரு வேகம் குறைவாக ஓடக் கூடிய மானைப் பிடிக்க வேண்டும் அல்லது பட்டினியால் வாட வேண்டும் என்று.

அதே காலை விடியும் போது மானுக்குத் தெரியும் வேகமாக ஓடக்கூடிய சிங்கத்தை விட வேகமாக ஓடவேண்டும் இல்லாவிட்டால் சிங்கத்திற்கு இரையாக வேண்டும் என்று.

ஆக மொத்தத்தில் சிங்கமாக இருந்தாலும் மானாக இருந்தாலும் காலை எழுந்தவுடன் ஓட வேண்டும் (உடற்பயிற்சியை சொல்ல வில்லை)

மீண்டும் சந்திப்போம்.

kannan.kankesu@thaiveedu.com

■ ■ ■



# MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial (Lic # 10669) Services Inc.



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

## வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**
**TAX & ACCOUNTING**
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com

# TODAY IS A GOOD DAY
## TO MAKE THINGS SIMPLER

**Insurance and investment solutions that fit your life.**

I can help you with:

- Life insurance
- Long term care insurance
- RESPs*
- Retirement planning*
- Financial planning*
- Critical illness insurance
- Disability insurance
- RRSPs/RRIFs
- Tax-Free Savings Accounts
- Savings plans



**Ahilan Balachandran*** CFP CLU B.Comm.
Bus 416-412-0401 ext 2302
Cell 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

CFP

Life's brighter under the sun

*Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.
© Sun Life Assurance Company of Canada, 2010.

Sun Life Financial

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Est. 1991
www.computek.edu
A Career College near you ...



**Looking for jobs in Banks**
**Get job ready in weeks !**

***Bank Teller - Next batch- April 21***
***CSC** (Canadian Securities Course) - Next batch - April 10*
***IFIC** ( Investment funds Institute of Canada)*
***FOREX Trading***

**SAP** *Training - FI & CO , BPC*
*Canadian Payroll Assoc (CPA) - Exam Prep*
*Food Handler Certification*
*A+ ( Computer Assembly &Troubleshooting )*
*CCNA (Cisco Certified Network Admin)*
*Programming (C++ / JAVA)*

**Diploma**
**Get ready for job in 6 - 12 months !**

*Are you not qualified for HRDC Funding Assistance ?*
*Is your HRDC funding REJECTED?*
*You may still qualify for other Financial Assistance*
*Please call us for details*

*If you are :*
*- Currently receiving E.I. benefits*
*- Received E.I. within 3 yrs*
*- Received maternity benefits within 5 yrs*
*You may be eligible for HRDC funding*

**Network Engineering**
- CompTIA A+
- CCNA
- Linux 1
- MCP, MCSA, MCSE
- Network +

**Weekdays, Week-end and Evening Classes**

**Personal Support Worker (PSW)**
**Early Childcare Asst.(ECA)**
**Computerized Accounting**
**Business Administration**
**Medical Office Admin (MOA)**

**Financial assistance available to those who qualify**

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
| --- | --- | --- |
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 202 - 7 Eastvale Drive. | 301-2347 Kennedy Road | 248-2390 Eglinton Ave E |
| Markham L3S 4N8 | Scarborough M1T 3T8 | Toronto M1K 2P5 |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

# ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழும் ஆவணப்படுத்தப்படும் வரலாறு..!

- ராகவன் -

**எமது வரலாற்றை ஆவணப் படுத்துதலின் அவசியம் பற்றிய:**
நீங்கள் விழுந்த போதெல்லாம் தூக்கி விட்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் உங்கள் தாயாக, தந்தையாக, தமையனாக, தமக்கையாக, தங்கையாக, தம்பியாக, இன்னும் விரிந்து செல்லும், எங்களுக்கே உரித்தான அன்பு உறவுகளாக. இந்த உறவுகளில் பலர் சாகும் தறுவாயிலும் சாதனைகள் செய்திருக்கலாம். சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். எங்களுக்குத் தெரியாத எத்தனையோ கொடுமைகளை மனதுக்குள் புதைத்தபடி காத்திருக்கலாம், உலகிற்கு சொல்லிவிட்டு உயிரைப் போக்கலாமென்று. சிலர் மற்றவரைக் காப்பதற்காகத் தம்முயிரை ஈந்திருக்கலாம். இன்னும் வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத சோகங்களை கொடுமைகளை கோரங்களைப் பார்த்தோ அல்லது அனுபவித்தே? இருக்கலாம். கடைசிவரை களத்தில் நின்று, ஆனால் உலகமறியாத ஒரு உண்மையான மருத்துவராக இருக்கலாம். பிள்ளையை இழந்து தன் புத்தி பேதலித்த தாயாக இருக்கலாம். தன் பிள்ளை போனாலும், தாய் தந்தை இழந்த பிள்ளைகளுக்கெல்லாம் தாயாகி இருக்கலாம். இவர்களையெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களுக்குத் தெரியும்.

இவர்கள், நேற்று: கோயில் வயல் சூழ்ந்த, செழித்த பொருளாதார வளத்துடம் ஒரு பெரிய கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர்கள், அலையோடு போராடி தம் வலையில் விழுவதைக் கொண்டு வாழ்க்கையை நகர்த்தியிருந்தவர்கள், விளக்கு வெளிச்சத்தில் தாம் கற்றவற்றைக் கொண்டு ஆயிரம் குழந்தைகளுக்கு அறிவு என்னும் தீபம் ஏற்றியிருந்தவர்கள், இவர்கள் பிறப்பு, வாழ்வு, சாவு என்று வாழ்க்கை முழுவதையும் வரலாறாகப் பதிந்தவர்கள். அதிலும் தனிப்பட்ட ஒருவரின் சாவு, சாவு அறிவித்தலாக, அதன் பின்னரான நினைவுகூரலாக, கல்வெட்டாக, இன்னும் பல்வேறு வகையில் ஆவணப்படுத்தியிருப்பர். தமிழர் தனிமனித மற்றும் சமூக விழுமியங்களில் உயர்ந்து நின்ற பண்பாட்டாளர்கள். இவர்கள் தமது எதிர்கால சந்ததியின் வளர்ச்சிக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தவர்கள். இப்படிப்பட்ட பல ஆக்கபூர்வமான இயல்புகளைக் கொண்டிருந்த சமூகம் இன்று எப்படி உள்ளது?

எண்ணிக்கை தெரியாத அளவிற்கு பல்லாயிரம் உறவுகளை இழந்து, இன்னும் பலநூற்றாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து எங்கெங்கோ வாழ்ந்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக இன்று தடை முகாம்களில் வாழும் மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது பற்றி மட்டுமே சிந்திக்கக்கூடிய வர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எதிர்காலம் பற்றி எந்த ஒரு சிந்தனையும் இருப்பதற்கான சாத்தியம் இல்லை. பசியும் பயமும் கலந்த இந்த சமூகத்தின் சிந்தனைத் திறன் மழுங்கடிக்கப்பட்டு, மிகக் கீழ்த்தரமான ஒரு இராணுவ மற்றும் அரசியல் கட்டமைப்புக் கொண்ட அரசின் ஆட்சியில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு அன்றாடம் நிகழும் கொடூரங்களை எவருக்கும் சொல்ல முடியாமல் உள்ளார்கள். குமுறும் சோகங்கள், இன்னும் வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத கொடுமைகள் எவரிடமும் சொல்லாமல் தேங்கிக் கிடக்கின்றன. இவர்களுக்கு விடிவு வேண்டும். புலம் பெயர் இளம் சமுதாயம் முதலில் அவர்களது உணர்வுகளை அறிய வேண்டும்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆவணப்படுத்தப்படாத எந்த நிகழ்வுகளும் எவரையும் சேராது. நிகழ்காலத்தில் நீங்கள் உங்கள் கடமையை சரிவரச் செய்யாவிடின், எதிர்கால சந்ததி எமது மக்களுக்காக எதுவும் செய்யாது. ஆவணப்படுத்தப்படும் வரலாறு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழும்.

அமெரிக்க இராணுவம் வியட்நாமில் செய்த அட்டூழியங்கள் ஆவணப்படுத்தப்பட்டன. அவை பின்னர் அமெரிக்க மக்களின் இதயத்தையும் விழிகளையும் திறந்து அமெரிக்க இராணுவத்தின் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தன. தமிழர்களுக்கு நேர்ந்த சோகங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவை ஆயிரம் ஆயிரம் கைகளாக மாறி உலகத்தின் கதவுகளை ஓங்கித் தட்டவேண்டும். அது: எமது மக்களுக்கான விடியலாக வேண்டும்.

> **“ ஆவணப்படுத்தப்படாத எந்த நிகழ்வுகளும் எவரையும் சேராது. நிகழ்காலத்தில் நீங்கள் உங்கள் கடமையை சரிவரச் செய்யாவிடின், எதிர்கால சந்ததி எமது மக்களுக்காக எதுவும் செய்யாது. ஆவணப்படுத்தப்படும் வரலாறு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழும். ”**

**எவ்வாறு இதனைச் செய்யலாம்?**
உங்கள் உறவுகளுக்கு ஏற்பட்ட சோகங்கள் ஆவணப்படுத்துவதை தங்கள் குறிக்கோளாக கொண்டு செயற்படும், போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம், உலகளாவிய நோக்கில் இயங்கிவருகிறது. அவர்களோடு உங்களால் இயன்ற விடயங்களைப் பகிருங்கள். இதுவே எங்கள் சமுதாய விடியலுக்குக்காக நாங்கள் கட்டவேண்டிய முதற் படிக்கல்.

416-628-1408
**போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்**
**Centre for War Victims & Human Rights**
**http://www.cwvhr.org**

ragavan@thaiveedu.com

■ ■ ■

**இணைந்து கொள்ளுங்கள் ‘தாய்வீடு’ facebookஇல்**
**www.facebook.com/thaiveedu**


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Steeles & Brimley
$ 395,000
3 Bedrooms + 2 Washrooms
Steeles & Mccowan
$ 479,900
4+2 Bedrooms + 4 Washrooms
Markham & Denison
$ 279,900
3 Bedrooms + 3 Washrooms
Salem & Williamson
$430,000
4+1 Bedrooms + 4 Washrooms
Ravenscroft & Rossland
$ 339,900
3 Bedrooms + 3 Washrooms
Sheppard & Neilson
$ 124,900
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Eglinton
$ 149,990
1+1 Bedrooms + 1 Washrooms
Bur Oak & 9th Lane
$ 459,600
3+1 Bedrooms + 3 Washrooms
Morningside & Staines
$409,900
3 Bedrooms + 3 Washrooms
Finch & Staines
$ 439,900
3+1 Bedrooms + 3 Washrooms
Mccowan & Steeles
$ 219,900
2+1 Bedrooms + 2 Washrooms
9th Line & Bur Oak
$ 454,900
3 Bedrooms + 3 Washrooms
Mccowan & Steeles
$ 205,000
2+1 Bedrooms + 2 Washrooms
Morningside & Staines
$429,900
3 Bedrooms + 4 Washrooms
Brimley & Steeles
$ 549,900
4 Bedrooms + 5 Washrooms
Westney & Delany
$ 409,000
4+1 Bedrooms + 3 Washrooms
Highglen & Markham
$ 499,900
4+2 Bedrooms + 4 Washrooms
Mccowan & 407
$ 569,900
4 Bedrooms + 3 Washrooms
Markham & Nashdene
$226,900
Office Space
14thAve. & 9th Line
$ 564,900
4 Bedrooms + 3 Washrooms
*BUY - SELL - RENT*
Experience,Knowledge,Professionalism,Team work & No Pressure
YOUR HOME
SOLD
GUARANTEED !
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
SOLD
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

# Trusted for Service and Respected for Results

22 Years Real Estate Experience & Multi Award Winner



RED CARPET® Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

880 Ellesmere Road, Suite 204, Toronto, ON.

**Karu Kandiah** FRI. CRES.
Real Estate Broker / President

Bus: 416-284-5555 Dir: 416-616-7278

## To Buy or Sell your Home for the Right Price please call me...




- 3 Bedrooms
- 4 Washrooms
- Pot Lights In Family Room
- Quality Tridel Built Spacious Sun-Filled Home With 2400 Square Ft Living Space.
- This Home Boasts With 3 Full Baths And Brand New Hardwood Flooring Thruout




4 Bedrooms, 3 Washrooms
Pot Lights In Family Room




2 Bedrooms, 2 Washrooms
Well Maintained W/Newer Paint Job




2+1 Bedroom, 2 Washrooms
5 Years Old Town Home




3 Bedrooms, 2 Washrooms
Derry / Terragar, Mississauga




4 Bedrooms, 3 Washrooms
Hardwood On Main Floor




2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers





4+2 Bedrooms, 4 Washrooms
Beautiful & Newer House




4 Bedrooms, 4 Washrooms
9th/14th, Markham




2 Bedrooms, 1 Washroom
Location, Location, Location




1+2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers




2 Bedrooms, 1 Washroom
Located In 24 HGated Community




3 Bedrooms, 2 Washrooms
Close To Transport & Hwy 410




5+2 Bedrooms, 4 Washrooms
Absolutely Well Maintained




3+1 Bedrooms, 4 Washrooms
Gorgeous Upgraded Arista Built Home

## Looking for a New Real Estate Career

*Join a winning team for your success*

- Free Real Estate Classes
- Regular Sales Training from Experts
- Referral leads
- Help & guidance for newly licensed agents


AGRன் மூன்றாவது கிளை உங்கள் அருகாமையில்
AGR
15 Years in Customer's Satisfaction
AGR FOREX
Personal & commercial transaction services
உலகளாவிய பணமாற்றுச் சேவை
1995 ல் ஆரம்பிக்கப்பட்ட எமது AGRஸ்தாபனம் மூன்றாவது கிளையை இன்று புதுப்பொலிவுடனும் நவீன வசதிகளுடனும் பல ஆயிரம் வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் 1145 Morningside ல் ஆரம்பிப்பதுள்ளோம்.
AGR FOREX
personal & commercial transaction services
இலங்கை, இந்தியா, தூரகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்
Personal and Business Needs
வெளிநாட்டு நாணயங்கள் (US, EURO, POUNDS) வாங்கலாம் விற்கலாம்
இலங்கையில் எப்பாகத்தில் உள்ள வங்கிகளிலும் பணவைப்பு செய்யலாம்
இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் கனடாவிற்கு பணம் எடுக்கலாம்
கனடாவின் எந்தமாகாணத்திலிருந்தும் வீட்டிலிருந்தவாறே E-MAIL TRANSFER மூலம் பணம் அனுப்பலாம்.
Interac
Tel: 416-261-0003
Fax: 416-261-9592
Email: info@agrcanada.com
www.agrcanada.com
Steeles Ave.
Sheppard Ave.
401
Eglinton Ave
Brimley Rd.
Morningside Ave
1145 Morningside Ave, Unit #5, Scarborough, ON M1B 0A7
2637 Eglinton Ave E, Scarborough, ON. M1K 2S2
5005 Steeles Ave East, Scarborough, ON. M1V 5K1

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# வங்குரோத்து நிலை விண்ணப்பம் தொடர்பாக கடன் வழங்கியவர்களின் உரிமைகள்

## (Creditor's Rights in Bankruptcy)

**பகுதி - 5**



வ. சிறி

(கடன் கொடுத்தவர்கள் பலர், தாங்கள் கடன் வழங்கியவர்கள் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பம் செய்துள்ளனர் என்று அறியவரும் போத அடுத்து என்ன செய்வது என்று தடுமாறும் நிலை ஏற்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் கடன் வழங்கியவர்கள் பயன்படுத்தக்கூடிய பல்வேறு சிறப்புரிமைகள் உண்டு. இதுபற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக இக் கட்டுரை அமைகிறது.)

கடன் வழங்கியவர்கள், தாங்கள் ஏற்கனவே கடன் வழங்கியவர்களிடம் இருந்து வங்குரோத்து நிலை விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல்களை வங்குரோத்து நிலைப் பொறுப்பாளர்களிடமிருந்து கடிதம் மூலம் பெறுகின்றனர்.

ஆனால் அவ்வாறு அறிவித்தல் கடிதங்களை பெறும் வேளைகளில், கடன்வழங்கியவர்கள் (CRDITORS) தாங்கள் கடன்வழங்கியவர்களிடமிருந்து மீண்டும் பணத்தை பெறுவதற்கு உரிமைகள் எதுவும் இல்லை என்றும் அல்லது வேறு எந்த மாற்றீடான செயற்பாடுகள் எதுவும் இல்லை என்றும் தவறாக முடிவு செல்கின்றனர்.

ஆனால் கடன்வழங்கியவர்களுக்கு பல உரிமைகள் உள்ளன என்பதை கடன் பெற்றவர்கள் அறிந்திருப்பது அவசியம்.

வங்குரோத்து நிலைக்கான பொறுப்பாளர் சில வேளைகளில் ஏற்கனவே வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தவரிடம் இருந்து ஒரு தொகைப்பணத்தை பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தவரிடம் ஏற்கனவே கடன் வழங்கியவர்கள் தாங்கள் உரிமை கோரிய, முன்னுரிமை வரிசைப்படி (Priority of their claim) அந்த பணத்தின் ஒரு பகுதியைப் பெறுவதற்கு தகமை பெற்றுள்ளனர்.

ஆனால் ஏதாவது ஒரு சொத்தின் பெறுமானத்தின் உத்தரவாதம் எதுவும் இன்றி வழங்கப்பட்ட கடன்கள் (unsecured Loans) இந்த முன்னுரிமை வரிசையில் மிகவும் தாழ்வான இடத்தைப் பெறுகின்றது. எனவே இந்த வகையான கடன்களை வழங்கியவர்கள். தாங்கள் வழங்கிய கடனின் ஒரு பகுதியைக் கூட பெற முடியாத நிலை ஏற்படலாம்.

கடன் வழங்கிய ஒருவர் பின்வரும் விடயங்கள் தொடர்பாக வங்குரோத்து நிலைப் பொறுப்பாளரிடமிருந்து விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

- தனக்கு கடன் வழங்கியவர்களுக்கு அவர்களிடம் இருந்து பெற்ற கடனை மீண்டும் செலுத்துவது தொடர்பான திட்டத்தை பற்றிய விபரங்கள்.
- கடன் பெற்ற ஒருவரின் தவிர்ப்பு வழங்கப்படாத (non-exempt) தன்மையான சொத்துக்களை விற்பனை செய்தல்.
- அவரது சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட பணத்தில் இருந்து கடனை மீளச் செலுத்துதல் என்பவைபற்றி நீதிமன்றத்தில் விசாரனைக்கு உட்படுத்தல்.

கடன் பெற்ற ஒருவர் அவருக்கு கடன் வழங்கியவர்களில் குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒரு சிலரை மட்டுமே தெரிவு செய்து, அவர்களது கடன்களை மட்டுமே மீளச் செலுத்துவது தொடர்பாக முடிவு செய்தால், அந்த முடிவுக்கு எதிராக கடன் வழங்கியவர்கள் சவால் விடுக்க முடியும்.

### கடன் வழங்கியவர்கள் செய்யக் கூடியவை எவை?

கடனைத் திரும்ப பெறும் நடவடிக்கைகள் அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வருவது அவசியம். கடன் பெற்ற ஒருவர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்த பின்பு, அவருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தல், அவர் மீது வழக்கு தொடருதல், அவருக்கு வழங்கிய சேவைக்கான கட்டணம் கோருதல் ஆகியவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஏனெனில் ஒருவர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்த பின்பு சட்ட ரீதியாக அவருக்கு இந்தவிதமான நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

### நீதிமன்றத்தில் கடன் உரிமை கோரி பதிவு செய்தல்:

கடன்வழங்கியவருக்கு நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்படும் கடிதத்தில் அவர்களது கடனை திரும்ப பெறுவதற்கு எங்கு விண்ணப்பிக்க வேண்டும். அதற்கான முடிவுத் திகதி எது என்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பணத்தை பெறுவதற்கான உரிமை கோரும் படிவத்துடன் (claim form) அவர்களால் விடுக்கும் உரிமை கோரல் தொடர்பான ஒப்பந்த பத்திரம் அல்லது அவர்களுக்கு சாதமாக வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பு ஆகிய ஆவணப் பத்திரங்கள் என்பவற்றை இணைத்து, நீதிமன்ற அலுவலகத்திற்கு அந்தப் பத்திரத்தை திருப்பி அனுவார்கள்.

கடன் வழங்கியவர்களிடமிருந்து கடன் பெற்ற ஒருவருக்கு அவர்கள் வழங்கிய கடன் தொடர்பான அவர்களது உரிமைகோரல், விடுபடக்கூடிய தன்மையானதா (dischargeable) என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

விவாகரத்து தொடர்பான பொறுப்புகள், மோசடி மூலம் பெறப்பட்ட கடன், மதுபோதை-யில் வாகனம் செலுத்தி சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் ஆகிய பொறுப்புக்களில் இருந்து ஒருவர் விடுபட முடியாது.

அவர்கள் வழங்கிய கடன், கடன் பெற்றவர்களின் சொத்துக்களால் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதா என்று முடிவு செய்து கொள்ள வேன்டும்.

சொத்தை உத்தரவாதமாகக் கொண்டு கடன் வழங்கியவர்களுக்கு, அந்தச் சொத்தை விற்பனை செய்வது தொடர்பான கட்டுப்பாட்டு உரிமைகள் (LIEN) உண்டு. இப்படியான உத்தரவாதக் கடன் வழங்கியவர்கள் அவர்களது கடனை மீண்டும் பெறக்கூடிய வாயப்பு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

### கடன்கொடுத்தவர்கள் தமக்குத் தெரிந்த தகவல்களை, வங்குரோத்து நிலைப் பொறுப்பாளருடன் பகிர்ந்து கொள்ளுதல்

கடன்பெற்ற ஒருவர், தனது நிதி நிலைமை தொடர்பாக தெரிவிக்கும் விபரங்கள் முழுமையாக இல்லாவிடில் அல்லது, அவரது சொத்துக்கள் பற்றிய விபரங்கள் சில மறைக்கப்பட்டிருந்தால் அல்லது வேறு ஒருவரது பெயருக்கு மாற்றப்பட்டிருந்தால் கடன் வழங்கியவர்கள் வங்குரோத்து நிலைப் பொறுப்பாளரைத் தொடர்புகொண்டு, அது பற்றிய தகவல்களை அறிவிப்பார்கள். இவ்வாறான தகவல்கள் மூலம் வங்குரோத்து நிலைப் பொறுப்பாளர், ஏற்கனவே கடன் வழங்கும் விறுவனங்களிடம் கடன் பெற்ற ஒருவரிடம் இருந்து மேலதிக பணத்தை அறவிட முடியும். அதே சமயம் கடன்களில் இருந்து விடுபடுவதற்கான அவரது விண்ணப்பத்தை எதிர்த்து செயற்படலாம்.

sri.v@thaiveedu.com

■ ■ ■

EQAO EXAM Grade 3, 6 & 9
Coaching class starts on Mar, 2010
Tutoring: Gr. 1 -12
• Teaching Math, English & Science
• Junior Readers and Magic Math Programs
• Weekdays and Weekend Classes
KENNEDY & EGLINTON
Contact:
416-546-7885

Income Tax
வருமானவரி சேவை
MISSISSAUGA, BRAMPTON, NORTH YORK AREA RESIDENTIAL
• Personal Income Tax
• Business Tax
• Corporate Tax



Income Tax with E-File From $19.99
E-File Tax Refund with in 24 Hrs
நீங்கள் செலுத்திய வருமான வரியில் 90% மேலாக சேமிக்கலாம்.
உங்களது வருமான வரிப்பணத்தை மீளப்பெற உடன் அழையுங்கள்...
Sam or Jeeva
416-646-8860

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# கோளாறுக்குள்ளாகும் புதிய வாகனங்கள்

## தீர்வும் திருத்தங்களும்

**கனடாவில் வாங்கிய புதிய வாகனத்தில் கோளாறுகள், நியாயமாக தீர்வே காணமுடிய வில்லையாயின் எங்கே, எப்படி, தீர்வு காண்பது? (Trouble In My Brand New Vehicle?)**

சில மாதங்கள்! அல்லது வாகனம் வாங்கி ஒரு சில வருடங்கள் மட்டும் கடந்துள்ளது என சொல்லலாம். திடீர் என சில கோளாறுகள்! வாகன கம்பனி உற்பத்தியாளரின் குறைபாட்டினால் ஏற்பட்ட கோளாறுகள் (Automobile Manufacturing defects) என்பது மட்டும் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. ஆரம்பத்திலிருந்து உபயோகிக்கும் ஒரு சில கிலோ மீற்றர் தூரம் வரை அல்லது உபயோகிக்கும் முதல் சில வருடங்கள் வரை ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் இப் புதிய வாகனங்களை கம்பனியினால் இலவசமாக திருத்தி தரப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தினை (New vehicle warranty) கம்பனி நிட்சயமாக தந்திருக்கும். அந்த 'உத்தரவாதம்' என்ற வாக்குறுதியின் அடிப்படையில் வாகன கம்பனி விற்பனை முகவரிடம் (Company Vehicle Dealer) எடுத்து சென்று அதனை திருத்தி நிவர்த்தி செய்து கொள்ளலாம். அங்கும் நிவர்த்தி செய்யும் தீர்வு பூரணமாக திருப்தியாக கிடைக்கவில்லையாயின் கனடாவில் எங்கே போவது? எப்படி தீர்வு காண்பது?

கனடாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் அல்லது ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை கொண்டு கனடாவில் உருவமைக்கப்படும் வாகனங்கள்

**தகவல் தொடர் - 39**

அல்லது ஏனைய நாடு ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு அந்நாட்டு நிறுவனத்தின் பெயரால் விற்பனை செய்யப்படும் வாகனங்கள் எதுவாகவிருந்தாலும் அதனை புதிதாக வாங்கி உபயோகிக்கும் ஒருவர் எதிர்கொள்ளும் நியாயமான பிரச்சினைகளை விசாரித்து இதுவே சரியான தீர்வு! என முன்வைத்து வாடிக்கையாளர்களுக்கு உதவும் ஒரு நிறுவனம் கனடா முழுவதும் இயங்கி தீர்வு வழங்கி வருகின்றது என்பதை அறிந்து கொண்டீர்களா? இவ்வாறு தீர்வு வழங்கும் இம் மத்தியஸ்தர் நிறுவனத்தினை இயக்கும் ஒன்ராரியோ மாகாணத்தின் அலுவலகம் ரொறன்ரோவில் பின்வரும் விலாசத்தில் இயங்கி வருகின்றது.

**Canadian Motor Vehicle Arbitration Plan (Ontario Provincial Administrator)**
**55, St. Clair Ave - West, suite 255**
**Toronto, ON. M4V 2Y7**
**தொலைபேசி: 1-800-207-0685**
**அல்லது: 416-921-2686**
**தொலைநகல்: 416-967-6320**
**இணையத்தளம்: www.camvap.ca**

இது கனடிய மத்திய, மாகாண, நகரசபை அரசுகளின் சட்டவிதிகளின் படி அமைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு நியாயமன்றம். புதிதாக வாகனங்களை வாங்கி உபயோகிக்கும் ஒரு வாடிக்கையாளர் விடயத்தில் தீர்ப்பு வழங்கினால் அது அப்பீல் பண்ண முடியாத தீர்ப்பாகவே இருக்கும். இந் நிறுவனங்களின் தீர்ப்பினை வாகனக் நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்பது நிபந்தனை ஆகும். இதுவரைகாலமும் பல வாகன நிறுவனங்களோடு ஏராளமான வாடிக்கையாளர் களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளது. வாடிக்கையாளரின் பிரச்சினையில் நியாயம் இல்லையேல் இம் மத்தியஸ்தர் குழு முறைப்பாடுகளை நிராகரித்தும் உள்ளது.

### வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

- வாகனங்களின் உதிரிப் பாகங்களை கொண்டு உருவமைப்பதில் ஏற்பட்ட தவறுகளினால் உருவாகும் கோளாறுகள் (Manufacturing defects).
- புதிய வாகனத்தின் உத்தரவாதம் தொடர்பான பிணக்குகள் (Warrenty Disbute).

இந்த இரு விடயங்களிலும் பிரச்சினைகள் எழும்போது


- முதலில் வாகனம் வாங்கிய கம்பனியில் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்தல் வேண்டும் (Talk with your Dealer first).
- அங்கு சரியான தீர்வு கிடைக்காவிட்டால் வாகன உற்பத்தி செய்யப்பட்ட கம்பனி வாடிக்கையாளர் உதவி பிரிவுக்கு (Manufacturer's Customer Assistance Centre) இம் முறைப்பாட்டினை இரண்டாவதாக எடுத்து செல்லவேண்டும்.
- இல்லையேல் இறுதியாக சரியான தீர்வு காணும் இடமே இந் நியாயமன்றம் ஆகும்.

### தீர்வுகள்:

- வாகனத்தினை திருத்தி கொடுத்தல்.
- காலதாமதம் காரணமாக உரிமையாளர் வாகனத்தினை தமது பணம் கொடுத்து ஏற்கனவே திருத்தியிருந்தால் அந்த பணம் முழுவதும் திருப்பி வாடிக்கையாளருக்கு வழங்குதல் (Reimburse Repair Expenses) மேலதிக செலவுகள் வாடிக்கையாளருக்கு ஏற்பட்டிருந்தால் அதனையும் திருப்பி வழங்குதல் (உதாரணமாக ஓடாமல் வாகனம் வீதியில் நின்றிருந்தால் நின்ற இடத்திலிருந்து கட்டி இழுத்து கொண்டு போன செலவு (Towing Charge) வாகனம் இடையில் நின்றதால் வாகன உரிமையாளருக்கு ஏற்பட்ட வாடகைக் கார்ச் செலவுகள், வாகனம் தரித்து நின்ற இடச் செலவுகள் (parking Charge), மற்றும் கோளாறுகள் எது என்பதனை கண்டறிந்த (Diagnostic testing) செலவுகளைக் குறிப்பிடலாம். இதற்கு ஆக கூடுதலாக $500 டொலர் வரையே வழங்குவார்கள்.)
- வாகனத்தினை கம்பனியே திருப்பி விலை கொடுத்து வாங்குமாறு உத்தரவிடுதல் (Buy Back order).

### எந்த தகைமைக்குள் இருந்தால் இம் முறைப்பாடுகளை முன் எடுத்து செல்லலாம்?

- கடந்த நான்கு வருடங்களுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமாக இருத்தல் வேண்டும்.



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

- 160,000 கி.மீற்றருக்குள் உபயோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- தீர்வு வழங்கப்படாத நிலையில் மேன்முறையீடு செய்யும் நிலையில் இருத்தல் வேண்டும்.
- ஏதாவது வர்த்தக நோக்கத்திற்கு வாகனம் உபயோகிக்கப்பட்டிருத்தல் கூடாது..

### முக்கிய தகவல்

இவ்ஆண்டு (ஜனவரி 2010) ஆரம்பத்தில் கனடாவில் சகல செய்தி தொடர்பு சாதனங்களுக்கும் பலமுறை சற்று அழுத்தமாக ஓர் செய்தியினை அறிவித்திருந்தது. அதாவது Toyota கம்பனியால் செய்யப்பட்ட வாகனங்களில் "வேக மிதி" (Accelerator Pedals) பொருத்தப்பட்டது தவறு எனவும், உலகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்ட Toyota வாகனங்களை திரும்ப எடுத்து அதனை தங்கள் நிறுவனச் செலவில் திருத்திக் கொடுப்பதாகவும் செய்தியாக வெளியிட்டிருந்தனர். 2007ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவமைக்கப்பட்ட சில Toyota வாகனங்களை மட்டுமே இங்கு குறிப்பிட்டிருந்தனர்.

ஜனவரி 01.1999க்கு பிற்பட்ட உங்களின் உபயோகத்தில் இருக்கும் ஒவ்வொரு வாகனமும் சில நேரங்களில் கம்பனியின் உற்பத்தி தவறு காரணமாக திருப்பி வாங்கியே தீரவேண்டும் என உத்தரவு இவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு இருக்கலாம். அப்படி இருக்குமா? என்ற ஒரு சந்தேகம் உங்களுக்கு இருந்தால் அதனை நீங்கள் இலகுவாக வீட்டில் இருந்தபடியே பரிசீலனை செய்து பார்க்கலாம்.

www.camvap.ca/eng/vinsearch.html என்னும் இணையத்தளத்திற்குள் செல்லுங்கள். அங்கு உங்கள் வாகன உரிமைப் பத்திரத்தில் (Vehicle ownership document) அல்லது வானத்திற்கு முன் கண்ணாடியின் உள் பக்கமாக உள்ள பதாதையில் எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள பதினேழு இலக்கம் கொண்ட வாகன அடையாள இலக்கத்தினை (Vehicle Identification number) இவ் இணையத்தில் கேட்கப்பட்ட இடத்தில் பதிவுசெய்து பாருங்கள். தங்கள் வாகனம் கம்பனியினால் திருப்பி தங்களுக்கு பணம் தந்து வாங்கவேண்டிய வாகனம் என உத்தரவு வழங்கப்பட்டதா? அல்லது இல்லையா? என தெளிவாகக் காட்டும்.

உங்கள் வாகனத்திற்கான பிழைகளுக்கு, திருப்பி வாங்கிக்கொள்ளவேண்டும் என்ற உத்தரவு வழங்கப்பட்டதாக இருந்தால் நேரடியாக கம்பனிக்கு எடுத்துச் சென்று அவர்களோடு பதிவுகளை பரிசீலனை செய்து பார்த்து நிரூபித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லுங்கள்.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)




Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON



# உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

| | | | | |
|---|---|---|---|---|
| $169,000 | $364,000 | $430,000 | $499,000 | $825,000 |
| **Midland/ Mcnicoll** Office Building, Unit Has A Reception Area Wiht Four Rooms. Steps To T.T.C.Close To Everything | **Church/Delaney** Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, Great Neighbourhood.Close To Public Schools | **Jane/Major Mack** Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Lovely Detached 2 Storey! Finished From Top To Bottom | **Drummond/Keele** Detached 2-Storey, 4+1 Bedrooms, 4 Washrooms, Great Location In Maple, Strip Hardwood Floors Throughout | **Warden/Sheppard** Detached 2-Storey, 4+1 Bedrroms, 4 Washrooms, Chiavatti Built Luxury Home, Nearly 4300 Sq Ft, Minutes To 401 |
| $159,900 | $212,000 | $549,000 | $1,100,000 | $799,900 |
| **Kipling/Steeles** Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Very Clean Unit. Ceramic + Hallways And Foyer. Two Parking Spaces | **Birchmount & Ellesmere** Condo Apt, 1+1 Bedrooms, 1 Washrooms, Approx. 700 Sq.Ft. Luxurious Tridel Condo, 9Ft. Ceilings, W/O To Huge Balcony | **OwenSound** Gas Station with Daisey, 6/49 & Resuaruant | **Peterborough** Gas Station with Subway Franchise Restaurant | **Port Elgin** Gas Station, (Esso) Convenient Store + Restaurant (Leased) + Four Apartments (Leased) With Steady Income |

- digi Media -



முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald Award Winner

## சத்தி மருதப்பா

Sales Representative

**416.816.1500**

Not intended to solicit properties currently listed for sale.

மேலும் பல Gas Stationகளும் வியாபாரநிலையங்களும் விற்பனைக்குண்டு

Century 21

**Affiliate Realty Inc.,** Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: **416-290-1200,** Fax: **416-290-1900**

---

# THINKING OF BUYING OR SELLING CALL KRISH

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $285,000 | $199,000 | $209,000 | $69,900 | $249,000 | $339,000 |
| **Markham/Denison** 3 Bdrm & 2 Wrm | **Markham/Sheppard** 3 Bdrm & 2 Wrm | **Middlefield/Finch** 2+1Bdrm & 2 Wrm | **PortUnion/401** Pizza & Wings | **Yonge/Major Mac** 30 SeatsRestaurant | **Morningside/Sewells** 3+1 Bdrm & 3 Wrm |
| $399,000 | $389,000 | $84,000 | $209,000 | $249,600 | $434,900 |
| **Lawrence/Warden** 3+2 Bdm & 2 Wrm | **Steeles/Jane** 5+3 Bdm & 3 Wrm | **Jane/Sheppard** 4 Bdm& 2 Wrm | **Sheppard/Neilson** 4+1 Bdm & 2 Wrm | **Kennedy/Eglinton** 2 + 1 Bdrm & 2 Wrm | **Warden/Finch** 3+1 Bdm & 4 Wrm |

**More houses visit www.krishome.ca**

HOMELIFE HIGHER STANDARDS



New release condos in Toronto, Scarborough and Markham
The VIP Specials & Floor Plan
Call Krish For More Details..

**Krish Sivapatham** **Full Time Realtor**
**Sales Representative**

**Direct : 416-895-4457**

**HomeLife/ Future Realty Inc.,** Brokerage

205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
**Bus:905-201-9977 Fax: 905-201-9229**
**Indepently Owned and Operated, REALTOR**
**This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply**

---

**CENTUM**
**Gold Mortgages**
Looking out for your best interest

இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள் நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...

- 1st, 2nd, 3rd MORTGAGES *
- COMMERCIAL MORTGAGE *
- LINE OF CREDIT *
- POWER OF SALE *
- SELF - EMPLOYED *
- BRIDGE FINANCING *
- SWITCHING *
- REFINANCING *
- BAD CREDIT *

**All Mortgages Needs**
☎: **416- 844-8692**
supen71@hotmail.com



**Supen Subramaniam**
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply



# Shan Thayaparan

*Sales Representative*

**Dir: 416.567.7675**
**Bus: 416.321.2228**

www.shan123.com
E mail: Shan123@rogers.com

RE/MAX Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

**Scarborough**




**Largest Unit**
Well kept & Well managed Condo. No worries about reserve funds. Newly painted, Newer Floor,Newer Appliances.

**Markham**




**2800 Sqf. New Starlane Home**
Larger 4 Bedrooms, 3 Full Washrooms Upgraded Large Kitchen, Oak Staircases Formal Living and Dining & More

**Markham**




**2900Sqf. Starlane Home**
4 Bedrooms, 3 Full Washrooms, Upgraded Extra large kitchen, Hardwood main floor, Pot lights, Inviting open concept
**Call for appointment!!!**


**Brampton**




**Priced to Sell!!!**
Large 4 Bed Rooms, 2 Full Wash Rooms Steps to all schools, transit & shopping Double garage, Entrance to Garage

**Brampton**
**Wanted a House for Sale**

**Scarborough**




**You Must See to Believe it!!!**
More than 3500 sqf. 5+2 Bedrooms, Hardwood Floors throughout, Finished Basement Backing on to Ravine
**$175,000 upgrades alone!!!**

**Scarborough**




**Extra Large/Finished Bsmt**
Large 3 Bed Rooms & 3Bedrooms in the Basement. Close to Scar. Town center School 401,& TTC

**Scarborough**




**Gorgeous House& Great Location**
Large 4 Bed Rooms, Custom interior Design, Granite Counter top. Pot Lights, Looks like a model house. Upgraded cabinets
**$60,000 in upgrades.**

**Scarborough**




**$Excellent Value$**
4 Bed Rooms, with 3 full washrooms executive home on a premium lot. Upgraded cabinets Hardwood main floors.

**Scarborough**
Wanted!!! Condos in
**100 Mornelle Court for Top Dollars**

**Scarborough**




**Mattamy Built/ 4+2 Bedrooms**
4 Bed rooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close Schools, TTC & Shopping.

**Scarborough**
Wanted!!! Condos in
**180 Markham Road. for Top Dollars**

**Scarborough**




**McCown/Finch**
Full Brick Renovated Home, Large Driveway Close to TTC, Temple, Schools & Shopping 3 Bedrooms with Finished Basement

**Scarborough**
Wanted!!! Condos in
**2500 Bridle Town Cir. for Top Dollars**

**Wanted a House for Sale**

**Ajax**




**One Year Old Semi**
Very Spacious, Well Maintained House Upgraded Kitchen, Washrooms, Stainless Appliances. Close to Transit, Shopping & 401

**Daisy Mart**




**Real Money Maker**
Steady Weekly Sales $10,000. Ideal Family Business.

**Stouffville**




**Beautiful Semi.**
3 Large Bed rooms, 2 Full washrooms Upgraded Kitchen, Upgraded Washroom Stainless Appliances. Close to GO Station

**Wanted a House for Sale**

**Scarborough**
Wanted!!! Condos in
**400,410,430,480 McLevin Ane Top Dollars**

RE/MAX Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

# Viki Velauthan

*Sales Representative*

**Dir: 416.457.7162**
**Bus: 416.321.2228**

E mail: vvelauthan@yahoo.com



# தீராத சுவாசத் தடை நோய்

## (Chronic Obstructive Pulmonary Disease)



கந்தையா
பரநிருபசிங்கம்

ஒருவருக்கு தொடர்ச்சியான இருமலும் (cough), சுவாசச்சுருக்கமும் (shortness of breath) இருக்குமாயின் அவை தீராத சுவாசத்தடை நோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.

இந்நோய் நுரைஈரலின் காற்றுப் பைகள் (airsacs) பெரிதாவதாலும் (emphysema), தீராத நுரையீரற்குளாய்களின் அழர்ச்சியினாலும் (chronic bronchitis) ஏற்படுகின்றது.

ஒருவருக்கு சுவாசிப்பதில் பிரச்சினை இருந்தால் அதை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் கனேடிய நுரையீரல் சபை (Canadian Lung Association) ஒரு கேள்விக்கொத்தை உருவாக்கியுள்ளது. இவற்றில் ஒரு கேள்விக்கு அவரின் பதில் 'ஆம்' என்று இருந்தால் அவருக்கு உள்ள நோய்க்குணம் குறிகள் இந்நோய் சம்பந்தப்பட்டு இருக்கலாம்.

### இதோ அந்தக்கேள்விகள்:

- நீங்கள் வழமையாக இருமுகின்றீர்களா?
- நீங்கள் இருமும்போது வழமையாகச் சழி வருகின்றதா?
- நீங்கள் இலகுவான வேலைசெய்யும்போது கூட சுவாசக் சுருக்கத்திற்கு ஆளாகின்றீர்களா?
- நீங்கள் இரவில் அல்லது தேகசிரமத்தின் போது இழுப்புக்கு (Wheeze) உள்ளாகின்றீர்களா?
- நீங்கள் அடிக்கடி சழியுரத்திற்கு உள்ளாகி அது நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கின்றதா?

இந்நோய்க்குரிய அறிகுறிகளை ஈழநோய் (Asthma)க்குரிய அறிகுறிகளாகத் தப்புக்கணக்கு போடவும் வாய்ப்புண்டு. ஆனால் இவை இரண்டும் வெவ்வேறு வியாதிகள், நீங்கள் உங்களுக்குள்ள குணம்குறிகளுடன் வைத்தியர் ஒருவரை அணுகும்போது அவர் உங்களைப் பீடித்துள்ளது ஈழநோயா அல்லது தீராத சுவாசத் தடை நோயா என அறிந்துகொள்வார். பின் அதனை உறுதிசெய்ய உங்களை ஸ்பைறோமெற்றி (Spirometry) என்னும் சோதனைக்கு உட்படுத்துவார் அல்லது சிபாரிசுசெய்வார்.

### தீராத சுவாசத் தடை நோயை (COPD) ஈழநோயிலிருந்து பிரித்தறிய பின்வரும் வித்தியாசங்கள் உதவும்.

| | ஈழநோய் (Asthma) | தீசுதநோ (COPD) |
|---|---|---|
| தொடங்கும் வயது | 40க்குக்கு கீழ் | 40க்கு மேல் |
| புகைத்தல் சரிதம் | இது காரணம் இல்லை | 10 வருடங்களுக்கு மேல் நாளொன்றுக்கு 20சிகரெட்டுகள் |
| சழி உருவாதல் | அடிக்கடி இல்லை | அடிக்கடி |
| ஒவ்வாமை | அடிக்கடி | அடிக்கடி இல்லை |
| நோயின் போக்கு | மாறாது | தொடர்ந்து மோசமாகிச் செல்லும் |
| குணம் குறிகள் | விட்டுவிட்டும் மாறியும் இருக்கும் | தீராது தொடர்ந்திருக்கும் |

தீராத சுவாசத் தடை நோய் (COPD)யால் பாதிக்கப்பட்ட சிலருக்கு ஸ்பைறோமெற்றி (Spirometry)ச் சோதனையின் பெறுபேறுகள் அவர்களின் நோய் உக்கிரத்தை பிரதிபலிக்காது இருப்பதால் வைத்தியர் அவர்களுக்கு பரிகாரங்களை (treatments) சிபார்சு செய்யாமல் விடுவார். ஆதலால் அவர்களின் நோய்க்குணம் குறிகள் தொடர்ந்து நீடித்தால் மீண்டும் வைத்தியரை நாடி மேலும் அதே சோதனையைச் செய்துகொள்ளவேண்டும். இச்சோதனை மூலம் திட்டவட்டமாக தீராத சுவாசத் தடை நோய் இருக்கின்றது என்று கண்டுபிடித்தபின் நோயின் குணம்குறிகளின் அடைப்படையிலும், இந்நோய் எவ்வாறு அவருடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கின்றது என்ற வகையிலும் அவருக்குரிய பரிகாரம் நிர்ணயிக்கப்படும்.

இப்போழுது இந்தநோயால் பீடிக்கப்பட்டவர்களில் இந் நோயைக் கட்டுப்பாட்டிக்குள் வைத்திருப்பதற்கு என்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கவனிப்போம்.

இந்த நோய்க்கும் புகைபிடிப்பதற்கும் (Smoking) அதிக தொடர்பு இருக்கின்றபடியால், இப்பொழுது புகைபிடிப்பவர்கள் அதனை நிறுத்தவேண்டும். உடனடியாகப் புகைபிடிப்பதை நிறுத்துவது கடினமாக இருக்குமானால் படிப்படியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்நடவடிக்கைக் காலத்தில் இந்நோய்க்குரிய பரிகாரம் தொடங்கவேண்டும்.

இந்நோய்க்குரிய பரிகாரம் என்ற வகையில் மூன்று பிரதான முறைகளைக் குறிப்பிடலாம். அவையாவன:

### சுவாசக்குளாய் விரிவாக்கிகள் (Bronchodilators)

எதிர்கோலினேக்ஸ் (anticholinergics), பிற்றா–2 அகோனிஸ்ற்ஸ் (beta – 2 agonists) இருவகையான விரிவாக்கிகளாகும். இவை காற்றுவழியை (airways) திறந்து சுவாசச்சுருக்கத்தைக் குறைக்கும்.

### எதிர் அழர்ச்சிப்பதார்தங்கள் (Anti-inflamatories)

இவற்றுள் உட்சுவாசிக்கப்படும். கோட்டிக்கோஸ்ரெறொயிட்டுக்கள் (Corticosteroids) அடங்கும். இவை காற்று வழியின் அழர்ச்சியைக் குணப்படுத்தி நோயின் தீடிர்பாய்ச்சலை (Flare Up)த் தடுக்கும்.

### எதிர் உயிரிகள் (Antibiotics)

இவை பக்றீரியத் தொற்றுக்களுக்கு எதிராக போரடும்.

மேற்கூறிய மருந்து வகைகளை உபயோகிப்பதுடன் இந்நோய்க்கு மேலும் பல பரிகாரங்களைச் செய்யலாம்.

முதலாவதாக, சுவாசப் புனரமைப்பை (Respiratory Rehabilitation) எடுத்துக்கொள்வோம். இங்கு நோயளிக்கு சுவாசிதல் செய்நுணுக்கங்கள் (Breathing techniques), எவ்வாறு நன்றாக தேகப் பயிற்சிகள் செய்தல், நாளாந்த வாழ்வில் எவ்வாறு சக்தியைச் சேமிக்கலாம் என்பது போன்றவை கற்றுக் கொடுக்கப்படும்.

இரண்டாவதாக, மூச்சுப்பயிற்சிகள் (aerobics), தசைகளை வலிமையாக்கும் பயிற்சிகள் மூலம் சுவாச, இதயச் சதைகள் வலுப்பெற்று ஒரே வேலையை குறைந்து ஒட்சிசன் அளவுடன் செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்தும். அத்துடன் கூடியநேரத்திற்கு சுறுசுறுப்பாக இருப்பதுடன், நித்திரை, மனோநிலை (mood) ஆகியவற்றையும் மேம்படுத்தும்.

மேலும், உடலை விரித்தல் (Stretching), நாளாந்த நடை, சுவாசப்பயிற்ச்சிகள், ஆட்டம், நீந்துதல், யோகாசனப்பயிற்சி, முள்ளந்தண்டு நீட்டலும் - உடல் வலிமையாக்கலும் (Pilates) போன்றவையும், தீராத சுவாசத் தடை நோயைக் (COPD) கட்டுப் பாட்டில் வைத்திருக்க உதவும்.

இந்நோய் இனம்காணப்பட்டு பரிகாரம் காணப்படாதவிடத்து, நீங்கள் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி அனுபவிப்பதற்கான வலுவை இழக்கவேண்டியும், நாளாந்த வேலைகளைச் செய்ய மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டியும் வரலாம்.

இக்கட்டுரை தீராத சுவாசத் தடை நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது. எனவே இங்கு கூறப்பட்ட நோய்க்குணம்குறிகள் உங்களிடம் தென்பட்டால் வைத்தியரை நாடவேண்டும்.

**பிற்சேர்க்கை:** ஒருவருக்கு சுவாசச் சுருக்கம் ஏற்பட்டல் அது அகற்றப்படும்வரைக்கும் மூக்குக்கூடாக மெதுவாக உட்சுவாசித்து பின் விசிலடிக்கப் போறவர்போல் சொண்டுகளை வைத்துக் கொண்டு மெதுவாக வெளிச் சுவாசிக்க வேண்டும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

இணைந்து
கொள்ளுங்கள்
'தாய்வீடு'
facebookஇல்
www.facebook.com/thaiveedu



# மகப்பேற்றிற்குப் பின்னான மனச்சோர்வு

## (Post artum Depression)

கர்ப்ப காலமும் மகப்பேறும் ஒவ்வொரு பெண்ணுக்கும் உடல் ரீதியாக, உணர்வு ரீதியாக ஒரு மிக முக்கியமான காலகட்டமாக இருக்கிறது. புதிதாக குழந்தை பெற்ற பெண்கள் மனநிலையில் திடீர் திடீரென மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. மகிழ்ச்சியாக இருக்கும் ஒரு பெண், எதிர்பாராமல் ஓர் திடீர் மனச்சோர்விற்கு உள்ளாவதாக உணரலாம்.

மகப்பேற்றுக்கு பின்னால் வரும் மனநிலை மாற்றங்கள் பொதுவாக குழந்தை பிறந்து 10 நாட்களுக்குள் மறைந்துவிடும். கர்ப்பம் தரிந்திருக்கும் மற்றும் பிரசவம் நடைபெற்ற பெண்களில் கிட்டத்தட்ட 50% ஆனவர்களுக்கு இப்படியான அறிகுறிகள் இருக்கலாம். இது நாளடைவில் சரியாகிவிடக்கூடிய விடயமாக இருக்கலாம். ஆனால் இப்படியான உணர்வு நிலை இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால், மனச்சோர்வு அதிகமாகி உங்கள் நாளாந்த நடவடிக்கைகளை கவனிக்க முடியாமல் போனால், குழந்தையை சரிவர பராமரிக்க முடியாமல் இருந்தால், நீங்கள் இது தானாக மறைந்துவிடும் என்று கவனக்குறைவாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில், இது Post Partum Depression (PPD) ஆக இருக்கலாம்.

3% இருந்து 20% வரையான தாய்மாருக்கு PPD ஏற்படலாம் என கணிப்பீடுகள் சொல்கின்றன. இந்த மகப்பேற்றுக்கு பின்னான மனச்சோர்வுள்ள பெண்கள் இலகுவாக அழுவார்கள். குற்ற உணர்வு, பதட்டம், எரிச்சல் மற்றும் களைப்பான உணர்வு இருக்கலாம். தலைவலி, நெஞ்சு நோ, மூச்சுவாங்குதல் போன்ற உடல் சார்ந்த அறிகுறிகளும் தோன்றலாம்.

இப்படியான உணர்வு நிலையை பெண்கள் மற்றவர்களிடம் வெளிப்படுத்த தயங்கலாம். வெட்கம், குற்ற உணர்வு, மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்தில் இப்படி விசனப் பட்டால் நல்ல தாய் என்று மற்றவர்கள் மதிக்கமாட்டார்களோ என்ற பயம் - இவை எல்லாம் பெண்களுக்கு வாய்ப்பூட்டு போட்டு விடுகிறது. பெண்களுக்கு குற்ற உணர்வு என்பது கூடப்பிறந்த ஒரு குணமாகப் போய் விட்டதா? எந்தப் பெண்ணுக்கும் இப்படியான மனச்சோர்வு தோன்றலாம். நீங்களும் உங்கள் குழந்தையும் தனியே தவிக்கத் தேவையில்லை. துறைசார் உதவி பெற்றால் நிச்சயம் மாற்றம் ஏற்படும்.

கர்ப்பம் அடைந்த பெண்ணாக அல்லது பிரசவம் முடிந்த பெண்ணாக இருப்பின் ஓய்வு முக்கியம். குழந்தை நித்திரை செய்யும் போது நீங்களும் நித்திரைக்குச் செல்லுங்கள். அதிக வேலையை இழுத்துப் போட்டு செய்யாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். மற்றவர்களிடம் உதவி கேளுங்கள். வெளியே சென்று நண் பர்களை சந்தியுங்கள். உங்கள் உணர்வு நிலையை குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களைப்போன்று தாயாகி இருக்கும் மற்றப் பெண்களை தொடர்பு கொண்டு அவர்கள் அனுபவங்களை கேளுங்கள். வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை (உதாரணமாக வீடு மாறுவது) இந்த நேரத்தில் செய்வதை தள்ளிப் போடுங்கள். தடுக்க முடியாத மாற்றங்கள் ஏற்படும் எனில், உங்களுக்குத் தேவையான ஆதரவையும் உதவியையும் பெற முயற்சி செய்யுங்கள்.

இணைந்து கொள்ளுங்கள்

'தாய்வீடு'

facebookஇல்

www.facebook.com/thaiveedu

உங்கள் நாளாந்த வாழ்க்கையை உற்சாக-மானதாக்க, எத்தனையோ செலவு குறைவான விடயங்களை நீங்கள் செய்யலாம். வெளியில் நடக்க செல்லலாம். அருகில் இருக்கும் Public Libraryக்கோ Community centerக்கோ செல்லலாம். தொலைபேசியில் ஒரு நண்ப-ருடன் உரையாடலாம். உங்கள் குடும்ப உறுப்பினருக்கோ நண்பருக்கோ PPD இருப்-பதாக நீங்கள் நினைத்தால் உங்கள் ஆத-ரவை அவர்களுக்கு கொடுத்து நம்பிக்கை ஊட்டுங்கள். அவர்களுக்கு இந்நிலை தொடர்-பான தகவல்களை கொடுத்து அவர்களுக்கு உதவி கிடைக்க நீங்கள் முயற்சி செய்யலாம். அவர்கள் தனிமையை அகற்றுவது ஒரு பிரதான படியாகும்.

PPD ஒரு காரணம் சார்ந்து வருவதில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

> "மகப்பேற்றுக்கு பின்னால் ஏற்படும் சாதாரணமான மனச்சோர்வு நிலை மாற்றங்களும் அறிகுறிகளும் சில நாட்கள், வாரங்களுக்குத்தான் நீடிக்கும். இதற்கு சிகிச்சை எதுவும் தேவைப்படாது. அதுவே பலநாட்கள், வாரங்கள் என நீடித்து அதிகரித்துக் கொண்டு வந்தால் நிச்சயம் துறைசார் உதவி பெற்ப்படல் வேண்டும்."

மகப்பேறு சார்ந்து ஏற்படும் ஹோர்மோன் மாற்றங்கள் ஒரு காரணம். பிள்ளைப்பேறு, குழந்தை சார்ந்த ஒரு தாயின் எதிர்பார்ப்பு, யதார்த்தத்துடன் மாறுபடும் போதும் மனச்சோர்வை கொண்டு வரலாம். ஆய்வு ரீதியாக கண்டுபிடித்திருக்கும் ஒரு விடயம் என்னவென்றால் கர்ப்பம் தரிக்கும் முன்னே மனச் சோர்வுக்கு உள்ளான பெண்கள் மீண்டும் PPDஆல் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். முன்கூட்டியே துறைசார் நிபுணர்களிடம் இது பற்றி கதைத்து தக்க சிகிச்சையளிக்க தயாராவது அவசியம். ஒருமுறை இந்த மகப்பேறு சார்ந்த மனச்சோர்வுக்கு உள்ளான பெண்களில் 10% இருந்து 35% வரையானவர்களுக்கு மீண்டும் இந்த மனச் சோர்வு வர வாய்ப்பு உள்ளது. கர்ப்பம் தரிப்பது சார்ந்த பிரச்சினைகள் உள்ள பெண்களுக்கும், இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட கருக்கலைப்பு நடைபெற்ற பெண்களுக்கும் இந்த மனச்சோர்வு ஏற்படும் வாய்ப்புகள் அப்படி நடைபெறாதவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கூடுதலாக இருக்கலாம். மாதவிடாய் காலங்களில் அதிகம் கஷ்டப்படுகிற பெண்கள், சிக்கலான மணவாழ்வு, உதவியும் ஆதரவும் இன்மை, கர்ப்ப காலத்திலோ மகப்பேற்றிற்குப் பின்னோ இடம்பெறும் கஷ்டமான நிகழ்வுகள் இவை கூட PPD ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும்.

பாகிஸ்தானின் கராச்சி (Karachi) நகரத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டது என்னவெனில், குடும்ப வன்முறை மற்றும் பாலூட்டுதலில் கஷ்டம் இருக்கும் பெண்கள், மற்றும் கர்ப்பம் அடைதல் சார்ந்து தானாக தீர்மானம் எடுக்கும் உரிமை இல்லாத பெண்கள், கூடுதலாக மகப்பேறுக்கு பின்னான மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள் என்பதுதான். மனச்சோர்வு மட்டுமன்றி இப்படியான தாய்மாருக்கு பதட்டநிலையும் இருக்கிறது. சீனா மற்றும் தாய்வான் நாட்டு பெண்கள் மத்தியில் நடைபெற்ற ஒரு ஆய்வில், மகப்பேற்றின் பின் மாமியார் கொடுக்கும் அழுத்தம், ஆண் குழந்தை பெற முடியாமல் போனது, மற்றும் தாம்பத்திய வாழ்வில் நிம்மதி இன்மை போன்ற காரணங்கள் PPD உடன் தொடர்புபட்டு இருக்க கண்டுபிடிக்கப்பட்டது.

PPDக்குரிய உண்மையான காரணம் அல்லது காரணங்கள் ஆய்வுரீதியாக இன்னும் திட்டவட்டமாக கண்டு பிடிக்கப்படாவிட்டாலும் கூட, சரியான பாதையில் தான் ஆய்வுகள் முன்னேறிக் கொண்டு இருக்கின்றன. புலம் பெயர்ந்து வாழும் எம் தமிழ் சமூகத்தைச் சார்ந்த பெண்களை எடுத்துக் கொண்டாலும், தாய் நாட்டில் இருந்த அரவணைப்பும் ஆதரவும் சுற்றத்தையும் சூழலையும் விட்டு வந்திருக்கும், இங்கிருக்கும் பெண்களுக்கு இருப்பதில்லை. உங்களுக்கு இயலும் என்ற எல்லையை மீறி அதிக அளவில் வேலைகளும் பொறுப்புக்களும் செல்லும்போது அதனை stress என்பார்கள். அப்படியான நிலைக்குள் தங்களை கொண்டு செல்லாமல் கர்ப்பம் தரித்திருக்கும் மற்றும் குழந்தை பெற்ற பெண்கள், உடலுக்கும் மனதுக்கும் இடையிடையே ஓய்வு கொடுக்க வேண்டும். குடும்ப உறவுகளில் குழப்பங்கள் இருந்தாலும், மனச்சோர்வு ஏற்பட வாய்ப்பு அதிகம். மகப்பேறுக்குப் பின்னான பதட்டமும் மனச்சோர்வும் உங்கள் குழந்தையின் ஆரோக்கியமான உளவிருத்தியை பாதிக்கக் கூடும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

மகப்பேற்றுக்கு பின்னால் ஏற்படும் சாதாரணமான உணர்வு நிலை மாற்றங்களும் அறிகுறிகளும் சில நாட்கள், வாரங்களுக்குத்தான் நீடிக்கும் என்று அறிந்து கொண்டோம். இதற்கு சிகிச்சை எதுவும் தேவைப்படாது. அதுவே பலநாட்கள், வாரங்கள் என நீடித்து அதிகரித்துக் கொண்டு வந்தால் அது மனச்சோர்வுக்கான அறிகுறி. 20% வரையிலான பெண்களுக்கு இது ஏற்படலாம். மகப்பேற்றிற்கு பல மாதங்களின் பின் கூட இது ஏற்படலாம். உங்கள் நாளாந்த வேலைகளை கவனிக்க முடியாமல், உங்களையும் உங்கள் குழந்தையையும் சரிவர பராமரிக்க முடியாமல் போனால், உதவி உங்களுக்கு நிச்சயம் தேவை. உங்களுக்கோ, உங்கள் குழந்தைக்கோ ஆபத்து விளைவிக்கும் எண்ணங்களும் உங்களுக்கு தோன்றலாம்.

Post Partum Psychosis, அதாவது யதார்த்த பிறழ்வுடன் கூடிய அறிகுறிகள் சில பெண்களில் ஏற்படலாம். இது 1,000 மகப்பேறுகள் நடைபெறுகின்றதென்றால் அதில் 2-4 வரையிலான மகப்பேறுகளில் ஏற்படலாம் என


புஸ்பா கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -

புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது இப்படியான நோய்நிலை மிகவும் குறைவாகவே பெண்களுக்கு ஏற்படுகிறது. இது சாதாரணமாக மகப்பேற்றின் பின்னான இரண்டு வாரங்களுக்குள் தோன்ற ஆரம்பிக்கலாம். மகப்பேற்றின் / கர்ப்பகாலத்தின் முன்னமே யதார்த்த பிறழ்வுடன் கூடிய நோய்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் இப்படியான Psychosisஇனால் மீண்டும் பாதிக்கப்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன. இந்த நிலையின் காரணமாக மனக்குழப்பம், திடுதிப்பென மாறும் உணர்வு நிலை, இல்லாத விடயங்களை பார்ப்பதும் - மற்றவர்களுக்கு கேட்காத விடயங்களை கேட்பதும் போன்ற அறிகுறிகள் (யதார்த்த பிறழ்வு), மற்றும் குழந்தைக்கோ தனக்கோ அபாயம் விளைவிக்க எத்தனிக்கும் அறிகுறிகள் அதிகமாக இருக்கும்.

துறைசார் சிகிச்சை என பார்க்கும் போது, உளவியல் சிகிச்சை (Psychological treatment), உளவளத்துணை (counseling), மருத்துவ சிகிச்சை என்பன வழங்கப்படுகின்றன. மருத்துவ சிகிச்சையுடன் உளநல சிகிச்சையையும் இணைத்து பெறுவது கூடுதலான பலனை கொடுக்கும். பாலூட்டும் பெண்கள் குழந்தைக்கு தீங்கு ஏற்படாதபடி மருந்துகள் உட் கொள்வது பற்றி தங்கள் குடும்ப வைத்தியர் அல்லது உளநல மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம். மனச்சோர்வின் முழுமையான காரணம் புற நிகழ்வுகளாக இருப்பின் (குடும்ப வன்முறை, தனிமை போன்ற உதாரணங்கள்), புறக்காரணிகளின் தாக்கத்தை உணர்ந்து மாற்றங்களை ஏற்படுத்த உளநல சிகிச்சை / உளவளத்துணை முக்கியமாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களையும் இதில் ஈடுபடுத்தலாம்.

ஒட்டுமொத்தமாக பார்க்கப்போனல் மகப்பேற்றுக்குப் பின்னான மனச்சேர்வின் காரணங்கள் பலதரப்பட்டதாக இருக்கின்றன. அதில் நிச்சயமாக இன்னும் அறிந்து கொள்ள பல ஆய்வுகள் தேவைப்படலாம். PPD என நாம் அழைப்பதால் அது நம்மை பல தவறான அனுமானங்களுக்கு இட்டுச் செல்வதாக அண்மைக்கால கருத்துகள் தெரிவிக்கின்றன. மகப்பேறு சார்ந்து தான் இந்த மனச்சோர்வு வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்கள். ஏனெனில் 40% பெண்களுக்கு கற்ப காலத்திலும் இந்த மனச்சோர்வு ஏற்படுகிறது. அது மட்டும் அல்லாமல் ஆண்கள் கூட மகப்பேறு காலத்தில் இப்படியான தாக்கங்களுக்கு உள்ளாகின்றார்கள். அதனால் மகப்பேறு சார்ந்த ஹோமோன்களால் தான் PPD உண்டாகின்றது என்பதற்கு போதிய விஞ்ஞான ரீதியான அடிப்படை இல்லை என்பது இக்கருத்து. அதனால் தாயான காரணத்தால் மனச்சோர்வு ஏற்பட்டிருக்கின்றது என்பதை விட தாயாகும் போது ஏற்கனவே இருக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள் மேலும் துல்லியமாக வெளிவருவதால் PPD ஏற்படலாம். உதாரணமாக தம்பதிகளுக்கு இடையில் இருக்கும் உறவுச்சிக்கல்கள் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கும் போது மேலும் வெளிப்படையாக்கப்படலாம். அடிப்படையில் PPDயில் ஏற்படும் மனச்சோர்வும் வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் மனச்சோர்வும் அறிகுறிகள் சார்ந்து பார்க்கையில் ஒரே மாதிரித்தான் இருக்கின்றது. எது எப்படி இருப்பினும், தாங்கள் செய்த பிழைகளால் தான் பெண்கள் இப்படியான மனச்சோர்விற்கு ஆளாகுகிறார்கள் என்ற எண்ணம் தவறு என்பதை பெண்களுக்கு உணர்த்துவது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

Pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■


# HomeLife/Future Realty Inc., Brokerage*




RAJ NADARAJAH
Sales Representative

வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு

**Direct: 416-333-6115**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

**Markham & Brimorton**

For Rent
- 3 Bed Rooms
- 2 Wash Rooms
- 2 Kitchens
- Separate Entrance

**Brimley & Ellesmere**

For Rent
- 9 Bed Rooms
- 3 Wash Rooms
- 3 Kitchens
- Separate Entrance

**Victoria Park & Finch**

$399,900
- 4 Bed Rooms
- 4 Wash Rooms
- 2 Kitchens

Finished BSMT with 1 BD Room

**7428 Markham Rd**

$274,900
- 3 Bed Rooms
- 2 Wash Rooms

**Markham & Lawrence**

$389,900
- 3+2 Bed Rooms
- 2 Wash Rooms
- 2 Kitchens
- Separate Entrance

**Markham & 16th Avenue**

$449,000
- 4 Bed Rooms
- 3 Wash Rooms

**Downtown Condo**

X2 & ICE2 & With More VIP Price Condos
Call NOW

**Scarborough Condo**

Starting Price
$147,800
For Sale or Rent
Call NOW

**Markham Condo**

Starting Price
$189,000
For Sale or Rent
Call NOW

**Buying/Selling Your Home ?**

**Call Now!**
Lets Talk!

**Direct: 416-333-6115**

16 YEARS ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற **NaNo Computer** ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்



Century 21
King's Quay Real Estate Inc. Brokerage
Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

For All Your Real Estate Needs
**HomeExpertTeam.com**
**416-496-2625**

***Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.***
*Knowledge + Experience + Team work = Result*



**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

***Flexible & competitive commission!***



**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)



**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)



**JUGA SUREES ***



**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker

உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**
Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு உதவக்காத்திருக்கின்றோம்
நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !





Plant Your Seed for a Great Investment Return
*Special V.I.P. Brokerage price*
**Price Starting mid $300,000**

# THIS IS YOUR FANTASY
# ONE BLOOR



One Bloor will rise to 65 storeys. Interiors designed by Cecconi Simone. Two amenity floors on the 6th and 7th floor offer one of a kind amenities, including a large spa area with three treatment rooms, plus separate his and hers cold plunge, hot plunge, jet massage, experience showers, Laconium and Tepidarium steam suites... Much Much more included.

Call us today to reserve your units !!!

# ஆடாத ஆட்டமெல்லாம்...



திரு மகேசன்

கடந்த சில நாட்களாக மனமே உடைந்த நிலை. எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது. எதைப் பேசுவது எதைப் பேசாமலிருப்பது எதை எழுதுவது எதை எழுதாமல் விடுவது. மொத்தத்தில் எல்லாவற்றையுமே போட்டு மூடிக்கட்டி வைத்துவிட்டு பொத்தாம் பொதுவாக எதையாவது எழுதி விடுவதா? அதை எழுதினால் இவர்கள் குளம்புவார்கள் இதைச் பேசினால் அவர்கள் தடுமாறுவார்கள் இப்படி "முகத்துக்கு அஞ்சி ஏதோ ஆடியதாக" மக்கள் சொல்லும் ஒரு மரபு இருக்கிறதே அப்படி ஒரு ஆட்டம் ஆடுவதா?

எதைக் கண்டாலும் நமக்கு ஒரு பயம். மற்றவர்கள் இப்படிச் சொல்வார்கள் எப்படிச் சொல்வார்கள் என்றே வாழ்ந்து மொத்தத்தில் அழிந்து போனவர்கள். நாங்கள் நியாயத்தை சொல்ல, உண்மையை சொல்ல ஏன் இரத்தக் கொதிப்பு மற்றவர்களுக்கு வரவேண்டும். சரி விட்டுவிடுவோம், ஏதோ உண்மையைத் தானே சொல்லுகின்றனே என்று ஏற்றுக் கொள்ளும் மனப்பக்கமும் ஏன் இன்னமும் எங்களுக்கு வரவில்லை. நீ திருடன் என்றால், திருடியவனுக்கு உண்மையாக தான் திருடன் தான் என்பதில் சந்தேகமாக இருக்காது. ஆனால் மானப்பிரச்சினை என்று ஒன்றால் சாமியாடி, பத்தாயிரம் சத்தியங்கள் செய்து, தான் திருடன் இல்லை என்பதை நிரூபிக்க படுகிறபாடு இருக்கிறதே அப்பப்பா.

காட்சியைவிட பேச்சே அதிகம் ஈர்ப்பு கொள்கிறது. சத்தம் இல்லாத எதுவும் ஏன் கவனிக்கப்படாமலே போகின்றன. கண்களை மூடிச் சில நிமிடங்கள் அமைதியாக இருங்கள் என்றால் "நான் என்ன சாமியாரா? சாமியாரின் விளையாட்டுகள் தெரியாதா?" என்றே பதில் வருகிறது. எதைச் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஏன் நமக்கு இன்னமும் வரவில்லை. நன்மை செய்பவனையே ஏறி இருந்து குத்திக் கிழித்து இரண களமாக்கி துன்பக் கடலில் வீழ்த்தி சந்தோசப்பட்டே பழக்கப்பட்டுவிட்டது நமக்கு.

சில நிமிடங்கள் கூட நிசப்பதமாக இருக்க நாம் அச்சம் கொள்கின்றோம். எங்காவது சத்தம் இல்லாத இடமாக இருந்தால் அங்கே போகவே பயப்படுகின்றோம். இயற்கையான சூழலில் தங்கும்போது கூட தண்ணியடித்து விட்டுத்தான் தூங்கப் போகின்றர்கள். இரவில் காற்றின் ஒசை தவிர சத்தமே இருப்பது இல்லை. பேச்சுத் துணைக்கு ஆள் தேடுகின்றோம். அந்தப் பேச்சுத் துணையோடு பேசி சண்டித்தனத்தில் முடிகின்றது.

மலைகள் நம் குரலைத்தான் எதிரொலிக்கின்றன. தனது குரலை வெளிப்படுத்துவதே இல்லை பல நூறு வருடங்கள் தழைத்து வளர்ந்த மரம் தன் இருப்பிடத்தை கத்திக் காட்டிக் கொள்வதே இல்லை. காற்றின் அசைவையே அது குரலாக்கிறது. நமக்கு மட்டும் ஏன் இவ்வளவு சத்தம், கூச்சல், தடித்த வார்த்தைகள், வாய்ச்சண்டைகள், ஆர்ப்பாட்டமான ஆடம்பரமான பேச்சுகள்.

நமக்குள் இல்லாத ஒன்றை மறைப்பதற்காக நம்மிடம் இது இருக்கிறது என்று போலித்தனமாக காட்டிக் கொள்வதற்காக வேசம் கட்டி ஆடுகின்றோம் எதற்கா? நம்மிடம் இல்லை என்றால் இல்லைத்தான் இருக்கிறது என்றால் இருக்கிறது தான். இல்லாத ஒன்றை இருப்பதாக நியாயப்படுத்த நாம் போடும் கூச்சல் இருக்கிறதே தப்பப்பா நாடு தாங்காது.

அது ஏன் நீங்கள் இவர்தானே? இவருக்கு உறவினர் தானே? என்றால் நமக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது. ஏதும் இல்லாத உங்கள் உறவினரைப்பற்றி நாம் கேட்கும் போது ஏன் அவர்களை மனிதர்களாக மதிக்காது கத்தித் தொலைக்கிறீர்கள். ஆனால் அடிமட்டத்தில் ஊரில் கஷ்டத்தில் வாழும் உங்கள் உறவினர் ஒருவரை இவர் என் உறவினன் என்று சுட்டிக் காட்ட ஏன் மனம் மறுக்கிறது. வாழ்ந்த வாழ்க்கையை மறந்து மறைத்து 'ROYAL FAMILY' என்று சத்தம் போட்டு உங்கள் குறைகளை நீங்களே ஒளித்து மறக்க முயல்வது வெட்கக் கேடான செயல்.

இப்படித்தான் வாழ்ந்தோம் இப்படித்தான் வளர்ந்தோம் என்று அமைதியாக சொன்னால் காது கொடுத்துக் கேட்க யாருமே இல்லையா? இருக்கிறார்கள் ஆனால் நாம் தான் கத்திக் கூப்பாடு போட்டு "என்னை என்னவென்று நினைத்தீர்கள். "எங்கள் குடும்பம் என்ன படிப்பு என்ன" என்று எங்கள் குடும்பத்தினருக்கும் படித்த உயர்ந்த ஸ்தானத்திலிருக்கும் மற்றவர்களைக் காட்டியே வயிற்றுப் பிழைப்பு நடத்தும் நிலையில் வாழுகின்றோம்.

நாம் விரும்பும் அமைதி நமக்குக் கிடைக்காமல் போவது ஒரு பக்கம் இருக்கட்டும். யாரும் கவனிக்க மறந்து தம்மைத் தாமே நிசப்தத்தில் புதைத்துக் கொண்டு வாழ்பவர் கள் வேறு ஒரு பக்கம் கூடிக் கொண்டே போகின்றார்கள். எத்தனையே வயதானவர்கள் தமது பேச்சுக்கு இப்போது மதிப்பு இல்லை என்று வாயைக் கட்டிக் கொண்டு மௌனியாகி விட்டார்கள். இவர்கள் தங்களுக்குள் தாங்கள் பேசிக் கொள்வது கூட இல்லை. அதிலும் புகழின் உச்சியில் வாழ்ந்து ஊரறிய பேரறிய வாழ்ந்தவர்கள் நம்மில் புதிதாக சத்தம் போட்டுத் திரியும் "Royal Family" கதை காரர்களால் தம்மீதான உண்மையான ஈர்ப்பு புறக்கனிக்கப்படும் போது வலியோடு தங்களை நிசப்தத்துக்குள் புதைத்துக் கொண்டுவிடுகின்றார்கள்.

எப்போதுமோ பேச்சைப் புரிந்து கொள்வதை விட அமைதியைப் புரிந்து கொள்வது கடினம். அமைதி ஓர் வெளிச்சம். அது நமக்கு வழி காட்டுகிறது. எதற்காக காட்டுக் கத்தல், கூச்சல் எல்லாம் நிசப்தமான அமைதியான வாழ்க்கை வாழத் தெரியாதவர்களா நாங்கள்.

சில பேர் வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கின்றார்கள். சில பேர் வாழ்க்கையை வேடிக்கை பார்க்கின்றார்கள். இன்னும் சில பேர் வாழ்வதாகக் சொல்கின்றர்கள். ஆனால் எல்லோரையும் கடந்து செல்கிறது வாழ்க்கை என்னும் மகாநதி. உண்மையிலே வாழ்க்கை என்பது நம் கண் முன்னேயே கரைந்து போகின்றது.

மிக உயரமான கோபுரங்கள் இரண்டு நடுவில் கயிற்றை கட்டி கையில் கம்பைப் பிடித்தபடி நடக்கும் யாரையாவது நிச்சயம் நீங்கள் பார்திருப்பீர்கள். நம்மால் நிலத்தில் நடப்பதே பெரிய காரியம். இதில் எத்தனை இடறல்கள். தண்ணியடித்தால் அது இன்னமும் மோசமாகிபோகும். கயிற்றில் நடப்பவர்கள் எப்போதுமே பின்னால் பார்ப்பது இல்லை. அதே போல் நடுக்கயிற்றில் வந்த போதும் அவர்களிடம் தயக்கம் இல்லை. அவர்கள் கயிற்றை ஒரு வீதி போலப் பாவிக்கின்றார்கள். அதில் அவன் தனியே நடக்கின்றான். அவனை நடத்துவது வயிற்றுப் பசியும், நம்பிக்கையுமே. உண்மையில் கயிற்றில் நடப்பவர்கள் நாங்கள். தான் நமது அலுவலகம், குடும்பம், உறவு யாவும் கண்ணுக்கு தெரியாத இரண்டு கயிற்று நுனிகளல்தான் கட்டப்பட்டு இருக்கின்றன. அதில் இருந்து நழுவி விழுந்தால் என்ன ஆவோம் என்ற பயம் நமக்கு இருக்கின்றது. நமது பிரச்சினை நடுக் கயிற்றில் நின்று முன்னே போவதா பின்னே போவதா என்று நடுங்குகின்றோம்.

இந்த தடுமாற்றம் இல்லாத மனிதர்களே நம்மில் இருக்கிறர்களே என்று எண்ணாதீர்கள். இந்த தடுமாற்றத்தில்தான் நாம் வாழ்கின்றோம். எவ்வளவு உயர் பதவியில் இருந்தாலும் எவ்வளவு செல்வம் சேர்ந்து இருந்தாலும் அறிவாளியாக உலகமே தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடினாலும் நம்முன் இருக்கும் ஊசலாட்டம் முன்னால் போவதா பின்னால் போவதா? அந்த நடுக்கத்தில் நமக்குள் நம் இயக்கமே நின்றுவிடுவது போல் பயம் பீடித்துக் கொள்கிறது.

இந்த தடுமாற்றத்தில் நமது கால்கள் முன்னால் போவதா அல்லது பின்னால் போவதா என்று முயற்சிக்கின்றன. தடுமாற்றத்தில் நடுக்கம் வருகிறது. விழுந்துவிடுவோமோ என்ற பயம் மனதில் வருகின்றது. நிதானம் தடுமாறுகிறது. கூச்சல் போடத் தொடங்குகின்றோம்.

"எங்கட Family Back Round உங்களுக்கு தெரியாது"
"நாங்கள் ஊரில் பெரிய ஆட்கள்"
"நாங்கள் GM Vehicle பவிக்கிறேல்லை. BMW தான்"

இப்படிக் கூச்சல் தொடங்குகிறது. நிசப்தம் கலைகிறது. நம்மால் முன்னுக்குப் போக முடியவில்லையே என்று மனம் குழப்பத்தில் இருக்கும் போது வாயில் வந்ததை எல்லாம் பிதற்றத் தொடங்கி விடுகின்றோம். நிசப்தத்தை கலைப்பவர்களே நாங்கள்தான். நடுக்கத்தில் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி அட்டகாசம் போட்டு நமக்குள் அமைதியைக் குலைத்து வாழ்க்கையை சிதைத்து வாழும் வாழ்க்கை வாழ்க்கையா?
எல்லாவற்றையும் தொலைத்துவிட்டும் நிசப்தமாக நமக்கு ஓர் வாழ்வு வரும் என்று கனவுக் கோட்டையோடு நம் மண்ணில் வாழும் நமது உறவுகளைவிட நாம் கீழே போய்விட்டோமா? இவ்வளவு இழப்புகளுக்கு மத்தியிலும் கோடை விடுமுறைக்கு போகப் போகும் எங்களை எப்படி கட்டி அணைத்து உறவு சொல்லி அழைத்து அரவணைக்க இந்த இழப்புகளுக்கு மத்தியிலும் தயாராக இருக்கிறர்களே, அவர்களை விடவா நாம் இழந்தவை அதிகம். இவ்வளவு இழப்புகளுக்கு மத்தியிலும் அவர்களிடம் இருக்கும் நிசப்தமும், அமைதியும் நம்மிடையே ஏன் இல்லை.

நாம் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது. கோடை விடுமுறைக்கு போகும் போதாவது அவர்களிடம் நாம் நிறையவே கற்றுவர வேண்டும்.

வானத்தை பார்த்து ஆண்டவனே! இங்கேயிருந்து போய் அங்கே கூச்சல் போட்டு நம்மவர்கள் அவர்களின் நிசப்தத்தையும், நிம்மதியையும் கெடுத்துவிடாமல் இருக்க அந்த அப்பாவி மக்களுக்காக இனியாவது பாதுகாப்பாய் இரு என்று பிரார்த்திப்போம்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■




ALL YOUR FINANCIAL NEEDS



**V.S. Thurairajah**
President, Commissioner of Oaths

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
*Serving You, For Your Secure Future*

**416-548-7300 / 647-829-4044**
2100 Ellesmere Road, Unit 105,
Scarborough, ON. M1H 3B7
@ Markham & Ellesmere (North West Corner)

ALL YOUR MORTGAGE NEEDS

RBC
Royal Bank

**Logi Thurairajah**
Mobile Mortgage Specialist

**Royal Bank of Canada**
1761 Victoria Street East,
Whitby, ON L1N 9W4
logi.thurairajah@rbc.com

Cell : 416-278-2972
Fax : 416-548-7865


$89,000
Neilson & Sewells


$94,500
Neilson & Tapscott


$114,900
Midland & Eglinton


$115,000
Midland & Lawrence


$119,900
Neilson & Mclevin


$174,900
Neilson & Sheppard


$204,900
Kennedy & Eglinton


$245,000
Meadowale & Sheppard


$199,900
Neilson & Tapscott


$273,000
Kennedy & Ellesmere



$299,900 incld parking
Church/Carlton



$309,000 incld parking
Lakeshore/Spadina


$374,900
Markham Rd/ 407/hwy 7


$379,000
16th ave/9th line E


$409,900
Markham Rd/ Denison




westvillage

Book your Units at Pre-Construction Price

$3000 முதல் 5000 வரை தள்ளுபடி பெறுங்கள்

HomeLife / GTA Realty Inc.
Brokerage
416 321 6969

HOMELIFE HIGHER STANDARDS
Your Best Way Home

அழையுங்கள்
**Kathir**
**416 856 6900**
**S Kathirgamanathan P. Eng.**
**Sales Representative**





# இலங்கையிலும் கனடாவிலும் தச்சுவேலையில் பல வருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால்

- **Basement**
  Complete Basement
  Separate Entrance Cutting
  Window Cutting
- **Kitchen**
  Custom Kitchen Cabinets
  Kitchen Modification
  Kitchen Backflash
  Counter tops Granite and Wood
- **Bathroom**
  Custom Bath Cabinets
  Bathroom Modification
  Counter Tops Granite and Wood
- **Floor**
  Hardwood Flooring
  Laminate Flooring
  Vinyl Tiles
  Ceramic Tiling
  Carpet
  Stairs
- **Wall and Ceiling**
  Painting
  Crown Mouldings Work
  Ceiling and Stucco Work
- **Back Yard**
  Custom Deck with Design
  Fence Work
  Storage
- **Repairs**
  Plumbing Repairs
  Basement Repairs
  Kitchen Cabinet Repairs
  Bathroom Repairs
  Floor Sanding and Polishing
  Door and Window
  Replacement & Repair
  Kitchen and Washroom Fan
  (Exhaust) Changing
  Washing Machine and
  Dishwasher Fixing




6 Months or 1 Year
No Payment
No Interest
some conditions may apply

Arul
RENOVATION
*Expert in Sri Lankan & Canadian Carpentry*

5200 Finch Ave. East, Unit 304,
Toronto, ON. M1S 4Z5
Tel : 416-728-2222/416-268-2993

*Quality • Commitment • Satisfaction*

# கேரள மக்களின் வாழ்க்கையும் இந்தியப் பொருளாதாரமும்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

எந்த ஆலோசகர்களிடமும் ஆலோசனை கேட்டால் அவர்கள் குறிப்பாக உங்களிடம் என்ன இருக்கிறது என்பதைவிட அதை எப்படிப் பாவிப்பது என்பது முக்கியமானது என்று கூறுவார்கள். இந்த முக்கியமான ஆலோசனை பொருளாதாரத்திறகும் பொருந்தும். அரசியல்வாதிகளும் பொருளியல் நிபுணர்களும் அண்மைக்கால புள்ளிவிபரங்களைப்பற்றி பேசிக்கொண்டு பொருளாதாரத்தின் ஏற்ற இறக்கங்களை ஆய்வு செய்து கொண்டு இருப்பார்கள். ஆனால் உண்மையில் பெரிய படத்தைப் பார்க்கும் போது சில சின்ன விபரங்கள் மறைக்கப்பட்டு விடும். அப்படியானால் பெரிய படத்தைப்பற்றிப் பேசி என்ன பிரயோசனம்?

இதற்கு உதாரணமாக கேரள மக்களின் பொருளாதார சமுதாயப் பரிசோதனையைப் பார்க்கலாம். தமிழகதத்திற்கு ஒரு முதல்வரையும் பத்மினி முதலாக பல ‘சொப்பன அழகி’களை தமிழ் சினிமாவிற்குத் தந்த கேரளாவில் கனடிய சனத்தொகைக்கு சமானமான மக்கள், கனடிய மாகாணமான நோவா ஸ்கோசியா அளவிலான நிலப்பரப்பில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். ஆனால் உண்மையில் நாங்கள் இங்கு பார்க்க வேண்டியது இந்த நெருக்கடிக்குள் மிகுதி இந்தியாவே பொறாமைப்படும் வகையில் எவ்வாறு கேரளா இந்தியாவிலேயே சிறந்த கல்வித் தராதரத்தையும் சுகாதாரத் தரத்தையும் அடைந்தது என்பதே.

இந்தியாவிலேயே மிக கூடிய விகிதாசாரமானவர்கள் எழுதப்படிக்கக் கூடியவர்களாக இருப்பது கேரளாவில்தான். எங்கடையாக்கள் என்னதான் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றியவர்கள் என்று பீற்றிக் கொண்டாலும் இந்த விடயத்தில் கேரளாவிற்குப் பின்னுக்குத்தான். குழந்தைகள் மரணமடையும் விகிதாசாரமும் கேரளாவில்தான் குறைவு. எல்லோருக்கும் அடிப்படைக் கல்வியும், பெண்களுக்கு பொருளாதாரத்தில் பங்கு பற்றும் சந்தர்ப்பமும் இருப்பதால் பிறப்பு விகிதாசாரம்கூட இந்தியாவின் மற்றைய பகுதிகளைவிட நாலில் ஒன்றாகும். அமெரிக்காவை விடவும் பிறப்பு வீதம் கேரளாவில் குறைவாகும்.



உற்பத்தி வினைத்திறன் குறைவே தவிர கேரள பொருளாதாரத்தை வளர்ச்சியடைந்த பொருளாதாரத்திற்கு ஒப்பிடலாம். இந்தியாவின் மற்றைய பகுதிகளின் கடும் வறுமை பட்டினி போன்ற பிரச்சனைகள் கேரளாவில் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவு. ஐக்கிய நாடுகள் சபையின் மனித அபிவிருத்திச் சுட்டியில் இந்தியா 134வது இடத்திலும் கேரளாவை தனியாகக் கருத்தில் கொண்டால் 77வது இடத்திலும் இருக்கும். 2006ல் 126 இருந்து 2008ல் 134வது இடத்தை அடைந்துவிட்டது இந்தியா. திறந்த பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டு முதலீடுகள் மத்தியில் சராசரி வாழ்கைத்தரம் சரிவைக் கண்டிருக்கிறது. சினிமா நட்சத்திரங்களும் தொழிலதிபர்களும் இந்த பொருளாதார வளர்ச்சியை மிகவும் நன்கு அனுபவிப்பார்கள்.’ 2008ல் இருந்த 53 Billionaires சொத்துகளின் மதிப்பு இந்தியாவின் 1.2 Billion மக்களின் உழைப்பின் 25சத வீதமாகும். ஐ.நா வின் அறிக்கையின் படி சாதாரண மக்கள் பொருளாதார வளர்ச்சியால் எந்தப் பிரயோசனத்தையும் காணவில்லை.

கேரளாவின் மொத்தப் பொருளாதார உற்பத்தி இந்தியாவின் தரத்துடன் ஒப்பிடும் போது பரவாயில்லை. உயர்ந்த கல்வித் தராதரமும் சுகாதார வளர்ச்சியும் மனித அபிவிருத்திச் சுட்டியை உயர்த்தியிருக்கிறது. இதன் 77வது இடம் தென்னாபிரிக்கா, துருக்கி, பேரு போன்ற நாடுகளைவிட முன்னுக்கு ஆகும்.

கேரளாவின் வித்தியாசமான அணுகுமுறை அங்குள்ள அரசியல் கலாச்சாரத்தினால் ஆகும். கடந்த 50 ஆண்டுகளில் கேரள மக்கள் தங்களை ஆளுவதற்கு பொதுவுடைமைக்கட்சியை பெரும்பாலான ஆண்டுகளுக்கு தனியாகவோ கூட்டணி ஆட்சியாகவோ தேர்ந்தெடுததுள்ளனர். பொருளாதாரரீதியில் அரசாங்கம் பொது சேவைகளை விரிவு படுத்தியது. சிறிய அளவினாலான கூட்டுறவுத் திட்டங்களுடனும் கிராமிய நிலச்சீர்திருத்தங் களையும் அறிமுகப்படுத்தியது. மற்றைய மாநிலங்களைப்போல் அழைப்பு நிலைய வேலைகளைத் தேடவில்லை (Call Centre Jobs).

கேரளாவின் உற்பத்தி சில துறைகளில் தொழில் புரட்சிக்கு முந்தியது. ஆனால் இது ஒன்றும் செய்யாமல் இருப்பதைவிட மேலானது. ஆனால் இந்தியாவின் ஏனைய பாகங்களில் பல வேலையாட்களின் கதி இதுதான். கேரள அரசாங்கங்கள் விவசாயத்துறையில் கூட்டுத்தாபனங்கள் ஈடுபடுவதைத் தவிர்த்து வந்துள்ளன. இதனால் கிராமப்புற வறுமையைத் தவிர்த்து வந்துள்ளது. ஆனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த தசாப்தத்தில் 200,000 விவசாயிகள் தற்கொலை புரிந்து இருக்கிறார்கள்.

கேரளாவின் படித்த மக்கள்தான் கேரளாவின் முக்கியமான ஏற்றுமதி. ஏறத்தாள இரண்டு மில்லியன் கேரளர் மத்திய கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் வேலை பார்க்கிறார்கள். அதிலும் பெரும்பாலோனோர் வைத்தியர்களாகவும் தாதியாவும் கூடிய சம்பளம் தரும் வேலைகளில் இருக்கிறார்கள். அவர்கள் வருடாந்தம் கோடிக்கணக்கான ரூபாய்களை அனுப்பத் தவறவில்லை. கேரள மாநிலத்தின் தலைநகரில் இருக்கும் உயர் தொழில் நுட்பத் தொழிற்சாலைகளில் 25,000 பேர்வரையில் வேலை செய்கிறார்கள். இந்த தொழில்சாலைகள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவை. ஆனால் உலகப் பெரும் நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்படுபவை. Flexible Communism என சொல்லப்படும் முதலாளித்துவமும் பொதுவுடைமையும் ஒன்றாக இருக்கும் ஒரு சந்தர்ப்பம் இது.

முதலாளிகள் பொதுவேலை நிறுத்தங்களினாலும் மற்றைய போராட்டங்களினாலும் இழக்கப்படும் உற்பத்தியைப்பற்றி அடிக்கடி குறை கூறிக் கொள்வார்கள். அதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்ட கேரளாவில் இது ஒரு சாதாரண நிகழ்வாகும். ஆனால் மற்றப்பக்கம் பார்த்தால் மக்கள் தங்களுக்காக தங்கள் உரிமைகளுக்காக போராடும் உரிமையைக் கொண்டுள்ளார்கள். இதனால் அவர்கள் மற்றைய இந்தியர்களை விட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வென்றெடுத்துள்ளார்கள்.

கேரளர்கள் உலகுக்கு ஒரு முக்கிய பாடத்ததை தந்திருக்கிறார்கள். உற்பத்தித்திறன் நாட்டின் மொத்த வருமான உயர்ச்சி என்பன கட்டாயமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்றில்லை. ஆதற்காக நீங்கள் போராட வேண்டுமானால் போராட வேண்டும். போராடினால்தான் அது நடக்கும்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■

**N.K.S**
Drapery & Blinds Fabric LTD

**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.




**கேதா நடராஜா**
**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

**எலி பூச்சித் தொல்லையா...?**

**RUBAN PEST CONTROL**



▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

**KANTHAN**
**416•291•3997**

# Financial Planning And Time Management

வேலையை பொறுத்தவரை கடின வேலை (Hard Work) சாமர்த்தியமாக புரியும் வேலை (Smart work) என இரண்டாக வகுக்கப்படும். கடினவேலை, இயந்திரம் போல அன்றாடம், 10 அல்லது 12 மணி நேரம் வேலை செய்யும் தொழிலாக கருதப்படும். உதாரணமாக வீடு, வீடாகச் சென்று அங்கு வதியும் நபர்களோடு தமது தொழில் பற்றிய விவரத்தை விளங்கப்படுத்தி தமது வியாபாரத்தை பெருப்பிப்பது அல்லது பிரசுரங்களை வினியோகிப்பது அல்லது அன்றாடம் குறைந்தது 40 அல்லது 50 தடவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதன் மூலம் தமது தொழிலை விஸ்தரிப்பதாகும்.

சாமர்த்தியமாக புரியும் வேலை குறுகிய நேரத்தில் திட்டமிட்டு செய்யும் தொழிலாகும். உதாரணமாக, மக்களுக்கு அறிவூட்டும் பிரசுரங்கள், பத்திரிகையில் ஆக்கங்கள், வானொலி அல்லது தொலைக்காட்சியில் அறிவூட்டும் செய்திகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்துவது, கருத்தரங்கு நிகழ்த்துவது போன்றவையாகும். இந்த இரண்டாவது வகையை பொறுத்தவரை குறுகிய நேரத்தில் பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களிடம் உங்கள் அறிவுக்கு எட்டியவரை அறிவூட்டுகிறீர்கள். இதில் எழுத்து மூலம் அறிவூட்டும்போது அது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரிமாற்றப்படுவதற்கு வாய்ப்புண்டு. அத்துடன் தொடர்ச்சியாக ஆக்கங்களை வெளியிடுவதனால் வாசகர்கள் மனதிலும் உங்கள் பெயர் பதிந்திருக்கும். அதன் விளைவாக எதிர்காலத்தில் அவர்களே உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கு முன்னோடியாக இருப்பார்கள் என்றால் மிகையாகாது. எந்த முறையாக இருப்பினும் செய்யும் தொழிலில் பரிபூரண நம்பிக்கையும் இருக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் Positive Mental Attitude (சுருக்கமாக PMA என அழைப்பார்கள். சிறந்த கருத்துக்கள் கொண்ட, மனதிற்கு நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கையூட்டும், உற்சாகமூட்டும் புத்தகங்கள் படிக்கவேண்டும், வானொலி, தொலைக்காட்சி நிகழ்வுகளை கேட்கவேண்டும். பார்க்க வேண்டும். இதற்கும் நேரத்தை ஒதுக்க வேண்டும். கடின வேலையை கையாளும்போது தனி நபரிடம் மட்டும் தான் நேரத்தை செலவழிக்கிறீர்கள். அ-து One to one basis. சாமர்த்தியமாக தொழில் புரியும்போது எல்லோருடனும் ஒரே நேரத்தில் சென்றடைகிறீர்கள் அ-து One to many basis. ஒவ்வொரு துறையிலும் பலர் சேருவார்கள். தோல்வியை தழுவியதும் வேறுதுறைக்கு செல்ல முயற்சிப்பார்கள். தோல்வியே வெற்றிக்கு அறிகுறி. அ-து “Failure is the stepping stone for success’ பதிலாக “சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது” என்று விட்டு வெவ்வேறு துறைகளில் நாட்டம் காட்டினால் தோல்வி மேல் தோல்வியாகத்தான் முடியும். உதாரணமாக சிலந்தி வலை கட்டும்போது பல தோல்விகளை அடைந்தபின்னரே வலையை கட்டி முடிக்கிறது. நீச்சல் பழகுவதற்கு தண்ணீரில் குதித்தே ஆகவேண்டும். பயந்து இருந்தால் ஒரு போதும் முடியாது. அத்துடன் உங்களின் வேலையை பொறுத்து உங்கள் உடம்பு அசைவுகளும் (Body Language), இருக்கை (pose), முக பாவனையைப் பொறுத்து (Face expression) உங்கள் எதிரில் இருப்பவர் “இவரை நம்பலாமா இல்லையா” எனத் தீர்மானிப்பார்.

வயது வந்தவர்கள், மாணவர்கள் ஏதாவது சோதனைகள் அல்லது முக்கிய விடயங்கள் பற்றி படிக்கும்போது ஒவ்வொரு 45 நிமிடங்களிற்கு இடையில் குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்கள் இடைவேளை எடுத்துக்கொண்டு படித்தால் ஞாபகசக்தி, கிரகிக்கும் ஆற்றல் பெருகும் என்று ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம் வருகிறது. இதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஏதாவது விடயங்கள், கட்டுரைகள் எழுதும்போதும் புள்ளி விபரமாக (Point Form) என்னென்ன விடயங்கள் தொடர்ந்து எழுத இருக்கிறீர்கள் என்பதையும் ஆரம்பத்திலேயே ஒரு வெற்றுத் தாளில் குறிப்பிட்டு எழுத ஆரம்பித்தால் அந்த எழுத்து ஆக்கமும், குறுகிய நேரத்தில் வெற்றிகரமாக, ஆணித்தரமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

### காப்புறுதி கேள்வி பதில்

**ஒருவர் எத்தனை காப்புறுதித் திட்டங்கள் வைத்திருக்கலாம்?**

பொதுவாக விண்ணப்பிக்கும் நபர் உழைப்பவராக இருப்பின், அவரது வருடாந்த சம்பளத்தில் 10 மடங்குக்கு ஆயுள் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கலாம். வருமானக் காப்புறுதியை பொறுத்த மட்டில் மாதாந்த வருமானத்தில் மூன்றில் இரண்டு மடங்கு மட்டுமே மனுச் செய்யலாம். Critical Illnessஇனை பொறுத்தவரை கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கும்போது உழைக்கும் வருட வருமானம் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கும் தொகைக்கு மனுச்செய்யலாம். உதாரணமாக வருடாந்த வருமானம் 50,000 ஆயின் 8 வீத வட்டிப்படி 625,000 வரை மனுச் செய்யலாம். (அ-து 625,000 : 8% = 50,000) ஆயுள் காப்புறுதி மேலதிகமாக தேவைப்படின் தகுந்த காரணம் காட்டி விண்ணப்பிக்கலாம். உதாரணமாக வீட்டு அடமானக்கடன், மேலதிக குடும்பப் பொறுப்புகள், வங்கி அல்லது பிரத்தியோகக் கடன் இருப்பின் அதனை காட்டி மனுச் செய்யலாம். முதியோரைப் பொறுத்த வரை அவர் அன்றாடம் என்னென்ன தொழில் செய்கிறார் என்று அவதானித்து அவர் செய்யும் தொழில் அவர் உயிரிழந்தபின் வேறு ஒருவரை வேலைக்கு நியமிக்கும்பொது எவ்வளவு மாதாந்த செலவு ஏற்படும் என்று கணித்து அதற்கு தக்கபடி காரணம் காட்டி காப்புறுதிக்கு மனுச் செய்யலாம்.



**சக்திவேல்**
- ஆயுட் காப்புறுதி முகவர் -

**எனது தாயாருக்கு நான் காப்புறுதிக்கு விண்ணப்பித்து அதற்கான மாதாந்த கட்டுப்பணத்தை செலுத்தி வருகிறேன். அண்மையில் இவரது காப்புறுதி பற்றிய விளக்கம் அறிய காப்புறுதி நிறுவனத்திற்கு தொடர்பு கொண்டபோது அவர்கள் எனக்கு பதில் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இவர்களை நம்பலாமா?**

காப்புறுதிக்கு மனுச் செய்யும்போது நீங்கள் காப்புறுதி உரிமையாளராக (owner) விண்ணப்பதாரராக (Applicant) இருந்து உங்கள் தாயார் காப்புறுதி செய்யப்பட்டவராக (Proposed insured) இருந்தால் மட்டுமே உங்களுக்கு அதிகாரம் உண்டு அப்படியில்லாவிட்டால் Transfer of ownership என்ற பத்திரத்தை நிரப்பி அனுப்பியபின் நீங்கள் சகல விளக்கத்தையும் அறிந்து கொள்ளலாம்.

saththivel@thaiveedu.com

■ ■ ■

**இணைந்து கொள்ளுங்கள் ‘தாய்வீடு’ facebookஇல்**
**www.facebook.com/thaiveedu**

## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி”

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 160 துரித காப்புறுதி இழப்பீடுகள். 30 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurense). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

.85 வயதிற்குட்பட்ட எவரும் $375,000 வரை மனுச்செய்யலாம்.

.சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (BLOOD PRESSURE), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (HIGH CHOLESTEROL).

.பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.

.மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.

.நிறை கூடியுள்ளோர் (OVER WEIGHT)

.அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

## சக்திவேல்
## 416 706 3530

# குழந்தைகள் மீதான கொடுமைகளும் பின்விளைவுகளும்



மஞ்சுளா
ராஜலிங்கம்

ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து வரும் சூழ்நிலையில், அக் குழந்தையை எந்த நேரத்தில் ஒரு சுமையாகக் கருத ஒருவர் விளைகின்றாரோ, அன்று ஆரம்பிக்கின்றது உடல், உள, பாலியல் கொடுமைகள்.

தம் குழந்தைகளை வாழ்க்கையின் ஆனந்தத்திற்கு இடையூறாக நினைக்கும் பெற்றோர் பலர் இன்றும் நம்மிலும் உள்ளனர். இன்றைய நாகரிகத்திலும், வேலைப்பளுவிலும், குழந்தை சுமையாகத் தெரிகின்றது. பிஞ்சு மனதின் ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை எவ்வளவுக்கு நசுக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு பெற்றோரும், வளர்ப்போரும் மிருகமாக மாறி, குழந்தையின் உயிருக்கே பேராபத்தை விளைவிப்பவர்களாகவும் மாறுகின்றார்கள்.

குழந்தைவதையானது அனைத்து வயதுக் குழந்தைகளையும் பாதிக்கின்றது. இவ்வகைக் கொடுமைகளைக் கூர்ந்து கவனித்து அதற்கு வேண்டிய உதவியைத் தருவதும், பெறுவதும் நம் கடமை. கொடுமையானது, மனதளவாக, உளரீதியாக மற்றும் பாலியல் ரீதியாக வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

அமெரிக்காவில் வருடமொன்றிற்கு ஒன்பது இலட்சம் குழந்தைகள் மன, உடல், பாலியல் ரீதியாகக் கொடுமைப்படுத்தப் படுகின்றனர். இவற்றில் 1,500 குழந்தைகள் வருடமொன்றிற்கு இக்கொடுமைகளால் உயிர்ப்பலியாகின்றன.

சாதாரணமாக, பிள்ளைகளை உடல்ரீதியாகக் கொடுமைப்படுத்துவதை மட்டுமே நாம், கொடுமை என்று மனதில் நினைக்கின்றோம். அது மட்டுமல்ல, அறுபது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கொடுமைகளானது, குழந்தைகளைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்துவதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதுவும் ஒருவகைச் சிசுவதைதான்.

ஒரு குழந்தையை அடித்து, உதைத்து, காயங்களை ஏற்படுத்தியிருந்தால் அதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், பிள்ளைகளைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்துவதை நம் கண்ணால் காண முடிவதில்லை. அதனாலேயே, பிள்ளைகளின் மனநிலைக்கோளாறில் விளையும் தாக்கங்களையும் ஒரு கொடுமை நடப்பதைப் போல் உணர்ந்து, அவற்றை தவிர்க்கக் கூடிய நடைமுறைகளை ஆராயுதல் அவசியம்.

## அலட்சியப் படுத்துவதென்பது என்ன?

குழந்தைகளை பின்வரும் சம்பவங்களிற், பெற்றோர் மற்றும் பிள்ளைப் பராமரிப்பாளர்கள், போதிய கவனம் காட்டி நடக்காவிடின், இது உதாசீனக் கொடுமையாக அடையாளம் காணப்படுகின்றது.

அவையாவன: உணவு, உடை, தங்குமிட வசதி, கண்காணிப்பு, மருத்துவ வசதி, படிப்பு வசதி போன்றவையாகும்.

இவற்றில் ஒன்றில் தானும் நாம் போதிய கவனம் செலுத்தாவிடின், அவற்றால், பிள்ளைகள் கடுமையான மன, உளரீதியான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். சமூகத்திற்கு ஒவ்வாத ஒரு கொடுமையான பிள்ளையாக உருவாகலாம். அல்லது, கடைசியில் தனக்குத்தானே ஒரு அவலமான முடிவைத் தேடிக் கொள்ளலாம்.

ஒரு பிள்ளை மருத்துவத் தேவையை அவசியமான நேரத்தில் பெறத் தவறும்போது, இது ஒருவிதக் கொடுமையாக மாறுகின்றது. ஒரு பிள்ளை பலவார காலங்களாக, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற நோயினால் அவஸ்தைப் படும்போதும், ஒரு தோல் அலர்ச்சியால் பல நாட்களாக கஷ்டப்படும் போதும், மருத்துவ வசதிகளைப் பெற்றோர் அப்பிள்ளைக்கு அளிக்கவில்லையானால், இது கொடுமை என்றே கணிக்கப்படுகின்றது.

## பாலியல் கொடுமை

பாலியல் கொடுமையென்பது, பெற்றோர், பிள்ளைப் பராமரிப்பாளர் அல்லது குழந்தைகளைச் சமயத்தில் கவனித்துக் கொள்ளும் யாராக இருந்தாலும், முறையற்ற வகையில், அவர்களின் பாலியல் உறுப்புக்களைத் தொடுவது, அவைகளில் சேஷ்டைகளைச் செய்வது, அல்லது தமது பாலியல் உறுப்புக்களைக் குழந்தைகள் பார்க்குமாறு செய்வது, நீலப்படங்கள் போன்றவற்றைக் குழந்தைகளுக்கு காட்டுவது போன்றவை அடங்கும்.

## உளரீதியான கொடுமை

உளரீதியான கொடுமையில், குழந்தைகளைச் சதா திட்டுவது, அவர்களை மற்றவர் முன்னிலையில் மட்டம் தட்டுவது, பயமுறுத்துவது, பிள்ளையை அலட்சியப்படுத்துதல், அன்பு செலுத்தாமை, வழிகாட்டாமை மற்றும் செய்யும் காரியத்தில் துணைநிற்காமை போன்றன அடங்கும். ஆனாலும், உளரீதியான கொடுமையை நிருபிப்பது கொஞ்சம் கடினமான காரியம். ஆனாலும், மற்ற வகையான கொடுமைகள் நடக்கும்போது, அதில் கட்டாயம் உளரீதியான கொடுமைகளும் நிச்சயம் அடங்கியிருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும்.

## இப்படிக் கொடுமைப்படும் குழந்தைகளை இனங்காணல்.

- குழந்தையானது, பெற்றோரின் கண்காணிப்பில்லாமலே, பல நாட்களாக வீட்டிற்கு வெளியில் ஒவ்வொரு நாளும் தனிமையில், விளையாட்டில் ஈடுபட்டிருத்தல்.
- தனியே வெளியில் போய்ப்பழகும் வயதிற்கு வரமுன்னரே, பெற்றோரின் கவனிப்பும், துணையுமின்றி, தன்னந்தனியே வெளியே போகப்பழகுதல்.
- அழுக்காகவும், சுகாதாரமுமின்றி, உடல் துர்நாற்றத்துடன் காணப்படல்.
- காலநிலைக்கேற்ப உடைகளை அணியாமல் காணப்படல்.
- பள்ளிகளில் மற்றப் பிள்ளைகளிடம், பசியென்று சொல்லி, பணம் மற்றும் உணவு வகைகளைக் கடனாகக் கேட்டல்.
- பள்ளிக்கு அடிக்கடி மட்டமிடுதல்.
- பிள்ளை தம் வயதுக்கு மீறிய பாலியல் விடயங்கள் தொடர்பான பேச்சுகளைப் பேசுதல், மற்றும் அம்மாதிரி விடயங்களில் நாட்டம் கொள்ளுதல்.

இது மட்டுமன்றி, ஒரு குழந்தையின் மனநிலையறிந்து வீட்டார் நடக்காவிடினும், மற்றும் பிள்ளையை அரவணைத்து, அன்பையும், ஆதரவையும் காட்டாவிடினும், அதுவும் ஒரு விதக் கொடுமையேயாம்.

## பெற்றோர்கள் சிறுவயதில் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் தம் பிள்ளைப் பார்க்கும், நடக்கும் முறை:

- பிள்ளைகளில் அதிகளவு அக்கறையில்லாத் தன்மை.
- பிள்ளைகளின் பிரச்சினைகள் என்று இருந்தால், அவை பள்ளிக்கூடத்திலோ, அல்லது வீட்டில் நடந்தால், அதைத்தீர விசாரிக்காமல் பிள்ளைகளையே சதா குற்றம் சொல்லல்.
- பிள்ளைகள் தவறாக நடந்தால், ஆசிரியர்களிடமும், பிள்ளைப் பராமரிப்பாளர்களிடமும், பெற்றோர் தம் குழந்தையை உடல்ரீதியாகவாவது தண்டிக்கச் சொல்லல்.
- பிள்ளைகளை, பிரயோஜனமில்லாத, கெட்ட குணம் கொண்ட, பாரமான சுமையாக உணர்தல்.
- படிப்பிலும், உடல் வலிமையிலும் பிள்ளைகள் திறமானவர்களாக இருக்க வேண்டும், என்ற ரீதியில் பெற்றோர்கள், தம் பிள்ளைகளின் கட்டுப்பாட்டுக்கும், முயற்சிக்கும் மீறிய செயல்களைச் செய்யுமாறு நிர்ப்பந்தித்தல்.
- மனரீதியாக அப்பிள்ளையின் நிலை என்ன என்பதை சிறிதும் அக்கறையுடன் கருத்தில் கொள்ளாமல் அவர்களின் தேவைகளை நிராகரித்தல்.

## பிள்ளைக் கொடுமைக்கு ஒருவர் சிறுவயதிலேயே ஆட்பட்டிருந்தால், அவர்களின் வாழ்க்கை பின்னாளில் இருக்கும் விதங்கள்:

- நீண்டகால உடற்கோளாறுகள் மற்றும் அங்கயீனக் குறைபாடுகள்.
- பழக்கவழக்கங்களில் தவறுகள்.
- சமயத்தில் உளரீதியான, மனநிலை பாதித்த செயற்பாடுகள்.
- குழுக்களாகப் பிரிந்து செயற்படும் தன்மைகளில் திருப்தியில்லாத ஈடுபாடுகள்.
- சட்டத்தின் பிடியில் தவறான காரியங்களுக்காக மாட்டுதல்.

எங்காவது ஒரு பிள்ளை கொடுமைப்படுத்தப் படுகின்றது என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் தாராளமாக இதுபற்றித் தகுந்த இடங்களில் முறையிடலாம். அந்தப் பிள்ளைக்கு உயிராபத்து விளையுமுன், அவர் காப்பாற்றப்பட்டால், ஒரு உயிரை மீட்ட புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும். தப்பான முறைப்பாடாக இருந்தாலும், அதாவது உங்கள் கண்ணோட்டத்தில் அது பிள்ளைக்கு நடக்கும் கொடுமையாகத் தென்பட்டாலும், இதுபற்றி முறையான விசாரணை, தகுந்த ஆதாரங்களைத் தேடி நடாத்தப்படும். ஆகவே, நாம் செய்வது தவறோ என்ற எண்ணம் வரவேண்டாம்.

பெண்களோ, ஆண்களோ, பிள்ளைகள் சம அளவிலேயே கொடுமைப்படுத்தப் படுகின்றார்கள், ஆனால் பாலியல் கொடுமையால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களைவிட பெண்பிள்ளைகளேதான்.

இங்கு கலாச்சாரம், இனம், மதம் என்ற வேறுபாடின்றி, கொடுமைகள் எல்லாக் குழந்தைகளுக்கும் நடக்க வாய்ப்புக்கள் அதிகம். வயது வித்தியாசமின்றி, குழந்தைகளுக்குக் கொடுமைகள் நடந்தாலும், இக்கொடுமைகளால், 32 சதவிகிதத்திற்கும் அதிகமாய் கொடுமைப்படுத்தப் படுவது, நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகளே.

குழந்தைகளுக்குக் கொடுமைகள் நடக்கின்றது என்று 2007இல் கணக்கெடுத்ததில், இவற்றில் 57 சதவிகிதமான முறைப்பாடுகள் பிள்ளைகள் தாம் தினமும் பழகுபவர்களிடம் இருந்து பெறப்பட்டதாகவே ஆவணங்கள் நிருபிக்கின்றன.

26 சதவிகிதமான முறைப்பாடுகள் பெற்றோர்கள், நண்பர்கள், அயலவர் மற்றும் உறவுகளிடம் இருந்து பெறப்பட்டவை.

7 சதவிகிதமான முறைப்பாடுகள் அநாமதேயமான தொலைபேசி அழைப்புக்களால் அடையாளம் காணப்படுகின்றன.

நாம், பிள்ளைகள் கொடுமைப்படுத்தப் படுவதை அடையாளம் கண்டு அதை உரிய இடங்களிடம் கட்டாயம் முறையிட வேண்டும். குழந்தைகள் பாதுகாப்பான சூழலில் வாழ வழிபுரியவேண்டும். இது நம் கடமை.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344





# CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

## கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!



**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

## இலவச ஆலோசனைகள்
## CALL: (416) 264 1272

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

Sapphire place

# A Sapphire of An Opportunity

LET THIS SAPPHIRE FIRE YOU UP




**The Sapphire Place**, a sapphire of an opportunity to implement your business ideas is coming to the high growth town of Markham, at a prime location that almost guarantees heavy traffic volume crucial to your business ideas:

- NORTH EAST SIDE OF 407/WOODBINE AVE INTERSECTION
- NEAR BIG BOX RETAIL DEVELOPMENTS
- NEXT TO TWO HOTELS WITH 210 COMBINED ROOMS

**The Sapphire Place is a well carved gem developed by Woodjane Corporation:**

- DESIGNED BY THE AWARD WINNING ARCHITECT LOUIS K. CHEUNG, OAA, MRAIC
- SPACE EFFICIENTLY DESIGNED TO APPROXIMATELY 3% GROSS-UP

The Sapphire Place brings to you this rare and precious business opportunity: outlets for stores, restaurants or professional services. With the heavy traffic volume in the area, your business venture will shine almost right away, like a gem.

## OPEN INVITATION

DATE: APRIL 3, 2010(SATURDAY)
TIME: 11a.m. - 3 p.m.
VENUE: HOMEWOOD SUITES BY HILTON TORONTO-MARKHAM
*50 BODRINGTON COURT, MARKHAM (BEHIND COSTCO)*





Construction will start in 2010, to be completed by 2011. Only a limited number of units are available. Let this Sapphire fire you up! Do not waste any time! Make this gem one of your prized possessions!
Pick up your phone and call.

*HURRY! DO NOT MISS THIS SAPPHIRE OF AN OPPORTUNITY! ACT TODAY!*

CALL NOW FOR DETAILS:
416-321-6969

EXCLUSIVE BROKERAGE


"Top Producing Team"
2009 இல் மட்டும் 10 மில்லியனுக்கும் மேலான Real Estate பரிமாற்றங்களை திறம்பட நிறைவேற்றிய அனுபவசாலிகள்
Count on the team that transacted over $10 Million Dollars in year 2009 alone !!!
HomeLife
Higher Standards
Buy Lower !!!
Scarborough
SOLD @ $130,000
Markham
BOUGHT
Brampton
BOUGHT $438,500
Mississauga
BOUGHT @ $294,000
Toronto
BOUGHT @ $321,000
Ajax
BOUGHT @ $243,000
Ice Condo
Bought / Invested Multiple Units
Sell Higher !!!
LIMITED TIME OFFER 1% LISTING COMMISSION
*In addition to this, your house will also have ...
Free virtual tour | Free domain name registration | Open houses
eg: www.249fredmclaren.com
How do you benefit?
Lower listing commission | Track record of having several multiple offers | Sold many properties over asking prices | Large list of own client base | True professional service
இவ்வாரப் புதிர்
பின்வருவனவற்றில் எதனால் Mould Development இனை தடுக்கலாம்?
A: Water / Moisture, Leakage இனை தடுத்தல்
B: சமைத்த பின்பும் குளித்த பின்பும், Exhaust Fanஐ இயங்க விடுதல்
C: கண்ணாடியில் உள்ள Condensation இனை அகற்றுதல்
D: மேற்கூறிய அனைத்தும்
Dirresh Krishnapillai B.Sc., MBA, CMA
Broker
Dir 416.819.4373
Naanan Sathiyamoorthy B.Sc.(Eng) Ctext, ATI
Sales Representative
Dir 416.795.4663
Financing/Refinancing assistance!!!
Get historic low mortgage rate 1.85 %.
Homelife Future Reality Inc.
* Some conditions may apply
Services Offered ...
Property Management
Accounting & Tax advisory
Mortgages
Lease & Rental


We wish all our patrons
happy and prosperous new year
Toronto - London - Quatar - Colombo
From $980 + Tax
Toronto - Brussels - Chennai
From $625 + Tax
Toronto - London - Colombo
$1080 + Tax
SriLankan
Toronto - Abudhabi - Colombo
$1005 + Tax
ETIHAD
Toronto - Abudhabi - Chennai
$715 + Tax
ETIHAD
Toronto - Dubai - Chennai
$925 + Tax
Emirates
Colombo - Jaffna
Expo Aviation Tickets Avialble Here
Toronto - London - Colombo - Chennai $1080 + Tax
Sri Lankan AirLines
- digi Media -
SPECIAL GUIDED TOURS
India · Malaysia · Thailand · Cambodia · Indonesia · Vietnam · Laos · Myanmar · Hongkong · China · Korea · Japan
SriLankan ETIHAD Emirates
JET AIRWAYS QATAR AIRWAYS KUWAIT AIRWAYS
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON
(Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207
Markham, ON
(Markham & Steeles)
905.201.6660
New Location
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $400.

# சக்தி விரயங்களைத் தடுக்க Energy Audit

பிரபா சின்னா



## வீட்டுத் திருத்தவேலைகளுக்கான ஒப்பந்தம்.

கடந்த கட்டுரையில் (March Issue) நாம் 'Energy Audit' பற்றியும் Eco Energyயின் வேலைத்திட்டம் பற்றியும் அதனால் நாம் அடையும் பலாபலன்களையும் பற்றி விவரித்திருந்தேன். இத்திட்டத்தின் கீழ் உங்கள் வீடுகளை திருத்தவோ அல்லது மீள்புனரமைப்புச் செய்யவோ தீர்மானம் எடுத்திருந்தீர்களேயானால், அடுத்தபடியாக நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான விடயங்களில் ஒன்று ஒப்பந்தகாரர்களை ஒப்பந்தம் செய்வது ஆகும்.

அனேகமான வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டுத் திருத்த வேலைகளில் அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும். சில திருத்த வேலைகளில் கடினம், அளவு, போதிய திறனின்மை காரணமாக அந்த வேளைகளில் அத்துறையில் தேர்ச்சி பெற்ற ஒப்பந்தகாரர் (Contractor)களை வேலைக்கு அமர்த்த வேண்டி இருக்கின்றது. அந்த வேலைகளில் நீங்கள் விரும்பியவற்றைப் பூரணமாகவும் அழகாகவும், திருப்பதியாகவும் பெற்றுக் கொள்வதற்கு, எவ்வாறு நீங்கள் சிறந்த முறையில் ஒர் ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்யலாம் என்பதையே இக் கட்டுரை மூலம் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

## யாரைத் தேர்ந்தெடுப்பது?

உங்கள் வீட்டைத் திருத்த அல்லது புனரமைப்பு செய்யத் தீர்மானம் எடுத்தால், அதற்குரிய ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதில் அவசரப்பட வேண்டாம். அவர் தொழில் நுட்ப அறிவு, திறமை, அனுபவம், உரிமை. தேவையான கருவிகள், உங்கள் வீட்டு வேலைக்குரிய துறையில் கடந்த கால அனுபவம் ஆகியவை கொண்டவராக இருத்தல் வேண்டும். பெரும் திட்டமிடலாக இருந்தால், முழுவதையும் பொறுப்பேற்கக்கூடிய ஒருவரையோ. அல்லது புணரமைப்பு ஒப்பந்த ஸ்தாபனத்தையோ (Renovation Constructing Company) அமர்த்தலாம். இந்த ஸ்தாபனம் திட்டமிடல், புணரமைப்பு இரண்டையும் கையாளக்கூடியது. சில வேளைகளில் மிகவும் பாரிய வேலைத் திட்டமாக இருந்தால், காட்டட நிர்மாணக்கலையில் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பவியலாளரை (Architectural Technologist) நாடவேண்டும். இவர்கள், தேவையான அனுமதிகளைப் பெற்றுத் தருதல், சிறந்த ஒப்பந்தகாரர்களை வேலைக்கு அமர்த்துதல், வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை பொறுப்பேற்பர்.

## சிறந்த ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வது எப்படி?

முதலில், மீள்புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளைச் செய்து முடித்திருந்த நண்பர்களையோ, அயலவர்களையோ, வேறு தெரிந்த வீட்டு உரிமையாளர்களையோ, நாடி, அவர்கள் மூலம் வேலையின் சிறந்த தன்மை, துப்பரவு, கிடைத்த திருப்தி, அவரால் ஏற்பட்ட பிரச்சினைகள் போன்றவற்றைக் கேட்பதன் மூலம் இரண்டு மூன்று ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இதைவிடவும் கட்டடக்கலைஞர் சங்கங்கள், கட்டடப் பொருட்கள் வினியோகிக்கும் ஸ்தாபனங்கள், கட்டடத் திணைக்களங்கள், இணையத்தளம் (Websites) மூலமாகவும் தெரிவு செய்யலாம். தேர்ந்தெடுத்த ஒவ்வொருவரோடும் தனித்தனியாக உங்கள் வேலைத்திட்டம் பற்றிய ஆலோசனை, கருத்துக்கள், மதிப்பீடு, எவ்வாறு அவ்வேலையைச் செய்ய போகின்றார் என்பது பற்றி உரையாட வேண்டும். தீர்மானமான ஒரு முடிவு எடுக்கும் வரையில் எவருக்கும் பணம் கொடுக்கவோ, எப்பத்திரத்திலாவது கையெழுத்திடவோ கூடாது. உங்களால் இயன்றவரையில் கீழ்வரும் வினாக்களை வினாவுவதன் மூலம் அவர்களுள் சிறந்த ஒருவரை நீங்கள் தெரிவு செய்யக் கூட்டியதாக இருக்கும்.

> உங்களுடைய வேலைத்திட்டத்தை முழுமையாக விளங்கிக் கொள்ளாதவராகவோ, உண்மையான மதிப்பீட்டைத் தெரியாமல் குறைந்து மதிப்பிட்டவராகவோ, போட்டி போட்டு இந்த வேலைத்திட்டத்தைப் பாரம் எடுக்கும் நோக்கிலோ ஒப்பந்தம் செய்தார்களேயாயின் இறுதியில் எதிர்பாராத செலவுகள் செய்யவேண்டியும், திருப்தியில்லாத முடிவை பெறவேண்டியும் இருக்கும்.

- இத்துறையில் எவ்வளவு காலமாக இருக்கின்றீர்கள்?
- எந்த வகையான வேலைகளில் நீங்கள் திறமையாக இருக்கிறீர்கள்?
- எந்த வகை வேலைக்கு உங்களிடம் அனுமதிப்பத்திரம் உண்டு?
- உங்களுடன் சேர்ந்து உங்களுக்குக் கீழ் வேலை செய்ய வரும் உதவியாளர்களுக்கும் (Sub Contractors) அவ்வகையான அனுமதிப்பத்திரம் உண்டா?
- இதே போன்ற வேலை இதற்கு முன்னரும் செய்திருக்கிறீர்களா?
- நீங்கள் சொந்தமாகவா அல்லது வேறு உதவியாளர்களையும் சிலபகுதி வேலைகளுக்கு அமர்த்துவீர்கள்?
- வேலையின் போது சுகாதாரம், சக்தி போன்றவற்றை எவ்வாறு சிறந்த முறையிலும் சிக்கனமாகவும் கையாள்வீர்கள்?
- எப்படி, எப்போது, தூசுகளை சுத்தம் செய்வீர்கள்?
- எந்த நேர வேலை அட்டவணையைக் கடைப்பிடிப்பீர்கள்?
- எந்த வகையான உத்தரவாதம் தருவீர்கள். அது எவ்வெவற்றை உள்ளடக்கும்?
- எழுத்து மூலமான ஒப்பந்தம் அளிப்பீர்களா?
- வேலைக்குத் தேவையான எல்லா அனுமதிகளையும் எடுத்துத் தருவீர்களா?
- வேலை நேரத்தில் விபத்து ஏற்படுமிடத்து தொழிலாளர்களுக்குரிய நஷ்ட ஈட்டுக் காப்புறுதி (Worker's Compensation and Liability Insurance) உண்டா?

ஒப்பந்தக்காரர் அதிக அளவு தொழில்நுட்ப விளக்கம் இல்லாதவராகவும். இவ்விடயங்களைப் பற்றிக் கதைப்பதற்கு விருப்பம் இல்லாதவராகவும் இருக்கக் காணப்படுமிடத்து அவர் பிழையான ஒப்பந்தகாரர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தனிமையாக முழுவேலையையும் செய்ய அவர் சொல்லுமிடத்து, எல்லாவகையான ஆற்றலும் திறமையும் அவருக்கு உண்டா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

முக்கியமாக அவருடன் உங்களால் ஒத்துப் போக முடியுமா என உறுதி செய்யவேண்டும்.

வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் என்னென்ன செய்கிறார்கள் என்பதை விளக்கவும். அதில் வரும் பிரச்சினைகளை நியாயமாக உங்களுடன் கலந்துரையாடவும், வேலையை எவ்வளவு திறமையாகச் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு திறமையாகச் செய்து தரக்கூடியதுமான ஒருவரே உங்களுக்கு உகந்த ஒப்பந்தகாரர் ஆகும்.

சில தேவையான சந்தர்ப்பங்களில், உங்கள் திட்டங்களை சிறிது மாற்றி அதனால் செலவு சுருக்கமான ஆனால் சிறந்த விரும்பக்கூடிய பெறுபேற்றை எடுத்துத் தரக்கூடிய ஒருவரையும் நீங்கள் விரும்புவீர்கள். குறிப்பிட்ட வேலையில் சிறந்த அறிவு உள்ள ஒருவர் உங்களால் செலுத்தக்கூடிய கட்டணத்திற்குள்ளேயே சிறந்த முறையில் மனநிறைவைத் தரக்கூடியதாகச் செய்து முடிக்கத் தேவையான வழிவகைகளை உங்களுக்கு விளக்கித் தருவார்.

சிறந்த ஒப்பந்தக்காரர்களை நிரூபிப்பது அவர்களால் திருப்தியடைந்த வாடிக்கையாளர்களே. ஒப்பந்தகாரர்கள் ஆகக்குறைந்தது மூன்று வாடிக்கையாளர்களிடம் இருந்தாவது தாங்கள் செய்து முடித்த வேலையைப் பற்றிய அறிக்கைகளைச் சாட்சியாகப் பெற்று வைத்திருத்தல் வேண்டும். இந்த அறிக்கைகளை நீங்கள் பார்ப்பதோடு மட்டும் விடாது. தொலைபேசி மூலம் அவர்களைத் தொடர்பு கொண்டு விபரங்களைக் கேட்டு உறுதிப்படுத்துங்கள். ஏதாவது பிரச்சினைகளை எதிர்கொண்டார்களா? வேலை சுத்தமாகவும் தரமாகவும் இருந்ததா? குறித்த தவணையில் வேலை முடிக்கப்பட்டதா? வேலைத்திட்டத்தில் இடையில் ஏதாவது மாற்றம் ஏற்படும் போது அதை எவ்வாறு கையாண்டார்கள்? மீண்டும் அந்த ஒப்பந்தகாரரைத் தனக்காகவோ அல்லது உறவினர் நண்கர்களுக்கோ ஒப்பந்தம் செய்து கொடுத்திருக்கிறார்களா? என்பன போன்ற வினாக்களை வினாவுதல் சிறந்த பலனைத் தரும். விரும்பினால் அவர்கள் அனுமதியோடு அவர்கள் வீட்டுக்குச் சென்றும் பார்வையிடுதல் நலம். அவர்கள் முழுமனதோடு உங்களை அழைத்துக் காட்டுவார்களாக இருந்தால் அதுவே அந்த ஒப்பந்தகாரருக்குரிய மிகச்சிறந்த நற்சான்றிதழ் ஆகும். அத்தோடு Better Bussines Bureau மூலமாக அவருக்குப் புகார்கள் சென்றிருக்கிறதா என்பதையும் பார்ப்பது நலம்.

## வேலைத் திட்டத்துக்கான மதிப்பீட்டைப் (Estimate) பெறல்

உங்களுக்கு எத்தனை மதிப்பீடுகள் தேவை என்பதற்கு ஒரு திட்டமான சட்டம் எதுவும் இல்லை. சில வாடிக்கையாளர் பலமுறை பேரம்பேசியே இறுதிமுடிவு எடுக்க விரும்புவர். சிலர் பல ஒப்பந்தகாரர்களுடன் பேசிப் பார்த்து அதற்குள் ஒருவரைத் தெரிவு செய்வர். அவரிடம் மதிப்பீட்டுக்குரிய அறிக்கையை எழுத்து மூலம் கேட்பர். போதியளவு விபரங்களைப் பெற்று எழுத்து மூலம் திட்டத்தையும் மதிப்பீட்டையும் வாங்கிப் பரிசீலித்த பின் ஒப்பந்தகாரரை ஒப்பந்தம் செய்வதே சாலச் சிறந்ததாகும். சரியான வரைபடங்களையும் விபரங்களையும் கொண்ட மூன்று மதிப்பீடுகளே உங்களுக்குப் போதியளவு விளக்கத்தைத் தந்து உங்களை இறுதி முடிவு எடுக்கப் போதுமானதாகும். பாரிய வேலைத் திட்டங்களுக்கு மிகச்சிறந்த வரைபடங்களும், விளக்கமான விபரங்களும் தேவை. இதற்காக நீங்கள் கட்டடக்கலை தொழில் நுட்பவியலாளரை அணுகலாம் அல்லது புரணமைப்பு செய்யும் Renovatorஐ அமர்த்தலாம். இவர் வரைபடம் பெறும் சேவையையும், புரணமைப்பு சேவையையும் பெற்றுத்தருவார். அவர் வேலைத் திட்டத்தில் பங்குபற்றாமல் இருக்குமிடத்து நீங்கள் ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியாக பணம் கொடுக்க வேண்டி நேரிடலாம்.

சிறிய வேலைத்திட்டமாக இருந்தால், எந்த வகையான நிலவேலை, எந்தரகக் கதவு, யன்னல்கள் போன்றவற்றிற்கான விபரமே போதுமானது. ஆனால் பாரிய வேலைத்திட்டத்திற்கு ஒரு மதிப்பீடு எடுக்க இரண்டு மூன்று கிழமைகள் கூடச் செல்லாம். மதிப்பீடு எடுக்கும்போது உங்களுடன் சேர்ந்து ஆலோசித்து எடுக்கும்படி உங்கள் ஒப்பந்தகாரரை நீங்கள் கேட்கலாம். கவனமாக மதிப்பீட்டைப் பரிசீலித்து நீங்கள் கேட்ட யாவையும் அதற்குள்

54ம் பக்கம் பார்க்க...



# சக்தி விரயங்களைத் தடுக்க...

53ம் பக்கத் தொடர்ச்சி...

அடைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். வேலை முடிக்கப்படும் வரை தேவையான எல்லாப் பொருட்களும் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு வேலைநேர அட்டவணையும் பெற்றுக் கொள்வதில் கவனமாயிருங்கள்.

சில சந்தர்ப்பங்களில் அவர் உங்களுக்குரிய வேலைத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் (Fixed Price) கூறுவார். அதற்குள் தேவையான பொருட்களின் விலை, சம்பளம், சில்லறைச் செலவு, ஆதாயம் முதலியன அடங்கும். சிலவேலைகளில் பொருட்களுக்குரிய விலைகளில் தள்ளுபடி (Discount) குறிக்கப்பட்டிருக்கும். இது நீங்கள் கடைசியாகப் பொருட்களைத் தெரிவு செய்யும் நேரத்தில் கூட்டிக் குறைக்கப்படலாம்.

சிலவேலைகளில் மதிப்பிடுதல் மிகவும் கடினமானதொன்றாக இருக்கும். உதாரணமாக, ஒரு பழைய வீட்டைப் புதிப்பிக்கும் போது பல மேலதிக வேலைகள் செய்ய வேண்டி இருப்பதால் மதிப்பிடமுடியாதிருக்கும் இந்த வேளையில் நீங்கள் "Cost Plus Method"ஐ ஒப்பந்தத்தில் பாவிக்கலாம். இந்த முறையில் நீங்கள் ஒப்பந்தக்காரருக்கு பொருட்களின் சரியான விலை, சம்பளம், ஆதாயம் போன்றவற்றை நீங்கள் கொடுப்பீர்கள். முடிவுத்தொகை தெரியாத ஒன்றாகவே இருக்கும். இதனால் கட்டுப்பாட்டில் வைத்து செலவுகளை செய்யும்போது அதிகளவு பணத்தை இழக்கவேண்டி வராது. புரணமைப்பு சில வேளைகளில் மறைந்திருக்கும் பிரச்சினைகளைத் திருத்தாமலிருக்கவிருக்கலாம். ஆகவே இவற்றையும் முற்றாகத் திருத்தி எடுப்பதற்காகச் சில்லறைச் செலவுகளுடன் கூடிய மதிப்பீட்டையே (Contingency budget) போடுவது சாலச்சிறந்தது.

இன்னுமொரு தெரிவு Design builders contract முறை ஆகும். இதில் மீள்ப்பித்தல் செய்பவரே திட்டமிட்டு முழுவேலையையும் செய்து முடிப்பார். இவருடன் நீங்கள் Fixed Price முறையையோ Cost plus method முறையையோ வைத்துக் கொள்ளலாம்.

## மதிப்பீடு குறைவாக இருக்கின்றது என்பதற்காக ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்யாதீர்கள்

உண்மையில் மதிப்பீடு குறைவாக இருக்கலாம். ஆனால் அதேவேளையில் அவருக்கு உங்களுடைய வேலைத்திட்டம் முழுமையாக விளங்கிக் கொள்ளாதவராகவோ அல்லது உண்மையான மதிப்பீட்டைத் தெரியாமல் குறைந்து மதிப்பிட்டவராகவோ இன்னும் மேலாக மற்றவர்களுடன் போட்டி போட்டு இந்த வேலைத்திட்டத்தைப் பாரம் எடுக்கும் நோக்கிலேயோ செய்திருக்கலாம். எப்படி இருப்பினும் கடைசியில் எதிர்பாராத மேலதிக செலவுகளைக் கொடுக்க வேண்டியும், திருப்தியில்லாத முடிவை பெறக்கூடியதுமாகவே இருக்கும்.

ஒரு நீதியான மதிப்பீட்டையே தேர்ந்தெடுங்கள். வெவ்வேறு மதிப்பீடுகளை வெவ்வேறு ஒப்பந்தக்காரர்கள் செய்தாலும் அவற்றுடன் சேர்ந்து அவர்களின் திறமை. கண்ணியம் முழுமனதோடு முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுக்கும் திறன் அவர்களின் அறிவுறுத்தல்கள், முதலியவற்றையும் சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது. நீங்கள் செலவு செய்யும் பணத்திற்குப் பெறுமதியான மிகச் சிறந்த திருப்தியான அடைவைப் பெற்றுக் கொள்ளலாம் என நீங்கள் உணருகின்ற ஒருவரையே தேர்ந்தெடுங்கள்.

## எழுத்தில் பெற்றுக் கொள்வது

பணமாகத் தந்தால் உங்களுக்கு ஒரு கழிவு (discount) தரலாம் என்று கூறுகின்ற சரியான முகவரி இல்லாத. எழுத்தில் ஒப்பந்தம் செய்ய விரும்பாத ஒருவரில் மயங்கி அவரின் வலையில் விழுந்து விடவேண்டாம். இப்படியான களவு வேலைகள் கடைசியில் உங்களை பிரச்சினைகளுக்குள் மாட்டிவிடும். உதாரணமாக அவருக்குக் காப்புறுதி, அனுமதிப்பத்திரம் (Licence) இல்லாதவிடத்து எழுத்தில் ஒப்பந்தம் செய்யப்படாத நிலையில் நீங்கள் செலுத்தப்போகும் முற்பணத்திற்குப் பாதுகாப்பு இருக்காது. பணத்தைப் பெற்றுவிட்டு பின் வேலையை உதாசீனம் செய்யலாம். அதையும் விட அங்கீகரிக்கப்படாத ஒப்பந்தகாரர்களினால் கொள்வனவு செய்யப்படும்பொருட்களுக்கு உத்தரவாதம் (warrenty) அளிக்கப்படாதிருக்கலாம். அத்தோடு இரகசிய ஒப்பந்தக்காரரின் வேலை திருப்தியில்லாத, பாதுகாப்பில்லாத, சுகாதாரம் பேணப்படாததாக இருக்கலாம். அவரோ அவரின் பயிற்றப்படாத சக தொழிலாளர்களோ வேலை செய்யும்போது உங்களின் வீட்டுக்கோ, பொருட்களுக்கோ அல்லது அயல் வீடுகளுக்கோ சேதம் ஏற்பட்டால், உங்களின் காப்புறுதி அவற்றிற்கு நட்டஈடு தராது. நீங்களே உங்கள் சொந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டி நேரிடலாம். அவரின் வேலையில் திருப்தியில்லா விட்டாலோ, ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தாலோ, அல்லது அவர் அவ்வேலையை பாதியில் நிறுத்திவிட்டாலோ நீங்கள் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது. மேலாக, சகதொழிலாளர்களின் சம்பளம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பணம் போன்றவை கூட செலுத்தப்படாமல் இருந்திருக்கலாம். எந்தவிதத்திலும் உங்களால் நிரூபிக்க முடியாதிருக்கும். நீங்களே இவற்றையும் செலுத்த வேண்டி நேரிடும். உங்கள் பாதுகாப்புக்காகவும் மன அமைதிக்காகவும். சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட, எழுத்தில் ஒப்பந்தம் பெறக்கூடிய ஒரு ஒப்பதகாரருடனேயே தொடர்பு கொள்வது அவசியம். வேலைத்திட்டம் சிறியதோ, பெரியதோ உங்களுக்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையில் ஒப்பந்தம் எழுதப்படுதலே மிக முக்கியமானதாகும்.

> "
> பணத்தை
> மிச்சம் பிடிப்பதற்காக
> குறைந்த தொகையில்
> ஒப்பந்தம் செய்து
> கடைசியில்
> பெரும் தொகையையும்
> இழந்து
> திருப்தியில்லாத
> பெறுபேற்றுகளைப்
> பெற்றவர்களே
> அதிகம்.
> "

## Completion Certificate (வேலை முடித்ததற்கான அத்தாட்சிப் பத்திரம்)

ஒரு வேலைத்திட்டம் முடிவடைந்ததும், மேற்குறிப்பிட்ட பத்திரத்தில் உங்களைக் கையெழுத்திடும்படி ஒப்பந்தகாரர் கேட்கக்கூடும். வேலைபூரணமாக நடைபெற்றுவிட்டதா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே கையெழுத்திடவேண்டும். ஒரு சில சிறிய பகுதி வேலைகளைப் பின்னதாக வந்து முடித்துத் தருவதாகக் கூறுவாராகில், அவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியை நீங்கள் பிடித்து வைத்துக்கொண்டு கொடுப்பது நல்ல புத்திசாலித்தனமாகும். சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தம்முடைய வேலைக்கு உத்தரவாதம் (Warenty) கொடுத்து. துன்னுடைய வேலையில் பின்னதாக ஏதாவது பிரச்சினை ஏற்படுமிடத்து திரும்பவும் வந்து சீர் செய்துதருவார்.

## ஒப்பந்தகாரருடன் நீங்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்.

வேலைத்திட்டம் திறமையாக நடைபெறுவதற்கு, நீங்கள் ஒப்பந்தகாரருக்கு மதிப்பளித்து அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? என்னென்ன தேவைகளை உங்களிடமிருந்து அவர் எதிர்பார்க்கிறார் என்பவற்றை அவரோடு கதைத்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அடிக்கடி தொந்தரவு கொடுக்காது, தேவையான கேள்விகளைக் குறித்து வைத்து, ஒரு பொருத்தமான வேளையில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

மிகத் தெளிவாக எழுதப்பட்ட ஒப்பந்தமாக இருந்தாலும் சிலவேளைகளில் அவருக்கும் உங்களுக்குமிடையே சில முரண்பாடுகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். அந்த வேளைகளில் இருவரும் ஒன்றாக அமர்ந்து அமைதியாக சுமுகமான ஒரு தீர்வை எடுப்பதே, வேலைத்திட்டத்தை விரைவாகவும், குறைந்த செலவிலும். திருப்தியாகவும் முடிக்க வைக்கும் கூடியளவு நியாயமாக நடந்து கொள்ளுங்கள். சிலவேலைகளில் ஒப்பந்தகாரரால் கட்டுப்படுத்த முடியாத சில காரணிகள், உதாரணமாகச் சீரற்ற காலநிலை. Back-Ordered Components போன்றவற்றால் காலதாமதம் ஏற்படுமிடத்து அவர்களுக்கு விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும்.

## இரத்துச் செய்யும் உரிமை

வேலை சீரற்றதாகவோ அல்லது வேலை இடையில் நிறுத்தப்பட்டாலோ உங்களுக்கு அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய உரிமை உண்டு. ஒப்பந்தம் எழுதும்போது, அதில் ஒப்பந்தகாரரின் வேலை திருப்தியாக இல்லாதவிடத்து. இத்துக்குரிய குற்றப்பணம் செலுத்தி ஒப்பந்தத்தை இரத்துச் செய்யலாம் என்பதைச் சுட்டிக்காட்டும் Termination Clause போட்டு எழுத வேண்டும். வேலையில் சிலபகுதிகள் தரமில்லாதவை என நீங்கள் நினைப்பீர்களேயானால் பொருத்தமான பரிசீலிக்கும் திணைக்களங்களுக்கு (Inspection Dept.) எழுத்து மூலம் அறிவிக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது ஒப்பந்தகாரருக்கும் ஒரு நகல் (Copy) கொடுக்கப்படவேண்டும். பரிசீலிப்பவர்களால் வேலைத்தரமற்றது எனக் குறிப்பிடப்படுமிடத்து, ஒப்பந்தகாரர் தனது செலவிலேயே திருத்தம் செய்துதரவேண்டும். இதையும்விட இப்படி நேரும் சந்தர்ப்பங்களில், ஒப்பந்தகாரருக்கு அனுமதி வழங்கிய அரசாங்கத் திணைக்களங்களுக்குக்கூட நீங்கள் அறிவிக்கலாம்.

## உங்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் (Consumer Protection Laws)

இச்சட்டங்கள் ஒப்பந்தகாரருக்கும் உங்களுக்கும் இடையில் வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும். ஒரு தொலைபேசி அழைப்பே சிலவேளைகளில் போதுமானதாயிருக்கும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில் விளக்கத்துடன் கூடிய கடிதம் தேவைப்படும். உங்களைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான அலுவலகம் (Consumer Protection Office) கட்டடங்களைப் பரிசீலிக்கும் பரிசோதனையாளரை வேலையிடத்திற்கு அனுப்பும். அவர் மூலம் கிடைக்கும் அறிக்கையை வைத்துப் பிரச்சினை தீர்க்கப்படும் அல்லது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை ஏற்படுமிடத்து அதற்குரிய ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் உங்களுக்குத் தருவார்கள்.

Better Business Bureau என்னும் ஓர் அமைப்பினூடாகவும். இந்தமாதிரியான பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படலாம். சட்ட நடவடிக்கைக்குப் போகுமிடத்தும். சட்டத்தரணி மூலம் நீதிமன்றம் சென்று காலவிரயம் ஆகாமல் சிறிய தொகைப் பணத்தைப் பெறக்கூடிய நீதிமன்றங்களுக்கு அழைத்து உங்கள் பணத்தைப் பெறலாம். இத்தொகை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும்.

## காப்புறுதி (Insurance)

உங்கள் ஒப்பந்தகாரர் தனக்கும் தன்னோடு வேலை செய்ய வருபவர்களுக்கும் Worker's Compensation and third – party liability Insurance கட்டாயம் வைத்திருத்தல் வேண்டும். இதற்கான தொகை குறைந்தது 2 மில்லியன் ஆகும். இத்தொகை இடத்துக்கு இடம் வேறுபடலாம். ஒப்பந்தகாரரின் வார்த்தையை நம்பி ஏமாறாமல் நேரடியாக வாங்கிப் பார்த்த பின்பே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுடைய Home Owner's Insurance Policyயும் திருத்த வேலையின்போது ஏற்படும் சேதத்திற்கான நஷ்டஈட்டைப் பொறுப்பெடுக்கும். ஆனால் வேலை தொடங்குமுதலே அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நீங்களாகவே உங்கள் வீட்டுத் திருத்த வேலையைச் செய்தால் நட்டஈடு பொறுப்பேற்கப்படமாட்டாது. ஆனால் தற்காலிக காப்புறுதியை அவர்களிடம் கேட்டுப் பெறலாம். இதனால் சிறிய காப்புறுதி தொகையைக் கூட்டிக் கட்டச் சந்தர்ப்பம் உண்டு. ஆகவே எப்பொழுதும் ஒப்பந்தத்தில் உள்ள காப்புறுதியில் மிகமிக கவனமாகவும் விழிப்பாகவும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

இக்கட்டுரையை வாசித்ததன் மூலம் நீங்கள் உங்கள் வீட்டு வேலைக்குரிய சிறந்த ஒப்பந்தகாரரை தெரிவுசெய்து அதன் மூலம் சிக்கனமாக திருப்பதியான சிறந்த பெறுபேற்றை அடைவீர்கள் என்று நம்புகிறேன்.

எனது அனுபவத்தில் (பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக குறைந்த தொகையில் ஒப்பந்தம் செய்து கடைசியில் பெரும் தொகையையும் இழந்து திருப்திகரமில்லாத பெறுபேற்றுகளைப் பெற்றவர்களையே கண்டிருக்கின்றேன் எனவே இக்கட்டுறையில் மேலும் விளக்கங்கள் தேவைப்படுமிடத்து கீழ்கணும் முகவரியினூடாக தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற முடியும்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■


**Driving School**

ஒட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி

**G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.**

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

**General Driving School**

**Ministry of Transportation Approved Instructor**

பேரின்பநாதன் வேந்தன்

**416-731-2829**

# First step to receiving government rebates of up to $ 11,000 is an

# ENERGY AUDIT

Prabha Sinna

**Tel: 416.655.9464**

prabha@energyan.com www.energyan.com

## Eligible Improvements/Retrofits

Receive $150 rebate from the Ontario government after the completion of the pre-audit

| | Federal & Provincial | Toronto |
|---|---|---|
| Doors/Windows/Skylights(rough opening) | each $ 80 | |
| Heating System | $1,580 | |
| Cooling System | $500 | |
| Ventilation System | $750 | |
| Tankless Water Heater | $750 | |
| Attic Insulation | upto $1,500 | $ 200 |
| Exterior Wall Insulation | upto $ 3,750 | $ 500 |
| Basement Insulation | upto $ 2,500 | $ 300 |
| Toilet Replacement | each $ 130 | |

**Do the pre-audit > Do the retrofit > Do the post-audit > Get the cheque in the mail**

**Do the pre-audit**
You must complete the pre-audit to qualify for the grants. It's the first step to saving energy and money. The goverment of Ontario will rebate you $150 for just doing the pre-audit.

**Do the retrofit**
Upon completing the pre-audit, homeowners may go forward with their retrofits.

**Do the post-audit**
You must complete the post-audit in order to collect the necessary information by the energy advisor to apply for rebates.

**Get the cheque in the mail.**
Upon completion of the post-audit, the applications are sent in by the energy advisor. The government rebates will then be mailed directly to the homeowner.

**Personalized report, PREPARED, PRINTED, DELIVERED in house**

Tel: 416.655.9464 www.energyan.com Fax: 416.644.7299

# மீராப் பாட்டி

குமார் புனிதவேல் பக்கம்

சில சந்தர்ப்பங்களில் நான் யோசிப்பதுண்டு ஏன் அம்மா மீரா பாட்டியை பார்க்கப்போகிறார் என்று. சட்பரியிலிருந்து நான் வாரவிடுமுறைக்காக ரொறன்ரோ வரும் வேளைகளில் எல்லாம் கொஞ்சம் பழங்களும், தமிழ் Take outஇல் சில பலகாரங்களும் பையில் எடுத்துக்கொண்டு பிரம்டனில் வயோதிபர் இல்லத்தில் வசிக்கும் மீரா பாட்டியைப் பார்ப்பதற்கு வெளிக்கிடுவா.

'நீங்கள் ஏன் போகிறீர்களோ தெரியாது' என்று நான் சலித்துக்கொள்வேன். உடனே "அது எங்கள் கடமை நாங்கள் ஒரே மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள், மேலும் கிட்டத்து உறவினர்கள், அவவை போய் பார்க்காவிட்டால் ஊர் உலகம் என்ன சொல்லும்? என்று கேள்வியில் பதிலைத்தருவா.

'எனக்கு இந்தப் போலி உறவுகள் பிடிக்காது, ஊர்உலகம் என்னத்தையாவது சொல்லட்டும் எனக்கு கவலை இல்லை' என்று சொன்னவுடன் அம்மா 'ஓம் இப்ப நீ கனடியனாய் மாறிவிட்டாய். தமிழர்களுடைய பாரம்பரியம் இதுதான், இது எங்கள் கடமை, எங்கள் பெறுப்பு என்று ஒரு நீண்ட விளக்கத்தை கொடுத்து நிறுத்தினார் அம்மா 'மீனாபாட்டியுடைய செந்த மகன் சுந்தரம் சித்தப்பா அவவை கடைசியாய் எப்பபோய் பார்த்தவர் சித்தப்பாவின் பிள்ளைகள் எப்ப போய் பார்த்தவையள், அவர்களுக்கு பாரம்பரியம் கடமை ஒன்றுமில்லையா? ஏன் நாங்கள் மட்டும் அங்க ஓடிப்போய் பேச்சு வாங்கிக் கொண்டு வரவேண்டும்' என்று சலித்தேன் 'அவ இப்போதைக்குச் சாகமாட்டா எங்கள் ஊர் பொம்பிளையள் நெடுங்காலம் சீவிக்கிரவை இப்ப நீ வரப்போரியா இல்லையா? என்று கேட்டா அம்மா. எனக்குத் தெரியும் இல்லை என்று சொன்னாலும் கஷ்டம் ஓம் என்றாலும் கஷ்டம் மீரா பாட்டிக்கு 92 வயது இலங்கை கிரிகெட் கப்டன் நூறு அடிக்கிறானா இல்லையோ மீரா பாட்டி நூறு அடிக்காமல் போவதில்லை என்று இருக்கிறா.

வேறு வழி இல்லாமல் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு காரில் அம்மாவை ஏற்றிக் கொண்டு வெளிக்கிடவுடனே அம்மா துவங்கிவிட்டா மீரா பாட்டியின் வசைபாட, எனக்கோ இந்த போலி சம்பிரதாயத்தை பார்க்கும் வேளை கோபம் கோபமாய் வந்தது. அங்கு போய் சேரும் வரை அம்மாவுடைய குற்றப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். அம்மாவுக்கு அந்த கடந்தகால குப்பைகளை கக்குவது மனஆறுதலாய் இருக்கலாம் ஆனால் அதுவே எனக்கு மனச்சுமை என்பதை அம்மாவால் புரிந்துகொள்ள முடியவில்லை அதனை புரியவைக்கவும் தெரியவில்லை.

'பாட்டி ஒருபோதும் எம்மிடம் உண்மையில் அன்பாய் இருக்கவில்லை' என்று அம்மா சொல்ல நான் அதற்கு பதிலாக 'எனக்கு நடந்தது ஒன்றும் ஞாபகத்திம் இல்லை' என்று சொன்னேன். அதற்கு அம்மா, 'நீ கட்டாயம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார் 'அப்போ எனக்கு நாலு வயது தானே' என்றதற்கு 'நாலு வயது ஞாபகத்தில் இருக்கவேண்டிய வயது உனக்கு கடந்த காலத்தில் நடந்தது மறந்துவிட்டால் எதிர்காலத்தில் மற்றவர்களிடம் எப்படி நடக்க வேண்டும் என்று தெரியாது அல்லப்படுவாய்' என்று கண்டித்தார்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல் ஒவ்வொரு முறையும் பாட்டியைப் பார்க்கச்செல்லும் போதும் அம்மா சொல்லிச் சொல்லி அவ சொன்னது தான் எது ஞாபகத்தில் இருந்தது. எது அம்மா சொன்னது எது உன்மை என்பது எல்லாம் குழப்பமாக இருந்தது.

அப்பா கனடாவுக்கு வந்தபோது கடவுச்சீட்டு நேர்கானால் எல்லாவற்றிற்கும் கொழும்பில் இருந்தால் வசதியாக இருக்கும் என்று மீரா பாட்டி நுகேகொடையில் இருந்த வீட்டில் ஒரு பகுதியில் தங்கி இருந்தது. ஞாபகமாய் இருக்கிறது. எது அம்மா சொன்னது என்பதெல்லாம் குளப்பமாக இருந்தது.

ஒரு பகுதி என்பதைவிட ஒரு அறையில் தங்கி இருந்தோம் என்பது தான் உண்மை இன்னும் இரு குடும்பங்கள் அந்க குடியிருந்தது வீட்டில். பாட்டியின் கணவர்தான் கனடாவிற்கு முதல்போனவர் அவருடைய அனுசரனையில் தான் அப்பா கனடா வந்தவர். நாங்கள் தங்கி இருந்த வீட்டில் இன்னும் சிலர் வாடகைக்கு இருந்ததும் எனக்க ஞாபகம்.

எனக்கு கொழும்பில் இருந்த நாட்கள் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக ஞாபகமிருந்தாலும் தெளிவான விளக்கம் எதுவுமில்லை. காரணம் நாலு வயது தானே ஆனால் ஒரு சம்பவம் மட்டும் நல்ல ஞாபகம் அந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான் எனக்கு அம்மா கோவித்து பார்த்தஞாபகம். கோபம் என்றால் சாதாரண மல்ல துர்க்கையும் காளியும் சேர்ந்து வந்த மாதிரி இருந்தது. இன்றும் எனது மனக் கண்முன் தோன்றிய வண்ணமிருக்கிறது.

அன்று வெசாக் தினம் கொழும்பு வீதியாவும் விழாக்கோலம் கொண்டிருந்தது. அங்கு பல 'தன்சல' எனும் உணவுப் பந்தல்களும், தண்ணீர்ப் பந்தல்களும் இருப்பது வழக்கம் வெசாக்கிற்கு வரும் பக்தர்களுக்கு உணவு பாணங்கள் கொடுத்தால், கொடுப்பவர் பாவங்களில் ஒரு பகுதி உணவு வகைகளுடனும் பாணங்களுடனும் உண்ணும் குடிக்கும் புண்ணியங்களுக்கு சென்றுவிடும் என்று பௌத்த மக்கள் நம்பிக்கை.

நான் ஒருவருக்கும் சொல்லாமல் அயலில் வசித்த சிறியுடன் சேர்ந்து நல்ல 'புரியாணி' கொடுக்கும் தன்சல தேடி வேட்டையாட புறப்பட்டோம். மத்தியான சாப்பாட்டிற்கு பிறகு எல்லாரும் உண்டகளையில் உறங்கும் வேளையில் புறப்பட்ட நாங்கள் நல்ல இடம் தேடி 'புரியாணி' பாசல்கள் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் சேர்த்து பெற்று திரும்பி வர இருட்டுப்பட்டு விட்டது. நாங்கள் இருவரும் ஒருபோதும் தொலைந்து போகவில்லை ஆனால் வீட்டில் எல்லாரும் நான் தொலைந்து விட்டதாக தேடத் தொடங்கி விட்டார்கள். வீட்டில் வசித்துவந்த போடர்கள் எல்லாரும் ஆளுக்கு ஒரு பக்கமாக தேட, அம்மா வீட்டில் இருந்து ஒப்பாரி வைக்க, அடுத்த வீட்டில் உள்ளவர்களும் விஷயம் அறிந்து தேடத் தொடங்கிவிட்டார்கள்.

நாங்கள் இருவரும் மாலை 7.30 மணிக்கு சேகரித்த புரியாணிகளுடன் பெருமையுடன் வீடு திரும்பும் வேளை எல்லாரும் எங்களை ஏசத்தொடங்கி விட்டார்கள். அம்மா தான் அழுது கொண்டு என்னை அடித்தும் விட்டார். எனக்குத் தெரியும் நான் ஒரு கணப்பொழுதும் தொலையவில்லை என்று, இந்த நிகழ்ச்சி மட்டும் என் மனதில் நல்லாக பதிந்துவிட்டது.

மீரா பாட்டியின் கட்டிலடியில் நின்று அம்மா "மாமி எழும்புங்கள் உங்களைப் பார்க்க விருந்தாளிகள் வந்திருக்கிறோம் என்று சொன்னவேளை பாட்டி உடனே விழித்துக்கொள்ளவில்லை அம்மா இரண்டு முறை எழுப்பியவேளை பாட்டியின் கண்கள் திறந்தன, ஆனால் அவவிற்கு யார் வந்திருக்கிறோம் என்று புரியவில்லை. அம்மா ஒரு சுய அறிமுகம் செய்து கொண்டார்.

"ஒ நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்களா எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது", என்று சொல்லவும் அம்மா, பாட்டியின் கையை எடுத்து எப்படி இருக்கீறார்கள் சாப்பிட்டு விட்டீர்களா? என்று விசாரித்தார்.

ஓம், ஓம் நான் சுகமாகத்தான் இருக்கிறேன் சுந்தரத்துக்கும் பிள்ளைக்கும் சாப்பாடு செய்தனான் அவர்களுக்கு என்னுடைய சமையல் என்றால்தான் பிடிக்கும் என்று பதில் கூறினார்.

'கொஞ்சம் பழங்களும் பலகாரங்களும் கொண்டுவந்தனான் நானே கைப்படச் செய்தது என்று அம்மா சொன்னார், இப்பத்தான் சுந்தரமும் மருமகளும் வந்திட்டுப் போனவை பழம், பணியாரம் சாப்பாடு எல்லாம் கொண்டுவந்து தந்திட்டுப்போனவை, சுந்தரம் வேலை வேலை என்று ஓடித்திரிவதில் ஓய்வேயில்லை. இப்பவும் அவசரமாய் ஏதோவேலைக்குப் போகவேண்டும் என்று சொல்லிவிட்டு போனவன் ஆனால் ஒவ்வொருநாளும் வந்து பார்க்காமல் இருக்க மாட்டான் என்று நீட்டி முழங்கிக் கொண்டு அருகில் இருந்த மேசையை மீரா பாட்டி காட்டினார்.

நான் கையில் இருந்த பிலாஸ்டிக் பையினை அந்தமேசையில் வைத்துவிட்டு இங்கே இருக்கிறது எப்போ வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடுங்கள் என்று சொன்னேன்.

59ம் பக்கம் பார்க்க...

KESAVAN LAW OFFICE
இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்
• Real Estate
• Business Law
• Immigration Law
• Family Law
• Last Wills
• Power of Attorney
• Affidavits

சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்
THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)
Tel: 416-754-9843
Fax: 416-754-2362
5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

TRAFFIC TICKETS!
• SPEEDING
• RED LIGHT
• CARELESS
• STOP SIGN
• ACCIDENT
• TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# Ontarioவின் புதிய வரியும் பொருளாதாரமும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


தற்போது Provincial Sales Tax (PST) என அழைக்கப்படும் விற்பனை வரியானது எதிர் வரும் ஆடி முதலாம் திகதியில் இருந்து HST என அழைக்கப்படும் புதிய வரிக்கு மாற்றப்பட உள்ளது. இந்த HST ஆனது பொது அரசினால் அறவிடப்படும் GST 5 சதவீதமும், மாகாண அரசினால் அறவிடப்படும் 8 சதவீதமும் இணைந்து ஒருவரியாக அறவிடப்பட உள்ளது.

மாகாண அரசாங்கத்தின் அபிப்பிராயப்படி இவ்வகையான வரி எமது மாகாணத்தை, மற்றைய மாகாணங்கள் மட்டும் அல்லாது வேறு நாடுகளுடனும் பொருளாதார ரீதியில் போட்டி போடுவதற்கு உதவும் என எதிர்பார்க்கின்றது. அத்துடன் அனைவராலும் போற்றப்படும் Health Care, Education போன்ற சேவைகளைத் தொடர்ந்தும் இலவசமாகப் பேணிக் காப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கின்றர்கள். அதே நேரத்தில் வயோதிபர்களின் விகிதாசாரம் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டு இருப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அவர்களைத் தொடர்ந்து பராமரிப்பதற்குத் தற்போது வேலை செய்யும் மக்களின் வருவாயிலேயே தங்கி இருக்க வேண்டியுள்ளது. அதே நேரத்தில் வளர்ந்து வரும் நாடுகளில் கிடைக்காத சலுகையான அனைத்து வயோதிபர்களும் தன்னிட்சையாக ஒரளவு என்றாலும் தொடர்ந்தும் சமஅந்தஸ்துடன் கனடாவில் வாழ்வதற்கும், இப்புதிய வரி பயன்படும் என எதிர்பார்க்கின்றது. அதே நேரத்தில் வயோதிபர்களுக்குச் சில HST வரிச்சலுகைகள் கிடைத்தாலும், சில பொருட்களுக்கு அவர்களும் HST செலுத்துவதனால் அவர்களின் சிறு பங்களிப்பும் எமக்குக் கிடைக்க வாய்புக்கள் உண்டு.

இப்படியான பெரிய பொளாதார எதிர்பார்பானது தற்போதைய நிலையில் PST எனும் வரி அறவிடப்பட்டாலும், வியாபாரிக்கு மறைக்கப்பட்ட வரியாக 4.5 Billion அரசாங்கத்தினால் அறவிடப்படுகின்றது. அதாவது Raw Materials, Manufacturing, Transportations, Retail போன்ற ஒவ்வொரு நிலைக்கும் அரசாங்கத்தினால் தற்போது வரியாக அறவிடப்படுகின்றது. இவ் வரிச் செலவுகள் வியாபாரிகள் கடைசியாகப் பொருளை விற்கத் தயாராகும் நிலையில் உள்ளடக்படுகின்றது. இதனால் இதைக் Hidden Cost என அழைக்கப்படும்.

ஆனால் இப்புதிய HST வரி கொண்டு வரப்படுவதினால் மேலே குறிக்கப்பட்ட அதாவது மறைக்கப்பட்ட வரி அரசாங்கத்தினால் திருப்பிக் கொடுக்கப்படும். இதனால் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளது. அத்தோடு இப்பொருட்கள் மற்றைய மாகாணங்கள், அத்துடன் சில நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் பயன்படும். இதன் காரணமாக Ontarioவில் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே எதிர்வரும் ஆடி முதலாம் திகதியில் இருந்து கொண்டு வரப்படும், HST ஆனது பொருட்களின் விலை குறையுமானால் எமக்குப் பெரிய பாதிப்பை ஏற்ப்படுத்தமாட்டாது என நிபுணர்கள் கருதுகின்றர்கள். அதுமட்டும் அல்லது வியாபார நிலையங்கள் சேமிக்கும் இந்த Hidden Costல் சில பகுதியைத் தொடர்ந்து தங்களது வியாபாரங்களில் முதலிடு செய்ய ஒரு வாய்ப்பாக அமையும். அது மட்டும் அல்லாது அடுத்த மூன்று வருடத்திற்கு அரசாங்கம் Corporate Income Tax (CIT) எனும் வரியை 14%இல் இருந்து 12% இற்கும், Manufacturing and Processing Taxஐ 12%இல் இருந்து 10%இற்கும் Small Business Rate 55%இல் இருந்து 4.5%இற்கும். இப்படியாக சிறிய வியாபார நிலையங்களில் இருந்து அறவிடப்படும் வரியும் குறைக்கப்படும். அது மட்டும் அல்லாது வியாபார நிலையங்கள் இரண்டு வரிகளைச் சீராகப் பார்த்து அரசாங்கங்கத்திற்குச் செலுத்துவதற்கான செலவு 500 million. இதைக் Compliance Cost என்று அழைப்பர். இந்தச் செலவை வியாபார நிலையங்கள் HST என்ற ஒருவரிக்கு மாற்றப்படும் போது சேமிக்க உதவும்.

அத்துடன் இதுவரை காலமும் PST அறவிடப்படாத பொருட்களான Basic Groceries, Prescription drugs, Child Care, Legal Aid, Tutoring, Music lessons, Most health and education போன்ற சேவைகளுக்குத் தொடர்ந்தும் ஒருவரியும் அறவிடப்படமாட்டாது. அத்துடன் $4.00குக் குறைந்த Qualifying prepared food and beverages, குழந்தைகளுக்கான உடுப்புகள், காலணிகள், குழந்தைகளுக்கான Car seat, Diapers, புத்தகங்கள் போன்றவற்றிற்கு PST Portion ஆன 8 சதவீதம் அறவிடப்படமாட்டாது. Resale வீடு வாங்குபவர்களுக்கும் HST அறிவிடப்படமாட்டாது. அத்துடன் தனிப்பட்ட நபர்களுக்கான வருமான வரியைக் குறைப்பதற்கும் அராசாங்கம் முடிவு செய்துள்ளது. அதேநேரத்தில் பல சேவைகளான Farmars, Seniors, Students போன்றவற்றிற்க்கு சில சலுகைகளை அடுத்த முன்று வருடத்திற்குக் கொடுப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆகவே மேலே குறிக்கப்பட்ட தகவல்களை ஒப்பிடும் போது HST கொண்டு வருவதால் வியாபார நிலையங்கள் தங்களுக்குக் கிடைக்கும் Hidden Cost எனும் செலவைச் சேமிப்பதாலும், இரட்டை வரியைப் பராமரிக்காத பட்சத்தில் ஏற்படும் சேமிப்பையும் கொண்டு வியாபாரிகள் மீண்டும் வியாபாரத்தில் முதலீடு செய்வதினால் அடுத்த மூன்று வருடத்தில் Ontario மாகாணத்தில் கூடிய வேலை வாய்ப்பும், தனிப்பட்ட நபரின் வருமானமும் அதிகப்படுபதால். நாம் தொடர்ந்தும் சுகமாக வாழ வழி பிறக்கும் என எதிர் பார்ப்போம்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■


ஆயுட்காப்புறுதி

For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker



- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி *(Life Insurance)*
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
*20% - 40%* அரச மானியத்துடன்
*15%* அதிக போனஸ்

- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments

$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5



INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

Men's clothing store
For sale
22yrs in Business

---

Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.

Inprobus Realty Corporation

Call : Alan 647-504-2536

# நாம் தேடும் ஒருவர்

சாந்தி அரவிந்தன்




நாம் புலம்பெயர்ந்த பின்னர் தேடிய ஒருவர், இனிமேல் நாம் தேடினாலும் கிடைக்க முடியாத ஒருவர், மாசித்திங்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி என் நெஞ்சத்தை நெருடியது. ஒருசமயம் கவலையில் ஆழ்ந்த என்னை அவரைப் பற்றிய பசுமையான நினைவோட்டங்கள் பின்னோக்கி இழுத்துச் சென்றன. அவற்றை உங்களுடனும் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதிபர் முருகையா சிவராஜரட்ணம் அவர்களே நாம் தேடிய ஒருவர் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு 1932 ஆவணி 30இல் பிறந்த இவர் அதே ஊரிலுள்ள புனித ஹென்றியரசர் கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் க.பொ.த உயர்தர வகுப்புவரை கற்றுவிட்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுமானி (M.A.) பட்டபடிப்பை முடித்தவர். சிறப்புப் பட்டத்திற்காக ஆங்கிலம், தமிழ், தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். கம்பளை சாகிராக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, இளவாலை மெய்கண்டான் பாடசாலை, கொழும்பு சர்வதேச மொழிகள் கற்பிக்கும் பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவையாற்றி பல மாணவ மாணவியரின் முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக இருந்தவர். தமிழில் மாத்திரமன்றி, ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். இதைவிட கொத்தணிப் பாடசாலை அதிபர்களின் தலைவராக இருந்து பல அதிபர்கள், ஆசிரியர்களை முன்னேற்றிய பெருமையும் இவருக்குண்டு. நன் மனையாள், நன்மக்களும் அவரின் உயர்வுக்குக் காரணங்கள் எனலாம்.

“பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்” என்ற பழமொழிக்கிணங்க அன்னாரின் மக்கள் நல்ல நிலையில் உள்ளனர்.

1970-1973ம் ஆண்டுகள். மாதகல் புனித சூசையப்பர் கல்லூரிக்கு அவர் அதிபராக இருந்த காலப்பகுதி. குடத்து விளக்காக இருந்த கல்லூரியைக் கோபுரத்தில் ஏற்றி வைத்த பெருமை அவரையே சாரும். க.பொ.த சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவ மாணவியருக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த மிகுந்த நேரங்களில் விசேட வகுப்புகளை ஒழுங்கு செய்து, தானும் ஆசிரியருடன் கலந்துதுரையாடி எல்லோரையும் நல்ல சித்திகள் பெறச் செய்து மேற்படிப்புகளுக்கு அனுப்பி வைத்த நன்றியை இன்றும் எல்லோரும் நினைவு கூருவர். எளிமை, இனிமை, பணிவு என்பன இவரின் உயரிய குணங்கள். கள்ளமற்ற சிரிப்பு, மாணவர்களோடு தோழமையுடன் பழகும் உயர்ந்த பண்பு ஆகியன இவருக்கே உரித்தான சிறந்த குணங்கள். ஆறடி உயரத்தை வளைத்துக் குனிந்து மாணவ மாணவியரின் கருத்துக்களையும் கேட்கும் மாமனிதரை நாங்கள் வியப்பதுண்டு. ‘பிரம்பு’ என்ற வார்த்தைக்கே அங்கு இடமில்லாதிருந்தது. உதவாக்கரைகள் என்று தள்ளி வைக்கப்பட்ட பிள்ளைகள்கூட அவரின் அரவணைப்பில் படித்து முன்னேறிய சான்றுகள் உண்டு.

படிப்பில் மாத்திரம் ஊக்கம் காட்டியதோடு அமையாது, விளையாட்டுகள், சகல பாடசாலைகளுக்குமிடையிலான பேச்சுப் போட்டிகள் என்பவற்றிலும் பங்குபற்ற வைத்துப் பரிசில்களைப் பெறச் செய்தவர். நாடகப் போட்டிகளிலும் எங்கள் பாடசாலை பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. மாவட்டங்களுக்கிடையேயான ஆங்கில வாய்மொழித்தேர்வுகளில் வெற்றியீட்டி அகில இலங்கைத் தேர்வுக்காக கொழும்பு விசாகா கல்லூரிவரை சென்று பாடசாலைப் பெருமையை நிலை






நாட்டியிருந்தோம். அயலூர்களில் இருந்து வேறு இடங்களுக்குச் சென்று கல்வி கற்ற மாணவ மாணவியரும் திரும்ப வந்து கல்வி கற்றது அன்னார் அதிபராக இருந்து பாடசாலையின் முன்னேற்றத்தில் ஊக்கம் காட்டுகிறார் என்ற ஒரே காரணத்தினால் என்றால் மிகையாகாது.

சில்லாலை, பண்டத்தரிப்பு, இளவாலை, விளான், மாரீசன்கூடல் ஆகிய இடங்களிலிருந்தும் பிள்ளைகள் கல்விகற்க வந்த தரம் மிக்க பாடசாலையாக மிளிர்ந்தது.

சிவராஜரட்ணம் அவர்கள் பாடசாலைப்பிள்ளைகள், அவர்களின் பெற்றோர், சக ஆசிரியர்களோடு மட்டுமல்லாது ஊரவர்களுடனும் அன்பு பாராட்டும் பரந்த உள்ளம் படைத்தவர்.

எவரையும் நோகடிக்காமல் சிக்கல்களைச் சீர்செய்யும் நிர்வாகத்திறன், ஒவ்வொருவரின் திறமையையும் இனங்கண்டு புகழும் உளப்பாங்கு இப்படி அவரின் நற்குண நற்செய்கைகளை சொல்லிக்கொண்டே போகலாம். மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பது இவரின் தனிப்பண்பு எனலாம்.

அதிபர் அவர்கள் எமக்குத் தமிழ் கற்பித்தாரென்றால் நாமெல்லாம் தேன்குடித்த நரிகளெனத் திளைத்திருப்போம். ஓர் உதாரணம்: ஈ, தா, கொடு என்பவற்றை விளக்கும்போது ஈந்தருள்வாய் என்று இறைவனிடம் வேண்டும்போது எங்களுடைய கரங்கள் சிரத்துக்கு மேல் குவிந்திருக்குமாம். தா என்று உரிமையுடன் நெருங்கிய நண்பரிடம் கேட்கும்போது கைகள் நெஞ்சருகே வந்துவிடுமென்றும், கொடு என்று எம்மில் சிறியவரிடம் கேட்கும் போது கைகள் கீழே வந்துவிடுமென்றும் உயர்வு, சரிசமன், தாழ்வு என்பவற்றை ஈ, தா, கொடு என்ற சொற்களில் எவ்வளவு இலகுவாக விளக்கி எமது மனங்களில் பசுமரத்தாணியாகப் பதியவைத்திருக்கிறார் என்பதை நான் விளக்கத்தேவையில்லை.

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

‘கற்றவரின்முன் தான் நன்கு கற்றறிந்த கருத்துக்களை அவருடைய மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர். கற்றவர் எல்லாரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார்’. என்ற வள்ளுவரின் வாக்கு இவருக்கு மிகவும் பொருந்தும்.

இளமைக்காலம் முதல் இறக்கும்வரை அன்னார் புரிந்த சமூக சேவைகள் எண்ணிலடங்கா. போரினால் உருக்குலைந்திருந்த இளவாலை வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டடத்தைப் புனரமைத்ததோடு மட்டுமல்லாமல் முதியோருக்கும் பலவிதமான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தார். வலிகாமம் வடக்குச் சமாதான சபை மூலம் ஊரில் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தவர். இன்றும் எல்லோராலும் பேசப்படும் ஒருவராக விளங்குகிறார். ஆதரவற்ற மக்களுக்குத் தானும் உதவி செய்ததோடு மட்டுமல்லாது உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலமும் பல உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

இவ்வாறு பொதுநலசேவையாளராகவும், இலக்கியப்பணியாளராகவும் மதித்துப் போற்றப்படுகிறார்.

நாமும் அவர் காட்டிய வழியிலே அறிவொளி பரந்து அவர் புரிந்த சேவையையும் இலக்கியப் பணியையும் வளர்த்து வருவதற்கு ஈண்டும் முயற்சிப்போம்.

அவரின் வழிகாட்டலில் உயர்ந்த மாணவ மாணவியர் ஈழத்திருநாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் பல துறைகளில் காலூன்றியிருப்பதோடு மட்டுமல்லாது பொதுச்சேவை செய்வதிலும் விருப்பங்கொண்டுள்ளனர்.

2010 மாசி 18இல் இறைவனடி சேர்ந்த திரு. முருகையா சிவராஜரட்ணம் அவர்களின் ஆத்மசாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம். அன்னாரின் பிரிவு எம்மை உறுத்தினாலும், அவரின் புகழ் எல்லோர் உள்ளங்களிலும் நிலைத்திருக்கும் என்பதுறுதி.

shanthy.aravinthan@thaiveedu.com

■ ■ ■



# தெரிந்து கொண்டு முடிவெடுத்தல்

## (Making an Informed Decision)



ராகுலன்
- Accountant -

1950ல் இருந்து ஒரு வேகமான, நவீனமான முயற்ச்சி வினைத்திறனை வர்த்தக நிர்வாகத்தில் அதிகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் எதனால் இந்த முயற்சி வேகப்படுத்தப்பட்டு வருகிறது என்ற கேள்வி இங்கு பொருத்தமாக இருக்கும்.

பலபேரும் வளர்ச்சியடைந்து வரும் தொழில் நுட்பத்தைக் சுட்டிக் காட்டலாம். இது ஒரு முக்கியமான காரணமாக இருந்த போதிலும் பெரிதாகப் பேசப்படாத இன்னொரு முக்கியமான விடயமும் இருக்கிறது. அதுதான் நிர்வாக விஞ்ஞானம். பிரச்சினைகளுக்கு முடிவு காண, கேள்விகளுக்கு விடை காண, மிகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட அணுகுமுறை, பல விஞ்ஞான முறைகளின்படி கணக்கியல் புள்ளிவிபரவியல் ஆய்வு முறைகளின்படி எடுக்கப்பட்ட தரவுகள் நிர்வாகத்தினருக்கு சரியான முடிவை எடுக்க ஆதாரமாக இருக்கும்.

சாதாரணமாக வர்த்தகத்துறையிலே இருக்கும் பிரச்சினைகளைப் பார்த்தால் அவை மிகவும் சிக்கலானவை. இந்தப் பிரச்சினைகளை தனிப்படுத்தி அடையாளம் கண்டு ஒரு கருதுகோளாக மாற்றி ஒரு கணக்கியல் பிரச்சினையாக அல்லது மாதிரியாக (Model) மாற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த மாதிரிகள் எல்லாக் கோணத்திலும் சரி தவறு (Pros and cons) எல்லாக் காரணிகளையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் வரக்கூடிய எதிர்பாராத மாற்றங்களைக்கூட எண்ணத்தில் இருத்தி முடிவுகளை எடுக்கப்படவேண்டும். எடுக்கப்பட்ட முடிவுகள் பின்பு உண்மையான சந்தர்பத்திற்கு மாற்றப்பட வேண்டும். இந்த விடையிலே விஞ்ஞான ஆய்வுகள் வாதப் பிரதிவாதங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கும்.
நிர்வாக விஞ்ஞானம் பல பயன்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அதனுடைய முதன்மையான பயன்பாடு சிறந்த விளைவுகளை அடையக்கூடிய நிலைகளை (Optimization) அடையாளம் காண்பதாகும். இந்தனுடைய பயன்பாடுகள் இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் இருந்தே பயன்பாட்டில் இருக்கின்றன. யுத்தகாலத்தில் துருப்புக்களினதும் வளங்களினதும் பயன்பாட்டை உயர்த்த இது பயன்படுத்தப்பட்டது.

இந்த விதமான ஆய்வுகள் தற்கால ஆற்றல் வாய்ந்த கணினிகளின் உதவியுடன் பல மடங்கு கூடிய அளவு தகவல்களையும் தரவுகளையும் ஆய்வு செய்யக்கூடிய தன்மையை அடைந்துள்ளன. American Air lines போன்ற நிறுவனங்கள் இது போன்ற படிப்பினைகளைப் பாவித்து தமது வருமானத்தை அதிகரித்துள்ளன. இந்த நிறுவனம் தரவுகளைப் பாவித்து எத்தனை பேர் குறைந்த விலை அறிவிக்கப்படும் போது அதை பாவிப்பார்கள், எத்தனை பேர் கடைசி நேரத்தில் கூடிய பணம் கொடுத்து பயணச்சீட்டுக்களை பெறுவார்கள் என்ற விடயங்களை மேற்கூறிய கணித கணினி முறைகளின் மூலம் எதிர்வு கூறி முடிவுகளை எடுத்ததன் மூலம் வருமானத்தை அதிகரிக்கக்கூடியதாக இருந்தது. இந்த கணிதவியல் கணினிகளுக்கு மிகவும் பிந்திய காலத்தரவுகளை உடனடியாக தரப் படமுடியும்.

உல்லாசப்பயணத்துறை சார்ந்த வர்தகங்களில் இந்தப்படிப்புகள் மிகவும் பயன்பாடு நிறைந்தவை. விலைகளைக் கூட்டிக் குறைப்பதன் மூலம் எல்லா நேரத்திலும் ஓரளவிற்கு ஒரே மாதிரியான அளவைப் பேண முடியும். உதாரணமாக விடுமுறைகாலங்களில் பயணச் சீட்டுக்களின் விலைகள் அதிகரிப்பது இந்தக் காரணத்தினாலேதான்.

இந்த நிர்வாக விஞ்ஞானம் பற்றிய படிப்பு பல துறைகளுக்குப் பாவிக்கப்பட முடியும். மனிதவளத்துறை, விலை நிர்ணயம், செலவுகளைக் கட்டுப்படுத்தல், வழங்கல், சங்கிலி நிர்வாகம் போன்ற துறைகளில் இந்த படிப்பு கடந்த நூற்றாண்டில் பல பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. Wall Mart போன்ற நிறுவனங்கள் இது போன்ற படிப்புக்களைப் பாவித்து மிகுந்த வினைத்திறனுடன் செயல் படுவதால் ஒரு கூட்டுத்தாபன வெற்றிக் கதையாக (Corporate Success Story) மாறி இருக்கின்றன. குறிப்பாக இருப்புக்களை கணக்கிடுதலிலும் வழங்கல் சங்கிலி நிர்வாகத்திலும் Wall Mart சிறந்து விளங்குகிறது. அவர்களிடம் ஒரு பொருள் எவ்வளவு காலம் கடையில் இருக்கிறது ஒவ்வொரு வினாடியிலும் கடையில் எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன போன்ற தகவல்களைப் பெறக்கூடியதாக இருப்பதால் மலிவு விற்பனை போன்றவற்றை திட்டமிடக்கூடியதாக இருக்கும். இதன்மூலம் இருப்பில் இருக்கும் பொருள்களின் அளவையும் அவற்றிற்கான இட வசதிகளைக்கூட கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம். எப்படி ஒரு சில்லறை விற்பனை நிலையத்தை (Retail store) நடத்த வேண்டும் என்பதற்கு Wall mart ஒரு உதாரணம்.

1980களில் ஏற்பட்ட கணினித் துறை முன்னேற்றம் இந்தத்துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் எப்படி விரைவாக எந்தவொரு நடவடிக்கையையும் செய்யலாம் என்பதை கணித முறைப்படி படிக்கக்கூடியதாக இருக்கிறது.

ragulan@thaiveedu.com

■ ■ ■

# மீராப் பாட்டி...

56ம் பக்கத் தொடர்ச்சி...

'நீ ஒரு நல்லபிள்ளை நான் என்னுடைய அவரிடம் சொன்னனான் இப்பதான் அவர் உலாவிவிட்டுவருவதாக வெளியே சென்றார், நீ எவ்வளவு நல்ல பிள்ளை என்று உன் அம்மாவையும் உன்னையும் கட்டுனாயக்கா விமான நிலையத்தில் பிரிந்தபோது எவ்வளவு வருத்தமாயிருந்தது தெரியுமா? அதெல்லாம் ஞாபகத்தில் இருக்கிறதா?' என்று பாட்டி கேட்க நான் 'ஆம் அது நடந்து எவ்வளவோ காலமாகிவிட்டது என்று கூறினேன்'.

'எனக்கு இன்னும் ஞாபமாயிருக்கிறது நீ முதன் முதல் நுகேகொடைக்கு வந்தவேளை நல்ல பசியில் இருந்தாய், குண்டோதரன் சாப்பிட்டது போல் மீண்டும் மீண்டும் போட்டுச் சாப்பாட்டு உன் பசிக்கு முடிவிருக்கவில்லை இப்ப நீ எனக்கு பணியாரம் கொண்டுவந்திருக்கிறாய்'.

பாட்டி திடீரெண்டு சிரிப்பா பின் எங்கோ வெளிக்கப்பார்த்துக் கொண்டிருக்கையில் கடைவாயில் உமிழ்நீர் வடிந்தது தீடீர் என்று ஞாபகம் வந்தது போல் 'உன் அப்பா இன்னும் நீங்கள் தங்கி இருந்த வாடகை தரவில்லை சின்ன நன்றி என்ற வார்த்தை கூடசொல்லவில்லை' என்று முடித்தார். இவ்வளவு நேரமும் அமைதியாய் இருந்த அம்மாவின் முகம் விகாரமாய் மாறியது. 'மாமி அப்பிடிச் சொல்லாதியுங்கே. என்ர அவர் கொடுத்ததுமல்லாமல் கூடவும் கொடுத்த கணக்கு எல்லாம் அவர் எழுதிவைக்காவிட்டாலும் இப்படி ஒரு நாள் வரும் என்று நான் எழுதிவைத்திருக்கிறன்' என்று கடுகு வெடித்தது போல் வெடித்தார். அதற்கு பாட்டி 'ஏன் பிள்ளை கோவிக்கிறாய் எனக்கு வயது போய் விட்டது. மறதி அதிகம் இக்கிழவியை கோவியாதனை' என்று சொன்னா.

'எங்களுக்கு நேரமாகிறது மாமி கட்டாயம் பிள்ளைகளை விசாரித்தாய் சொல்லுங்கள்' என்று வெளிகிட்டார்.

'உடனே போகவேண்டுமா அடுத்தமுறை வரும்போது கட்டாயம் நின்று சாப்பிட்டு போக வேண்டும். வருவியல் தானே?' என்று கேள்விக்குறியுடன் பாட்டி முடித்தா

'கட்டாயம் வருவோம்'

எனக்கு அம்மாவுடன் காரில் திரும்வதை நினைக்கையில் எரிச்சலாய் வந்தது. கட்டாயம் பாட்டியைப் பற்றிகுறை கூறிய வண்ணமிருப்பார். ஒரு நாளைக்குப் பொறுக்கக்கூடிய அளவு பொறுத்துவிட்டேன். இப்படி தடி கொடுத்து அடிவங்குவதில் என்ன சந்தோஷமோ எனக்கு புரியவில்லை. கேட்டால் இது தான் எங்கள் பண்பாடு என்பார். ஒருவேளை உண்மையாகவே நான் கனடியாகி விட்டேனோ என்று சிந்தித்தேன்

மீரா பாட்டியை நினைத்தால் பாவமாய் இருக்கிறது. மீரா பாட்டி ஒரு காலத்தில் எங்களை கொடுமைப்படுத்தி இருக்கலாம் அவருடைய நெருங்கிய உறவுகள் சாகட்டும் என்று விட்டு வைத்துள்ளார்கள். அதுவும் அவவுக்கு தெரியும். செத்தவுடன் பறை அடித்து மரண வீடு கொண்டாடுவார்கள் கல்வெட்டு கூட அடிப்பார் அதில் உயிருடன் இருக்கையில் இரக்கமில்லாது இருந்தவந்தவர்கள் இறந்தவுடன் இரங்கல் பாடல்கள் பாடுவார்கள். இறுதி அஞ்சலிக்காக கிடத்திவைத்து பேரனும் பேத்தியும் கண்ணீருடன் இரங்கல் உரை நிகழ்த்துவார்கள். இதனிலும் கனடியன் எவ்வளவு சிறப்பு எனத்தோன்றியது.

காருக்கு அருகில் வருகையில் அம்மா கால் தடுக்கி விழப்போன வேளை நான் பிடித்துக் கொண்டேன். இன்னும் கவனமாக இருக்க வேண்டும் என்று கடித்து கொண்டு கார் கதவை திறந்து இருப்பதற்கு உதவினேன். பாவம் அம்மா, அவவுக்கும் எழுபது தாண்டி விட்டது.

வீட்டுக்கு வரும் வழியில் வழக்கத்துக்கு மாறாக வாய் திறக்கவில்லை வீட்டிற்கு வந்தவுடன் நான் T.V முன்னால் அமர்ந்து T.V பார்க்க நினைத்தேன் அம்மா உள்ளே சென்று முகத்தை கழுவிவிட்டு தேனீர் தயாரித்து கொண்டுவந்து என்னிடம் ஒரு கப்பபை கொடுத்து விட்டு அமர்ந்தார்.

நான் அம்மாவினைப் பார்த்தேன். வயதும் வாழ்க்கைப் போராட்டமும் சுருங்க வைத்து விட்டது. கூந்தல் அடர்த்தி குறைந்து வெள்ளை நிறமாக மாறிவிட்டது. அப்பா இறந்தபின் தனக்கு இந்த வீட்டை விட்டு என்னுடன் சட்பரிக்கு வர அவவுக்கு விருப்பமில்லை வீட்டிற்கு ஒன்றும் புதியதாக வாங்க விரும்பவில்லை தனக்கு ஆடைகள் கூட வாங்க மனமில்லை அப்பாவுடைய அனைத்து உடைமைகளும் அப்படியே இருந்தது அவ முகத்தில் வாய் இருந்த இடத்தில் ஒரு மெல்லிய கோடுதான் இருந்தது அது சிரிப்பது அருமையிலும் அருமை திடீர் என்று அம்மா கேட்டா எப்போ திரும்புகிறாய்?.

'ஒரிரு நாட்களில் திரும்பவேண்டும் வேலைகள் அதிகம் உள்ளது'

'ஓம் ஓம் வேலை முக்கியம்'

அம்மா ஒன்றுக்கும் யோசியாதியுங்கள், நீங்கள் சுகமாக இருப்பீர்கள், வீட்டு பில்கள் எல்லாம் கட்டிவிட்டேன்' என்றபோது தலையை ஆட்டினார் 'நீ கல்யாணம் செய்யவேண்டும்' என்று திடீர் என்று சென்னார். 'கட்டாயம், உங்களுக்கு பேரக்குழந்தைகள் வேண்டுமல்லவா பேரக்குழந்தைகள் இருந்தால் நல்லாய் இருக்கும், நிச்சயமாக அதுவும் சுந்தரம் மாமாவின் மகன்போல இருந்தால்? 'இல்லை நீ அவர்களை நல்ல பிள்ளைகளாய் வளர்த்தெடுப்பாய் நிச்சயமாக'.

அம்மா வெறும் கப்களை எடுத்துக் கொண்டு குசினிக்கு போனா வேறு விடயங்களை கதைக்க துவங்கிவிட்டா. அவ எழுபதைக் கடந்துவிட்டா. நான் பொறுப்பான மகனாக கல்யாணம் செய்யாமல் கவனித்து கொள்கிறேன் எனக்கும் அவவின் வயதின் பாதியை கடந்து விட்டது

ஆனாலும் என் அம்மா மீரா பாட்டியை பார்க்க போகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

**SP Electronics**
**TV, VCR, DVD, Players-Telephone-Computers**
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ்
வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
**416 264 6400**
**2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)**

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'
**www.thaiveedu.com**
**www.facebook.com/thaiveedu**

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY

# Grand Opening Special !!!

**Grand Opening Special !!!**

This offer Only available at 14th avenue store

Geunine Leather Case



From $1.99

Reg. $19.99


Validity period - March 1st 2010 to March 31st 2010

One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Grand Opening Special !!!**

This offer Only available at 14th avenue store

Smart car charger



From $1.99

Reg. $29.99

Validity period - March 1st 2010 to March 31st 2010

One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Grand Opening Special !!!**

This offer Only available at 14th avenue store

Headset



From $1.99

Reg. $19.99

Validity period - March 1st 2010 to March 31st 2010

One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.





- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light






**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG HTC, BLACKBERRY, iPHONE.

***Display, Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

| | | | |
|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East, | 5C - 2950 Birchmount Rd | 5A - 1162 Morningside Ave | NEW LOCATION<br>49 - 45 Karachi Dr |
| Eglinton Ave/Midland Rd | Birchmount / Finch Ave | Morningside Ave/ Sheppard Ave | Markham Rd / 14 th Avenue |
| 416.266.6818 | 416.495.7776 | 416.281.2355 | 905.201.4859 |

# நவீன இதழியலின் முகங்கள்

## மார்ச் 20, 2010 அன்று தாய்வீடு பத்திரிகையின் எழுத்தாளர் ஒன்றுகூடலின் போது கவிஞரும் ஊடகவியலாளருமான சேரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி

இந்த நூற்றாண்டுக்குரிய இதழியலைப் புரிந்து-கொள்ள வேண்டுமானால் அது எத்தகைய பகைப்புலத்தில் தொழிற்படுகிறது என்பதை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டி-யிருக்கிறது. வரலாற்றின் முதல் வரைபு என்று இதழியலைச் சொல்லிவந்த காலம் மாறி, வரலாற்றை உருவாக்குவது, அழிப்பது, திரிப்பது போன்ற பல்வேறு திருப்பணிகளையும் நவீன இதழியல் செய்துவருவதை நாம் அறிவோம். நவீன இதழியலின் எழுச்சியை வடிவமைப்பதில் பின்வரும் பத்துக் காரணிகள் சிறப்பிடம் பெறுகின்றன என்று கருதுகிறேன்.

1. தலையாய காரணி, ஏழாம் திணை என்று வழங்கப்படுகிற இணையமும் வையகம் விரிந்த வலையும் (www!) அவற்றுடன் இயைந்த தொழில்நுட்பங்களின் எழுச்சியுமாகும். இந்த எழுச்சி, தொடர்பாடல், தகவல் பரிமாற்றம், செய்திப்பரம்பல், ஊடகவியல் போன்றவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திவருகிறது. எமது உலகங்களை நாம் கட்டமைப்பதற்குப் பதிலாக இணைய வெளியும் நவீன ஊடகங்-களும் எமக்கான உலகங்களைப் பெருமள-வுக்குக் கட்டமைக்கின்றன.


2. இதழியல், ஊடகத்துறை. வெளியீட்டுத்-துறை, தொலைத்தொடர்புத்துறை என்பன பெருநிதி நிறுவனங்களிடம் குவிகின்றமை. மூலதனமும் உரிமமும் இத்தகைய நிறுவனங்-களிடம் பெருமளவில் குவிகிறபோது இதழி-யலின் அடிப்படை நியமங்களிலும் அறத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தத் தாக்கம் பெரும்பாலும் தீமையையே விளை-விக்கிறது.

3. மரபார்ந்த ஊடகத்துறையில் வணிகத்-துக்கும், வணிக நலன்களைப் பேணுவதற்கும், இதழியலுக்குமிடையில் ஒரு நியாயமான எல்லைக்கோடு இருந்தது. அந்த எல்லைக்-கோடு இப்போது உருவழிந்துபோய்விட்டது. கனடாவில் வெளிவரும் இலவச வாரப் பத்திரிகைகள் பெரும்பாலானவற்றின் முகங்-களைப் பார்த்தாலே இது தெளிவாகத் தெரிந்துவிடுகிறது.

4. தொடர்பாடல், ஊடகங்கள், கேளிக்கை, கொண்டாட்டம், களிப்பூட்டல், திளைப்பு, பொதுமக்கள் நலன் பேணல், அறிவூட்டுதல் போன்ற பல்வேறு துறைகளுக்கும் தளங்க-ளுக்குமிடையே இப்போது தரவேறுபாடுகள் இல்லாமல் போய்விட்டன. செய்தியைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது நமது அடிப்-படையான மனித உரிமை என்ற நிலை மாறி செய்தி, தகவல் என்பன வணிகப் பண்டமாக மாறிவிட்டன. கூடவே, பணமீட்டுவதை மட்டுமே குறியாகக் கொண்ட கேளிக்கை ஊடகவியல் மேலாட்சி பெற்றுவிட்டது. அறிவூட்டல், செய்தி-களை முறைமையாகத் தருதல், பொறுப்-புணர்வு என்பன மதிக்கத் தகுந்த விழுமி-யங்களாகப் பேணப்படுவதில்லை என்பது இந்த நிலையில் தருக்கரீதியான வளர்ச்சி-யாகிவிட்டது.

5. இதழியலினது அத்திவாரம் பொதுமக்களின் நலன் பேணுதல் என்பதாகும். இந்த அத்தி-வாரத்தின் மேல் எழுப்பப்படுகிற பெருந்-தூண்களாக அமைபவை, அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்க வேண்டிய கடப்பாடும், பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை எத்தகைய நெருக்கடியிலும் பேணுவது என்ற உறுதிப்பாடும் ஆகும். இப்போதைய மைய நீரோட்ட ஊடகத்-துறையில் இந்த அத்திவாரமும் இல்லை தூண்களும் சிதைந்துபோய்விட்டன.

6. எனினும், பொதுமக்கள் இதழியல் (Citizens' journalism) என்கிற புதிய, ஆரோக்கியமான



படம்: தாய்வீடு பத்திரிகைக்காக கனா ஆறுமுகம்

தளம் ஒன்று உருவாகியுள்ளமையை நாம் அவதானிக்கலாம். இதற்கான காரணம், மைய நீரோட்ட ஊடகங்கள் வார்த்தை தவறியமையும் அறநெறி பிறழ்ந்தமையும்தான். தொலைபேசிக்குள் புகைப்படக் கருவி, உடனடித் தகவல் பரிமாற்றம், வீடியோ வசதி, தொழில் நுணுக்கங்கள் மிக எளிதாக மாறி-விட்டமை, Facebook, Mysapce போன்றவற்றின் அபரிமிதமான வளர்ச்சியும் வலைப்பின்னலும் போன்ற காரணிகள், பொது மக்களையும் இதழியலாளர்களாக மாற்றியமைக்கின்றன. அதிகாரங்களைக் கேள்விக்குள்ளாக்குவது, ஊழல்களை அம்பலப்படுத்துவது போன்ற பல முக்கியமான இதழியல் பணிகளை இப்போது பொதுமக்கள் இதழியலே செய்ய வேண்டியிருக்கிறது. உண்மையில் 'மாற்று' ஊடகத் துறையின் சிறப்பான மூலகங்களை நாம் இவற்றில்தான் காணமுடிகிறது.

7. நவீன இதழியலை வடிவமைப்பதில் - குறிப்பாகத் தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை-யில் - திருட்டும், நேர்மையின்மையும் கணிச-மான பங்கு வகிக்கின்றன. ஏனைய மொழிச் சூழல்களுக்கும் இது பொருந்துமெனினும், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிச் சூழ-லிலும் நாடுகளும் திடமான உரிமக் காப்புச் சட்டங்கள் (Intellectual property law, copy right law) உள்ளன. தமிழ்ச் சூழலில் இவை இல்லை. இருந்தாலும் பயன்படுத்தப்படுவ-தில்லை. எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் இணையத் தளங்களிலிருந்தும் சஞ்சிகை-களிலிருந்தும் திருடிப் பிரசுரிப்பது என்பது 'மாண்பு' மிக்க செயலாகப் போய்விட்டது. கனடாவைப் பொறுத்தவரை இலவச வாரப் பத்திரிகைகள் குடும்பக் கைத்தொழில் மாதிரி நிலைபெற்றிருக்கிற சூழலில் லாபமீட்டுவதும் திருட்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்க-ளாக மாறிவிட்டமையை அவதானிக்கலாம்.

8. இந்த நூற்றாண்டுக்கான நமது இதழியலில் பாரிய தாக்கம் செலுத்திவருவது நமது மொழிப் பயன்பாடும் சொற் பயன்பாடும் ஆகும். இதழியலின் மூச்சு நமது மொழி என்பதை இதழியலாளரும் ஊடகவியலாளரும் மறந்துபோய்விட்டமை துயரச் சுமையாகும். மொழி கற்றல், மொழி கற்பித்தல் என்பவற்றில் பொதுவாகவே ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. மொழிப் புலமை, மொழிஆளுமை, மாறிவரும் காலங்களுக்கேற்றபடி மொழியை புதுமைப்-படுத்துவதும் செழுமைப்படுத்துவதும் இதழிய-லாளர்களதும், ஊடகவியலாளர்களதும் சிறப்பான பணி. அந்தப் பணியில் இப்போது பெரும் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது. நவீன இதழியலின் முக்கியமான குறைபாடு இதுதான். மொழிவளமும் மொழியின் சாத்தியப்பாடுகள், விரிவு பற்றிய உணர்வில்லாதவர்கள் எல்லா மொழிகளிலும் ஊடகத் துறைகளில் கதா-நாயகர்களாக மாறிவிட்டனர். பத்திரிகை வித்தகர்கள் குன்றிப்போக, பத்திரிகை வித்த-வர்களும் விற்பவர்களும் பெருகிப்போய்விட்-டார்கள் என்பது நவீன அவலம்தான்.

9. விரிவும் ஆழமும் என்பது இதழியல்துறை-யில் கோலோச்சிய காலம் ஒன்றிருந்தது. நமது யுகத்திலோ அது சுருக்கமும் விரைவும் என்று திரிபடைந்துவிட்டது.

ஊடகத்தின் தன்மையைப் பொறுத்துச் சுருக்கம், விரைவு, தெளிவு அவற்றோடு கூடவே நிதானமும் இன்றியமையாதவை. எனினும் அச்சு ஊடகங்கள் விரிவுக்கும் ஆழத்துக்கும் புலமைக்கும் மதிப்பு வழங்கவேண்டும். இந்நிலை அருகிவருகிறது.

10. இந்தப் பின்னணியில் பல்வேறு ஊடகங்-களின் ஒருங்கிணைவு முக்கியமான போக்-காகமாறிவருகிறது. அச்சு, தொலைக்காட்சி / காணொளி, இணையம் என்பன ஒருங்கி-ணைகின்றன. அச்சில் வருகிற இதழ்களின் இணையத்தளங்கள் பன்முக ஊடக வெளிக-ளாக (Multimedia sites and spaces )மாறி-விட்டன. வாசிப்பு, காட்சி, படிமம், ஒலி என்பன இணைந்த ஒத்தோடிகளாக இருக்கிற சூழலே இப்போது ஆட்சிபெற்றிருக்கிறது.

இந்தச் சூழலில்தான் நவீன இதழியல் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. அச்சிலே மட்டும் வெளிவருகிற இதழாக மட்டுமே ஒரு ஊடகம் தாக்குப் பிடிக்க முடியுமா, Ipad போன்ற புதுமைச் சாதனங்கள் கவர்ச்சியோடும் கவ-னத்தோடும் வெளியாகிறபோது நாளிதழ்கள், சஞ்சிகைகள், நூலகங்களின் எதிர்காலம் என்ன போன்ற கேள்விகள் அவசியமானவை. கனடா, இந்தியா போன்ற நாடுகளில் வாசிப்-போர் தொகை பெருகிவருகின்றது என்பது உண்மையானாலும் இணையமும் அதனோடு இணைந்த தொழில்நுட்பங்களும் பல நாடு-களில் ஆழமாகப் பரவவில்லை. பழைய முறை-யான அச்சுப் பத்திரிகைகளும் வானொலி-யும்தான் அச்சூழலில் இன்றும் முக்கியமா-னவையாக உள்ளன என்பதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

எனினும், ஊடகமொன்றின் மொழியையும் எழுத்து முறைமையையும் இதழியல் பாங்கை-யும் கருத்தியலையும் தீர்மானிப்பவை யாவை என்பதே நமது அடிப்படைக் கேள்வி.

மூன்றே மூன்று காரணிகள்தான் என்பது சுருக்கமான விடையாகும்.

1. வணிகத்துக்கும் அறிவூட்டலுக்கும் ஊடக சுதந்திரத்துக்குமான தொடர்பு முதலாவது காரணி. இவற்றுள் எது மேலோங்குகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

2. வாசகர்கள். சுவைஞர்கள் யார் என்பது அடுத்த காரணி.

3. குறிக்கோள், இலட்சியம், கோட்பாடு, கடப்-பாடு என்ன என்பவை மூன்றாவது காரணி.

■ ■ ■

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான

சாறி புளவுஸ் (Saree Blouse) தைப்பதற்கும்

அழையுங்கள்.

416 264 6400

**Tution Classes**

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

1 to 1 or Group classes

Please call

905-554-2496, 416-522-3314.

# கண்டியின் கடைசித் தமிழ் மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்

- பொன் குலேந்திரன் -

சிறீலங்காவில் வரலாறு அரசியல் காரணத்தால் மாற்றப்படுகிறது. கண்டியில் நாயக்கர்கள் நினைவாக மலபார் தெருவுண்டு. நாயக்கர் பரம்பரையில் கடைசியாக கண்டி இராச்சியத்தை ஆண்ட தமிழ் மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன். இம்மன்னன் பிறப்பால் தமிழன், இந்து. ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவனைப் பௌத்த சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் இராச்சியத்துக்கு மன்னனாக்கியது. கண்ணச்சாமி என்பது இம்மன்னனின் உண்மைப் பெயர். 18 வயதில் ஹங்குரங்கெட்ட என்ற கண்டி இராச்சியத்தின் ஒரு பகுதியின் திறைசேரிக்கு அதிகாரியாக இருந்தவன். பிள்ளைகள் இல்லாத இராஜாதி இராஜசிங்கா 1798ம் ஆண்டு ஜுலை 16ம் திகதி இறந்தவுடன் பிரதம அதிகாரியாக இருந்த பிலிமத்தலாவ ஏற்கனவே போட்டிருந்த திட்டம் அமலுக்கு வரத்தொடங்கியது. இவ்வதிகாரியின் முழு நோக்கமும் மன்னன் இறந்தவுடன் தானே மன்னனாவதாகும். ஆனால் பிரபுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் நிலவியபடியால் அவன் நினைத்த மாதிரி மன்னனாக முடியவில்லை. தனக்கு வேண்டியது தன் இஷ்டத்துக்கு ஆட்டிவைக்கக் கூடிய ஒரு மன்னன். அதன் பின்னர் சிறிது சிறிதாக அதிகாரங்களைக் கைக்குள் கொண்டு வந்து அரியாசனத்தைக் கைப்பற்றுவதே. இதற்கு இலக்காக கிடைத்தது கண்ணசாமி.

இராஜாதி இராஜசிங்கனுக்கு நான்கு இராணிமார்கள். அதில் இரு சோடிகள் சகோதரிகள். முதலாம் சோடிக்கு முத்துசாமி, புத்தசாமி, கண்ணசாமி, சின்னசாமி, அப்புசாமி, அய்யாசாமி, இரங்கசாமி என்று ஏழு சகோதரர்கள். இரண்டாவது சோடிக்கு கந்தசாமி என்ற பெயருடன் ஒரு சகோதரன் இருந்தான். பிள்ளைகள் இல்லாத மன்னன் இறந்தவுடன் நாயக்கர் வம்சத்தின் வழக்கப்படி இவர்களில் ஒருவர் மன்னனாகும் வாய்ப்பு இருந்தது. ஆனால் தனது மரணத்துக்கு முன்னர் மன்னன், முத்துசாமியை தனக்கு பின் தற்காலிக மன்னராக இராணிமார் தங்களது சகோதரங்களின் மகன்மார் ஒருவரை அரியாசனத்துக்கு தேர்ந்தெடுக்கும் வரை நியமித்தான். ஆனால் மகா அதிகாரியான பிலிமத்தலாவ முத்துசாமியை தற்காலிகமாக பதவி ஏற்க விடவில்லை. இவ்வதிகாரியின் திட்டத்தின்படி கண்ணசாமியை அரியாசனத்துக்கு நியமித்து படிப்படியாக தான் பதவியை கைப்பற்றுவதே.

இராமேஸ்வரத்தின் பிரதம குருக்களான வெங்கட பெருமாளின் மனைவி பெயர் சுப்பம்மா. அவர்களுக்கு பிறந்தவனே கண்ணசாமி. அவன் ரூபத்தில் வறுமையால் வாடிய அவர்களுக்கு நல்வாழ்வுகிட்டியது. இராஜாதி இராஜசிங்காவின் இரண்டாவது இராணியான உபேந்திரம்மாவின் சகோதரியே சுப்பம்மா.

கண்ணசாமிக்கு ஐந்துவயதாக இருக்கும் போது தந்தை வெங்கட பெருமாள் இறந்து விட்டார். அவரின் மரணத்துக்குப் பின்னர் சுப்பம்மாவும் மகன் கண்ணசாமியும் அவனது சகோதரன் கொண்டசாமியும் உபேந்திரம்மாவின் உதவிநாடி கண்டிக்குப் புலம்பெயர்ந்தனர். கண்டிக்கு புலம் பெயரும்போது கண்ணசாமிக்கு வயது எட்டு. இன்னும் சில வருடங்களில் தான் கண்டி இராச்சியத்துக்கு மன்னனாவேன் என கனவிலும் அவன் நினைத்து பார்த்திருக்கவில்லை.

## மன்னனான கண்ணசாமி

1790ம் ஆண்டு இராஜாதி இராஜசிங்கனால் மகா அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற பிலிமத்தலாவ நாயக்கா வம்சத்தை மனதுக்குள் முற்றாக வெறுத்தவன். கண்டி இராச்சியத்தைத் தொடர்ந்து நாயக்கர் வம்சம் ஆட்சி செய்யக் கூடாதென திட்டம் வகுத்தான். பல பிரபுக்கள் அவனோடு கூட்டு சேர்ந்தனர். தனது அதிகாரத்தைப் பாவித்து வேண்டியவளவுக்குச் செல்வம் சேர்த்தான். பிலிமத்தலாவைமேல் பொறாமை கொண்ட சில பிரபுக்கள் நாயக்கர்களுக்கு ஆதரவு நல்கினர். கரையோரப் பகுதியில் ஏற்பட்ட கலவரங்களை தனக்கு சாதகமாக பாவித்து, 1798ம் ஆண்டு இராஜாதி இராஜ சிங்கவை பதவில் இருந்து இறக்கினான் பிலிமத்தலாவ. மன்னன் உயிரோடு இருக்கும் வரை தனது சதித் திட்டத்தை செயல்படுத்துவது கடினம் என்பது அதிகாரிக்கு தெரியும். அரச சபையில் மன்னன் இல்லாததினால் குழப்பங்கள் உருவாகத் தொடங்கியது. விரைவில் தனக்கு ஏற்றவாறு செயல்படக்கூடிய ஒரு நாயக்க வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை மன்னராக்கி, பின்னர் அவரை தொலைத்துக்கட்டிவிட்டு தான் அரசு ஏறுவது என தீர்மானித்தான். இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவன் சுப்பம்மாவின் மகன் கண்ணசாமி என்ற இளவரசன். அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. இதை செயல்படுத்த சங்கைக்குரிய மொராதோட்ட இராஜகுரு ஸ்ரீ தம்மாகந்த மகா நாயக்க தேரோவை சந்தித்து தன் திட்டத்தை விளக்கினான் பிலிமத்தலாவை.



"மன்னனின் உயிர் இன்றோ நாளையோ என்ற நிலையில் இருக்கிறது. சில நாட்கள் மட்டுமே அவர் வாழ்வார் என்பது என் கருத்து. அவரின் இடத்திற்கு யாரை நியமிக்க யோசித்திருக்கிறீர்" என்று தேரோ கேட்டார்.

"என்னிடம் அதற்கு ஒரு நல்ல திட்டம் இருக்கிறது தேரோ. மன்னின் இடத்திற்கு எமது சொல் கேட்டு ஆட்சி புரியும் ஒருவனை தேர்ந்தெடுத்துள்ளேன். பெயரளவில் அவன் மன்னன். ஆனால் அதிகாரங்கள் எம் கையில்" என்றான் பிலிமத்தலாவை.

"நல்லது. நீர் நினைத்தபடி தேர்ந்தெடுத்தவருக்கு படிப்பறிவு இல்லாவிட்டால் சில சமயம் எமக்கு எதிராக சில காலத்தில் செயல்படலாம். எதற்கும் சிந்தித்து அவரை நியமனம் செய்யும்"

"அதற்கும் ஒரு வழியுண்டு. அவர் எமக்கு எதிராக மாறினால் நாம் பிரித்தானியரின் உதவி பெற்று அவரை பதவியில் இருந்து இறக்கலாம்."

"நீர் சொல்வது ஒல்லாந்தர் காலத்தில் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் பிரித்தானியர்கள் சூழ்ச்சிக்காரர்கள். கடைசியில் கண்டி இராச்சியத்தை கைப்பற்றி தம் கைக்குள் கொண்டு வந்து விடுவார்கள், கவனம். யானைப் பாகன் யானையை சரியாக கவனிக்காவிடில் அது மற்றவர்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும். அதோடு அதன் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். மற்றவர்களோடு கலந்தாலோசித்து எமது புத்தமதத்தையும், நாட்டையும், உமது அதிகாரங்களையும் காக்கக் கூடியவரான ஒருவரை தேர்ந்தெடும்." என்றார் தேரோ.

## முத்துசாமியின் கதை

பட்டத்துக்கு தகுதியுள்ளவனான முத்துசாமிக்கு அரியாசனம் கிடைக்காது செய்தவன் பிலிமத்தலாவை. முத்துசாமி எப்படியும் கண்ணசாமிக்கு எதிராக யுத்தம் செய்து கண்டி இராச்சியத்தை கைப்பற்றலாம் எனக் கருதி அவனைக் கொலை செய்ய பிலிமத்தலாவை திட்டம்போட்டான். இதையறிந்த முத்துசாமி பிரித்தானிய தேசாதிபதி நோர்த்திடம் போய் முறையிட்டான். அவர் முத்துசாமிக்கு அபயம் கொடுத்து சிறுதொகை பணமும் கொடுத்து ஒரு மெய்காப்பாளனுடன் யாழ்ப்பாணத்தில் போய் சிறிது காலம் வாழும்படி அனுப்பிவைத்தான். அவன் வசித்த வீடு யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருந்த இராஜமாளிகையாகும்.

சில தினங்களில் நாகம் முத்துசாமியைத் தீண்டிற்று. விஷக்கடி வைத்தியர் இருபாலை செட்டியாரின் உதவியை நாடினர். அவரே அவனது விஷத்தை தீர்த்து வைத்தார். அதன் பின்னர் ஆங்கிலேயர் 1808ம் ஆண்டு முத்துசாமியை கண்டிக்கு அழைத்துச் சென்று சம்பிரதாயத்துடன் முடி சூட்டினர். அவனோடு உடன்படிக்கையும் செய்துகொண்டனர். அதன் பின்னர் பிலிமத்தலாவையினதும் கண்ணசாமியினதும் வஞ்சக வலையில் விழுந்த நோர்த் தேசாதிபதி, முத்துசாமியுடன் செய்த உடன்படிக்கையை இரத்துசெய்து அவனை இராசபதவியில் இருந்து நீக்கி கண்ணசாமியை பிலிமத்தலாவையின் உதவியுடன் அரசானாக்கினான். ஆனால் பிலிமத்தலாவையின் திட்டத்தால் விக்கிரம ராஜசிங்கன் முத்துசாமியை சிரச்சேதம் செய்தான்.

## விக்கிரம இராஜ சிங்கன் ஆட்சி

கண்ணசாமிக்கு நாத தேவாலயத்தில் சில கலவரங்களுக்கிடையே முடி சூடப்பட்டது. பத்து வருடங்களுக்கு பிரச்சினைகள் இன்றி ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கன் என்ற பெயரில் ஆட்சிபுரிந்தான். இளைஞனான அவனுக்கு கேளிக்கைகளிலும் சுகபோகத்திலும் நாட்டமிருந்தது. மதுவுக்கும் சிறிது சிறிதாக அடிமையானான். இக்காலகட்டத்தில் திங்கொல்வெலயாய என்ற வயல் வெளியை வெட்டி தற்போதைய கண்டி நகரத்தை ஏற்படுத்தி தற்போதைய கண்டி ஏரியை உருவாக்கினான். இந்த வயல் பகுதி ஒரு காலத்தில் நாத தேவாலயத்திற்கு தேவையான நெல்லை உற்பத்தி செய்து கொடுத்தது. இதே ஏரியில் தான் தனக்கு எதிராக சதிசெய்த ஏகலப்பொல குமாரகாமி என்ற தேசத் துரோகியை மூழ்கடித்து மன்னன் கொன்றான். தான் மக்களுக்கு தரிசனம் கொடுப்பதற்கு பட்டிருப்புவ என்ற எட்டு சுவர்களையுடைய கட்டுமானம் ஒன்றினை தற்போது உள்ள தலதா மாளிகையில் கட்டினான். இக்கட்டிடத்தை இன்றும் தலதா மாளிகையில் காணலாம்.

இதன் கட்டிடக் கலைஞர் இந்தியாவைச் சேர்ந்த தேவேந்திர மூலாச்சாரி.

காலப்போக்கில் இறந்த மன்னருக்கு நடந்ததையும் தன்னை சூழ்ந்துள்ள சதிகாரரர்களையும் பற்றி மன்னன் சிந்திக்கத் தொடங்கினான். தனக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம் என அவன் மனம் சொல்லிற்று. தன் இராச்சியத்தை எந்த நேரமும் துரோகிகளை கைவசம் போட்டு கைப்பற்ற பிரித்தானியர் காத்திருக்கின்றனர் என்பதையும் அவன் உணர்ந்தான். பிலிமத்தலாவை எதிர்பார்த்தது போல் கண்மூடித்தனமாக முடிவுகள் எடுப்பவனாக மன்னன் இருக்கவில்லை. அவனது போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அதிகாரத்தை தன் கைக்குள் கொண்டுவந்து கொடுங்கோல் ஆட்சிபுரியத் தொடங்கினான். தன் அதிகாரிகளிடையே பிரபல்யமானவனாக திகழாவிடிலும் குடிமக்களின் ஆதரவு அவனுக்கு இருந்தது. சாதாரண குடிமக்களின் உரிமைகளுக்காக போராடியதால் பிரபுக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டான். குடிமக்களுக்கு நீதி கிடைக்க வழிசெய்தான். இவனது போக்கினால் பல எதிரிகள் பிரபுகளுக்கிடையே தோன்றினார்கள். பிரித்தானியர்களுக்கு அந்த சூழ்நிலை கண்டியைக் கைப்பற்ற சாதகமாக அமைந்தது.

## கண்டி படையெடுப்பு

1803ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதி பிரித்தானிய ஜெனரல் மெக்டொவல் என்பவர் கண்டியைக்


64ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# உங்களுடைய நலனுக்காக பணிபுரியும் ஒரு காப்புறுதி முகவரைத் தேர்வு செய்யுங்கள்

## காப்புறுதி நிறுவனத்தின் நலனுக்காக பணிபுரிபவரை அல்ல...

ஒரு ஆயுட்காப்புறுதியைத் தேர்வு செய்வதற்கு முன் சரியான முறையில் திட்டமிடுங்கள். உங்களுக்கு எவ்வளவு தொகைக்கு ஆயுட்காப்புறுதி தேவை? எவ்வளவு தொகையை உங்களால் செலுத்தமுடியம்? எவ்வளவு காலத்துக்கு செலுத்தமுடியும்? மாதாந்த கட்டுத்தொகையில் மாற்றம் ஏற்படுமா? என்பவற்றை சரியான முகவரின் ஆலோசனையுடன் திட்டமிட்டு தேர்வு செய்யுங்கள். இதனால் நீங்கள் அடிக்கடி காப்புறுதியை மாற்றவேண்டி வராது.

- நிதி மற்றும் காப்புறுதித் துறையில் 25 ஆண்டுகால கனடிய அனுபவம்
- 3000க்கும் மேற்பட்ட பூரண மனத்திருப்பதியுடன் கூடிய வாடிக்கையாளர்கள்
- பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களுடனான சேவை
- 40க்கும் மேற்பட்ட தரமான காப்புறுதி முகவர்களை உருவாக்கியவர்
- அனுபவம், அறிவு, நம்பிக்கையுடன் கூடிய சேவை

-digi Media-



ROYAL BROKERS Corporation

**Siva Kandiah**

Insurance & Investments Broker

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE

# புதைந்து கிடக்கும் உயிர் கொல்லிகள்

உலகில் ஒவ்வொரு முப்பது நிமிடத்திற்கும் யாராவது ஒருவர் மிதி வெடியில் அகப்படுகிறார்கள். நம்பமுடிகிறதா இந்த உண்மையை, நம்பித்தான் ஆகவேண்டும். இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் அது எங்கு, எந்த நாட்டில், எப்படி, எந்த இனம், எவ்வாறு அன்றாடம் இதில் அகப்பட்டுப் பாதிப்படைகிறது என்பதை விட ஒரு மனித உயிர் பறிக்கப்படுகிறது. அல்லது அங்கவீனம் ஆக்கப்படுகிறது என்பதனை ஒரு மனிதாபிமானக் கண்கொண்டு பார்ப்போம்.

இக் கண்ணி வெடிகளில் அகப்படும் 70% வீதமானவர்கள் பொதுமக்களாகவே காணப் படுகிறார்கள். இதிலும் 1/3 வீதமானவர்கள் சிறுவர்கள். இந்த கண்ணி / மிதி வெடிகளில் அகப்படுவோரில் 50 வீதமானவர்கள் இறந்து போகிறார்கள்.

உண்மையில் இந்த கண்ணி / மிதி வெடிகள் மிகவும் மோசமானவையும் பாதிப்புகளை அதிகம் தருவனவாகவும் காணப்படுகிறது. இரசாயன ஆயுதங்களுக்கு ஒப்பாக இவை ஆபத்தானவை.

உலகின் ஏனைய ஆயுதங்களோடு ஒப்பிடுகையில் இவ்வகை வெடிகளை உற்பத்தி செய்ய மூன்று டொலரில் இருந்து பத்து டொலர் வரை செலவு ஆகிறது. ஆனால் புதைக்கப்பட்ட இவ்வகை வெடிகளை அகற்ற அல்லது செயல் இழக்கச் செய்ய ஆகும் செலவு அண்ணளவாக 1,000 டொலர்கள் ஆகும். சுமார் 240 மில்லியன் கண்ணி/மிதி வெடிகள் உலகின் 100 நாடுகளில் புதைக்கப்பட்டுள்ளன என UXO (Land Mine And Unexploded ordance) என்னும் கண்ணி வெடிகளுக்கு எதிரான அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

- சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே நிலக்கண்ணிகள் பாவனையில் இருந்தன.
- 14ம் நூற்றாண்டின் தெடக்க காலத்தில் சிசிலியிலும் இத்தாலியிலும் இப்போதிருக்கின்ற வெடிமருந்துகளால் தயாரிக்கப்பட்ட மிதிவெடிகள் பாவிக்கப்பட்டன
- மிதிபடும் அமுக்கத்தில் வெடிக்கும் மிதிவெடிகள் ஜேர்மனிய இராணுவத்தினால் 1726ம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது.
- கடந்த 25 வருடங்களில் 50 நாடுகளின் 100 நிறுவனங்கள் சுமார் 200 மில்லியன் மிதிவெடிகளை உற்பத்தி செய்திருக்கின்றன.

இன்று உலகின் பல்வேறு நாடுகளின் பல்வேறு இடங்களில் நிலத்தின் கீழ் புதைக்கப் பட்டு மனிதர்களை பழிவாங்க காத்திருக்கும் கண்ணி / மிதி வெடிகள் பிலிப்பைன்ஸ், அங்கோலோ, கம்பூச்சியா, வியட்நாம் ருவாண்டா, சிறீலங்கா ஆகிய நாடுகளில் அதிகம் காணப்படுகிறது.

சிறீலங்காவில் 3ஆம் கட்ட ஈழப்போரின் பின்னரே மிக அதிகமாக இராணுவத்தினராலும் விடுதலைப் புலிகளினாலும் கண்ணி/மிதி வெடிகள் விதைக்கப்பட்டன.




உலகில் 600 வகையான நிலக்கண்ணிகள் உள்ளன. இவற்றில் பல உற்பத்தியின் பின்னர் புதைக்கப்பட்டால் உடனடியாக செயலிழக்க செய்ய முடியாதவைகளாகவே உற்பத்தியாகின்றன சிறீலங்காவில் படையினரும் விடுதலைப் புலிகளும் இரண்டு வகையான கண்ணி / மிதிவெடிகளை பயன்படுத்தினர். அதாவது படையினர் பாகிஸ்த்தான் தயாரிப்பு கண்ணி வெடிகளையும் விடுதலைப்புலிகள் அவர்களின் சொந்த தயாரிப்பான ஜொனி கண்ணி வெடிகளையும் பாவித்தனர். சிறீலங்காவிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தின் பின்னர் வெளியிடப்பட்ட தகவல்களின் படி சுமார் 25 லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. இவற்றில் நிலப்பரப்பு சத விகிதப்படி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே இவை அதிகமாக புதைக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது. சாதாரணமாக இந்த நிலக் கண்ணிவெடிகள் 20 வருடங்களுக்கு செயற்திறன் கொண்டனவாக இருக்கும்.

2000ஆம் ஆண்டின் பின் யுத்த நிறுத்த காலத்தில் பல்வேறு தன்னார்வ தொண்டர் நிறுவனங்களினாலும் வெண்புறா அமைப்பினாலும் வடக்கின் பல்வேறு பகுதிகளில் நிலக் கண்ணிகள் அகற்றப்பட்டாலும் முற்றாக அகற்றப்படவில்லை. இன் நிலக்கண்ணிகளை புதைப்பவர்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் அந் நிலக் கண்ணிகளை புதைத்த இடத்தில் இருந்து அகற்றுவதே வழக்கமாகும் எனினும் புதைப்பவர்கள் யுத்தத்தில் இறந்து போனால் அது துர் அதிஸ்டமே.

கடந்த வருடம் மே மாதத்தின் பின் சிறீலங்காவில் யுத்தம் முடிவடைந்து விட்டது என்று சிறீலங்கா அரசு அறிவித்தாலும் நிலக்கண்ணி, மிதி வெடிகள் இன்னும் மனித உயிர் கொல்லிகளாகவே உள்ளன.



இந்தியாவில் இருந்து இந்த கண்ணி வெடிகளை அகற்ற இந்திய ராணுவத்தினர் வடபகுதியெங்கும் சென்றுள்ளனர் எனவும், தமது இராணுவத்தினரும் இவற்றை அகற்றும் பணியினை புரிகின்றனர் எனவும் சிறீலங்க அரசு அறிவித்து ஒன்பது மாதங்கள் கடந்தும் இன்று வரை நிலக் கண்ணி / மிதி வெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இனி வரும் காலங்களில் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முனையும் தமிழ் மக்களுக்கு இந்த நிலகண்ணி/மிதி வெடிகள் கொடிய உயிர் கொல்லிகளாக மாறப்போகின்றன. இதனை விடவும் வெடிக்காத நிலையில் காணப்படும் புதையுண்டுபோயிருக்கும் எறிகனைகள், விமான எறிகுண்டுகள், பீரங்கி

- குமணன் தம்பிஜயா -

குண்டுகள், கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி சன்னங்களும் இன்னொரு உயிர் கொல்லிகளாக தமிழ் மக்களுக்கு மாறப்போகின்றது. ஆகவே மக்களுக்கு இந்த வெடிபொருட்கள் சம்பந்தமாகவும், எவ்வாறு இவற்றை கையாழ்வது என்பது தொடர்பாகவும் விழிப்புணர்வு கொண்டுவரப்படவேண்டும். இவற்றை யார் முன்வந்து செய்யபோகிறார்கள் என்பது கேள்விக்குறியே.

இந்த கண்ணிகள் நாட்டப்படுவதை விரும்பாத உலகின் 125 நாடுகள் 1997ஆம் ஆண்டு கனடாவின் ஒட்டாவா நகரில் நடைபெற்ற நிலக்கண்ணி தடை உடன்பாட்டில் கைச்சாத்திட்டன. இதன் பின்னர் ஏப்பிரல் 2009ம் ஆண்டு மீண்டும் இந்த நிலக்கண்ணி தடை உடன்பாட்டில் உலகின் 156 நாடுகள் கைச்சத்திட்டன ஆனால் சீனா, ரஷ்யா, இந்தியா, பாகிஸ்த்தான், இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகள் கைச்சாத்திடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




kumanan.thambiah@thaiveedu.com

■ ■ ■

# கண்டியின் கடைசி...

62ம் பக்கத் தொடர்ச்சி...

கைப்பற்ற எடுத்த முயற்சி, உள்நாட்டவர்களின் கடும் எதிர்ப்பால் தோல்வியில் முடிந்தது. 1815ம் ஆண்டு கண்டி அரசன் சீத்தாவக்கைப் பகுதியில் இருந்த பிரித்தானியப் படை மேல் தாக்குதலை நடத்தினான். இதுவே பிரித்தானியர் கண்டி இராச்சியத்தின் மேல் இரண்டாம் முறையும் படை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. 1814ம் ஆண்டில் கண்டி மன்னன், எகலப்பொல அதிகாரியை சப்பிரகமுவ பகுதிக்கு அனுப்பி நிலமையை அறிந்து ஆவன செய்யும்படி சொன்னார். அவ்வதிகாரியின் ஆட்சியைப்பற்றி புகார்கள் மன்னன் காதுகளுக்கு எட்டியது. அவ்வதிகாரி பிரித்தானியர்களுடன் சேர்ந்து தனது ஆட்சிக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுவதாக மன்னன் அறிந்தான். உடனே எகலப்பொலவை கண்டிக்கு வரும்படி கட்டளையிட்டான். மன்னனின் கோபத்தை அறிந்த எகலப்பொல போகவில்லை. தன்னுயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை அறிந்தே அவன் போகவில்லை. அவனது இடத்திற்கு மொலகொடவை மன்னன் நியமித்து புரட்சியை அடக்கினான். எகலப்பொல தப்பி ஓடி பிரித்தானியரிடம் அடைக்கலம் புகுந்தான். அவனை ஒன்றும் செய்யமுடியாத ஆத்திரத்தில் அவனது மனைவி, பிள்ளைகளையும் இனத்தவர்களையும் படுகொலை செய்து பழிவாங்கினான். இந்தப் படுகொலை மக்களுக்கு பயத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

இதோடு மட்டும் நிறுத்தாமல் 1808ம் ஆண்டு எட்டு கோரல்லாக்களில் ஏற்பட்ட புரட்சிகளை விசாரணை செய்ய ஆரம்பித்தான். மன்னனுக்கு பல பிரச்சினைகள் தோன்றத் தொடங்கியது. பிரபுக்களுக்கு அவனது போக்கு பிடிக்கவில்லை. தமது உயிருக்கும் எந்த நேரமும் ஆபத்து ஏற்படலாம் என்ற பயம் அவர்களை பீடித்துக்கொண்டது. மூன்று கோரல்லாக்களில் பத்து பிரித்தானிய வணிகர்கள் உளவாளிகள் என குற்றம் சாட்டி அடித்து துன்புறுத்தப்பட்டனர். ஏழு வணிகர்கள் மரணத்தை தழுவினர். இந்த சம்பவமே 1815ம் ஆண்டு பிரித்தானியர் கண்டி மேல் படையெடுப்பு நடத்த முக்கிய காரணமாக இருந்தது. கொழும்பு, காலி, திருகோணமலை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து படைகள் கண்டியை நோக்கி முன்னேறின. பிரித்தானியரின் படையெடுப்புக்கு எகலப்பொல துணைபோனார். நாயக்கர் மன்னனுக்கு எதிராக கண்டி இராச்சியத்தின் பிரபுக்களினதும் மக்களினதும் எதிர்ப்பு பிரித்தானியருக்கு சாதகமாக அமைந்தது. மொலகொடை தனது பகுதியில் பிரித்தானியருக்கு எதிராக எதிர்த்து நின்று போரிட்டாலும் அவர்களுடைய எதிர்ப்பை சமாளிக்க அவரால் முடியவில்லை.

1815ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பிரித்தானியரால் சிறை பிடிக்கப்பட்டான். கொழும்பில் இருந்த தேசாதிபதி பிறவுன்ரிக் என்பவருக்கு மன்னன் கைதான செய்தி எட்டியபோது அவர் துயரத்தில் கண்ணீர்விட்டதாக சரித்திர எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். காரணம் பல வருடங்களாக இருந்து வந்த இலங்கைத் தீவின் சுதந்திரம் முற்றாகப் பறிபோனதேயாம்.

## இராணி ரங்கம்மாள்.

நாயக்கர் வம்சத்தை சேர்ந்த மன்னனின் பட்டத்தரசி ரங்கம்மாள் அழகானவள். நாயக்கர் வம்சத்திலிருந்து வந்து கண்டியை ஆண்ட மன்னர்கள் புத்திசாலிகள். நாட்டோடு ஒத்துப்போவதற்காக சிங்கள மொழியைக் கற்று பௌத்தர்களானார்கள். இராஜாதி இராஜசிங்கன் சிங்களத்தில் நூல்கள் எழுதி யதாகவும் வரலாறு சொல்கிறது. கண்டி இராச்சியம் பிரித்தானியர் கைகளில் விழுந்தவுடன் தெல்தெனியாவுக்கு அருகேயுள்ள நான்கு பக்கமும் மலைகளால் சூழ்ந்த பகுதியான மத்திய மகாநுவர என்ற பகுதியில் போமுறே உடப்பிட்டி ஆராச்சிக்கே என்பவர் வீட்டில் மன்னரும் குடும்பமும் பதுங்கிக் கொண்டது. நல்ல இடிமின்னலுடன் மழை பெய்யும்போது வீட்டை எகலப்பொலவும் அவரது ஆட்களும் சூழ்ந்து கொண்டனர். தன் மனைவியையும் குழந்தைகளையும் மன்னன் கண்டி ஏரியில் மூழ்கடித்து கொலைசெய்ததற்காக அவர்களை பழிவாங்கவே அவன் அங்கு வந்திருந்தான். மன்னனையும் இராணி ரங்கம்மாளையும் அரை நிர்வாணமாக்கி அடித்துத் துன்புறுத்தினர். ராணியையும் மன்னனையும் முழு நிர்வாணமாக்கி கண்டிக்கு நடத்தி அழைத்து செல்ல திட்டமிட்டிருந்தபோது John D Oyley என்ற பிரித்தானிய தளபதியின் தலையீட்டினால் மன்னன் காப்பாற்றப்பட்டு, மன்னரையும் இராணியையும் அவர்கள் குடும்பத்தினரையும் இரகசியமாக கொழும்புக்கு அழைத்து சென்று பின்னர் கப்பலில் வேலூருக்கு நாடு கடத்தினர்.

## நாயக்கர் வம்சத்தின் முடிவு

தேசாதிபதி ரொபர்ட் பிறவுன்ரிக் (இன்றும் இவர் பெயரால் கொழும்பில் ஒரு வீதியுண்டு) தலைமையில் 1815ம் ஆண்டு மார்ச் 2ம் திகதி கண்டி இராச்சியத்தின் அதிகாரிகளுடன் ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டது. அதில் கையொப்பமிட்ட அதிகாரிகளில் இருவர் தமிழில் கையொப்பமிட்டனர். டொன் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா முதலியார் (முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் பூட்டனார்) மொழிபெயர்பாளராக கடமையாற்றினார். 1816ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதி கொனவோலிஸ் என்ற கப்பலில் சென்னைக்கு குடும்பம் சகிதம் நாடுகடத்தப்பட்டார். மைசூரில் இருந்த திப்பு சுல்தானின் மகன் ஹைதர் அலியின் அரண் மனையில் சுமார் தனது 60 இனத்தவர்களுடன் 52 வயது வரை வாழ்ந்து 1832ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி வேலூரில் உயிர்நீத்தார். ஆறடி இரண்டங்குல உயரமும் கருமை நிறமுமுள்ள மன்னன் 17 வருடங்கள் கண்டியை ஆட்சி புரிந்தான். இவனோடு கண்டி நாயக்கர் சாம்ராஜ்யத்தின் கதை முடிவடைந்தது. இவனது அஸ்தி பார்ந்தியல் கரைக்கப்பட்டது. இவர் நினைவாக இன்று ஒரு கல்லறை வேலூரில் உண்டு.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■


SCORE A HONDA EVENT
The Honda Hat Trick: Quality, Reliability, Safety.
Civic EX-L Sedan model FA1E0AJNX
Purchase Financing as low as 0.9%†
FOR 5 YEARS
Civic DX Sedan model FA1E2AEX
2010 CIVIC DX
TURN-KEY PRICE‡ $17,420
For Civic DX Sedan
Includes Freight & Fees
LEASE FOR /APR $148# @2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $3,726 DOWN
ON APPROVED CREDIT
Accord LX Sedan model CP2E3AE
2010 ACCORD LX
TURN-KEY PRICE‡ $26,475
For Accord LX Sedan
Includes Freight & Fees
LEASE FOR /APR $248# @2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $5,286 DOWN
ON APPROVED CREDIT
CR-V LX 2WD model RE3H3AEY
2010 CR-V LX 2WD
TURN-KEY PRICE‡ $28,015
For CR-V LX 2WD
Includes Freight & Fees
LEASE FOR /APR $268# @2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $5,083 DOWN
ON APPROVED CREDIT
FIND OUT WHAT HONDA OWNERS ALREADY KNOW
LOW COST OF OWNERSHIP • HIGH RESALE VALUE • AFFORDABLE • RELIABLE
FUEL EFFICIENT • ADVANCED SAFETY • FUN TO DRIVE!
HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
#Limited time lease offers based on new 2010 Honda models. Lease examples based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX / 2010 Accord LX Sedan, model CP2E3AE / 2010 CR-V LX 2WD, model RE3H3AEY available through Honda Financial Services on approved credit. £2.9% / 2.9% / 2.9% lease APR for 48 / 48 / 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148 / $248 / $268. Down payment or equivalent trade of $3,726 / $5,286 / $5,083, first monthly payment and $0 / $0 / $0 security deposit due at lease inception. Total lease obligation is $12,237.90 / $19,559.70 / $20,415.11. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Limited time financing offers based on new 2010 Honda models. Finance example based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX available through Honda Financial Services on approved credit. ‡MSRP is $17,420 (TURN-KEY PRICE includes $1,430 freight and PDI, and environmental and OMVIC fees) financed at 0.9% APR equals $297.02 per month for 60 months. Cost of borrowing is $401.43 for a total obligation of $17,821.43. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. MSRP is $26,475 / $28,015 / $24,210 for a new 2010 Accord LX Sedan, model CP2E3AE / 2010 CR-V LX 2WD, model RE3H3AEY / Civic EX-L Sedan, model FA1E0AJNX including $1,685 / $1,725 / $1,430 freight and fees. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. #/£/†Offers valid from March 2nd, 2010 through March 31st, 2010 at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers. Offers subject to change or cancellation without notice. See your Honda retailer for full details. NHL and the NHL Shield are registered trademarks of the National Hockey League. ©NHL 2010. All rights reserved.

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

For a limited time government will pay rebate for insulating your attic

**Federal (750) + Provincial (750) + Toronto (200) = $1700**

from existing R-12 insulation to raise it up to R50

GET UPTO $1700

**How can attic insulation help me?**

- -Reduce the heat loss through attic
- -Save on heating & cooling cost
- -Prevent roof rot and mold in a well
- -insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.


**Call for no obligation free quote**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer




# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# ‘தாய்வீடு’ பத்திரிகை ஒன்றுகூடலிலிருந்து சில பதிவுகள்...



# ‘தாய்வீடு’ ஒன்றுகூடல்

தாய்வீடு இதழின் எழுத்தாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் சந்திப்பு மார்ச் மாதம் 20ஆம் நாள் மார்க்கம்/கிங்ஸ்ரன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள Scarborough Village Recreation Centreஇல் நடைபெற்றது.

தாய்வீடு பத்திரிகை தொடர்பான விமர்சனங்களை எழுத்தாளர்களிடமிருந்து உள்வாங்கவும் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளவும் எழுத்தாளரிடையேயான அறிமுகத்தை ஏற்படுத்துமுகமாகவும் இந்த வருடாந்தச் சந்திப்பு நடைபெற்று வருகின்றது.

பெரும்பாலான எழுத்தாளர்கள் வருகை தந்திருந்தனர். ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு, மாலை 4.30 மணிக்கு சிற்றுண்டி உபசாரத்துடன் நிகழ்வு தொடங்கிற்று. சைவ, அசைவ உணவு வகைகளைக் கல் கீஸ் உணவகத்தினர் பரிமாறியிருந்தனர். சூழல் மாசடைதலைத் குறைக்கும் முகமாக மீள் பாவனைக்குகந்த உணவுத் தட்டுக்கள், உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டன.

மண்டபத்தில் கடந்த 15 தாய்வீடு இதழ்களின் முகப்புப் பக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தாய்வீடு பத்திரிகையின் கடந்த இதழ்கள் சிலவும் கிடைக்கக்கூடியனவாயுமிருந்தன.

சிற்றுண்டி வேளையின்போது எழுத்தாளர்கள் தமக்குள் அறிமுகமாகிக்கொண்டும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் நலம் விசாரித்தும் அளவளாவிக்கொண்டனர்.

மாலை 5.00 மணிக்கு தாய்வீடு பத்திரிகையின் ஆலோசகர்களில் ஒருவரான பொன்னையா விவேகானந்தனின் தலைமையில் நிகழ்வு தொடங்கியது. அகவணக்கத்தினைத் தொடர்ந்து தாய்வீடு பத்திரிகையின் ஆசிரியர் பி.ஜே.டிலிப்குமார், கடந்த சந்திப்பு நிகழ்விலிருந்து இன்று வரையான நிகழ்வுகள் மற்றும் மாற்றங்கள் குறித்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

தாய்வீடு இதழின் ஆலோசனைக் குழுவினர் பற்றிய அறிமுகமொன்றினைத் தொடர்ந்து, தாய்வீடு இதழோடு இணைந்து அதன் வளர்ச்சியில் பங்குகொள்ளும் அனைத்துத் தரப்பினர் பற்றியும் குறிப்பிட்டார் ஆசிரியர்.

இந்தச் சந்திப்புக்காகவே இங்கிலாந்திலிருந்து ஓவியர் கிருஷ்ணராஜா வருகை தந்திருந்தார்.

முகப்புக் கட்டுரை, பொருளடக்கம், தாய்வீடு இதழ் முன்னோட்டச் சுவரொட்டி, இலக்கியப் பக்கங்கள், தாய்வீடு இதழுக்காக வரையப்படும் ஓவியங்கள், இணையத் தளத்தில் தாய்வீடு, Facebookஇல் தாய்வீடு இரசிகர் பக்கம் என தாய்வீடு இதழின் வளர்ச்சி அம்சங்கள் பட்டியலிடப்பட்டன.

அடுத்து, தாய்வீடு எழுத்தாளர் அனைவரும் தம்மை அறிமுகம் செய்துகொண்டனர். தொடர்ந்து இந்தச் சந்திப்பின் சிறப்பு நிகழ்வாக எழுத்தாளர்களுக்குப் பயன்தரக்கூடிய விடயமாக, அனுபவம்வாய்ந்த ஊடகவியலாளரும் வின்சர் பல்கலைக்கழக சமூகவியல், மானுடவியல் பேராசிரியருமான கவிஞர் சேரன், ‘இதழியல் - எழுத்து’ எனும் பொருளில் உரையொன்றை ஆற்றினார். அவ்வுரையைத் தொடர்ந்து அது தொடர்பான கேள்விகளுக்கும் கவிஞர் சேரன் விடையளித்தார். (சேரனின் உரையின் ஒரு பகுதி 61ஆம் பக்கத்தில் உள்ளது)

ஒரு சிறு இடைவேளையைத் தொடர்ந்து, தாய்வீடு எழுத்தாளர்கள் தாய்வீடு இதழ் பற்றிய தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். பல ஆரோக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.




தாய்வீடு இதழின் எழுத்தாளர்கள் சந்திப்பு இரவு 8.00 மணிக்கு நிறைவுற்றது.

தாய்வீடு இதழின் வளர்ச்சிக்கு இவ்வாறான சந்திப்புக்கள் உறுதுணையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இந்நிகழ்வுக்கு Credit Solution Center சிறீ வல்லிபுரநாதர் அனுசரணை வழங்கியிருந்தார்.

தாய்வீடு ஆசிரியர்குழு சார்பாக

கந்தசாமி கங்காதரன்

■ ■ ■


# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

## Mortgage Life Insurance

**வங்கிக் கடன் காப்புறுதி**

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

**லண்டன் லைஃப் காப்புறுதி**

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மீண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

# சிந்திக்கச் சில நிமிடம்

குறித்த நேரத்திற்கு விழாக்களுக்கும், வைபவங்களுக்கும் வருகை தராதவர்களுக்காக, ஆரம்பிக்கும் நேரத்தையும், முடிவுசெய்யும் நேரத்தையும் பின்தள்ளுவது குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தந்தவர்களை தண்டிப்பதாகவும், அவமதிப்பதாகவும் அமையும்.

•

திருமணம், திருமணநாள், புத்தகவெளியீடு, பூப்புனித நீராட்டு, பிறந்தநாள், போன்ற வைபவங்களை நடத்துபவர்கள், பல ஆய்வு, ஆராய்ச்சி, வெட்டுக்கொத்துகளின் பின் பட்டியல் இட்டு முக்கியமானவர்களை மட்டும் அழைக்கிறார்கள். அழைக்கப்பட்டவர்கள் தங்களை அழைத்து கௌரவப்படுத்தி இருக்கிறார்கள் என்று கருதாமல் பண விரையம் என்று சலித்துக்கொண்டும், விழாக்கள் கூடிப் பேச்சு என்று அலட்டிக் கொண்டும், வைபவங்களுக்குப் போவதிலும் பார்க்க போகாமல்விடுவது மேல்.

•

நன்றாகப் பராமரிக்கப்பட்டு இருக்கவேண்டும், நல்ல சுத்தமாக இருக்கவேண்டும். நாலு படுக்கை அறை, இரண்டு கார்விட இரண்டு கராஜ் (garage) என்று பல தேடல்களின் பின் பிடித்த வீடு ஒன்றை வாங்குகிறோம். வாங்கிய பின் இரண்டு அறைகளும் இரண்டு கராஜ்சும் Store room ஆகிவிடும் வாகனம் இரண்டும் பனியிலும் வெயிலிலும் வெளியே நிற்கும். சுத்தம், பராமரிப்பு சுத்தமாக இருக்-



காது. வாங்கும்போது காட்டிய அக்கறை வாங்கிய பின் பராமரிப்பதில் இருக்க வேண்டும். வீடு ஒரு உதாரணம்.

•

திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டில் இருந்து ஒருவரும், பெண் வீட்டில் இருந்து ஒருவரும், வீடுவீடாகச் சென்று விருந்து உண்டு அழைப்பு விடுத்த காலத்தில் ஆரம்பித்து, பின்னர் அழைப்பிதழ் அச்சிட்டு வீடுவீடாகக் கொடுத்த காலம், பின்னர் அழைப்பிதழ் தபால் மூலம் அனுப்பிய காலம், பின்னர் தொலைபேசி மூலம் அழைத்த காலம் இப்பொழுது மின் அஞ்சல் மூலம் அழைக்கிறோம். நேரடித்தொடர்பு குறைந்து, அழைக்கும் வேகத்தில் முன்னேற்றம் கண்டுவிட்டோம். ஆனால் அழைப்பை ஏற்று திருமணத்திற்கு குறித்த நேரத்திற்கு வருகை தரும் வேகம் குறைந்து கொண்டு போகிறதே.

•

ஒருவர் உங்களிடம் வந்து உங்களைப் பற்றி புகழும்போதும் மற்றவர் பற்றிக் குறை கூறும்போதும், ஆவர்வம் காட்டுவதையும் சந்தோஷப்படுவதையும், தூபம் இடுவதையும் தவிர்ப்பது நன்று. செலவில்லாத இந்த பழக்கத்தைத் தன் தேவைக்கு உங்களைப் பயன்படுத்தும் ஆயுதமாக்கி விடுவார். இப்படியானவர்கள் வேறு ஒருவரிடம் பயன் பெற உங்களைப் பற்றி குறைகூறத் தயங்கமாட்டார்.

•

எந்த விடயம் பற்றியும் எப்படி என்றாலும்

**- கதிர் துரைசிங்கம் -**

எவ்வளவு நேரமும் பேசக் கூடிய ஆற்றலை நாம் நன்றாக வளர்த்துக்கொண்டோம். ஆனால் எவர் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும் எவ்வளவு சொன்னாலும் கேட்கும் பொறுமையையும், விளங்கும் ஆற்றலையும் இழந்து வருகிறோம்.

•

நெல்லை விதைத்தால் நெற்பயிராக வளர வாய்ப்பு உண்டு. ஆனால் நெற்பொரி அல்லது அரிசி பயிராக முளைக்க வாய்ப்பே இல்லை. நெற்பொரி போல் அல்லது அரிசி போல் இந்த ஆன்மா மறு விறவி எடுக்காமல் இறைவன் அடி சேரவேண்டும் என்ற வாக்கைக்கூறி இறந்தவரின் நெஞ்சில் சிறிதளவு நெற்பொரி அல்லது அரிசி இட்டுப் பிரார்த்திக்கும் சடங்கு 'வாக்கரிசி' எனப்பட்டது. இது மருவி 'வாய்க் கரிசி' போடல் ஆனது மட்டுமன்றி "எனக்கு அன்னம் இட்ட உனக்கு அரிசியாகப் போட வேண்டி இருக்கே" என்ற வாக்கையும் சில வேளைகளில் சொல்ல வைக்கிறது.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

# நானும் ஒரு 'கலாபூஷணம்'தான்!

**இப்படியும் மனிதர்கள் - 4**



**'சோக்கெல்லோ' சண்முகம்**

இது இலங்கை அரசினால் கொடுக்கப்படுகின்ற கலைஞர்களுக்கான ஒரு விருது. சான்றிதழும் இலங்கைக்காசில் பத்தாயிரமும் மட்டுமே - இதைத்தேடிப் பெறுபவர்களும் உண்டு. கலைஞர்களை பட்டங்கள் வீடு தேடி வருவதும் உண்டு. நான் இரண்டாவது வகை என்று சொன்னால் அது பொய். நான் தேடித்திரிந்து அரும்பாடுபட்டுப்பெற்றது இது. வைத்திய கலாநிதி, பொறியியலாளர், மஹாவித்துவான், சைவப்புலவர், பண்டிதர் இவைகள் படித்துப் பெறவேண்டிய பட்டங்கள். படிக்காமலும் பெறுவதற்கு வழியுண்டு, கோபிக்காதீர்கள். போலிகளையே சொன்னேன்.

நான் கலாபூஷணம் பெற்ற கதைக்கு வருகிறேன். இதற்கு என படிவம் உண்டு, தமிழிலும் சிங்களத்திலும். நான் தமிழ்க் கலைஞன் என்பதால் தமிழில் படிவத்தை நிரப்பி கையெழுத்திட்டு நான் வாழ்ந்த வத்தளைக் கிராம சேவகரிடம் கொண்டு சென்று சிபார்சு செய்யும்படி கேட்டேன். "கலைஞன்" என்றால் என்ன என்று அவர் கேட்ட கேள்வி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இரண்டாவதாக அவர் சொன்னது "தமிழ் எனக்குத் தெரியாது சிங்களத்தில் படிவத்தை நிரப்பிக்கொண்டு வா" என்பது. இந்த இரண்டு விபத்துக்களையும் நான் சிரமப்பட்டு தாண்டினேன். நாடகங்கள் கலை நிகழ்ச்சிகள் அடங்கிய என்னுடைய அல்பத்தை கிராமசேவகரிடம் சமர்ப்பித்து அந்தத் தடையை தாண்டினேன். கிராமசேவகருக்கு நன்கு அறிமுகமான ஒருவரைக் கொண்டு தமிழை சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சொல்லி அந்தத் தடையையும் தாண்டினேன். கிராமசேவகருக்கு சத்தியமாகச் சொல்கிறேன் பணம் எதுவும் கொடுக்கவில்லை. அவர் கேட்கவுமில்லை. கலைஞன் என்றால் ஏழை என்று அவருக்கு தெரிந்திருந்ததோ என்னவோ? படிவம் பெறுவதில் சிரமம் இருக்கவில்லை. இந்து சமய கலாசார திணைக்களம், கலாசார அமைச்சின் ஓர் அங்கம். வயதைக் கேட்டுவிட்டு படிவத்தைத் தந்துவிட்டது. கலாபூஷணம் விருது பெறுவதற்கு வயது அறுபதைத் தாண்டியிருக்க-வேண்டும். ஐம்பது ஐம்பத்தைந்து வயதுடையவர்கள் கலாபூஷணம் பெற்றிருக்கிறார்கள். தொண்ணூறு வயதைத்தாண்டியவர்களும் (பிறவிக் கலைஞர்களுட்பட) இன்னும் கலாபூஷணம் பெறாதிருக்கிறார்கள். இது அவரவரது திறமையை, கூடுவிட்டு கூடு பாயும் கலைத்திறமைகளைப் பொறுத்தது.

கிராம சேவகரது சிபார்சு பெற்ற நான் வத்தளையிலுள்ள பிரதேச சபைத் செயலாளரை இரண்டு தினங்களாகத்தேடித் திரிந்து அவரது கையெழுத்தை வாங்கினேன். அவர் எந்தவித பிகுவும் பண்ணாமல் என்னை நிமிர்ந்து பார்த்தார். கிராமசேவகரது இலச்சினையையும் கையெழுத்தையும் பார்த்தார். சிரித்துக்கொண்டே கையெழுத்திட்டார். கிழவன் கலாபூஷணத்திற்கு ஆசைப்படுகிறது என்று நினைத்திருப்பார். அவருக்கு உள் இரகசியம் தெரியாது.

சில தினங்களின்பின் என்னுடைய பயணம் கம்பஹா நோக்கிப் புறப்பட்டது. அங்குதான் கச்சேரி என்ற அரசாங்க அதிபரின் காரியாலயம் எல்லாம் இருந்தது. அரசாங்க அதிபரின் கையெழுத்தும் இந்தக் கலாபூஷணத்திற்குத் தேவை. காரியாலய வாசலில் நந்தி என்னை வழிமறித்துச் சொன்னது. "இன்று போய் நாளை வா" என்று. அரசாங்க அதிபர் மகாநாட்டில் இருக்கிறாராம். மானம் ரோசம் அனைத்தையும் இழந்து அடுத்த நாள் போனேன். 'பியோன்', அப்படிச்சொல்லக் கூடாது அவரும் ஒரு அரசாங்க அதிபரைப்போல்தான் நடந்து கொண்டார். அவர் என்னுடைய விண்ணப்பப் படிவம் எல்லாவற்றையும் உள்ளே கொண்டு சென்று அரசாங்க அதிபரின் இலச்சினை எல்லாவற்றையும் போட்டு, ஒப்பமும் வாங்கி வந்தார். அரசாங்க அதிபருக்குப் பதிலாக ஒப்பம் இவரே போட்டிருப்பாரா? இருக்கவே இருக்காது. அரசாங்க அதிபர் என்னைப் பார்க்க விரும்பவில்லை. வருஷாவருஷம் அவர் என்னைப்போல் எத்தனை எத்தனை கலாபூஷணங்களைப் பார்த்திருப்பார். அவ்வளவுதான்.

கலாபூஷணம் பெறுவதற்கான நடவடிக்கைகளில் கால்பங்குதான் இதுவரை நடந்தேறியுள்ளது. இன்னும் முக்கால் கிணறு நான் தாண்ட வேண்டும். இனித்தான் பெரிய பெரிய தலைகளின் கைவண்ணத்தை நாம் காணவேண்டும்.

என்னுடைய கலாபூஷண சிபார்சுகளுடன் இந்து கலாச்சாரத் திணைகளம் நோக்கி நடந்தேன். அங்கு இதற்கு பொறுப்பானவரிடம் என்னுடைய விண்ணப்பப் படிவத்தை சிபார்சுகளுடன் ஒப்படைத்தேன். அவர் சரியென்று தலையாட்டினார். எனக்குத் திருப்தி இல்லை நின்று தயங்கினேன். அவர் கேள்விக்குறியோடு என்னைப் பார்த்தார். சென்ற வருடம் என்னுடைய விண்ணப்பம் இங்கே தவறிவிட்டது என்றேன். அவர் நமட்டுச் சிரிப்புடன் இம்முறை தவறாது என்று சொன்னார். என்னுடைய கலாபூஷணத்தைக் குப்பைக் கூடைக்குள் போட்டவர் கலைஞர், எம்மவர், ஒரு பெண் இவ்வளவும் காணும்.

இந்து கலாச்சார திணைக்களத்தில் ஒரு புத்தி ஜீவிகள் குழு அந்த வருடத்திற்குரிய கலாபூஷணங்களைத் தெரிவு செய்யும். பின்கதவு வேலைகளும் நடக்கும். இடைச்செருகல்களும் இருக்கும். அமைச்சர்களின் சிபாரிசுகளும் இருக்கும். எழுபத்து மூன்று வயது இந்த மனிதனும் கலாபூஷண பித்து தலைக்கேறி அலைந்து திரிந்தது. அடுத்த படலம் கலாசார அமைச்சரைக் காணும் படலம். உண்மையில் அவரை இதற்கு முன் நான் சந்தித்ததில்லை. கலாசார அமைச்சரைத் தெரியாமல், கலைஞனாக இருக்க முடியாது-தான். நான் என் செய்வேன் கச்சி ஏகம்பனே!

கம்பஹா மாவட்டத்தில் தொண்ணூற்றைந்து வயதுடன் இன்றும் வாழ்கின்ற ஒரு இடதுசாரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரை எனக்கு நன்கு தெரியும், அவரை அணுகினேன். அவர் சிரித்து விட்டு உன்னை நான் கலாசார அமைச்சருக்கு சிபாரிசு செய்கிறேன் என்று சொல்லி சிபாரிசும் செய்து விட்டார். அவருடைய கதையைப் பார்த்தால் கலாபூஷண விருது வெள்ளைச் செல்லிக்கு (அக்கால குறைந்ததொகை நாணயம்) இரண்டு என்ற மாதிரி இருந்தது. எனக்கு நம்பிக்கையில்லை. இது ஒரு பல்லுப்போன சிங்கம். இந்தக் கிழவனை அவர்கள் மதிப்பார்களா? என்று கவலைப்பட்டேன். இதில் ஒரு உண்மையைச் சொல்லவேண்டும். 1963ஆம் ஆண்டு அதாவது நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு யாழ் மாநகரசபை முற்றவெளி திறந்த வெளிக் கலையரங்கில் பௌர்ணமிக் கலைவிழாவில் நடைபெற்ற சோக்கெல்லோ சண்முகம் கதம்ப நிகழ்வுக்கு தலைமை வகித்தவர் எஸ்.டி என்ற இந்த இரண்டெழுத்து மனிதர். கலாபூஷணம் விருதுக்காக நான் நன்றியுள்ள அந்த மிருகம் போல அலைவதாக எஸ்.டி என்ற அந்த மூதறிஞர் நினைத்திருக்கக் கூடும். உண்மையை இவர் எங்கே அறியப் போகின்றார்.

சில மாதங்களின்பின் நானும் இந்த வருடத்தின் "கலாபூஷணம்" என்று செய்தி கசியத் தொடங்கியது. பத்திரிகைகளிலும் செய்தி வந்தது. நான் பூரித்துப் போனேன். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். பட்டம் கிடைப்பதினால் அல்ல. பத்தாயிரம் பணம் கிடைப்பதினால். இது எனக்கு சில பிரச்சினைகளைத் தீர்க்கும். நான் அலைந்து திரிந்தது இதற்காகத் தான். நானும் ஒரு கலாபூஷணந்தான் என்று இன்றுதான் உங்களுக்குச் சொல்கின்றேன். மக்களால் தரப்பட்ட பட்டம் "சோக்கெல்லோ சண்முகம்" அது எனக்குப் போதும்.

sanmuganathan@thaiveedu.com

■ ■ ■

www.thaiveedu.com


# INCOME TAX

**Keele & Finch**
1315 Finch Ave. West, Unit 407
647-885-3012

**Markham & Denision**
23 Taplane Dr.
416-494-4777

**LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE**
**NON MEDICAL INSURANCE | RESP | RRSP**

- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance



Apex Creations - 416-297-0707

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்
**647-885-3012**

LILAND INSURANCE INC. | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்









Over **50 Years** Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

## FIREMAN WOLFE LLP
PERSONAL INJURY LAWYERS
CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
**MOTOR VEHICLE ACCIDENT**
**FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY**
**SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH**

**உங்களுக்குத் தெரியுமா?**
விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**
விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**


**தீபன்**
Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)

**(416) 505-9804**

இலவச ஆலோசனைகளுக்கு:
24 Hours Direct Line **(416) 624-4751**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்
"One of the best personal injury law firm in Ontario"

TORONTO SCARBOROUGH MISSISSAUGA



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**William C. Wolfe B.A. LLB**
Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO **$1,000.00** IRB'S PER WEEK
வரை இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**DONMILS & SHEPPARD**
3 bedroom house for rent
Pathi: 416 502 8053

**WARDEN & FINCH**
1 bedroom walk out basement
Abraham : 416 300 1122

**MARKHAM & ELLESMERE**
10 tuxedo court
1 bedroom rent
Mrs. Thiyagaraja:416 430 0140

**NEILSON & MCLEVIN**
1 bedroom walkout basement for rent
Nathan: 416 831 8549

**KENNEDY & FINCH**
1 bedroom basement
Panchan: 416 291 9305

**NEILSON & MCLEVIN**
3 bedroom house
Thushi: 647 500 1343

**MARKHAM**
4 bedroom house
Mrs.ranjan:647 801 5501

**NEAR SQUARE ONE MALL**
house for rent
3 bedrooms upstairs
2 bedrooms downstairs
Thurairajah:905 949 1075

**MARKHAM & ELLSON**
2 bedroom basement
Sutha: 905294 5868, 416 686 4859

**MCCOWAN & DENISION**
3 bedroom house for rent
Eswary:905 209 1744, 647 885 4135

**MARKHAM & STEELE**
2 bedroom basement
Ambikai: 647 896 8687

**NEILSON & MORNINGSIDE**
2 bedroom basement
Latha: 416-299-6950  416 219 4491

**NEILSON & MCLEVIN**
1 bedroom for rent basement
Vani: 647-427-7747

**HIGHWAY 50 & HIGHWAY7**
Condo 2 room for rent
Kumar: 416 400 2222

**KIPLING & REXDALE**
2 bedroom basement
Mano: 416 746 5018

**MARKHAM & ELLESEMERE**
2 bedroom basement
Sri:  416 430 0455

**BRIMLEY & LAWRENCE**
1 bedroom basement
Nirmala: 416-298-9767

**DONMILS & SHEPPARD**
3 bedroom for rent upper level
Pathi: 416-502-8053

**APARTMENT WANTED**
416-804-3220

**GTA SQUARE MALL**
1 unit for rent
Kumar: 416-885-9556

## AUTO

**1994 HONDA ACC**
165km
Yogarajah: 416-451-6895

**2002 TOYOTA SIENNA**
Kumar: 647-456-3144

**2000 TOYOTA CAMRY**
Sri: 416-823-3552

**1994 HONDA ACC**
Selvaratnam: 416-201-2792

**99 TOYOTA COROLLA**
$ 3900
Selvam: 647-998-2870

**2006 HONDA CIVIC**
$ 11,250
Kiruban: 416-456-6022, 416-321-9685

**98 TOYOTA CAMRY**
2002 GMC Safari
Arulananthan: 416-266-7794

NEW HOUSE FOR RENT

**NEILSON & FINCE**

3 Bedrooms House for Rent

Sivaraj:
**416 659 5536**

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

## OTHERS

**TUITION**
math/ science
Ragi: 647-456-9332

**STOVE FOR SALE**
Yalini: 905-794-3814

**FOR JOBS**
Esan: 647-896-2634

**PAINTING & PLUMPING**
Babu: 647-836-3647

**DAY CARE**
Victoria Park and Ellesmere
Sakunthala – 416-439-5405

**வீடு விற்பனைக்கு**

யாழ் / சுண்டுக்குழியில்
3 1/2 பரப்புக் காணி
வீட்டுடன்
விற்பணைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
647 400 2739

# துயர் பகிர்வோம்



### திருமதி. சுந்தரலிங்கம் நாகமுத்து

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் நாகமுத்து அவர்கள் 13.03.2010 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற குருநாதர் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை கமலாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், சுந்தரலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும், கலைவாணி, சத்தியபாமா, கமலாகரன், நாகபூசணி, தயாநிதி, உமாதேவி, கிருபா ஐயாத்துரை ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகலிங்கம், தனிநாயகம், யோகமலர், குகநேசன், அகிலன், சர்வேஸ்வரன், நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அம்பிகைரூபன், அம்பிகை, சிவமங்கை, ராம்காந், துஷிகாந், நிவேதா, அபிரா, தனுஷா, அனுஷியா, ஆர்த்தி, ஜனனி, ரதீபன், ரதீசன், சரண்யா, சங்கவி, பிரதீப், காவியா, கேதீஸ்வரன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், அட்ஷயாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு 14.03.2010 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்று,

| | | |
|---|---|---|
| உமாதேவி சர்வேஸ்வரன் | சுவிஸ் | 4131 992 0063 |
| கமலாகரன் | நோர்வே | 477 014 8148 |
| தனிநாயகம் | இலங்கை | 9421 222 7632 |



### திரு. ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை அவர்கள் 04.03.2010 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் ஞானஅமிர்தம் தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான வேதநாயகம் மரியப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக்கணவரும், பெனற்றாஜ், றாஜிவி (ஜேர்மனி), மொறிஸ், காலஞ்சென்ற றதினி, யஸ்ரின், ஆன்வைலற் ஆகியோரின் அன்புத் தந்தையும், பபா, சாள்ஸ் (ஜேர்மனி), றோகினி, கமலவேணி, கொலின் ஆகியோரின் அன்புமாமனாரும், டயானா, டினேஷினி, தெதன்ஸ் டெனிஸ் (ஜேர்மனி), பியங்கா, றெபேக்கா (ஜேர்மனி), பெனிக்கா, டெனிஸ் (ஜேர்மனி), அல்வியோன், ஜினல், எய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும், அல்பேட், ராசதுரை, துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிலோமினா, அருமைநாயகம்(இலங்கை), செல்லமணி, லீலா, கிளி(இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 08.03.2010 அன்று கனடாவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| பெனற்றாஜ் | கனடா | 1416 508 1173 |
| ராஜிவி | ஜெர்மனி | 49244 491 1214 |
| மொறிஸ் | கனடா | 1416 319 1318 |
| வைலற் | கனடா | 1416 567 5444 |



### திரு. சண்முகம் சதாசிவம் (சேவியர்)

புங்குடுதீவு(மேற்கு), 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சதாசிவம் (ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரர், ஏற்றுமதி - இறக்குமதி பொறுப்பாளர்) அவர்கள் 13.03.2010 அன்று திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு அன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், அருள்ராணி (கனடா), இந்திராணி (கனடா), மோகனதாஸ் (கனடா), விவேகானந்தன் (கனடா), காலஞ்சென்ற சிவஞானசோதி (ஜேர்மனி), மனோகரதாஸ் (பிரான்ஸ்), ஜீவதாஸ் (பிரான்ஸ்), சிறிதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், காலஞ்சென்ற குகநேசன் - சாந்தா (கனடா), கமலா (கனடா), சுபா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சஞ்சயன், ஸ்ரீபன், மயூரன், பிரியா, உமா, சங்கீதா, சரண்யா, பிறீத்திவி, பிறீத்திகா, பிறீஸ் ரீபன், பிறீஸ் ரீனா, அனுசா ஆகியோரின் அன்புப் பேரனும், கனிக்ஷன், சனூசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

| | | |
|---|---|---|
| மனைவி | கனடா | 1416 439 0617 |
| ராணி | கனடா | 1416 879 6450 |
| மோகன் | கனடா | 1416 438 7229 |
| செல்வன் | கனடா | 1905 495 6842 |
| மனோ | பிரான்ஸ் | 3361 407 7831 |

# நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்

தொடர் 2

- ஞானம் லேம்பட் -

நாட்கள் செல்லச் செல்ல இயன்முறைக் காரணகாரிய சிந்தனை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயிற்று. இச்சிந்தனை மாற்றம் காரணமாகச் சில சடங்கு முறைகள் கைவிடப்பட்டும், சிலவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டும் மெருகூட்டல் நடைபெறலாயிற்று. சமயச் சடங்குகளினூடாக வளர்ந்த புராணக் கதைகள் வாய்மொழி பழக்க வழக்கங்களாகவும் செயற்பாட்டுச் சடங்குகளாகவும் ஆகின. இச்செயற்பாட்டுச் சடங்குகளே நாடகத்தின் ஆரம்பப்படி எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இதை மறுக்கும் ஆய்வாளர்களும் உள்ளனர், இதனை பின்னர் பார்க்கலாம். மாறுதல்கள் பெற்ற சடங்கு முறைகளில் அழகியலும் பொழுதுபோக்குத் தன்மையும் சேரவே இறையுணர்வும் சமூகப் பழக்க வழக்கங்களும் மறைந்து சில சடங்குமுறைகள் உருவாயிற்று.

பல ஆய்வாளர்களின் ஆய்வுப்படி கி.மு 30,000 ஆண்டுகளுக்கு முன்னரே சடங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. கி.மு 20,000 ஆண்டுகளுக்கு முன்னரே மலைக்குகைகளில் தம் உணர்வுகளைச் சித்திரங்கள் மூலம் பதிவு செய்யலாயினர். அன்றைய மக்கள் தங்கள் செய்திறனையும் (Skills), பொழுதுபோக்கையும் (Habits) ஒழுங்குபடுத்தி விரிவுசெய்யவே நாகரீகம் தொடங்கலாயிற்று.

கி.மு 900ஆம் நூற்றாண்டளவில் காட்டு மிருகங்களை வீட்டு மிருகங்களாக வளர்க்கத் தொடங்கினர். கி.மு 700ஆம் நூற்றாண்டளவில் தானியங்களைப் பயிரிடத் தொடங்கினர். கி.மு 650ஆம் நூற்றாண்டளவில் பானைகள் செய்யத் தொடங்கினான். உணவுக்காக வேட்டையாடி நாடோடிகளாய்த் திரிந்த மனிதன், நின்று நிலையான இடத்தில் மிருகங்களை வளர்த்தும், தானியங்களைப் பயிரிட்டும் வாழத் தொடங்கினான். இந்த நிரந்தரக் குடியேற்றம் மொசப்பத்தேமியாவில் யூப்றிஸ் நதிகளைச் சுற்றியும், எகிப்தில் நைல் நதியைச் சுற்றியும் நடந்தது.

கி.மு 3500ஆம் ஆண்டுக்கும் கி.மு 3000ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் யூப்றிஸ், ரைக்றிஸ் நதியை அண்டிய மொசப்பத்தேமியாவிலும், நைல் நதியை அண்டிய எகிப்திலும் நகரங்கள் உருவாகிற்று. அதனைத் தொடர்ந்து 2500ஆண்டளவில் மத்திய கிழக்கும், எகிப்தும் நாகரீகத்தின் மையமாக இருந்து வந்துள்ளன. எழுத்து முறைகளும் ஞாபகச் சின்னங்களும் இக்காலகட்டத்திலேயே தொடங்கின எனக் கூறப்படுகின்றது.

எகிப்தின் புராணக்கதைகள் வாழ்க்கைச் சக்கரமான பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, மறுபிறப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன. இக்கதைகள் கடவுளின் பிறப்பு வளர்ப்பு, தங்களுக்குள் போரிட்டு மடிந்தமை, மறுபிறப்பு என்பவற்றை கருவாகக் கொண்டன. இக்கடவுளரின் பிரதிநிதிகளாக தமது மன்னர்களை (Pharohs)க் கருதினர்.

நாகரீகம் வளர்ந்த முக்கியமான நைல்நதி வெளிகளில் ஒருவித சமயச்சடங்கு அல்லது சமய நாடகம் நடந்ததற்கான சான்றுகள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இப்படியான சடங்கு அல்லது நாடகங்களில் Osiris என்ற கடவுள் அல்லது மன்னன் (எகிப்து நாட்டின் மன்னர்கள் கடவுளின் மறு அவதாரம் எனக் கருதப்பட்டார்கள்) பற்றிய சடங்கு அல்லது நாடகம் முக்கியமானது. இது அபிடோஸ் பாடுகளின் நாடகம் (Abydos Passion Play) என அழைக்கப்படுகின்றது. இந்நாடகம் அல்லது நிகழ்வு பற்றிய குறிப்பு கி.மு 2000 ஆண்டுகளில் பதிவாகியுள்ளதாக ஆய்வார்கள் கூறுகின்றார்கள்.

எகிப்திய புராணக்கதையின்படி ஓசிரிஸ் (Osiris) என்பார், நிலம் (Geb) வானம் (Nut) ஆகியோருடைய மகனாவார். இவர் தனது சகோதரியான ஐசிஸ் (Isis) என்பாளைத் திருமணஞ் செய்து தனது நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தகாலை, அவனது சகோதரனான செற் (Set) என்பவனால் கொலை செய்யப்பட்டான். பின்னர் அவனது உடலைத் துண்டுகளாக வெட்டி நாட்டின் பல பாகங்களிலும் வீசி எறிந்தான். ஆனால் Osirisஇன் மனைவி Isis என்பாள் அனுபிஸ் (Anubis) என்பவரின் உதவியுடன் அவ்வுடற் துண்டங்களை ஒன்று சேர்க்க, இவ்வுடற்துண்டங்களுக்கு Jackal-god எனும் பிணத்தைப் பாதுகாக்கும் கடவுள் Osirisஇற்கு உயிர் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் (Osiris) இவ்வுலகில் தொடர்ந்து சீவிக்க முடியாமல் இறந்து போகவே அவரது உடல் Abydos எனும் இடத்தில் புதைக்கப்பட்டது. இதன் பின் Osiris ஆவிகளின் நீதிபதியானார்.

சிலகாலம் செல்ல osirisஇன் மகன் கோறஸ் (Horus), set உடன் சண்டை பிடித்து ஆட்சியை மீளக் கைப்பற்றினான். இது எகிப்தின் தெய்வீகத் தன்மை பொருந்திய ஒரு புராணக்கதையாகும்.

எகிப்தின் மிகப்புனிதமான இடமாகக் கருதப்படும் Abydos எனும் இடத்தில் கி.மு 2500 தொடக்கம் கி.மு 500 வரை வருடாவருடம் இச்சடங்கு Abydos Passion Play என வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இருந்த போதிலும் ஆராய்ச்சியாளரிடையே இது பற்றிய கருத்து முரண்பாடுகள் உள்ளன.

Abydos Passion Play எனும் சடங்கில் Osiris மன்னனின் வாழ்க்கை வரலாறு, போர், அவரின் கொலை, மரணச் சடங்குகள் என்பன அடங்கும். இச்சடங்கின் பிரதான பாத்திரத்தை மதகுரு ஏற்க ஏனைய பாத்திரங்களை ஊர் மக்கள் ஏற்று சடங்கை நிகழ்த்துவர். இச் சடங்கு பலவாரங்கள் அல்லது பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இச்சடங்கு இறந்துபோன எல்லா மன்னர்களின் இறப்புகளை நினைவுறுத்தும் சடங்கு எனச் சில ஆய்வாளர்கள் கூறுவர்.

Usertsen III என்ற அரசன் I-kher-nefer என்பவனை Abydos என்ற இடத்திற்கு அனுப்பி Osirisஇன் நினைவாக ஒரு கோயில் கட்டி இச்சடங்குகளை நடாத்த ஒழுங்குகள் மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கான ஆதாரம் பேர்லின் (Berlin) நூதனச்சாலையில் பாதுகாக்கப்பட்டுள்ளதாக வெலிஸ் பட்ஜ் என்பார் கூறுகிறார். இந்தக் கோயில் ஒரு படகும் கட்டப்பட்டு Osiris மன்னர் எதிரிகளோடு போரிடப் படையெடுத்துச் சென்றதை நினைவுறுத்தும் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது.

இச்சடங்கு முதலிலே ஊர்வலமாகத் தொடங்கும். இவ்வூர்வலத்தில் குருமார் முதலில் செல்ல அவர்களைத் தொடர்ந்து அவர்களது உதவி ஆட்களும், பக்தர் கூட்டமும், போர் வீரர்களும் செல்வார்கள். இந்த ஊர்வலத்தில் Usertsen III என்பவனால் கட்டப்பட்ட படகும் எடுத்துச் செல்லப்படும். இப்படகு எடுத்துச் செல்லப்படும்போது இதற்குப் போர் வீரர்கள் பாதுகாப்பு அளிப்பர். இவ்வூர்வல இடைத்தூரம் சென்றதும் Osiris மன்னனின் எதிரிகளாக வேடம் ஏற்றோர் ஊர்வலத்தை மறித்து படகையும் போர் வீரர்களையும் தாக்குவார்கள். இப்போரின் போது Osirisஇன் எதிராளிகள் தோற்கடிக்கப்படுவார்கள். இப்போர் இரண்டு மூன்று தடவைகள் நடைபெறும். இச்சடங்கு தொடர்ந்து நடைபெறுகையில் மக்களுக்கு இடைவேளை ஒன்றுவிடப்படும். இவ்விடைவேளை Osirisஇன் உடலைத் தேடிக் கண்டுபிடிக்கும் காலமாகக் கணிக்கப்படும். இது மூன்று நாட்கள் நடைபெறும். கண்டு பிடிக்கப்பட்ட உடலம் படகில் வைக்கப்பட்டு $1^{1/2}$ மைல் தூரத்திலுள்ள ஊர்வலம் தொடங்கிய Abydosஐ வந்தடையும். பின்னர் அவரது மறுபிறப்பு கொண்டாடப்படும்.

எகிப்து நாட்டில் நடந்த இச்சடங்குகளை மட்டுமல்ல அவற்றுக்கான காரணிகளையும் ஆய்ந்து நாடகத்துக்கான தன்மைகளை விரிவாக ஆராயலாம்.

எகிப்து மத்திய கிழக்கு நாகரீகங்களுடன் கிறீஸ்நாடு மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தது. கி.மு. 484 - 425இல் எகிப்துக்கு விஜயம் செய்த கிரேக்க சரித்திராசிரியர் கீறோடோரஸ் (Herodotus) கி.மு 450ஆம் ஆண்டுகளில் டைனோய்சஸ் (Dionysus) கடவுளை மகிமைப்படுத்தும் சடங்குகள் கிரேக்கத்தில் அறிமுகப் படுத்தப்பட்டதாகச் சொல்கிறார்.

கிரேக்கத்தின் மீது எகிப்தின் பாதிப்பு மிக அதிகமாகக் காணப்பட்டபோதும் இருநாட்டிலும் நடைமுறைச் சம்பிரதாயங்கள் வேறுபட்டே காணப்பட்டன. எகிப்தியர்கள் மாற்றங்களை மறுத்த Static சமூகத்தவர்களானபடியால் எகிப்திய நாகரீகம் 3000 ஆண்டுகள் நீடித்த போதும் அவர்களது சடங்குமுறைகள் பெரிய மாற்றத்துக்குள்ளாகவில்லை. மாறாக கிரேக்க நாட்டில் சடங்குமுறைகள் மாறி நாடகங்கள் வளரலாயின என்பர் மானிடவியலாளர்





உசாத்துணை:

The Cambridge guide to Theatre: Banham, Martin
Myth and Literature : John B. Vickery
Ritual Theory, Ritual Practice : Bell Catherine
The Myth and Ritual Theory : Robert A.Segal
The Golden Bough: James Frazer
Mask, Mimes and Miracles: Allardyce Nicoll
The Origin of Drama: Ivor Brown
UR-Drama The Origin of Theatre: E.T.Kirby
History of the Theatre: Brockett G. Oscar

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com


கேளுங்கோ கேளுங்கோ
ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்
இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!
கலசம்
www.KALASAM.com
தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

# சிந்துவெளி நாகரீகம்

## (ஹறப்பா - மொஹஞ்சதாரோ நாகரீகம்)

### தொடர்...

முருகேசு பாக்கியநாதன்



தமிழ் இனம் என்பவர்கள் யார்? அந்த இனம் எப்போது தோன்றிய இனம்? தமிழ் மொழி எக்காலத்தே தோற்றம் பெற்றது? அவர்களின் வாழ்க்கை எவ்வாறாக அமைந்தது? மேற்கூறப்பட்ட வினாக்களுக்கெல்லாம் காணப்பட்ட விடைகளாகவே சிந்துவெளி நாகரீகம் பற்றிய எண்ணக்கரு மூலம் முதலில் ஆங்கிலேயராலும் வேறு வெளிநாட்டு ஆராச்சி-யாளர்களாலும் இந்திய அறிஞர்களாலும் வெளிடப்பட்ட கருத்துக்களும் ஆய்யுரைக-ளும் தொல்லியல் ஆய்வுகளும் அமைந்தன. எனினும் அங்கு திராவிடர்கள் வாழவில்லை, அவர்கள் வேறு இனம் அவர்கள் பேசிய மொழி தமிழ் அல்ல அது ஆரியம் சார்ந்த மொழி என்ற கருத்துக்களை சொல்லுவோரும் உண்டு. இவைகள் யாவற்றையும் ஆராந்து சரியான கருத்துரைகளை வெளியிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாள்ஸ் மேசன் என்ற ஆங்கிலேயர் பாகிஸ்-தான் பலுகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பஞ்-சாப் போன்ற பிரதேசங்களுக்குச் பிரயாணம் செய்தது பற்றி 1942ம் ஆண்டில் எழுதிய தனது பயணக் கட்டுரையில் மிகப்பழைய மனிதக் குடியிருப்புக்கள் அப்பகுதியில் புதை-யுண்டு காணப்பட்டதாக குறிப்பிடுகின்றார். இது பற்றி அங்கு உள்ளூர் வாசிகளிடம் கேட்டு அறிந்தது பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவர் இதனை எதுவித புதைபொருள் ஆராச்சி நோக்கமும் கொண்டு தெரிவிக்காத ஒரு பயணக் கட்டுரையின் விவரணமாகவே விபரித்துள்ளார்.

1856ல் கராச்சிக்கும் லாகூருக்கும் இடையேயான புகையிதத் தண்டவாளப் பாதையினை அமைக்கும் பொருட்டு கிழக்கு இந்திய ரயில்வே கொம்பனி ஜோன் மற்றும் வில்லியம் என்ற இரண்டு பொறியியலாளர்களை அப்-பகுதிக்கு அனுப்பினார்கள். அவர்களுக்கு உள்ளூர் வாசிகள் அப்பகுதியில் பழைய குடியிருப்புக்களின் கட்டிடங்கள் புதையுண்-டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர்களும் ரயில் பாதையினை அமைக்க நிலத்தினைத் துப்பரவு செய்தபோது அங்கு நன்றாகச் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட மிகப்பழைய கட்டிடங்கள் புதையுண்டிருப்பதனைக் கண்-டார்கள். இப்பிரதேசம் உள்ளூர் மக்களால் பிரமினாபாட் என அழைக்கப்பட்ட பிரதேச-மாகும். தொடந்து வடக்கு நோக்கித் தமது வேலைகளைச் செய்து கொண்டு போகும்-போது ஹறப்பா என்னும் பிரதேசத்தில் புதை-யுண்டிருந்த செங்கற்களை அகழ்ந்தெடுத்து உள்ளூர் மக்கள் தாம் பாவிப்பதனைக் கண்டனர். இங்கு தொடர்ச்சியாக இப்பிரதே-சத்தில் 150 கிலோ மீற்றர் வரையான தூரத்திற்கு பழைய கட்டிடங்களும் பழைய பாதைகளின் அழிவுச்சின்னங்களைக் கண்டனர்.

### சிந்துவெளி எனும் பெயர் அமையக் காரணமும் அதன் அமைவிடமும்

சிந்து நதியின் ஆற்றுப்படுக்கையின் இருகரை-யிலும் அமைந்த சமவெளிகளில் இக்குடியி-ருப்புக்கள் அமைந்திருந்தன. சிந்துநதியானது பெரும்பாகமாக தற்போதைய பாகிஸ்தானிலும் பலுகிஸ்தான் வரை நீண்டு அமைந்திருந்தது. அத்தோடு மொஹஞ்சதாரோ, ஹறப்பா, குஜராத், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப் ருபூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக விருந்தது. சிந்துநதியினை அண்டியிருந்த பல நதிகளின் படுக்கைகளை அண்டியும் அதாவது கோமல் ஆறு, ஒக்சஸ் ஆறு, ரவி ஆறு, சரஸ்வதி ஆறு ஆகியன முக்கிய-மானவையாவும். பாகிஸ்தானின் தற்போதைய நகரங்களான கராச்சி, ராவல்பிண்டி, ஆகியன அடங்கும்.

இந்த நாகரீத்தினை பல பெயர்கள் கொண்டு அழைப்பர். சிந்துவெளி, நாகரீகம், ஹறப்பா - மொஹஞ்சதாரோ நாகரீகம், சரஸ்வதி நாகரீகம் எனப் பல பெயர்களில் அழைப்பர்.

தொடர்ந்து 1872-75 காலப் பகுதியில் தவறான



அகழ்வாராச்சியின்போது 6000 ஆண்டுகளுக்கு முன் நிலத்தடியில் புதையுண்ட திராவிடக் கட்டடத் தொகுதியின் ஒருபகுதி





பாகிஸ்தானின் தற்போதைய படமும் சிந்து நதியினைச் சுற்றியுள்ள ஹறப்பா, மொஹஞ்சதாரோ பிரதேசங்களும்





கண்டெடுக்கப்பட்ட தமிழ் பிராமி எழுத்துக்களின் ஒருசில



சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட உலோக நகைகள்

பிராமி எழுத்து வடிவங்களுடன் அலெஸ்சான்டர் கன்னிங்காம் என்பவர் ஹறப்பாவில் கண்-டெடுத்த முத்திரையினை வெளியிட்டார். மேலும் 1912ல் ஜே.பிளீட் என்பவர் உண்மை-யான ஒரு ஹறப்பன் முத்திரையினைக் கண்டுபிடித்தார்.

இற்றைக்கு கிமு.6000 ஆண்டிற்கு முன்பு இருந்த திராவிடர்களின் நாகரீகம் பற்றிய முதல் அறிதல் பற்றிய எண்ணக்கரு 1922ல் ஆங்கில நாட்டுத் தொல்லியலாளர் சேர் ஜோன் மாஷல் அவர்கள் தற்செயலாக தற்போதைய பாகிஸ்தானின் சிந்துநதியின் கரையோரங்களில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாய்வழிக் கிடைத்த ஆதாரங்-களையும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்ட தொல்லியல் சின்னங்களின் அடிப்-படையிலும் தொல்லியல் ஆராச்சி செய்த-போது செழித்தோங்கிய ஒரு மனித நாகரீகம் நிலத்துள் புதையுண்டு கிடந்ததனை முதலில் கண்டார். மொஹஞ்சதாரோ மற்றும் ஹறப்பா என்னும் இரு இடங்களைத் தோண்டி ஆராய்ந்-ததில் அழிந்து போன இரண்டு நகரங்கள் நிலத்தினுள் 60அடி ஆழத்தின் கீழ் புதையுண்டு கிடந்ததனையும் கண்டுபிடித்தார். இங்கு பாரியதொரு மனித நாகரீகத்தின் எச்ச சொச்சங்கள் நிலத்தினடியில் புதைந்து கிடந்ததனைக் கண்டார். அதன் பின்பே இந்நாகரீகம் பற்றிய ஆதாரபூர்வம் கருத்து-ருப்பெற்றது. இவ்விரு நகரங்களைப் போன்று 400 நகரங்களும் கிராமங்களும் செழித்து வளர்ந்த ஒரு சீர்மையான நாகரீகம் இருந்ததற்கான செய்திகள் வெளிப்பட்டன.

தொடர்ச்சியாக தெல்லியல் ஆராச்சி சேர் ஜோன் ஹப்பேட் மார்ஷல் தலைமையில் நடைபெற்றது. இவர்களோடு ராய் பகதுார், தயா ராம் ஷானி, மடோ சாரப் வற்ஸ், ஈ.ஜே.எச்.மக்கே, ராகுல் தாஸ் ஆகியோர் மொஹஞ்சாதாரோவில் 1931ல் தமது ஆராச்சி-களைச் செய்தனர். 1944ல் இந்திய தொல் பொருள் ஆராச்சி நிறுவனம் சேர் மோட்டிமர் வீலர் தலைமையின்கீழ் செயற்பட்டது. தொடர்ந்து 1947ல் அகமட் ஹசன் சானி, பர்ஜி பசாய் லால், நனி கோபால் மஜூம்டார் மற்றும் சேர் மார்க் உரால் ஸ்ரெய்ன் ஆகியோர் செயற்பட்டனர். இப்படி இதில் ஆரம்பத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியலினை இங்கு கூறுவதன் நோக்கம் இதில் ஆங்கிலேயர்களின் ஈடுபாட்டினையும் அவர்களோடு சேர்ந்து வடஇந்திய இந்துகளும் வடஇந்திய முஸலிம் களும் ஆய்வில் ஈடுபட்டார்கள் என்பதனைக் குறிப்பிடவேயாகும். இதுவே பின்வரும் காலங்-களில் இங்கு செழித்தோங்கி வளர்ந்தது, திராவிடர்களின் நாகரீகமே என்பதனை பல அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளும் ஆதாரபூர்-வங்களை வழங்கியதென்பதாகும்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்கள், ஆதித்தமிழ் பிராமி எழுத்துக்ளைத் தாங்கிய மட்பாண்டங்களின் சிதைவுகள், எழுதுவதற்-கென்றே செய்யப்பட்ட களிமண் தட்டுக்கள், மண் மற்றும் உலேக உருவச்சிலைகள், அப்போது பாவிக்கப்பட்ட செப்பிலான நகைகள், நகரவமைப்புக்கள், சீர்படுத்திய நேர்சீரன வீதிகள், வடிகாலமைப்புக்கள் சீரான விவசாயம் செய்யப் பயன்படுத்திய பொருட்கள், போன்-றனவற்றை அங்கு கண்ணுற்றபோது இந்தி-யாவின் நாகரீகத்தின் தொட்டில் அங்குதான் தோன்றியது என்ற முடிவிற்கு அறிஞர்கள் வந்தனர்.

சிந்துவெளி ஆய்வினை முன்னெடுத்துச் சென்ற பம்பாய் வரலாற்று ஆராச்சி நிலை-யத்தில் ஆய்வு செய்த ( Fr. Heras ) ஹெராஸ் பாதிரியார் அவர்களே முதலில் இது தமிழர் களின் நாகரீகமென உலகிற்குக் கூறியவர். இவர் சீன நாகரீகத்தினையே சிந்து வெளியின் கிளை நாகரீகம் என்று வெளிப்படுத்தினார். பல சிந்து வெளி எழுத்துக்கள் சீன எழுத-துகளுக்கு வழிகாட்டியாகும் எனவும். தமிழுக்-கும் சீனத்திற்கும் உள்ள தொடர்புகள் பற்றி ‘சீனம் என்ற செந்தமிழ்’ என்ற கட்டுரையில் விரிவுபடக் கூறியுள்ளார்.

தமிழகத்திலும் ரஷ்யாவிலும் பின்லாந்திலும் செய்யப்பட்ட ஆராச்சிகள் சிந்து வெளியில் பேசப்பட்டது பழைய தமிழே (Proto Tamil) என்ற முடிவிற்கு வந்தனர்.

“உலகின் முதன்மை மொழிகள்” (The World Chief Languages ) என்னும் நூலை எழுதிய Mario A. Pei அவர்கள் சீனம், பர்மியம், சீயம், யப்பான், திபெத்தியம், கொரியன் ஆகிய மொழிகளுக்கு தமிழே மூலமாக இருக்கக் கூடியதற்கான சான்றுகளை முன்வைக்கின்-றார். இதன் பொருட்டு பல தமிழ் செற்கள் அந்தந்த மொழிகளில் பாவனையில் உள்ள தனைக் குறிப்பிடுகின்றார். அத்தோடு ஆரியர்-களின் வருகைக்கு முன்னர் ஆதித் தமிழே இந்தியா முழுவதும் பாவனையில் இருந்த மொழியாகும். ஆகவே சிந்துவெளி நாகரீ-கத்தில் மட்டுமல்ல இந்தியா முழுவதுமே ஆதித் தமிழே பாவனையில் இருந்தது.

திராவிடம் என்பதும் தமிழ் என்பதும் ஒன்றே அதாவது அதன் ஓசையின் பிறழ்ச்சியே தமிழ் என்பது திராவிடமாகியது. திராவிடம் என்ற சொல்லினைத் தமிழுக்குப் பதிலாக முதன் முதலாக திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதிய வீரமாமுனிவர் என்ற தமிழ் பெயரினைக் கொண்ட கால்டுவெல் பாதிரியாராவர். தமிழ் என்பது, தமிழ் – த்ரமிழ – த்ரமிட – திரபிட – திரவிட என்றும் இறுதியில் திராவிட எனறு மாறியதென்பர். இந்தியாவின் முதல் ஆரம்ப மொழி திரவிட-மாகவேயிருந்ததென்று பல மொழியிலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். முழு இந்தியா-விற்குமென இருந்த திராவிட மொழி ஆரிய வியாபகத்தின் பின்னர் தென்பகுதிக்குமென மட்டுப்படுத்தப்படுகின்றது. ஆரியரின் ஆக்கி-ரமிப்பின் பின்பே இந்தோ - ஆரியக்குடும்ப மொழியான சமஸ்கிருதம் தோன்றுகின்றது. ஆரியன் என்பவன் மத்தியாசியாவிருந்தும், ரஷ்யா, ஈரான் போன்ற இடங்களில் இருந்து வேட்டையாடவும் மந்தை மேய்கவும் உணவு தேடியும் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்தே வந்து பலுகிஸ்தானத்திலிருந்து பாகிஸ்தான் மற்றும் வடவிந்தியாவின் செழிப்பான பிரதே சங்களின் வாழ்ந்த திராவிட இனத்தை விரட்டி அடித்துவிட்டு தாம் குடியமர்ந்து கொள்ளு-கின்றார்கள்.

The Outline of History என்ற நூலை எழுதிய எச்.ஜி.வேல்ஸ் என்பவர் எழுதும் போது மரியோ. பி. பிய் அவர்கள் கூறிய கருத்தினை ஆதரித்ததோடுமட்டுல்லாது தமிழர்களின் நாகரீகம் சிந்துவெளியில் எப்படி சீரியதாக-விருந்ததென்பதனையும் அதனை ஆரியர்கள்

76ம் பக்கம் பார்க்க...

வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி
இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

**Save 1500$ to 6500$ per year**

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக
கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

* **Grade 1 - 12 Tutoring**
* **Kids & Adult Computer**
* **Western Music**
* **Indian Music**

*Further information visit -:* www.varnamonline.com

**You Can Learn From Your Home Face to Face ( Live )**

***Any Where in the World !!!***

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird

**Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884**

# ‘ஆண்மீகம்’ மட்டுமல்ல ஆன்மீகம்



- சத்குரு வாசுதேவ் -

பெண்களை பலவீனமானவர்கள் என்று கருதுகிற வழக்கம், உலகம் முழுவதுமே உள்ளது. உடலளவில் இயற்கையாகவே ஆண்கள் கூடுதலான பலம் பொருந்தியவர்கள். அவ்வளவு தான். ஆனால், எல்லா நிலைகளிலும் பெண்களை பலவீனமானவர்களாக சித்தரிக்கும் போக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளது. பெண்ணை மதிக்காத எந்த ஆணும் தன்னை உணர வழியே இல்லை. ஏனெனில் ஒவ்வோர் ஆணிலும் பெண்மையின் தன்மைகள் உண்டு.

இந்திய ஆன்மீக மரபில், தன்னையுணரும் உச்சநிலையை அடைவதில் அந்தக் காலங்களில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகவே இருந்திருக்கிறார்கள். உள்நிலை வளர்ச்சியில் ஆண்மை பெண்மை என்பதான வேதங்களுக்கு இடமே இல்லை. மேலே இருக்கும் தோலைத்தான் ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் காண்கிறீர்கள். கனியின் தன்மையை நிர்ணயிக்கப்போவது மேலே உள்ள தோலல்ல. ஆன்மீகம் கனிவதற்கு ஆண்தோல் - பெண்தோல் என்ற பேதங்கள் இல்லை. இயற்கையின் படைப்பில் உடலளவில் பெண்கள் பலவீனமாக கருதப்பட்டாலும் உளவியல் நிலையில் அவர்கள் மேம்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். வேத காலந்தொட்டு, எத்தனையோ பெண் துறவிகள் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலைகளை எட்டியிருக்கிறார்கள். வழிபாட்டு முறைகளிலேயே தொன்மையான வழிபாடு, தாய்வழிபாடுதான். இன்று கூட ஆண் தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வங்களை வழிபடுவது அதிகமாக இருப்பதற்கும் இந்த ஆதிமுறைதான் காரணம்.

> **“ பெண்ணாக இருப்பது தாழ்வானது என்று கருதுகிற பெண்தான் ஆணைப்போல் நடந்துகொள்ள ஆசை கொள்வாள். பெண், தன் முழுமையான பெண்மையில் முழு சுதந்திரத்துடன் வாழ்வதுதான் பெண் விடுதலை என்று சொல்லக்கூடியது. ”**

வேத காலங்களில் பிராமணர்களைப்போல பெண்களும் பூணூல் அணிந்திருந்தனர். ஏனெனில், பூணூல் அணியாமல் வேதங்களையும் உபநிபதங்களையும் பயிலக்கூடாது என்றொரு நியதி இருந்தது. அத்தகைய பெண்களில் ஒருவர், மைத்ரேயி.

தன்னையுணர்ந்தவராகவும் அரசராகவும் திகழ்ந்த ஜனகர், தன்னுடைய அரசவையில் ஆன்மீக மாநாடொன்றைக் கூட்டினார். ரிஷிகளும் முனிவர்களும் கூடி தங்களின் பேறிவையும் ஆன்மீக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக அந்த மாநாடு அமைந்தது. முனிவர்கள் மட்டுமின்றி வேதவிற்பன்னர்களும் அறிவிலும் ஆன்மீகத்திலும் உச்சந்தொட்டவர்களும் ஒன்றாகத் திரண்டிருந்தனர்.

விவாதங்கள் தொடங்கின. கூரிய அறிவின் எல்லையையும் தாண்டி, சூட்சுமமான நிலையை நோக்கி விவாதங்கள் நகரத் தொடங்கின. மிக நுட்பமான நிலை நோக்கி விவாதங்கள் உயர உயர, அதன் நுண்மையைத் தாக்குபிடிக்க முடியாதவர்கள் மெல்ல நழுவினர். தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டவர்கள் இரண்டே பேர்கள்தான். ஒருவர் மைத்ரேயி. இன்னொருவர் யக்ஞவால்கியர். ஆன்மீக சம்வாதங்களில் கடவுளர்களையே தோற்கடித்துக் கொடி நாட்டியவராகக் கருதப்பட்டவர் யக்ஞவால்கியார். அவர் ஞானத்தின் வரம்பு கண்டவர். அவருக்கும் மைத்ரேயிக்கும் இடையிலான சம்வாதம் நாட்கணக்கில் நீடித்தது. அவர்கள் எது குறித்துப் பேசுகிறார்கள் என்பது அந்த இருவரையும் தவிர ஒருவருக்கும் புரியாத அளவு உயர்ந்த தளத்தில் விவாதம் வளர்ந்துகொண்டே போனது.

ஒரு காலகட்டத்தில் மைத்ரேயி தொடுத்த வினாக்கள் மிகமிக சூட்சுமமாய் ஆகிவிட்ட நிலையில் அந்த வினாக்களை யக்ஞவால்கியர் பலவிதங்களில் தவிர்க்க முயன்றார். முடியாமல் போன நிலையில், தன்னை மறந்தவராக, “நிறுத்து! இதற்குமேல் ஒரு கேள்வி கேட்டாலும் உன்உடல் துண்டு துண்டாக வெடித்துச் சிதறும்” என்று கூச்சலிட்டார் யக்ஞவால்கியர். உடனே ஜனகர் தலையிட்டு, வாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். எப்படியென்றால், வென்றவருக்கான சன்மானத்தை மைத்ரேயிக்கு வழங்கினார் ஜனகர்.

தன் குறைபாட்டைப் புரிந்துகொண்ட யக்ஞவால்கியர், மைத்ரேயின் பாதங்களைப் பணிந்து தன்னை சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அப்போதுதான் யாரும் எதிர்பாராத ஒன்று நடந்தது. அவரை சீடராக ஏற்றுக் கொள்ள மைத்ரேயி மறுத்துவிட்டார். மாறாக, தன்னுடைய கணவராக ஏற்றுக் கொண்டார். காரணம், ஞானத்திலும், புரிதலும் மைத்ரேயிக்கு நிகராக வேறு யாருமே இல்லை. ஓரளவு நெருங்கி வந்தவர் யக்ஞவால்கியர் மட்டும்தான். இருவரும் இல்லறத்தில் இணைந்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு யக்ஞவால்கியர் தன்னிடம் இருக்கும் செல்வங்களையெல்லாம் மைத்ரேயி வசம் ஒப்படைத்துவிட்டு, தன்னை உணர்வதற்காக, வனங்களுக்குள் செல்ல முற்பட்டபோது, “இந்த அல்பமான செல்வங்களை நான் ஏற்பேன் என்று நீங்கள் எப்படி நினைத்தீர்கள்? உள்நிலைத் தேடலை நானும் மேற்கொள்ள வேண்டும்” என்றார். இருவரும் முழுமையான ஆன்மீக வாழ்வை மேற்கொண்டு, தம்மை உணர்ந்த ஞானியராய் வனங்களிடையே வாழ்ந்தார்கள்.

இப்படி பண்டைய பாரதத்தில் எத்தனையோ பெண்கள் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலைகளைத் தொட்டிருக்கிறார்கள். எல்லா விதத்திலும் முழுமைபெற்ற சமூகங்களில் பெண்மை மேலோங்கியிருப்பது இயல்பு. குறைந்தது ஆண்களுக்குப் பெண்கள் சமமாயிருப்பதாவது அத்தகைய சமூகங்களில் காணப்படும்.
கி.மு. 3000த்திலிருந்தே இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமான வாழ்வை நிகழ்த்தி வந்தார்கள். மங்கோயோ - மத்திய சீனா போன்ற பகுதிகளில் இருந்து, வாழ்வின் சூட்சுமமான அம்சங்களை அறிந்தேயிராத அளவு கொடூரமான வாழ்க்கை வாழ்ந்தவர்களின் படையெடுப்புக்குப் பிறகு பெண் தன் சுதந்திரத்தை இழக்கும் சூழல் ஏற்பட்டது. ஏனெனில், படையெடுத்து வந்தவர்கள் பொன்னை அபகரிப்பது போலவே பெண்ணையும் அபகரிக்கத் தொடங்கிய பிறகு பெண் பாதுகாக்கப்பட வேண்டியவர் ஆனாள். ஆணின் பாதுகாப்புக்குள் வாழத் தொடங்கியவள் ஆணின் கட்டுப்பாடுகளுக்கு ஆளானாள். சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் மாற்றி எழுதப்பட்டன. ஸ்மிருதிகள், வாழ்வின் அடிப்படை உண்மையை உணர்த்துபவை.

அடையாளங்களுக்கு அப்பாற்பட்ட அந்த நூல்களே மாற்றி எழுதப்பட்ட போது அவற்றின் பெரும்பகுதி பெண்களுக்கான கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தன. பெண் பூணூல் அணியக் கூடாது என்பதில் தொடங்கி, பெண்ணுக்கு மோட்சம் கிடையாது என்பதுவரை விதவிதமான வகைகளில் பெண்ணை பலவீனமானவளாக அவை சித்தரித்தன. எல்லாம் ஒன்று என்று அத்வைதம் பேசுபவர்கள் கூட பெண்களை 3 படி தாழ்வாகவே பார்த்தது விசித்திரம்.

வேத காலங்களில், குடும்பத்தை உருவாக்கும் சுதந்திரமும், உள்நிலையில் வளர்ந்த பிறகு குடும்பத்தை உதறும் சுதந்திரமும் பெண்களுக்கிருந்தது. காலப்போக்கில் பெண்களுக்கு துறவறம் மறுக்கப்பட்டது.

உறவோ, துறவோ, தன் வாழ்வை நிர்ணயித்துக் கொள்கிற உரிமை பெண்களின் கைகளிருந்து பிடுங்கப்பட்டுவிட்டது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் இதே நிலை தொடர்கிறது.

உயிர்களின் பிறப்புக்கு பெரும்பங்களிப்பைப் பெண் தருகிறாள். அதில் ஆணின்பங்கு சிறிதளவுதான். எனவே பிரபஞ்ச இயக்கம் பெண்ணைச் சார்ந்துதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், பெண்ணை ஆண் ஏற்க மறுப்பானென்றால், ஒன்று அவன் அறியாமையில் இருக்கவேண்டும்.

ஆலயத்தில் அம்பாள் முன்னர் விழுந்து வணங்குபவன், வீட்டில் மனைவியை அடித்து உதைத்தால் அது அறியாமை மட்டுமல்ல. அயோக்கியத்தனமும் கூட. இதற்கு மாற்று முயற்சி என்று கருதி, மேலை நாடுகளில் பெண்கள் ஆண்களைப் போல் நடந்துகொள்ள முயல்கிறார்கள். இது மிகவும் ஆபாசமானது. பெண்ணாக இருப்பது தாழ்வானது என்று கருதுகிற பெண்தான் ஆணைப்போல் நடந்து கொள்ள ஆசை கொள்வாள். பெண், தன் முழுமையான பெண்மையில் முழு சுதந்திரத்துடன் வாழ்வதுதான் பெண் விடுதலை என்று சொல்லக்கூடியது.

விவேகானந்தரிடம் சமூக சேவகர் ஒருவர் வந்து, “பெண் விடுதலைக்கு ஆதரவாக செயல்பட விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார். “நீங்கள் ஒன்றும் செய்யாமல் விலகி வழிவிட்டாலே போதும். தங்கள் விடுதலையைப் பெண்களே பார்த்துக் கொள்வார்கள்” என்றார் விவேகானந்தர்.

வாய்ப்புகளின் வாசல் திறக்கும் போது தன்னை பெண்ணே சீரமைத்துக் கொள்ளலாம். இப்போது அதற்கான சூழல் ஏற்பட்டு வருகிறது. பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை. இதையெல்லாம் பெண்கள் தாண்டி வரவேண்டும்.

சின்ன விஷயங்களில் எல்லாம் பெண் திருப்தியடைந்து விடுகிறாள் என்பது காலங்காலமாய் இருக்கும் கருத்துக்களில் ஒன்று. மைத்ரேயி தன் கணவரிடம் கேட்ட கேள்வியை எல்லாப் பெண்களுமே கேட்க வேண்டும். வாழ்வில் பெரிய இலட்சியங்களை நோக்கி பெண் நடக்கிற போதுதான் பெண்மை எந்த விதத்திலும் தாழ்ந்ததில்லை என்பதை உலகம் உணரும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# சிந்துவெளி நாகரீ...

74ம் பக்கத் தொடர்ச்சி...

அழித்தபோது இருந்த நிலையினைக் கூறும் போது “சிந்துவெளி நாகரீகத்தினை அழித்தவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் அத்துடன் காட்டுமிராண்டிகள்” என்றார் “This civilization was destroyed by an inversion of illiterate and barbarians”. ஆரிய மாயை எப்படியாக முழு இந்தியாவையும் இன்னும் ஆட்டிப் படைத்துக் கொண்டுள்ளது என்பதனை நோக்கும்போது பல வடவிந்திய இனங்கள் அத்துடன் பல வடமொழிக் குடும்பங்கள் தாமும் வடமொழியில் இருந்து பிறந்த மொழியாக இன்றும் பிதற்றிக் கொண்டும் தாமும் ஆரியர்கள் என்ற மாயையிலும் உளன்று கொண்டும் திரிகிறார்கள். இவர்கள் திராவிடத்தினை சிறுமையுடையவன் என்றும் தாம் மேலானவர்கள் என்றும் நினைக்குமளவிற்கு ஆரியமாயை வடஇந்தியர்களிடம் மட்டுமல்ல தமிழர்களாக இருக்கக்கூடி பிராமணர்களிடத்துக்கூட அத்தகைய எண்ணம் இன்றும் காணப்படுகின்றது. ஆனால் இவர்கள் தாம் தமிழராகவிருந்து மாறியவர்கள் என்பது பற்றிய எந்தவிதமான யோசனையுமில்லாமல், ஆரியர்களின் உண்மையான வழித்தோன்றல்களாக வடஇந்தியாவின் ஒரு பகுதியில் வழக்கூடிய சிந்திகள், பார்சிக்கள், மராட்டியர்களில் ஒருபகுதியினர், ஒருபகுதிப் பாகிஸ்தானியர்கள் போன்றோரை மட்டும் குறிப்பிட முடியும். ஆனால் குஜராத்திகளையும் ஒரியர்களையும் ஏனைய திராவிட இனத்தோற்றம் கொண்டவர்களையும் ஆரியர் என்ற இனத்திற்குள் அடக்க முடியாது.

எனினும் வடக்கே இன்னும் பிரகூய், (Brahui), பர்ஜி(Parji), நய்கி(Naiki), கோந்தி(Gondhi). கூ(Ku), மோல்டா(Malda), ஒரவன்(Oravan), கட்பா(Gadba), குர்க் Khurukh) ஆகிய மொழிகள் இன்றும் வடஇந்தியாவில் திராவிட மொழிகளாகவே அறியப்படுகின்றது. இந்த மக்கள் ஏனைய மக்களுடன் கலக்காமல் தனித்தன்மையுடன் வாழ்ந்த காரணத்தினாலேயே இம்மொழிகள் யாவும் திராவிட மொழிகளாக இன்னும் வாழுகின்றன. 1911ஆண்டில் எடுக்கப் பெற்ற அரச கணக்கெடுப்பின்போது இம்மொழிகள் திராவிட மொழிகளுடன் சேர்த்தே கணக்கெடுக்கப்பெற்றது.

ஆரியப் படையெடுப்பின்போது பெரும் பகுதியான மக்கள் தெற்கு நோக்கி நகர்ந்திருந்தாலும் பாதுகாப்பான மலைப்பாங்கான பகுதியில் பாதுகாப்பாக வாழ்ந்த மக்களே தாம் பேசிய மொழியினை தொடர்ந்தும் பேசி வந்ததாலேயே அவர்கள் பேசும் மொழிகள் திராவிடம் என அறியமுடிந்தது. பிரகூய் மொழி ஈரானின் பழங்குடி மக்களும் பலுகிஸ்தானின் ஒரு பகுதி மக்களும் பேசுகின்றார்கள். இன்றைய பாகிஸ்தானிலிருந்து பலுகிஸ்தான் வரையும் சிந்துவெளி நாகரீகம் பரவியிருந்தது.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

# ஒஸ்கார் விருது விழா 2010



குரு அரவிந்தன்

சென்ற மார்ச் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக் கிழமை (07-03-2010) அமெரிக்காவின் லொஸ்-ஏஞ்சலில் உள்ள கொடாக் தியேட்டரில் (Kodak Theater) ஹாலிவூட் திரையுலகின் முக்கிய விழாவான ஆஸ்கர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவை அரசு சார்பற்ற ஒரு நிறுவனமே நடத்துகின்றது. அக்கடமி ஒவ் மோஷன் பிக்சர்ஸ் ஆர்ட்ஸ் அன்ட் சயன்ஸ் (The Academy of Motion Picture Arts and Sciences) என்ற ஒரு தனிப்பட்ட அமெரிக்க நிறுவனம் தான் வருடாவருடம் ஏற்பாடு செய்கின்றது. இந்த நிறுவனத்தின் முதலாவது விருது வழங்கும் நிகழ்வு 1929ம் ஆண்டு இடம் பெற்றது. 1930ம் ஆண்டு தொடக்கம் இந்த நிகழ்ச்சி வானொலி மூலம் நேரடி ஒலிபரப்பு செய்யப்பட்டது. தொலைக் காட்சி மூலம் இந்த விழாவைப் பார்க்கக்கூடிய வசதிகள் அப்போது எல்லா ரசிகர்களுக்கும் கிடைக்கவில்லை. 1953ம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவில் மட்டுமே தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. காலப்போக்கில் செய்மதி மூலம் ஒளிபரப்பும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டதால், 1969ம் ஆண்டு முதல் உலகின் பல பாகங்களிலும் உள்ள சினிமா ரசிகர்களுக்கு இந்த விழாவைத் தொலைக்காட்சியில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. சென்ற ஆண்டு (2009) சுமார் 36மில்லியன் ரசிகர்களும், இந்த ஆண்டு (2010) சுமார் 41மில்லியன் ரசிகர்களும் தொலைக்காட்சி மூலம் இந்த விருது வழங்கும் விழாவைக் கண்டு களித்தார்களாம்.

சிறந்தபடம், சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த கதைவசனம் என்று பலதரப்பட்ட திரைப்படத் திறமைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இதைவிடச் சிறப்பு விருதுகளும் அவ்வப்போது வழங்கப்படுகின்றன. முதன் முதலாக 1927-1928ம் ஆண்டுக்கான சிறந்த நடிகருக்கான முதலாவது விருது எமில் ஜானிங்ஸ் (Emil Jannings) என்ற நடிகருக்கு 1929ம் ஆண்டு கிடைத்தது. முதன் முதலாக வழங்கப்பட்ட ஆஸ்கர் விருது இதுவாகும். 2009ம் ஆண்டு நடைபெற்ற விருது வழங்கலின் போது 2008ம் ஆண்டுக்கான பரிசு சீன் பென்னுக்குக் (Sean Penn) கிடைத்தது. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஏ.ஆர். ரஹ்மானுக்கு, ஸ்லம்டோக் மில்லியனார் (Slum Dog Millionair) என்ற படத்தின் சிறந்த பின்னணி இசைக்கும், சிறந்த பாடலுக்குமான விருதும் இதே ஆண்டு கிடைத்தது. இந்த விருதுகள் மூலம் ஆஸ்கர் விருது பெற்ற முதலாவது தமிழர் என்ற பெருமை அவரைச் சென்றடைந்தது. இதே படத்திற்காக சினிமாத்துறையைச் சேர்ந்த இந்தியர்களான குல்ஸார், ரசூல் பூக்குட்டி ஆகியோருக்கும் வெவ்வேறு துறைகளில் விருது கிடைத்தது. 1992ம் ஆண்டு இந்தியாவின் சிறந்த இயக்குனரான சத்யஜித்ரேக்கு சிறந்த சாதனையாளருக்கான ஆஸ்கர் விருது கிடைத்ததையும் இங்கே குறிப்பிடலாம்.

2009ம் ஆண்டு வெளிவந்த படங்களுக்கான 82வது அஸ்கர் அகடமி விருது வழங்கும் நிகழ்வு 2010 மார்ச் மாதத்தில் நடந்தது. பொதுவாக வருடந்தோறும் ஐந்து படங்களே இதுவரை நடந்த போட்டிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டன. ஆனால் இம்முறை பத்துப் படங்கள் போட்டிக்காகத் தெரிவாகின. கொடாக் தியேட்டரில் (Kodak Theater) நடந்த இந்த விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக ஸ்ரீவ் மாட்டீனும், (Steve Martin) அலிஸ் பால்ட்வினும் (Alec Baldwin ) கடமையாற்றினார்கள்.

அதிக விருதுகளுக்காக அவரார் (Avatar) என்ற படமும் த கேட் லொக்கர் (The Hurt Locker) என்ற படமும் போட்டிபோட்டன. அவரார் 230 கோடி டொலர் செலவில் மிகவும் பிரமாண்டமாக ‘3டி’ வசதிகளோடு எடுக்கப்பட்ட படமாகும். ஆனால் அவராரோடு போட்டி போட்ட த கேட் லொக்கர் 11 கோடி டொலர் செலவில் மட்டுமே எடுக்கப்பட்டது. என்னதான் பணத்தை வாரிக் கொட்டினாலும், தயாரிப்புச் செலவு குறைந்த படமான த கேட் லொக்கர் என்ற படந்தான் சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டு 2009ம் ஆண்டுக்கான விருதைத் தட்டிச் சென்றது.

த கேட் லொக்கர் (The Hurt Locker) என்ற படத்தின் நெறியாள்கைக்காக கதறீன் பிக்லோ (Kathryn Bigelow) சிறந்த நெறியாளர் என்ற பரிசைப் பெற்றுக் கொண்டார். ஆஸ்கர் சரித்திரத்தில் ஒரு பெண் நெறியாளர் விருது பெறுவது இதுவே முதற்தடவையாகும். இது வரை காலமும் இவரைவிட மூன்று பெண் நெறியாளர்கள் மட்டுமே நெறியாள்கைக்காகப் போட்டியிடத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (Sofia Coppola, Jane Campion, and Lina Wertmüller.) இப் பெண்கள் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டாலும், இவர்களில் எவருக்கும் அஸ்கர் விருது கிடைக்கவில்லை. இம்முறை த கேட் லொக்கர் என்ற படம் மொத்தமாக ஆறு விருதுகளைத் தட்டிச் சென்றது. திரைப்பட ரசிகர்கள் பலரின் எதிர்பார்ப்போடு இருந்த அவரார் படம் மூன்று விருதுகளை மட்டுமே பெற்றுக் கொண்டது.

கிறேசி ஹாட் (Crazy Heart) என்ற படத்தில் நாட்டுப்புற பாடகராக நடித்த ஜெவ் பிரிச் (Jeff Bridges) சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுக் கொண்டார். த பிலையிண்ட் சைட் (The Blind Side) என்ற படத்தில் தாயாக நடித்த சன்ரா புல்லொக் (Sandra Bullock) சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுக் கொண்டார். ஆபிரிக்கன் அமெரிக்கன் இனத்தைச் சேர்ந்த ஜெவ்றி பிளெச்சர் (Geoffrey Fletcher) என்பவருக்கு பிறீசியஸ் (Precious) என்ற படத்திற்கான சிறந்த வசனகர்த்தாவிற்கான (writing) பரிசு கிடைத்தது. சிறந்த பிறமொழிப் படத்திற்கான விருது ஆர்ஜன்ரைனா நாட்டுப் படத்திற்குக் (El Secreto de Sus Ojos, Argentina) கிடைத்தது.

இதுவரை ஆஸ்கர் போட்டிக்காக அதிக தடவைகள் (59) தெரிவு செய்யப்பட்டு, அதிக விருதுகளைத் (26) தட்டிச் சென்ற பெருமை வால்ட் டிஸ்னிக்கே (Walt Disney) உரியது. மேர்ல் ஸ்ரீப் (Meryl Streep) என்ற நடிகை அதிக தடவைகள் (16) போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்டாலும் இரண்டு தடவைகள் மட்டுமே ஆஸ்கர் விருது இவருக்குக் கிடைத்தது. இவரோடு ஒப்பிடும்போது, கதரீன் ஹெப்பேன் (Katharine Hepburn) என்ற நடிகை 4 தடவைகள் ஆஸ்கர் விருதைப் பெற்று சாதனை படைத்திருக்கிறார். இதுவரை சிறந்தபடம், சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த கதைவசனம் ஆகிய ஐந்து விருதுகளையும் பெற்ற பெருமை மூன்று படங்களுக்குரியது. இட் கப்பின் வண் நைட் (It Happened One Night) வண் புளு ஓவ த குக்கூஸ் நெஸ்ட் (One Flew Over The Cuckoo’s Nest) த சைலன்ஸ் ஒவ்த லாம்ப் (The Silence Of The Lambs) ஆகிய மூன்று படங்களே இப் பெருமையைத் தேடிக்கொண்டன. 83வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா 2011ல் இன்னும் சிறப்பாக நடைபெறும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■



# FEATURE HOME


House Front

## Steeles & Staines

Executive, Excellent 5 Bedroom Fully upgraded, Backing onto Ravine, Brick Built, 9' Ceiling, Upgraded 3 1/2" Strip Cabreuva exotic hardwood for Ground and 2nd Floor Oak Stairs with upgraded railing Double Detached Garage-direct access to home, Finished Basement-2 b/r, w/r & kitchen,

Extras: Stainless Steel (2 Fridges & 2 Stoves, B/I Dishwasher), Washer, Dryer, All Electrical Light Fixtures, Central Air Conditioning, Central Vacuum and all accessories, Humidifier, Electronic Air cleaner, Custom made California Shutters, Around $175,000 worth of upgrades


Living Room


Family Room


Hallway


Dining Room


Master Ensuite

**Lot Size:**
44.64' x 88.91' feet

**Taxes:**
$4,543 (2010)

**Price: $760,000**


Main Kitchen


Basement Kitchen

*Call:*

**Logan Velumailum**, B.Sc
Broker
Coldwell Banker Exceptional
Real Estate Services, Brokerage

COLDWELL BANKER



Direct #
416-410-1620
Office #
416-497-9794

ULTIMATE SERVICE

# எங்கள் தோப்புப் பனைமரம்

- பொ. கனகசபாபதி -

**பனை மரம் என்று நினைக்கின்ற பொழுது என் கண்ணில் தெரியுதொரு தோற்றம். குள்ளமான கரிய உருவம். வெள்ளை நிற நாசனல் சேட்டுடன் வேட்டியும் அணிந்து முகம் நிறைந்த புன்னகையுடன் நல்ல உள்ளம் கொண்ட ஒரு சீமான், தனிக்கவனமெடுத்து பனம் விதைகளை லொறிகளில் ஏற்றி வன்னி முழுதும் விதைத்த மில்க்வைற் கனகராசா அவர்களே. அவர் யாழ்ப்பாண மக்களின் நினைவில் நிற்க வேண்டியவர், மிகப் பெரியவர்.**

எமது வீட்டில் இருந்து ஒரு கூப்பிடு தூரத்தில்தான் நமது தோப்பு உள்ளது. தோப்பிலே பனை மரங்களும், வடலிகளும், இடையிடையே ஈச்சமரங்களும் எல்லையிலே ஒரு இலுப்பை மரமும் உள்ளன. அந்த இலுப்பை மரத்திலே ஓலை உமல்களாலான பொதிகள் பல தொங்கும். ஆடு, மாடு கன்று போட்டதும் அதன் இளங்கொடியை எடுத்து ஒரு உமலில் வைத்துக் கட்டி இந்த இலுப்பை மரத்தில் தொங்க விடுவார்கள். ஏன் அப்படிச் செய்தார்கள் என்பது இது நாள் வரை எனக்கு வெளிச்சமில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் ஈச்சமரங்களில், சாம்பல் பச்சை நிறத்தில் கூட்டிலைகள் அடர்த்தியாக பரந்து நிற்கும். கூட்டிலைகளுடைய சிற்றிலைகளின் சிறிய நுனியில் முள்ளும், கூட்டிலைக் காம்பின் அடியில் பெரிய முள்ளுமாக இருக்க, கூட்டிலைகளின் கக்கங்களிலே கருஞ்சிவப்பு நிறத்திலே காய்கள் ஒருங்கே சிறிய காம்புகளிலே குலைகுலையாக தெரிவது தீப்பந்தங்கள் போலக் காட்சிதரும். குலைகளிலே இடையிடையே கறுப்பு நிறத்திலே உள்ள பழுங்களைப் பிடுங்க நண்பர்கள் தோப்புக்குப் போவோம். “பாம்பு ஈச்சமரத்தின் அடியில் சுற்றியபடி இருக்கும் கவனம்” என்ற எச்சரிக்கை அம்மாவிடம் இருந்து வரும். ஆனால் அங்கே பாம்பினை ஒரு நாளும் நான் கண்டதில்லை. எனினும் தாராளமாக ஈச்சம் முள்ளு விரல்களைப் பதம் பார்த்துள்ளது. அதன் விளைவாக விரல்களில் காய்களும் தோன்றியதுண்டு. முற்றிய குலைகளை அப்படியே வெட்டி வந்து உப்பு நீர் தெளித்து வைத்து நாள் தோறும் தின்ற ஞாபகம் இன்றும் பசுமையாக இருக்கிறது. வாயுள் இனிக்கிறது.

நமது தோப்புக்கு எல்லை வேலி இல்லை. தோப்பு எமது என்றாலும் பலரது காலைக்கடன் உபயோகத்திற்கு அது பொதுவானது. எனவே, சுற்றாடலில் உள்ளோர் யாபேருக்கும் நமது தோப்பு பொதுச் சொத்து. காலை வேளையில் ஒன்றில் வேப்பங்குச்சியையோ, பூவரசுத் தடித்துண்டையோ வாயில் வைத்த படி அல்லது ஒரு சுருட்டினைப் புகைத்தபடி எமது ஊரவர்கள் பலர் தோப்பினை நோக்கி அவசர அவசரமாக போவார்கள். சிலர் ஒன்றாக ஊர்க்கதைகள் கதைத்தபடி சென்றாலும் தோப்பினை அண்டியதும் பிரிந்து வெவ்வேறு பனை அடியினை நாடிப் போய்விடுவார்கள்.

சமரசம் உலாவும் இடம் எனச் சுடுகாட்டினைச் சொல்வார்கள். ஆனால் அங்கேயும் சாதிப்பாகுபாடு இருக்கவே செய்தது. ஆனால் நமது தோப்பில்தான் உண்மையான சமரசம் உள்ளது என்பது காலை வேளைகளில் பனைமரங்களுக்குப் பின்னே குந்திக்கொண்டு உட்கார்ந்து இருப்பவர்களைப் பார்த்தால் தெரியும்.

Borassus flabellifer என்பது பனை மரத்தின் தாவரவியல் பெயர். ஆபிரிக்காவில்தான் பனை மரம் முதலில் உற்பத்தியானதாகச் சொல்வார்கள். நான் நைஜீரியாவிலும் பனையைக் கண்டுள்ளேன். ஆனால் அவை பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று கிளைகளைக் கொண்டவையாகவே காணப்பட்டன. ஆபிரிக்காவிலிருந்து தான் பனைமரம் ஏனைய நாடுகளுக்குப் பரவியதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தாலும் இன்று தென்கிழக்காசியாவிலேதான் பனை மரங்கள் அதிகம் உள்ளன.

எது எப்படியாயினும் ஒன்று மட்டும் உண்மை. யாழப்பாணத்தானுக்குத்தான் பனையின் ஒவ்வொரு பகுதியையும் தன் தேவைக்கு உபயோகித்த திறமை உண்டு. அதனால் தானோ பனைமரத்தினைக் கற்பக தரு என அழைத்தனர். பனைமரத்தில் இருந்து பெறப் படும் பொருட்களில் பனஞ்சாறு முக்கியமானது. அதில் பதனீரும், கள்ளும் போசாக்குச் சந்துடைய சாறுகளாகும்.

கமுகு, தென்னை, பனை ஆகிய மூன்றும் ஆங்கிலத்திலே Palm என அழைக்கப்படும் ஒரு வித்திலைத் (Monoocotyledonous) தாவர வகையினைச் சார்ந்தவை. ஆனால் இந்த மூன்றிலும் நல்ல பிள்ளையாக விளங்குவது பனை மரமே. கமுகுக்கு அதிகம் நீர் தேவை. இல்லாவிட்டால் பட்டுப்போய்விடும். தென்னை மரத்துக்கும் ஓரளவு நீர்த் தேவை உண்டு. ஆனால் பனைமரமோ என்றுமே நீரைப்பற்றிய கவலை இல்லாமல் பிரயோசனம் வழங்கியபடி நீண்டகாலம் நிலைத்து நிற்கும். கமுகினையும் தென்னையையும் உண்டாக்குவதற்கு எத்தனை முயற்சி எடுக்கிறோம். நாற்றும் போட்டு, நட்டுவளர்த்துப் பேணிப் பராமரிக்கிறோம். இப்படியான எந்த விதமான அக்கறையோ, அனுசரணையோ இல்லாமல் இன்னும் சொல்லப்போனால் வேசி பெற்ற பிள்ளை போன்றே பனை வளர்கிறது. வஞ்சகம் செய்ய அதற்குத் தெரியாது. இறக்கும் வரை உவந்து உதவுகிறது.



கடையாயர் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயர் தெங்கி னனையர் - தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தான்மை யுடையார் தொடர்பு.

(நாலடியார் - 216)

(நட்புக்கு உதாரணமாக இந்த மூன்று மரங்களும் மேற்கோள் காட்டப்படுகின்றன. கீழோர் கமுகு மரத்தினை ஒத்தவர்கள். இடைத்தரமானவர்கள் தென்னை மரத்தினை ஒத்தவர்கள். தொன்மையுடையார் தொடர்பு மதிப்பு மிக்க பனைமரத்தின் இயல்பினை ஒத்துள்ளது.)

தென்னையைப்போலவோ கமுகுவைப் போலவோ அல்லாது பனையில் இலிங்க வேறுபாடு உயர்தர விலங்குகள் போலிருப்பதைக் காணமுடியும். தென்னை, கமுகு ஆகிய மரங்களில் பூக்கள் ஓரிலிங்கம் (ஆண்பூ, பெண்பூ) உடையவையாயிருந்தாலும் அந்த இரண்டு வகைப் பூக்களும் ஒரே மஞ்சரியில் (inflorescence) காணப்படுகின்றன. ஆகவே ஒரு மரத்திலேயே இரண்டு வகைப் பூக்களும் காணப்படுகின்றன (Monoeceous). ஆனால் பனை அப்படி அல்ல ஆண்பூக்களும் பெண் பூக்களும் வேறு வேறு மஞ்சரிகளிலே காணப்படுவதோடல்லாமல் அவை வெவ்வேறு மரங்களிலேயும் காணப்படுகின்றன. ஆகவே பனை மரங்களிலே ஆண் பனை, பெண்பனை என இருவகையான மரங்கள் காணப்படுகின்றன. அதனை ஈரில்ல நிலை என்போம் (Dioeceous).

பூக்களைக் கொண்டுள்ள மஞ்சரிகளைப் பாளைகள் என்பார்கள். இப்பாளைகளைப் பதப்படுத்தியே கள் எடுப்பார்கள். இரண்டு வகைப் பனையிலும் கள் எடுக்கும் முறையில் சிறிது வேறுபாடு உள்ளது. பெண்பனையில் இளம்பாளையினைப் பதப்படுத்தி காய்களையும் பூக்களையும் சீவித்தள்ளி விடுவார்கள். இரும்புக் கம்பி அல்லது ஒரு இடிக்கி மூலம் பாளையைத் தட்டிப் பதப்படுத்தி இளையங்களை மென்மையாக்கிக் கள் எடுப்பார்கள் இந்த முறை தட்டுப்பனை முறை எனப்படும்.

ஆண்பனையில் பாளைகள் சிறிதாக வெளிவரும் பொழுதேயே அப்பாளைகளை முழுமையாக வெளிக் கொணருவதற்காக அதனைச் சுற்றியுள்ள கங்கு மட்டைகளை ஓலையுடன் அகற்றி விடுவார்கள். பனையின் வட்டிலிருந்து ஆண்பாளை அப்படியே தெரியும் ஒரு நிர்வாணமான ஆண்நிற்பது போலப் புலப்படும். இப்பாளையையும் இடுக்கிமூலம் பதம் பண்ணிகள் எடுப்பார்கள் ஒவ்வொரு முறையும் கள் எடுத்தபின்னர் பாளையின் முனைகளைப் பாளைக் கத்தி எனும் கூரிய கத்தி ஒன்றினால் சீவி எறிவார்கள். (விபரமாக அறிய வேண்டுமாயின் திரு. முருகேசு பாக்கியநாதன் அவர்கள் எழுதிய பனையியல் என்ற நூலினை வாசியுங்கள்)

நாகமணி எனது அப்புவின் உதவி ஆள். ஏன் வலக்கரம் என்று கூடச் சொல்லலாம். அவர்தான் அப்புவின் தோட்டவேலை, வயல் வேலை அத்தனைக்கும் கைகொடுப்பவர். அவர் எமது தோப்பினிலே சில பனைகளில் இருந்து கள் இறக்குதற்கு அப்பு சம்மதம் கொடுத்துள்ளார். அதற்குப் பிரதி உபகாரமாக ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு போத்தல் கள்ளு அப்புவுக்காக எங்கள் வீட்டிற்கு நாகமணி கொண்டு வந்து தருவார்.

இங்கே எமது ஊர்வாசி ஒருவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். அவர் பெயர் வெள்ளை வேட்டித் தம்பையா. தம்பையாதான் அவருக்குத் தாய் தகப்பன் சூட்டிய பெயர். ஊர் மக்கள் அளித்த பட்டம்தான் வெள்ளை வேட்டி. உண்மையில் தம்பையா அந்தப் பட்டத்துக்கு முற்றிலும் தகுதியானவர். எப்போ பார்த்தாலும் நல்ல வெள்ளை வேட்டி, தலைப்பாவுடன்தான் உலாவுவார். சேர்ட் போடுவதில்லை. பெரிய பூசணிகாய் போன்ற பேழை வயிறு ஒன்று வேட்டிக் கட்டுக்கு மேல் வழிந்தபடி நிற்கும். காதிலே எப்பொழுதும் ஒரு சுருட்டு. என்ன தொழில் என்று மாத்திரம் கேளாதீர்கள். எப்படியோ அவர் வாழ்க்கை சுகமே ஓடிக் கொண்டிருக்கிறது. கதிரன் என்ற தொழிலாளியின் கள்ளுக் கொட்டிலில் அவர் வாடிக்கைக்காரர். அவருக்கு என்று தனியே ஒரு கிளாஸ் வைத்திருப்பார்கள். மற்றவர்களுக்குத்தான் ஓலைப்பிளா. கதிரன் ‘ஐயா ஐயா’ என இவர் மேல் நல்ல மரியாதை. ஆகவே குறைந்தது ஒரு இரண்டு மூன்று மணித்தியாலம் என்றாலும் நாளாந்தம் பின்னேரங்களில் அவனுடைய கள்ளுக் கடையில் கள்ளை உட்கொண்டபடி ஊர்க்கதை எல்லாம் அசை மீட்டல் நடக்கும்.

நமது கிராமத்தின் மத்தியிலே ஒரு வைரவர் கோவில் உள்ளது. அவ்வளவு பெரிதானதாக இல்லை. அங்கே எட்டு நாட்கள் திருவிழா நடக்கும் ஒன்பதாம் நாள் பொங்கல். ஆடி மாதம் முதல் வெள்ளிக் கிழமை விளக்கேற்றுவார்கள். தொடர்ந்து எட்டு நாளும் திருவிழா. கொடிக்கம்பம் இல்லாமையால் கொடியேற்றமோ, தேர்த்திருவிழாவோ நடைபெற மாட்டாது. மூன்று திருவிழாக்கள் வெகு விமரிசையான திருவிழாவாக நடைபெறுவதுண்டு. பெயர் பெற்ற தவில் வித்துவான்கள் அளவெட்டி தட்சணாமூர்த்தி, இணுவில் சின்னப்பழனி, சின்னராசா, நாச்சிமார் கோவிலடி கணேஸ் என எல்லா தவில்காரர்களும் ஆஜர் ஆவார்கள். ஆனால் திருவிழா களைகட்டுவது தவில் கச்சேரிகளால் மாத்திரமல்ல. புத்தூர் மார்க்கண்டு செற் அல்லது அத்தியடி செற் வந்து சதிர் ஆடினால்தான் திருவிழா களைகட்டும். கூட்டம் கரை புரளும். அந்த நேரங்களில் தான் நமது வெள்ளை வேட்டித் தம்பையாவின் மகாத்மியம் புரியும். கண்களை மேலும் கீழுமாக ஏற்றி இறக்கியபடி, நாக்கினை ஒரு பக்கமாக வெளியே நீட்டிப் பற்களால்

தொடர்தல் 80ம் பக்கம்

79ம் பக்கம் தொடர்தல்...

கடித்தபடி கையில் ஒரு வெள்ளைச் சால்வை-யால் வீசி வீசி அவர் சனம் விலக்கும் அழகே அழகு. தம்பையர் கொஞ்சம் கீறலில் உள்ளார் என இளமட்டங்கள் கிசுகிசுக்கும். சின்னமேளம், பெரிய மேளத்துக்கு ஆக்கினதில் தம்பையரும் நக்கித்தானே இருப்பார் என்பது அவர்களின் நம்பிக்கை.

மூன்று திருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறும் என்றேன். அதில் ஏழாம் திருவிழா அமர்க்களமாக நடக்கும். உள்ளூர் சிறுபான்-மை மக்களின் திருவிழா. வீதி எல்லாம் பந்தல் போட்டுச் சோடித்து, பெரிய சிகரம் கட்டி கோலாகலம். ஆனால் அந்த இன மக்கள் மாத்திரம் ஆலயத்தின் உள்ளே போக முடி-யாத கொடுமை. ஆகவே வெள்ளை வேட்டித் தம்பையாவே அவர்களது ஏகபோக பிரதி-நிதியாகச் செயற்படுவார். எல்லாம் அவர் கைகளில்.

சின்னமேளம், தவில் கோஷ்டி எல்லாவற்-றுக்கும் அவர் வீட்டில்தான் சாப்பாடு,



**திருவிழா அமர்க்களமாக நடக்கும். வீதி எல்லாம் பந்தல் போட்டுச் சோடித்து, பெரிய சிகரம் கட்டி கோலாகலம். ஆனால் அவர்கள் மாத்திரம் ஆலயத்தின் உள்ளே போக முடியாத கொடுமை.**

'தண்ணீர்' எல்லாம். ஆடு அடித்து இறைச்சி சாராயம் என அத்தனையும் அவர்களுக்கு விருந்து. சின்னமேளத்தின் ஒழுக்கநெறி பற்றிப் பலவிதமான கருத்துக்கள் நிலவி வந்தன. அதில் எத்தனை வீதம் உண்மையோ தெரி-யாது. ஆனால் திருவிழாக் காலங்களில் அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு பல மைனர்கள் முனைவது கண்கூடு.


அந்த வருஷம் திருவிழா அமர்களப்பட்டது. ஆனால் கணக்கு வழக்கில் வெள்ளை வேட்டி தம்பையாவுக்கும் எமது நாகமணிக்குமிடையே பிணக்கு. பேச்சு வார்த்தை முற்றியது. பிரச்-சினையாகிவிடும் என்பதால் அடங்கிப்போய் விட்டாலும் நாகமணி கறுவியபடிதான் இருந்-தார்.

அன்று காலை வெள்ளை வேட்டித் தம்பையா எமது தோப்படி ஒழுங்கையால் போய்க் கொண்டிருந்தார். முதல் நாள் குடித்த மண்டிக் கள்ளு வயிற்றுக்குள் 'கடாமுடா' என அட்ட காசம் புரிந்தது. வயிற்றைக் கலக்கிக் கொண்டு வந்தது. எவ்வளவோ அடக்கிப் பார்த்தார் தம்பையா. வெள்ளை வேட்டிக்கே மோசம் வந்துவிடும் போலிருந்தது. மெள்ள தோப்-புக்குள் ஓடிப் போய் ஒரு பனை மரத்தின் பின் குந்தினார். கொஞ்சம் ஆசுவாசம் எடுப் பதற்குள் அவர் தலையில் பொலுபொலு-வென ஏதோ விழுந்தன. 'எடேய் எடேய்' என்று குழறியபடி வந்த வேலையை மறந்து மேலே பார்த்தார் வெள்ளை வேட்டிக்காரர். அண்ணலும் நோக்க மரவட்டுக்குள் இருந்த நாகமணியும் நோக்கினார். கண்கள் சந்தித்தன. மரத்தின் வட்டுக்குள் நின்ற நாகமணி சீவிக் கழித்த பாளைத் துண்டுகள் தான் தம்பையா-வினை ஆசீர்வதித்தவை. அவர் போட்ட சத்தத்தில் சீவிக் கொண்டிருந்த நாகமணி திகைத்துப் போய் கத்தியைக் கைதவற விட்டு-விட்டார். பாவிக் கத்தி கொஞ்சம் விலகி விழப்பபாதா? கீழே விழுந்த பாளைக் கத்தி, நல்லகாலம் தம்பையாவின் தலையைத் தவற விட்டுவிட்டு அவர் தோளினைப் பதம் பார்த்துவிட்டது. கூரிய கத்தி தோளினை ஆழமாக வெட்டியமையால் இரத்தம் 'குபு குபு' என வெளியேறியது. "என்னை வெட்டிப் போட்டான், வெட்டிப் போட்டான்" எனத் தம்பையா பெரிதாக ஓலமிட்டார். நடந்ததை அறிந்து சுதாரித்த நாகமணி அவசர அவசர-மாகப் பதைபதைப்புடன் குதிக்காத குறையாக இறங்கினார். பார்த்தார் தம்பையாவை. தம்பையாவோ தொடர்ந்து ஓலமிட்டுக் கொண்-டிருந்தார். நாகமணிக்கோ கையும் ஓடவில்-லை, காலும் ஓடவில்லை என்று சொல்ல முடியாது. நாலு கால் பாய்ச்சல் என்பார்களே - அந்த வேகத்தில் தொடங்கியவர் எங்கள் வீட்டில் வந்துதான் நின்றார். அப்பு வீட்டில் இருந்தார். மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க வந்த நாகமணியிடம் என்ன விசயம் என அப்பு விசாரித்தார். நாகமணி விக்கி விக்கி விசயத்-தைக் கக்கினார். 'எட விசரா நீ ஏன் ஓடி வந்தநீ, வா போவம்' என்றார் அப்பு. 'ஐயோ நான் வரமாட்டேன்' என நாகமணி குளறினார் ஆகவே அப்பு தனியாகத் தோப்பினுக்குச் சென்றார். அங்கே கூட்டம் கூடிவிட்டது. யாரோ ஒரு புண்ணியவான் வெட்டுக்காயத்தைச் சூழ துணியால் கட்டியுள்ளார் ஆனால் தோள் மூட்டில் கட்டுப்போடுவது சுலபமல்ல ஆகவே தொடர்ந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளை வேட்டியோ அரைவாசி பயம், அரைவாசி இரத்த விரயம். ஆகவே மெள்ள மெள்ளச் சோர்வடையத் தொடங்கிவிட்டார். அதற்கிடையில் ஒருவர் ஒரு காரினைக் கொண்டு வந்துவிட்டார். தம்பையாவை சங்கானை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் நடந்தன. அப்பு ஒருவரிடம் காசு கொடுத்து தம்பையாவை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பணித்தார்.

கூடிய கூட்டமோ பட்டிமன்றம் வைக்கத் தொடங்கிவிட்டது. நாகமணி வஞ்சம் தீர்த்து விட்டான் என்றது ஒரு கோஷ்டி. இல்லைத் தவறுதலாக நடந்தது என்பது மற்றையது. அவன் குற்றமற்றவன் என்றால் ஏன் ஓடி ஒளிக்க வேணும்? ஆகவே அவனை ஒரு கை பார்க்க வேணும் எனச் சிலர். அப்புவின் கையாள் நாகமணி என்பதால் அப்புவை சீண்டுவதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தச் சிலர் தவறவில்லை. எங்கே நிற்கிறான் அவன், அவனை ஒரு கை பார்க்கவேணும் என்றது ஒரு கும்பல். எங்கே நிற்பான் இதோ இந்தப் பெரிய மனுசனுடைய உள் வீட்டுப் பிள்ளை தானே, அவன் அப்போ அங்கேதான் நிற்பான் போகலாம் என்றது ஒரு கூட்டம். அதற்குள் நாகமணியினைச் சார்ந்த ஒரு கூட்டமும் சேர்ந்து விட்டது. அவர்கள் நாகமணி வேண்டு-மெனச் செய்யவில்லை அது தற்செயலாக நடந்தது என உரக்கக் கூறத் தொடங்கி-விட்டனர். நாகமணி சார்பாக உரத்த குரல் கொடுத்தவர்கள் இளமட்டங்கள். ஆகவே நாகமணியை அடிக்கவேணும் உதைக்க வேணும் என்ற கூட்டதின் குரல் மெல்ல மெல்ல தணிந்தது.

அப்பு இடையில் புகுந்தார். வைத்தியசாலை நிர்வாகம் கட்டாயமாகப் பொலிசுக்கு அறி-விக்கும். ஆகவே இதனைப் பிரச்சினை ஆக்காமல் எல்லோரும் போங்கள். பொலிஸ் வந்தால் நான் நாகமணியை அவர்களிடம் ஒப்படைப்பேன் என்றார். கூட்டம் கலைந்தது. பொலிஸ் வந்தது. நாகமணி வாக்குமூலம் கொடுத்தார். அது தவறுதலாக நடந்தது என்பதால் நாகமணி தப்பித்தார். வெள்ளை வேட்டிக்காரரை மூன்று நாட்கள் வைத்தியர் வைத்தியசாலையில் வைத்திருந்த பின்னர் பெரிய கட்டுப்போட்டு வீட்டுக்கு அனுப்பி விட்டனர்.

அந்த வருடம் திருவிழா வந்தது. ஏழாம் திருவிழா வழக்கம் போல அட்டகாசமாக நடந்தது. தம்பையாவும் வழக்கம்போல சனம் விலத்தினார். ஆனால் சால்வையை வீச மாத்திரம் வலக்கை இடம் கொடுக்கவில்லை.



kanagasabapathy.p@thaiveedu.com


# TORONTO BUSINESS COLLEGE

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



**COMPUTERIZED ACCOUNTING DIPLOMA**

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
- 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
- 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்

**DIPLOMA முடித்தவர்கள்**

- ACCOUNTS CLERK
- COST CLERK
- AUDIT CLERK
- PAYROLL CLERK
- ACCOUNTS RECEIVABLE
- ACCOUNTS PAYABLE
- ACCOUNTS ASSISTANT
- BOOK KEEPER

போன்ற பதவிகளைப் பெற்று உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்

**INSTRUCTORS**

★PUSHPA ★ SP ★ RAM

**CERTIFICATE COURSES**

**BUY ONE GET ONE FREE**

WINDOWS, KEY BOARDING, DATA ENTRY, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK, PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING BY SAGE, SAGE ACCPAC GL, AP, AR

DAY, EVENING, WEEK ENDS

**CANADIAN SECURITIES COURSE**

EXAM 1 & 2
BY ARUN SENATHIRAJAH, ACIB, MBA
NEW BATCH - WEEKENDS
START DATE: MAR.14TH
IDEAL FOR BANK EMPLOYEES

★FREE PARKING★SMALL CLASS SIZE

**416-291-5155**

4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH, ON, M1S 5H9
t.businesscollege@gmail.com

(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# தமிழ் எழுத்துக்கள்: கல்லில் இருந்து கணினி வரை...



பொன் பாலராஜன்

தமிழ் மொழியின் செல்வாக்கு கி.பி 1200 நூற்றாண்டளவில் சீனாவையும் தாண்டிப் பயணித்திருந்தது. சீனாவில் (Canton) ‘கன்ரன்’ என்னும் இடத்திற்கு தமிழர்கள் வர்த்தக ரீதியாக சென்று அங்கு குடியேறி இருந்தமைக்கு சரித்திர ஆதாரங்கள் உண்டு.







இந்த கன்ரன் நகருக்கு 500 கல் வடக்கேயுள்ள துறைமுக நகரத்தின் பெயர் ‘‘சூவன்செள’’. இந்த துறைமுக நகரப் புறச் சூழலில் தமிழர்கள் இருந்தமைக்கும் ஆதாரமுண்டு. தமிழ் வணிகர்கள் இங்கு அடிக்கடி சென்று வாணிபங்களை சிறப்பாகச் செய்து வந்திருக்கின்றனர்.

தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் இருந்து வணிகக் கப்பல்கள் தாய்லாந்து வழியாக அதற்கு மேற்குத் திசையில் உள்ள பல துறைமுகங்களில் வணிகம் செய்து பிற்பாடு வியட்நாம் சென்று அதனூடாக சீனாவிற்கும் சென்று வணிகம் செய்து வந்திருக்கின்றன. இப்படியாக வணிக நோக்கில் சோழர் காலத்தில் புகழ் பெற்றவர் ‘‘திசை ஆயிரம் ஐந்நூற்றவர்’’ குழுவினர்.

சீனாவில் ‘‘சூவான்லிசெள’’ துறைமுக புற நகரப் பகுதியில் ஒரு சிவன் ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயமானது சீனாவின் புகழ் பெற்ற சக்கரவர்த்திகளில் ஒருவரான ‘‘குப்லாய்க்கான்’’ என்பவரினால் அமைக்கப் பட்டது ஆகும். இம் மன்னனின் உடல் நலத்திற்காகக் கட்டப்பட்டதே இந்த சிவன் ஆலயம் என சான்றுகள் கூறுகின்றன. இதற்கு ‘‘திருக்காதலீசுவரம்’’ என்ற பெயரும் உண்டு. சீனச் சக்கரவர்த்திக்காக இந்த ஆலயத்தைக் கட்டியவரின் பெயர் ‘‘சம்பந்தப் பெருமாள்’’ என்பவராகும்.

Bilingual (Tamil & Chinese) inscription in China dated Saka era 1203 (1281 CE) Mentions the erection of deity Thirukkanic-curamudaiyar by one Sambandapperumal for the well being of Chinese emperor Cekacaikan Parman

சகயுகம் சித்திரா பௌர்ணமி தினம் இந்த திருக்காதலீசுவரன் ஆலயம் திறந்து வைக்கப் பட்டது. கி.பி. 1260ல் ‘‘குப்லாய்கான் முடி சூடியவன். உலகையே கிலி கொள்ள வைத்த மங்கேலிய சர்க்கரவர்த்தியான செங்கிசுகானின் பேரன் தான் இந்த குப்லாய்க்கான் என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்த மன்னன் தான் பெய்சிங் நகரைக் கட்டித் தலைநகராக்கினான். தமிழ் நாட்டில் பிற்கால பாண்டிய பேரரசு இருந்த காலத்தில் இவன் சீனப் பேரரசின் சக்கரவர்த்தியாக திகழ்ந்ததாகவும் பாண்டிய வம்சமும் சீனச் சக்கரவர்த்தியும் மிகுந்த நட்புறவுடன் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. அப்போது பாண்டிய நாட்டை ஆண்டது மன்னன் குலசேகர பாண்டியன். சீனாவில் எழுப்பப் பட்ட சிவன் ஆலயத்தில் கிடைத்த கருங்கல் ஆவணத்தில் இந்த குப்லாய்க்கான் ஆணையில் அவ் ஆலயம் கட்டப்பட்டது என்று பொருள்பட தமிழிலும் சீன மொழியிலும் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்பட்டன.

தமிழ் எழுத்து வரலாற்றில் கிறிஸ்துவிற்கு பின் 16ம் நூற்றாண்டுகள் மிக முக்கிய மானவையாகக் கருதப்படுகின்றது. உரைநடை, எழுத்துச் சீர்மை நூலாக்கம் பிற மொழிகளில் தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பு பிற ஐரோப்பிய மொழிகளில் இருந்து தமிழுக்கு மாற்றம் என்பன இக்காலங்களில் தான் இடம் பெற்றன. இதே காலத்தில் தான் ஐரோப்பியர்களிடம் தமிழர்கள் தங்கள் ஆட்சி உரிமைகளை இழந்து வந்தனர்.

ஆரம்பத்தில் வாசனைத் திரவியம் தேடிவந்து நாட்டையே கைப்பற்றிய ஐரோப்பியர்கள் கிறிஸ்து மத பிரச்சாரத்திற்கு தமிழ் நாட்டை நோக்கி படையெடுத்தனர். இக் காலகட்டத்தில் மதப் பிரச்சார நோக்கிற்காக் தமிழ் அறிவு பாதிரிமார்கட்கு தேவைப்பட்டது. தமிழின் தொன்மை நாகரீகம், இலக்கிய வளம், இனிமை ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டு தமிழினை ஆய்வு நோக்கிலும் அறிவியல் நோக்கிலும் கற்கத் தொடங்கினார்கள். ஆய்வு நோக்கில் மொழியை மேலும் வளப்படுத்தினால் நன்கு படித்து அறிந்த தமிழ் அறிஞர்களால் மாத்திரம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதனால் இவர்கள் உரை நடைகளை சிறுசிறு வாக்கிய வடிவங்களாக்கி சாதரண மக்கள் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுத ஆரம்பித்தனர். இதன் பின்னர்தான் தமிழுக்கு உரைநடை என்ற பாணி கிடைத்தது. அது மாத்திரமல்ல 1554ம் ஆண்டள்வில் தான் முதன் முதலில் தமிழ் நூல் ஒன்று அச்சுப் பிரதியாக்கப் பட்டது. லிஸ்பன் நகரில் அச்சுப் பதித்த கார்தில்யா (Carthilya) என்னும் தமிழ் நூலே முதல் அச்சுப் பதிக்கப்பட்ட தமிழ் நூல் என்று தனிநாயகம் அடிகளார் 1958ல் Tamil Culture (vo. Viii. No.3. July 1958 p.299) இல் கூறியிருந்தார். இந்த ‘‘கார்தில்யா’’ என்ற நூல் தமிழ் உரை நடையில் இருந்த போதிலும் தமிழ் அச்சு இயந்திரத்தில் பாவிக்கக் கூடிய எழுத்துருக்கள் இல்லாமையால் ரோமன் எழுத்துக்கள் தமிழ் ஒலிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது.

தமிழ் எழுத்துருக்கள் காலத்துக்கு ஏற்ற வகையில் மாறுதல் அடைந்து வந்துள்ளன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இருந்த எழுத்து வடிவங்கள் கிறிஸ்துவுக்குப் பின் 6ம் நூற்றாண்டளவில் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி இருந்தன. எழுத்துருக்கள் ஒலியினை வெளியிடும் குறியாக இருந்த போதிலும் அது எழுதப்பட்ட காலம் அது எதில் எழுதப்படுகின்றது என்பதற்கேற்ப மாறுதலடைந்து வந்துள்ளது. திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் எல்லாம் வெவ்வேறு வரலாற்றுக் காலப் பகுதியில் எழுதப்பட்டிருந்த படியால் அவற்றின் மூலப் பிரதியில் உள்ள எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று வேறு பட்டு இருக்கக் கூடியதாக இருந்தன.


கற்கள், பாறைகள், ஓலைகள், தோல், செப்புத் தகடு, தாள் என்பவற்றில் எழுதிவந்த தமிழ் தற்காலத்தில் கணினியில் எழுதக் கூடிய நிலையினை அடைந்துள்ளது.

pon.balarajan@thaiveedu.com

■ ■ ■

இணைந்து கொள்ளுங்கள்
‘தாய்வீடு’ facebookஇல்
www.facebook.com/thaiveedu

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

## வாத்தியார் 07 வீட்டிலிருந்து வன்கூவருக்கு...

K.S. பாலச்சந்திரன்

# ஏறாவூரில் றெயினில் ஏறியவர்கள்




காலைப்பொழுது. இருள் முற்றாக நீங்கவில்லை. 'கடகடகட' என்று ஓடிக்கொண்டிருக்கும் புகையிரதம். ஏதோ ஒரு ஸ்டேசனில் நிற்கிறது. தூங்கிவழிந்து கொண்டிருந்த ஸ்டேசனில் திடீரென்று அவசரக்குரல்களில், அழைப்புகளுடன். ஒவ்வொரு பெட்டியாக யாரையோ தேடிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் இளைஞர்கள். அவர்கள் ஒவ்வொருவரினதும் கைகளில் எதையோ பேப்பரில் சுற்றி வைத்திருக்கிறார்கள். "பாரடா.. எல்லாப் பெட்டிகளுக்குள்ளும் வடிவாகப் பாருங்கடா" என்று யாரோ கட்டளையிடுவது கேட்கிறது. ஒவ்வொரு பெட்டியாக, எட்டி, எட்டி பார்த்துக்கொண்டு வருகிறார்கள். சிலர் பெட்டிகளின் ஊடாகவும் அவசரமாக ஓடிவருகிறார்கள்.

இப்படி ஒரு காட்சியை. பல தமிழ்ப்படங்களில் பார்த்திருப்பீர்கள். இது உண்மையாகவே உங்களுக்கு முன்னால் நடந்தால் எப்படியிருக்கும்? நடந்தால் என்றெல்லாம் எதற்கு? நடந்ததே... என் கண் முன்னாலே. முதலில் முன்கதையைச் சொல்லிவிடுகிறேன்.

பலஆண்டுகளுக்கு முன்னால், ஏறாவூரில் ஒரு ஆலயத்தில் என்னை நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தார்கள். திரண்டிருந்த கூட்டத்தின் முன்பு "அண்ணை றைற்" நிகழ்ச்சி இரவு இரண்டு மணியளவில் நடந்து முடிந்தது. அந்நாட்களில் என்னிடம் ஒரு பழக்கம் இருந்தது. மிகவும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் தவிர, நிகழ்ச்சி நடந்த ஊரில் விடியும்வரை தங்குவதில்லை. அதற்கு ஒரு காரணம் இருந்தது. கலைஞர்கள் சற்று மறைபொருளாக இருப்பதில்தான் கவர்ச்சியைத் தக்க அடையாளம் கண்டுபிடிக்கப்படவேண்டுமென்ற தாளாத விருப்பத்துடன், பத்திரிகைக்காரர்களைக் கெஞ்சி, தங்கள் படங்களை பத்திரிகைகளில் வரவேண்டி அலையும் அதே கலைஞர்கள், பிரபல்யம் வந்தவுடன், கறுப்புக்கண்ணாடியுடன், கறுப்புபூச்சு பூசிய கண்ணாடிக்கார்களில் வேகமாக யாரும் காணாமல் ஓடிமறைவதும், இதே "கவர்ச்சி" போய்விடும் என்ற பயத்தினால்தான் என்பதை தெரிந்து கொள்க.

சின்னவயதில் எங்கள் ஊர் அம்மன்கோயிலில் 'அரிச்சந்திரா' 'ஆறுபிள்ளை நல்லதங்காள்', 'சத்தியவான் சாவித்திரி' போன்ற கூத்துக்கள் போடுவார்கள். கூத்தாடுவதை தொழிலாகக் கொண்ட கலைஞர்களை அழைப்பித்து நாடகம் போடுவிப்பதை வருசம் தவறாமல் 'நேர்த்திக்கடன்'போல செய்துவரும் பெரியவர் ஒருவர் எங்கள் ஊரில் இருந்தார்.

அந்தச்செலவுக்காக ஊருக்குள் அவர் நன்கொடை பெற்றுக்கொள்வார். ஆனால் செலவு தலைக்குமேலாகப் போய்விடும் சந்தர்ப்பங்களில் (இப்படி அடிக்கடி நடக்கும்) கூத்து வைத்துக்கொள்ளமுடியும் என்ற எண்ணம் எனக்கும் இருந்தது.

இரவிலே மேடையிலே பார்த்து "ஆகா... இப்படி மூக்கும் முழியுமாக இருக்கிறார்களே" என்று நினைத்துக்கொண்டவர்கள், அடுத்த நாள் காலை, அதே முகத்தைப் பார்க்கும் போது, "அட... இவ்வளவுதானா" என்று நினைத்துக்கொள்வார்கள் என்ற பயந்தான்.

ஆரம்பகாலத்தில் தங்கள் முகம் யாவராலும் முடியும் விடியக்காலைக்கு முன்னதாக பெரியவர கையிருப்போடு காணாமல் போய்விடுவார்.

இரவிரவாக, தொண்டை கிழியகத்திப்பாடி, மந்திரிகுமாரியை "வாராய் நீ வாராய்" என்று மலைஉச்சிக்கு அழைத்துப்போனவரும், சுற்றி வந்து அவரை மலையால் தள்ளி விழுத்திய மந்திரிகுமாரியாக நடித்தவரும் (அவரும் ஆண்மகன்தான்), கூடநடித்த இராசப்பிரதானிகளும், இரவுபார்த்ததற்கு நேர்மாறாக, அரிதாரம் கலையாத, திட்டுதிட்டாக வெள்ளை காய்ந்த முகங்களுடன், தங்கள் சொத்துக்களான நாடக உடுப்புக்கள் அடைந்த நெளிந்துபோன டிரங்குப்பெட்டிகளின் மேல் குந்திக்கொண்டு இரவு கூத்து நடந்த இடத்தில் வராத பெரியவருக்காகக் காத்திருப்பார்கள்.

நித்திரை முழித்து கூத்துப்பார்த்த அலுப்புத்தீர, அதிகாலைப்பொழுதில், வயல்கிணற்றில் குளிக்கப்போகும் எங்களூர்க்காரர் சிலர் அவர்களைப்பார்த்து இரக்கப்படாமல், ஏளனமாகச் சிரிப்பதுண்டு. வெய்யில் உச்சிக்குவரும் மத்தியானப்பொழுதாக, கடைசி, கடைசியாக யாராவது நல்லவர்கள் பரிதாபப்பட்டு, மனமிரங்கி, அவர்களின் 'பஸ்' பிரயாணச்செலவுக்கு காசு சேர்த்துக்கொடுப்பார்கள், நடித்த கூலியுமில்லாமல், பசியுடனும், சோர்வுடனும், எல்லாவற்றுக்கும் மேலாக வெட்கத்துடனும், அவர்கள் நைந்துபோன தங்கள் 'சூட்கேஸ்' களுடன் வரிசையாக எங்கள் ஊரைவிட்டு நடந்து போவதை கண்டிருக்கிறேன்.

இந்த நினைவுகளின் தாக்கமாகத்தான், நான் மேடைநிகழ்ச்சிகள் செய்த இடங்களில் அடுத்தநாள் வரை தங்குவதில்லை என்று 'பிரதிக்ஞை' எடுத்துக்கொண்டேன். இந்த ஒழுங்கோடு, ஏறாவூரில் இரவு நிகழ்ச்சி முடிந்த கையோடு என்னை அங்கிருந்து காரில் அழைத்துப்போய், 15கி.மிட்டர் தொலைவிலுள்ள மட்டக்களப்பு நகரின் "சுற்றுலாவிடுதி" யொன்றில் தங்கவிட்டார்கள்.

சிலமணித்தியாலங்கள் படுத்து உறங்கிவிட்டு, அங்கிருந்து காலை கொழும்பு புறப்படும் புகையிரதத்தில் பயணம் செய்வது என்று ஏற்பாடு. இதில் சிரிப்பான சங்கதி எதுவென்றால், நான் போகும் புகையிரதம் ஏறாவூரைத் தாண்டித்தான் கொழும்பு போகும்.

அப்படிப்போகும் போதுதான் நான் முதற் குறிப்பிட்ட, புகையிரதத்தில் தேடுதல் வேட்டை நடந்தது. யாரைத்தேடினார்கள்? யாராவது பணக்காரப் போடியார் (நிலச்சொந்தக்காரர்) வீட்டில் கொள்ளை யடித்துவிட்டு தப்பியோடும் கொள்ளைக்காரனையா? காதலுக்கு தடை போட்ட பெற்றோருக்கு பயந்து ஊரைவிட்டோடும் காதல் ஜோடியையா? என்றெல்லாம் நான் எப்போதோ படித்த வடுவூராரின் நாவல்கதைகளையெல்லாம் மனதிற்குள் சலவைபோட்டு அலசிக்காயப்போடும் வேளையில்தான், நான் இருந்த பெட்டிக்கு வந்து சேர்ந்தது அந்தக்கும்பல்.

முன்னுக்கு வந்த இளைஞன் என்னைக் கண்டதும் சடுதியாக 'பிறேக்' போட்டு நின்றது மாதிரி நின்றார். என்னைக்காட்டி "இந்தா இருக்கிறார்" என்று சொன்னமாதிரி இருந்தது. தேடப்பட்ட புண்ணியவான் அப்பாவி மாதிரி இருந்த நான்தான் என்று அறிந்ததும், சகபயணிகள் 'வில்லங்கத்தை விலைக்கு வாங்காமல்' பெட்டி மாறி ஏறுவதற்கு யோசித்துக் கொண்டிருக்கும் வேளையிலே, நான் இருந்த பெட்டிக்கு வெளியேம் பலர் வந்து நின்றார்கள். இத்தனைக்கும் புகையிரதம் அசைவதாயில்லை.

வந்தவர்கள் ஸ்டேசன் மாஸ்டரின் கையிலிருந்த பச்சைக்கொடியையும், வாயிலிருந்த விசிலையும் பறித்து விட்டார்களோ, அல்லது அவரையோ கடத்திவிட்டார்களோ தெரியவில்லை என்று கூட 'குயுக்தி'யான ஒரு யோசனை எனக்கு வந்தது. மற்றவர்களுக்கும் வந்திருக்கும். யார் கண்டது?

ஆபத்து வருகிறது என்ற நினைப்பு வந்தால், சிலபேருக்கு மூளை வலுவேகமாக வேலை செய்யும். இன்னும் சிலபேருக்கு, டீசல் முடிந்த லொறிபோல 'மக்கர்' செய்து கொண்டு ஸ்தம்பித்து நின்றுவிடும். நான் இரண்டாம் ரகம் தான். இருந்தாலும் அன்று என்னவோ விதிவிலக்காக என்மூளை 'கடகட'வென்று வேலைசெய்தது.

'என்ன நடந்திருக்கும்... இராத்திரி கோயில் வீதியில் சொல்லக்கூடாத 'கவுண்டமணி-செந்தில்' சங்கதி எதையாவது தெரியாமல் சொல்லி விட்டேனோ? அல்லது சாண்டில்யனின் சரித்திர நாவல்களில் வரும் 'வில்லி' போன்ற யாராவது, அந்நாட்களில் சற்று சுமாராகவிருந்த (தோற்றத்தில்தான்) என்மேல் மோகம் கொண்டு (அப்போது எனக்கு திருமணமாகவில்லை) "நாளை பகல்பொழுதுக்குள் அவனைப் பிடித்துக்கொண்டு வந்து என்னிடம் ஒப்படையுங்கள்" என்று தன் கையாட்களை ஏவி... 'மனோகரா' திரைப்படத்தில் வருவது போல கைவிலங்கு, கால்விலங்குடன் நான் நிற்க.., "மதனா என் ராஜா நீ வாராயோ" என்று பாடிக்கொண்டு... சீச்சீ.. அப்பிடியெதுவும் இருக்காது" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே என்தலையை குறுக்குவாட்டில் ஆட்டிக்கொண்ட அந்த வினாடியில்தான், முன்னால் வந்து என்னைக் கண்டுபிடித்து, குரல் கொடுத்த அந்த இளைஞன் சொன்னான். "அண்ணைக்கு குடுங்கோடா"

எனக்கு நடக்கப்போவது புரிந்துவிட்டது, நான் பார்த்த எத்தனையோ தமிழ் டப்பிங் படங்களில், வில்லனை அடிக்கமுதல் கதாநாயகன் தவறாமல் சொல்லும் வசனம் "இந்தா வாங்கிக்க" வாங்கிக்க அங்கே, குடுங்கோடா இங்கே அவ்வளவுதான் வித்தியாசம்.

எல்லோரும் அவசரமாக கைகளை நீட்டினார்கள். அந்தநேரம் ஸ்டேசன் மாஸ்டரின் கைக்கு... இல்லையில்லை... வாய்க்கு விசில் வந்திருக்கவேண்டும். விசில் கூவியது.


அந்த இளைஞர்கள் அவசரவசரமாக தங்கள் கைகளில் இருந்த கடதாசிப்பைகளை என் மடியில் போட்டார்கள். புகையிரதத்தில் இருந்து குதித்து, தாங்கள் எனக்காக காலையிலிருந்து, இந்த ஸ்டேசனில் காத்திருப்பதைச் சொன்னார்கள். ஓடும் புகையிரதத்துடன் ஓடிக்கொண்டே தங்கள் பெயர்களை அவசரமாகச் சொன்னார்கள். தமிழர்களும், முஸ்லீம்களும் அவர்களில் அடங்கியிருந்தார்கள் என்பது தெரிந்தது. எட்டி வாஞ்சையுடன் என்கைகளை பற்றி, அவசரமாக விட்டார்கள். "கவனம்... தம்பிமாரே" என்று நான் சொன்னது, வேகமாக ஓடத்தலைப்பட்ட புகையிரதத்தின் ஓசையில் கரைந்து போனது.

ஜன்னல்வழியே எட்டிப்பார்த்தேன். கைகளை ஆட்டிக்கொண்டு என் ரசிகர்கள் தூரத்தில் தெரிந்து மறைந்து போனார்கள். என் கண்கள் கலங்கின.

இரவு நிகழ்ச்சி பார்த்துவிட்டு, இரவோடு இரவாக தங்கள் வீடுகளில் இருந்து வறுத்து வைந்த, ஏறாவூரின் உற்பத்திப்பொருளான முந்திரிகைப் பருப்புகளை (கஜு) பைகளில் நிரப்பிக்கொண்டு நான் ஏறாவூர் வழியாகத்தான் கொழும்பு திரும்புவேன் என்று தெரிந்துகொண்டு, காத்திருந்து, தங்கள் அன்பை உணர்த்தி..,

என் நெஞ்சம் நெகிழ்ந்தது.

இன்றும் என் நினைவில் முகம்தெரியாத அந்த கிராமத்து இளைஞர்கள் தவறாமல் வந்து போகிறார்கள். கூடவே அவர்கள் தந்த சுவையான முந்திரிப்பருப்பும்தான்.



ksbala@thaiveedu.com

**பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!**

**ஊமைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!**







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் களுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூாட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

## இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!

**The ERVAMATIN™ HAIR LOTION**

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.









**இயற்கை மூலிகையிலான தலை முடி மை**

இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.

The **ERVAMATIN HAIR LOTION** provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.

SABONA & Gift

Amazon Health Care
www.amazonhealthcare.com

BBB ACCREDITED BUSINESS

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

**Send gifts** to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
**www.egiftsender.com**

JayaCS•416 275 0070


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
CSA# 232467
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
60 Vanture Drive, Unite 15, Toromto Ontario, M1B 3S4
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி


Formula Honda
Where You're Treated like Family
Raja Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
2007 ACURA
RDX Sport Utility 4D
$28,500 74,580 km
2005 HONDA
ACCORD EX-L Coupe 2D
$14,995 61,240 km
2005 HONDA
ACCORD EX-L Sedan 4D
$12,000 135,460 km
2005 HONDA
IVIC 4dr SE Manual
$9,900 92,930 km
2005 HONDA
CIVIC LX Sedan 4D
$13,995 66,170 km
2005 HONDA
CIVIC Value Coupe 2D
n/a 78,900 km
2005 HONDA
CIVIC Value Sedan 4D
$11,500 94,960 km
2005 HONDA CR-V
n/a 92,852 km
2005 HONDA CR-V
EX Sport Utility 4D
$16,800 93,966 km
2005 HONDA
PILOT
$23,995 93,624 km
2006 HONDA
CIVIC
$10,800 131,287 km
2006 HONDA
CIVIC 2 door coupe auto
$13,875 80,860 km
2006 HONDA
CIVIC 4dr DX-G Auto
$14,250 94,050 km
2006 HONDA
CIVIC EX Sedan 4D
$16,925 68,630 km
2006 HONDA
CIVIC LX Coupe 2D
$12,800 49,543 km
2006 HONDA
CIVIC LX Coupe 2D
$16,995 58,240 km
2006 HONDA
CIVIC LX Sedan 4D
$16,995 81,421 km
2006 HONDA
CIVIC LX Sedan 4D
n/a 42,080 km
2006 HONDA CR-V
EX Sport Utility 4D
$21,995 84,700 km
2006 HONDA
ODYSSEY
n/a 79,053 km
2006 HONDA
ODYSSEY EX Minivan 4D
$26,995 92,797 km
2006 HONDA
ODYSSEY EX Minivan 4D
$21,925 78,935 km
2006 HONDA
ODYSSEY EX Minivan 4D
$20,780 96,850 km
2006 HONDA
ODYSSEY LX Minivan 4D
$21,000 45,260 km
2007 HONDA
ACCORD SE Sedan 4D
$18,000 67,550 km
2007 HONDA
CIVIC
$17,995 53,408 km
2007 HONDA
CIVIC
$15,995 96,196 km
2007 HONDA
CIVIC 2 door coupe
$16,995 56,900 km
2007 HONDA
CIVIC DX Sedan 4D
$11,600 74,580 km

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

## SCHOLARSHIP FOR C $1000

The Tamil Literary Garden will offer an annual scholarship to an undergraduate full-time student enrolled in a Tamil language or Tamil Studies course offered by a university in Canada. The conditions of the scholarship are as follows:

All full-time undergraduates currently (2009-2010) enrolled in a Tamil language or Tamil studies course offered by a university in Canada are eligible. All students wanting to participate should submit an essay on the topic given below by 30 April 2010.

**Topic.** "Canadian Multiculturalism - A Tamil Perspective." The essay should not exceed 3000 words. It should be double spaced, and a hard copy should be sent to Scholarship Essay, c/o Chelva Kanaganayakam, Trinity College, 6 Hoskin Avenue, University of Toronto, Toronto, Ontario, M5S 1H8 together with an electronic version to appatlg@gmail.com. The essay should be an original contribution, written for the purpose of competing for this scholarship and should not have been published elsewhere.

**Scholarship:** The award of C$1000 will be given to the student who wrote the best essay. The award ceremony of Tamil Literary Garden will be held in July 2010 and the essay published in Kalam magazine.

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...

**புகைப்படங்கள்: தாய்வீடு பத்திரிகைக்காக கணா ஆறுமுகம் - www.ninaivukal.com**




பொதுவுடமை கொள்கையுடன் நீண்டகாலமாக ஈடுபட்டுவந்த திரு. மார்க்கு சூசை அவர்களின் 75வது பிறந்ததின நிகழ்வில்.




**$9.50 Movie - Premiere Show - Toronto**





றொறன்ரோவில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் முன்பான ஆர்ப்பாட்ட நிகழ்வில்





கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய விருது விழா பற்றிய தகவல் பட்டறை நிகழ்வில்





ரஞ்சித் யோசெப்பின் $9.50 திரைப்பட ஒலித்தட்டு வெளியீட்டு விழாவில்





கனடா கலை இலக்கிய தொகுப்பு - கூர் - 2010 -வெளியீட்டு விழா நிகழ்வில். (March 06, 2010)




தமிழர் செந்தாமரை பத்திரிகையின் புதிய அலுவலகத் திறப்புவிழா நிகழ்வில்

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net

# மறக்கமுடியாத ஆசிரியர்கள்

அ. முத்துலிங்கம்

மனித வாழ்க்கை என்பது மறதியை நோக்கிய பயணம்தான். வயதுகூடக்கூட மறதியும் கூடும். உலகப் பிரசித்தமான விஞ்ஞானி கலீலியோ தன் முதிய வயதில் தான் எழுதிய விஞ்ஞான சித்தாந்தங்களை தனக்கு முன்னால் பரப்பிவைத்து புரியாமல் பார்த்துக்கொண்டே இருப்பாராம். எல்லாமே அவருக்கு மறந்து விட்டது. என்னைப் படிப்பித்த ஆசிரியர்களில் பலரை நான் மறந்துவிட்டாலும் சிலருடைய நினைவுகள் இடைக்கிடை எழும். அமிர்தலிங்கம் மாஸ்டருடைய நினைவும் அப்படித்தான். முறம்போல செருப்பும், மூக்குப்பொடி பட்டையும் இவருடைய அடையாளங்கள். காலையில் வெள்ளையாக இவர் கையில் காட்சியளிக்கும் கைக்குட்டை மாலையில் பழுப்பு நிறமாகிவிடும். ஆங்கிலக் கவிதைகளைப் பாடமாக்கி இவரிடம் ஒப்பிக்கவேண்டும். இவருக்கு பிடித்த பாடல் Under a spreading chestnut tree. எங்கேயோ தூரதேசத்திலிருந்து ஒரு வெள்ளைக்காரன் பாடி வைத்தது. எப்படித்தான் இரவிரவாக கண்விழித்து பாடமாக்கினாலும் மாஸ்டருக்குமுன் போய் நின்றவுடன் ரத்தமெல்லாம் தண்ணியாகிவிடும் வாயை திறந்தால் காற்றுத்தான் வரும். வெளி விறாந்தையில் முழங்கால் வலிக்க முட்டுக்காலில் நிற்கவேண்டும். ‘அது என்ன சேர் chestnut tree? மாமரம்போல இருக்குமா?’ என்று கேட்டால் பிடிக்காது. பிரம்பு மரம்போல இருக்கும் என்று பிரம்பை எடுத்துக் காட்டுவார்.

அந்தக் காலத்தில் எல்லா ஆசிரியர்களும் மாணவர்கள் மனப்பாடம் செய்யவேண்டும் என்றே எதிர்பார்த்தார்கள். சரித்திரம், விஞ்ஞானம், கணிதம், பூமிசாஸ்திரம் என ஒன்றுக்குமே விதிவிலக்கில்லை. ‘புல்லர்’ என்று ஓர் ஆசிரியர், அவருடைய உண்மையான பெயர் மறந்துவிட்டது. பள்ளிக்கூடத்திலேயே ஆக நீளமான கம்பு அவரிடம்தான் உண்டு. மேசையில் துள்ளி ஏறி அக்கிராசினர்போல அமர்ந்தவாறே கடைசி வாங்கு மாணவனை அவரால் எட்டி அடிக்கமுடியும். அவருடைய திட்டம் படிப்படியான சித்திரவதை. நாளுக்கு மூன்று திருக்குறள் பாடமாக்கச் சொல்வார்.

செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்.

எங்கே கோபம் செல்லுமோ அங்கே அதைக் காக்கவேண்டும் என்பது பொருள். இதை மனனம் செய்யவில்லை என்பதற்காகத்தான் என்னைப் போட்டு அடித்தார். அடிப்பாரே ஒழிய அந்தக் குறள் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்பதில்லை. சனி, ஞாயிறு ஓய்வாக இருக்கலாம் என்றால் இரண்டு நாளுக்கும் சேர்த்து ஆறு திருக்குறள் சொல்லவேண்டும். ‘கொக்கொக்க’ என்று தொடங்கும் ஒரு திருக்குறள். நான் அதை இப்படி ஒப்பித்தேன்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
கொத்தொக்க சீர்த்த இடத்து.

இதற்கும் அடி விழுந்தது. ‘குத்தொக்க சீர்த்த இடத்து’ என்பதுதான் சரி. ‘குருவி கொத்தும், கொக்கு கொத்தாது, குத்தும். மீனை அது செங்குத்தாகக் குத்திப் பிடிக்கும்’ என்று அந்த ஆசிரியர் விளக்கம் சொல்லித் தரவில்லை முப்பது வருடங்களுக்குப் பிறகு நானாகக் கண்டுபிடித்ததுதான்.

தில்லைநாதர் என்ற ஆசிரியர் என்னுடைய ஆகச்சின்ன வயதில் படிப்பித்தார். வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை அங்கவஸ்திரம் அணிந்திருப்பார். ஆற்றிலே இறங்கப் போவது போல வேட்டியை சற்று தூக்கிப்பிடித்துக் கொண்டு பிள்ளைத்தாய்ச்சிபோல அசைந்து அசைந்து நடப்பார். வகுப்பு மணி அடித்து ஐந்து நிமிடம் கழித்துத்தான் வருவார். இவர் அடிப்பது கிடையாது, ஆனால் புதுவிதமான தண்டனைகளை உண்டாக்குவார். எங்கள் பாடப் புத்தகத்தில் இரட்டைப் புலவர் பாடல்கள் இருந்தன. இவர்கள் சோடியாகவே பயணம் செய்வார்கள். ஒருவர் முதல் இரண்டு அடிகளைப் பாட மற்றவர் கடைசி இரண்டு அடிகளையும் பாடி முடிப்பார். அப்படி அவர்களுக்கிடையில் ஓர் ஏற்பாடு. எங்கள் வேலை அவற்றை மனனம் செய்வது. ஒருநாள் இரட்டையரில் ஒருவர் ஆற்றிலே தன் கந்தல் ஆடையை தப்பியபோது அது ஆற்றோடு போய்விட்டது.

ஆற்றிலே தோய்த்து அடித்தடித்து நாளுமதை
தப்பினால் நம்மை அது தப்பாதோ.

என்று அவர் பாட மற்றவர் இப்படி முடித்தார்.

இப்புவியில்- ஆனாலும் கந்தை அதிலும் ஓராயிரம் கண்
போனாலும் போச்சென்ன போ.

இந்தப் பாடலை அன்று வகுப்பில் பாடமாக்காதது இரண்டே பேர்தான். ஒன்று நான் மற்றது ஜெகராஜசிங்கம். மனனம் செய்யும் வேலையில் நாங்களும் கிட்டத்தட்ட இரட்டைப் புலவர் போலத்தான். அவன் முதல் இரண்டு அடியை மறந்துவிடுவான் நான் கடைசி இரண்டு அடியை பாடமாக்க மறந்துவிடுவேன். வகுப்பில் வேப்ப மரத்தில் செய்த புது அலமாரி வந்து இறங்கியிருந்தது. வகுப்பு முடியுமட்டும் ஆசிரியர் எங்களை அலமாரியில் வைத்து பூட்டி விட்டார். இப்பொழுது நினைத்துப் பார்த்தால் பெரிய தண்டனையாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அது மிகச் சாதாரணம். என் வீட்டிலேகூட ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் கூடிய தண்டனையாக கொடுத்திருக்கலாம் என்று ஐயா அபிப்பிராயப்பட்டார். படிப்பென்றால் மனனம் செய்வது என்ற எண்ணம் தீவிரமாகப் பரவியிருந்த காலம் அது. யார் வகுப்பில் அதிகமாக மனனம் செய்யும் திறமை பெற்றிருக்கிறாரோ அவரே கெட்டிக்காரர்.




எங்களுக்கு ஒரு சங்கீத ரீச்சர்கூட இருந்தார். அவர் இரண்டாம் உலகப்போர் முடிந்தபிறகு சிங்கப்பூரிலிருந்து வந்தவர் எஸ்.என்.சரஸ்வதி என்று பெயர். எங்கள் கிராமத்தாரை ஆச்சரியப்படவைக்கும் சதுரமான கண்ணாடி அணிந்து, சிங்கப்பூர் ஸ்டைலில் சேலை கட்டி, அழகான தோற்றமுடன் இருப்பார். இனிமையான குரலில் பாடுவார். காலை மாலை எப்பொழுது பார்த்தாலும் அப்பொழுதுதான் புகைப்படத்துக்கு தயாரானதுபோல மெல்லிய ஒப்பனையில் காணப்படுவார். முதல் நாள் முதல் வகுப்பில் தியாகராஜருடைய கீர்த்தனை ஒன்றை எடுத்த எடுப்பில் சொல்லித் தந்தார். ‘ஸரஸ சாமதான பேத தண்ட சதுர’ என்று அது தொடங்கும். ஆங்கிலத்தில் கவிதை பாடமாக்கி களைத்து, தமிழ் பாடல்களை பாடமாக்கி களைத்திருந்த எனக்கு தெலுங்கிலும் மனப்பாடம் செய்யவேண்டிய கட்டாயம். ஒரு தவணை முழுக்க அவர் என்னைப் படிப்பித்தார். அப்படியும் பழக்கப்படாத என் மூளைக்குள் தெலுங்கு ஏறச் சம்மதிக்கவில்லை.

சமீபத்தில் கனடாவில் ஒரு திருமண விருந்தில் இங்கிலாந்திலிருந்து வந்து கலந்துகொண்ட என்னுடைய சங்கீத குருவைச் சந்தித்தேன். அதே சதுரமான கண்ணாடி, அதே இனிமையான குரல். ‘என்னை ஞாபகமிருக்கிறதா?’ என்று கேட்டேன். ஒருநிமிடம்கூட யோசிக்காமல் இல்லை என்றார். ‘ஸரஸ சாம’ என்று தொடங்கும் தியாகராஜருடைய கீர்த்தனையின் பல்லவியை காபிநாராயணி ராகத்தில் அத்தனை சனங்களின் முன்பும் பொய்க்குரலில் பாடிக் காண்பித்தேன். எனக்கு பின்னாலிருந்த நாற்காலி திடீரென்று பாடத் தொடங்கியது போல ஸ்தம்பித்துப்போய் நின்றார். என் முகத்தை ஞாபகத்துக்கு கொண்டுவர முயன்று முயன்று தோற்றார். திருமண விருந்து முடிவுக்கு வரும்வரை நான் யார் என்பதை அவருக்கு சொல்லவில்லை. ஒரு வஞ்சம் தீர்ப்பதில் உள்ள இன்பம் ஈடு இணையற்றது.

எங்கள் பள்ளிக்கூடத்தில் படித்த சகல மாணவரையும் கலங்க வைத்த ஓர் ஆசிரியர் இருந்தார். அவருடைய பெயர் எம்.எஸ். நேரசூசிகையை விளம்பரப் பலகையில் ஒட்டியதும் மாணவர்கள் ஓடிப்போய் முதலில் பார்ப்பது எம்.எஸ் ஏதாவது பாடம் எடுக்கிறாரா என்பதுதான். அவர் பாடம் எடுக்கும் வகுப்பர்களைப் பார்த்து ஏனைய மாணவர்கள் ஆறுதல் சொல்வார்கள். குதிரை மேலிருந்து பார்ப்பது போலத்தான் அவர் மாணவரைப் பார்ப்பார். அவர் எங்களுக்கு பூமிசாஸ்திரம் பாடம் எடுத்தார். பிழைகள் பொறுக்க மாட்டாதவர். அவர் வகுப்பை தொடங்கமுன்னர் பட்டினத்தாருடைய ‘கல்லாப் பிழையும், கருதாப் பிழையும்’ பாடலை முழுதாக மனதுக்குள் ஒருமுறை சொல்லிக்கொள்வேன்.

ஆங்கிலக் கவிதை, தமிழ் கவிதை, தெலுங்குக் கீர்த்தனை என்று பாடமாக்கச் சொன்னால் கொஞ்சம் முயன்று பார்க்கலாம். ஆனால் எம்.எஸ் வரைபடத்தை மனனம் செய்யச் சொல்லுவார். வெண்கட்டியை எடுத்து உலக வரைபடத்தை கரும்பலகையில் கையெடுக்காமல் வரைவார். இலங்கையின் ஆகத் தெற்குப் புள்ளி தேவேந்திரமுனை. அதிலேயிருந்து ஒருவர் தெற்குப்பக்கமாக நேராக போனால் சரியாக தென்துருவத்துக்கு போய்விடலாமாம். அதைக் கீறியும் காட்டுவார். உலகத்தில் எத்தனை நாடுகள் இருக்கின்றன, அத்தனையையும் நினைவில் வைக்கவேண்டும். அட்சரேகை, தீர்க்கரேகை, கண்டங்கள், சமுத்திரங்கள், நாடுகள், கடல்கள், மலைகள், ஆறுகள், நகரங்கள் என்று முடிகின்ற காரியமா? எங்களை ஒவ்வொருவராக அழைப்பார். பால்குத்த வந்தவனிடம் போவதுபோல நாங்கள் அரக்கி அரக்கி போவோம். அவருடைய வரைபடத்தில் அவர் சொல்லும் இடங்களை நாங்கள் தொட்டுக் காட்டவேண்டும். ‘அந்தமான் நிக்கோபார்’ என்பார். திரும்பி மானைத் தேடும்போது தண்டனை ஆரம்பித்துவிடும்.

வந்தியத்தேவன் பனை இலச்சினை மோதிரத்தை எடுப்பதுபோல அன்பொழுக கதைத்தபடி தன் விரலில் இருந்த மோதிரத்தை கழற்றி அடுத்த கைவிரலுக்கு மாற்றுவார். குட்டு விழப்போகிறது. இவர் குட்டினால் பள்ளத்தில் ஒரு பட்டை தண்ணீர் நிற்கும் என்பது ஐதீகம். இடிபோல குட்டு இடப்பக்கம் இறங்கும். அன்றுவரை இடப்பக்க மூளையில் சேகரமாயிருந்த தகவல் எல்லாம் வலப் பக்க மூளைக்கு மாறிவிடும்.

இவரை நான் மன்னித்துவிட்டேன். கடைசி வரைக்கும் மன்னிக்க முடியாத ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் பெயர் ஹென்ஸ்மன். இவர் எங்களுக்கு வேதியியல் பாடம் எடுத்தார். வேதியியல் முழுக்க சமாந்திரங்கள் நிறைந்திருக்கும் ஆனால் இவர் அவற்றை நாங்கள் பாடமாக்கவேண்டும் என்று சித்திரவதை செய்வதில்லை. நாங்கள் வணக்கம் சொல்லிவிட்டு உட்கார்ந்ததும் மனிதர் நடந்துகொண்டே வாயை திறந்து பேசத்தொடங்குவார். வார்த்தைகள் சங்கிலிக் கோர்வையாக விழும். வகுப்பின் கடைசியில் போய் நின்று பேசும்போது வார்த்தைகள் பின்னாலிருந்து முன்னுக்கு வரும். ஒன்றுமே புரியாது. அது நல்ல வசதியாக இருந்ததால் நாங்கள் எங்கள் பாட்டுக்கு ஏதாவது செய்து நேரத்தை உபயோகமாகக் கழிப்போம்.

ஒரு தடவை என் கையில் கல்கி தீபாவளி மலர் கிடைத்தது. அது ஒரு பொக்கிஷம் போல. ஒன்றேகால் அடி நீளம், ஓரடி அகலத்தில் தொக்கையாக இருக்கும். மத்தியானம் நல்லாகச் சாப்பிட்டிருந்தால் ஒழிய அதை தூக்க முடியாது. 20 பேர் படித்து முடித்த பிறகு அது என்னிடம் வந்திருந்தது. எனக்கு பிறகு இன்னும் 20 பேர் காத்துக்கொண்டிருந்தார்கள். இரவல் வாங்கிய தீபாவளி மலரை நான் வீட்டாருக்கு தெரியாமல் எடுத்து வந்திருந்தேன். பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் எழுதியிருந்தார்கள். வழுவழுப்பான காகிதம் அற்புதமான படங்கள். அன்று ஹென்ஸ்மன் மாஸ்டர் பிராண வாயு பற்றி பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். நான் மேசைக்கு கீழே தீபாவளி மலரை விரித்து வைத்து அடுத்த நிமிடம் பிராணன் போய்விடக்கூடும் என்பதுபோல ரகஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தேன். அதை ஹென்ஸ்மன்

தொடர்தல் 88ம் பக்கம்

மாஸ்டர் எப்படியோ தன் சஞ்சாரத்தில் கண்டு பிடித்து மலரை பறித்துக்கொண்டு போய்விட்டார். எவ்வளவு கெஞ்சியும் திருப்பி தரவில்லை. அடுத்த தீபாவளி வந்தபோதுகூட அது திரும்ப என் கையில் கிடைக்கவில்லை. என்றைக்கும் எந்த தீபாவளி மலரை எங்கே கண்டாலும் ஹென்ஸ்மன் மாஸ்டரின் ஞாபகம் எனக்கு வராமல் போவதில்லை.

இரட்டைப்புலவர் இருந்ததுபோலவே எங்கள் பள்ளிக்கூடத்தில் இரட்டை ஆசிரியைகளும் இருந்தார்கள். இருவருக்கும் வயது 19, 20 இருக்கும். ஒரே மாதிரி மடிப்பு வைத்து, ஒரே கலரில் சேலை உடுத்தி வருவார்கள். சுகிர்தம் ரீச்சரின் முகம் முட்டை வடிவில் இருக்கும் ஞானாம்பிகை ரீச்சரின் முகம் கோணங்களால் உருவானது. இருவரும் மான் குட்டிகள்போல துள்ளித்துள்ளி படியேறுவார் கள் எப்ப பார்த்தாலும் ஒன்றாகவே திரியும் அவர்கள் ஒன்றே ஒன்றில் மட்டும் வித்தியாசப் படுவார்கள். சுகிர்தம் ரீச்சர் வாயை கையினால் மறைத்து களுக் என்று ஒரு ஸ்வரத்தில் சிரிப்பார். ஞானாம்பிகை ரீச்சர் விழுந்து விழுந்து நீளமாக சிரிப்பார்.

சுகிர்தம் ரீச்சர் எங்களுக்கு சரித்திரம் படிப்பித்தார். ஒரு நாட்டின் சரித்திரம் அதை ஆண்ட அரசர்களின் சரித்திரம்தான் என்று நினைத்த யாரோ எழுதிய புத்தகம். இந்தப் புத்தகத்தில் நிறைய அரசர்கள் வந்துவந்து போவார்கள். போர் புரிந்து அடுத்தவர் ராச்சியத்தை கைப்பற்றுவார்கள். தோற்றால் ஓடிப்போய் குகைகளில் ஒளிந்துகொள்வார்கள். மலையை பிடித்து கோட்டை கட்டுவார்கள். அதற்குமுன் தகப்பனை கொன்று சுவருக்குள் புதைத்து வைக்க மறக்கமாட்டார்கள். ராணியும் சும்மா இருப்பதில்லை. நிறையப் புருசர்களை அடுக்கடுக்காக நஞ்சு வைத்து கொல்லுவாள். பொலநறுவையை பிடித்து தமிழர்களை துரத்து வார்கள் பின்னர் தலைநகரத்தை மாற்றுவார்கள். போர் எல்லாம் முடிந்து ஒன்றும் செய்ய இல்லாவிட்டால் குளங்கள் வெட்டுவார்கள். முடிகிற காரியமா? இவர்கள் வென்ற தேதிகள், தோற்று குகையை பிடித்த தேதிகள், நஞ்சுவைத்துக் கொன்ற புருசர்களின் எண்ணிக்கை, கட்டிய குளங்களின் பெயர்கள், வெட்டாத கால்வாய்களின் பெயர்கள் எல்லாத்தையும் நினைவில் வைக்க வேண்டும். எந்தவொரு புதுவகுப்புக்கு போனாலும் நான் வழக்கப்படி என் பெயரை மேசையின் மூலையில் கூரிய ஆயுதத்தால் எழுதிவைத்துவிடுவேன். சம்பந்தர் தன்னுடைய தேவாரங்களில் 'சிவஞானசம்பந்தன் சொன்ன இம்மாலையீரைந்தும்' என்று ஞாபகமாக தன் பெயரை பாடி வைப்பதுபோல நானும் வருங்கால சந்ததியினருக்காக என் பெயரை செதுக்கியிருப்பேன். உலகத்திலே மேசை இருக்கும்வரை என் பெயரும் நிலைக்கும். அத்துடன் நிற்காமல் சரித்திர பாடத்தில் முக்கியமாக படித்த தேதிகளையும் செதுக்கி வைத்திருப்பேன். ஆனால் சோதனை அன்று மேசைகளை மாற்றி வைத்துவிட்டபடியால் சரித்திரத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் என் முயற்சி தோற்றது. அதை தெரிந்தே சுகிர்தம் ரீச்சர் செய்தார் என்று நினைக்கிறேன். நான் இல்லாத சமயமாகப் பார்த்து கையினால் வாயை மூடி களுக் என்று சிரித்தாலும் சிரித்திருப்பார்.

ஞானாம்பிகை ரீச்சர் படிப்பித்தது கேத்திர கணிதம். கோணங்களாலான முகம் கொண்ட அவர் கேத்திர கணிதம் படிப்பித்தது மிகப் பொருத்தமானதுதான். இரண்டு சம அளவான பக்கங்களைக் கொண்ட முக்கோணத்தை சரி பாதியாகப் பிளந்து உண்டாக்கும் இரண்டு முக்கோணங்களும் சமம் என்று நிரூபிக்கச் சொல்வார். அதை ஏன் நிரூபிக்க வேண்டும்? பார்த்தவுடனேயே தெரிகிறது. நிரூபணத்தை கடுமையாக யோசித்து எழுதிக்கொண்டு போனால் பென்சிலைக் கடித்துக்கொண்டு நான் எழுதியதை படித்துப் பார்த்துவிட்டு 'உன்னுடைய மூளை நான் சொல்லித் தாறதை உடனுக்குடன் மறந்துவிடுகிறது' என்று சொல்லி என் தலையில் என்னுடைய கொப்பியாலேயே செல்லமாக ஒரு தட்டு தட்டி அனுப்பிவிடுவார்.

எங்கள் வகுப்பில் இரண்டே இரண்டு பெண்கள் தான். அதில் ஒருத்தியின் பெயர் வாகேஸ்வரி. பல்லிபோல ஒல்லி உடம்பு. கணுக்காலைத் தொடாமல் கட்டையாகிவிட்ட ஒரே பாவாடையை தினம் அணிந்து வருவாள். சுபாஷ் கஃபேயில் ஒன்றுக்குமேல் ஒன்றாக உயரமாக அடுக்கிவைத்திருக்கும் கழுவாத கோப்பைகள்போல எந்த நேரமும் விழுந்துவிடலாம் என்பதுபோல அசைந்தபடி நிற்பாள். இவள் கேத்திர கணிதத்தில் கெட்டிக்காரி. கொப்பியில் மூக்கு தொடுகிறமாதிரி குனிந்து கணக்கை எழுதிவிட்டு கொப்பியை தூக்கிக் கொண்டு ரீச்சரிடம் முதலில் ஓடுவது இவள் தான். வாயில் விரல் வைத்து விசில் அடிப்பதுபோன்ற கீச்சுக்குரலில் இவள் கதைக்க, ரீச்சர் இவளை மகிமைப் படுத்துவார். எங்களால் பொறுக்கமுடியாமல் போகும்.

ஒருநாள் எப்படியும் வாகேஸ்வரியை தோற்கடிக்கவேண்டும் என்று வேகமாகக் கணக்கை போட்டேன். எங்கள் வகுப்பறை தரையில் மணல்தான் இருக்கும். என்னுடைய பென்சில் தேய்ந்து தேய்ந்து ஆட்டுப் புழுக்கை சைசுக்கு வந்துவிட்டது. இரண்டு விரல்களால் தந்திரமாகப் பிடித்தால்தான் எழுதமுடியும். அவசரத்தில் எழுதும்போது பென்சில் மணலில் விழுந்து, விழுந்த கணமே மறைந்துவிட்டது. எவ்வளவு தேடியும் கிடைக்காததால் தொடங்கிய கணக்கை நான் முடிக்கவில்லை. அன்று ஞானாம்பிகை ரீச்சர் கோபம் வந்து என்னுடைய வெறும் கொப்பியில் இரண்டு கோடுகள் குறுக்காக கீறியது இன்றைக்கும் நினைவில் நிற்கிறது.

அவருடைய ஞாபகம் சில வருடங்களுக்கு முன்னர் எனக்கு மீட்கப்பட்டது. நான் பாகிஸ்தானில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஒருநாள் விருந்திலே இளம்பெண் ஒருவரைச் சந்தித்தேன். அவர் உலக வங்கியில் அதிகாரியாக பணியாற்றினார் பெயர் ஜீவா என்று சொன்னார். அவருடைய வாழ்க்கையை பின்னோக்கி தள்ளிக்கொண்டு போனதில் அவர் ஞானாம்பிகை ரீச்சரின் மகள் என்பது தெரிய வந்தது. 'உங்களுடையை அம்மா கண்டிப்பான ஆசிரியை' என்று சொன்ன நான் மணலில் பென்சிலை தொலைத்த கதையை கூறிவிட்டு 'இன்றைக்கும் என்னுடைய பென்சில் அந்த மணலில் கிடக்கும்' என்றேன். மகள் நான் வேறு ஏதோ மொழியை பேசியதுபோல என்னையே பார்த்தார். பிறகு திடீரென்று விழுந்து விழுந்து பல ஸ்வரங்களில் சிரித்தார்.

Under a spreading chestnut tree பாடலை பாடமாக்கச் சொன்ன அமிர்தலிங்கம் மாஸ்டரை நினைவுக்கு கொண்டுவரும் சம்பவம் சமீபத்தில் நான் பொஸ்டனுக்கு போனபோது நிகழ்ந்தது. அங்கே ஒரு பாலத்தை லோங்ஃபெல்லோ பாலம் என்று அழைத்தார்கள். லோங்ஃபெல்லோ இளைஞனாக இருந்த காலத்தில் தன் காதலியைப் பார்க்க அந்தப் பாலம் வழியாக போய் வருவாராம். அந்த ஞாபகமாக பாலத்துக்கு அவர் பெயரை சூட்டியிருந்தார்கள். லோங்ஃபெல்லோ வாழ்ந்த மாளிகையை இப்பொழுது மியூசியமாக மாற்றியிருக்கிறார்கள். இவருடைய பாடலைத்தான் நான் மணிக்கணக்காக உட்கார்ந்து மனப்பாடம் செய்திருக்கிறேன்.

*Under a spreading chestnut-tree*
*The village smithy stands;*
*The smith, a mighty man is he,*
*With large and sinewy hands;*
*And the muscles of his brawny arms*
*Are strong as iron bands.*

அவர் பாடிய செஸ்நட் மரத்தை வெட்டியபோது அந்த ஊர் குழந்தைகள் ஒரு சாய்வு நாற்காலியை அதே மரத்தில் செய்து லோங்ஃபெல்லோவுக்கு பரிசாக கொடுத்திருக்கிறார்கள். கவியும் தன் முதுமைக் காலத்தை கணப்பு அடுப்புக்கு முன் செஸ்நட் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடியே கழித்தாராம்.

'இதுவா அந்த செஸ்நட் மரம்? பிரம்பு மரம்போல இல்லையே! அந்த மரத்தினால் செய்யப்பட்ட நாற்காலியா இது?' வழிகாட்டிப் பெண் இல்லாத சமயம் பார்த்து அந்த நாற்காலியில் நான் ஒரு நிமிடம் அமைதியாக சாய்ந்து கண்மூடி அமர்ந்துகொண்டேன். அறுபது வருடத்து முட்டுக்கால் வலி கொஞ்சம் ஆறியதுபோலப் பட்டது. கைவிளக்கு ஒளியில் தனிமையில் உட்கார்ந்து மொழி புரியாத பாடலை மனனம் செய்யும் ஒரு சிறுவனின் உருவம் தெரிந்தது. இரண்டு மொழிகளைக் கற்று, இரண்டு நாடுகளில் வசித்து, இரண்டு நூற்றாண்டுகளைப் பார்த்துவிட்ட எனக்கு அந்தக் கணம் மறக்கமுடியாததாகத் தோன்றியது. அந்த பாடலைப் பாடிய கவியையோ, மரத்தின்கீழ் நின்று நாள் முழுக்க வேலை செய்த கொல்லரையோ, அந்த நாற்காலியை செய்துகொடுத்த குழந்தைகளையோ அப்பொழுது நான் நினைக்கவில்லை. நான் நினைத்ததெல்லாம்
அமிர்தலிங்கம்
மாஸ்டரைத்தான்.



muththulingam.a@thaiveedu.com






# கப்பல், சமுத்திரம், பெண்

- தேவகாந்தன் -



எண்பதுகளின் ஆரம்பத்தை கப்பற்றொழில் படுமோசமாக வீழ்ச்சியடைந்த காலமாகச் சொல்லமுடியும். தானியம் ஏற்றிச் செல்வதற்கும், எண்ணெய் ஏற்றிச் செல்வதற்கும் உதிரிச் சாமான்களை கொன்டெயினர் எனப்படும் பெரும் உலோகப் பெட்டிகளில் போட்டு அவ்வாறான நூறு நூறு பெட்டிகளை ஏற்றிச் செல்வதற்குமான மிகப்பெரும் கப்பல்கள் கட்டப்பட்ட காலம் அது. புதிய கப்பலை பழைய கப்பலின் பாதித் தொகை மாலுமிகளோடேயே செலுத்த முடிந்திருந்தது. மட்டுமில்லை. கடற் பயண காலமும் முக்கால் பங்காகக் குறைந்தது. அதனால் கப்பல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பன்னூறு கப்பல்கள் தொழிலிழந்தன. பழைய கப்பல்கள் இரும்பு விலைக்கு விற்கப்பட்டன. நடுத்தரப் புதிதான கப்பல்களே ஏற்றிச் செல்ல சாமான்கள் இன்றி துறைமுகங்களுக்கு முன்னால் நங்கூரங்களில் தூங்கிக்கொண்டு கிடந்தன. ஒரு காலத்தில் கப்பற்றொழிலில் ஏக சக்கராதிபத்தியம் செலுத்திவந்த கிரேக்கம்கூட அதனால் ஆட்டம் கண்டது.

அக்காலப் பகுதியில் நடுத்தரப் புதிதான M.V.EXCELLENT என்ற ஒரு கிரேக்கக் கப்பலில் வேலைசெய்து கொண்டிருந்தான் கலாபன். அதுவரையான கப்பற்றொழில் காலத்தில் கலாபன் அலுப்படைந்திருந்தது அந்தக் கப்பலில் சேர்ந்த ஆறு மாத காலத்தில்தான். ஒரு நாட்டை அடையவோ, அதன் பின் துறைமுகத்துள் நுழையவோ, நுழைந்த பின்னர் சாமான்களை இறக்கவோ, இறக்கிய பின் துறைமுகத்தை விட்டு விலகவோ அது அவசரமே காட்டியதில்லை. விலகிய பின் அடுத்துச் செல்ல வேண்டிய துறைமுகம் எதுவென அறியாமல் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரத்தில் கிழமைக்கணக்காகக் காத்துக் கிடக்கும் அது. அந்த ஆறு மாத காலத்தில் மொத்தம் நான்கு துறைமுகங்களையே கண்டிருந்தது கப்பல்.

அப்போது மூன்றாவது கிழமை. ஐக்கிய அமெரிக்காவின் சியாட்டில் துறைமுகத்துக்கு முன்னால் நங்கூரத்தில் நின்று அலைகளில் ஆடிக்கொண்டிருந்தது M.V.EXCELLENT. மாலுமிகள் உற்சாகம் இழந்திருந்ததோடு ஒருவகை ஏக்கமும் கொண்டிருந்தனர். கப்பலில் வேலைசெய்ய வேண்டிய ஓராண்டுப் பூர்த்தியின் முன்னரே தங்களை வீட்டுக்கு கொம்பனி அனுப்பிவிடுமோ என்ற ஏக்கம்தான். பாதிக்குப் பாதி பேர் கப்பல் முகவருக்குக் கட்டிய பணத்தில் பாதியைக்கூட உழைத்திருக்க முடியாது. ஏக்கம் அவரவர் முகத்தில் எழுதியிருந்தது.

கலாபனைப் பொறுத்தவரை அந்தக் கவலை இல்லை. ஆனாலும் சோர்வுதட்டிப்போனது. அடுத்த துறைமுகத்தை நோக்கிப் பயணப்படும்போதிருக்கும் உற்சாகம் பயணமேயின்றிக் காத்துக் கிடக்கையில் ஏற்படாதுதான்.

சியாட்டில் துறைமுகத்தை அடைந்த அன்றைய இரவில் மாலுமிகளின் கிளப்புக்கு (Seamen Club) சென்றுகொண்டிருக்கையில், அந்தக் கோடைபிறந்திருந்த அந்திவேளையில் அவசரமெல்லாம் அழிந்து நடக்கும் சுகமனுபவித்துக்கொண்டிருந்த கலாபனுக்கு, தானாகவே முன்வந்து தன் வாகனத்தில் இடமளித்து, முதலில் கிளப்புக்கும், பின்னர் ஒரு டிஸ்கொதே எனப்படும் நடனசாலைக்கும், பின் தன் வீட்டுக்குமாய் அழைத்துச்சென்று ஒரு காமோத்சவத்தை நடத்துவித்த வித்தகி மார்க்கரெட்டின் கொழுத்த உடல் வாசனை, ஸ்பரிச சுகங்கள் மறந்து நாளாகிவிட்டது. பெயரே பெரும்பாலும் மறதியில் நின்றுகொண்டிருந்தது. உடலில் ஊறும் தசைத் தினவு வெறியேறிய இரவுகளை இடைஞ்சல் செய்தது.

இரண்டாவது கப்பல் பொறியியலாளன் அலெக்ஸ் மனைவியோடு கப்பல் அதிகாரிகளின் தளத்துக்கும் மேலே, கப்பரினதும் முதன்மைப் பொறியாளரதும் அறைகளுக்குச் சமாந்திரமான ஒரு அறையில் தங்கியிருந்தான். தூங்குகிற நேரத்துக்குத் தவிர மற்ற நேரமெல்லாம் மாலுமிகளின் சாப்பாட்டறையிலும், அதிகாரிகள் சாப்பாட்டறையிலும், கப்பலைச் சுற்றியுள்ள நடைபாதையோரங்களிலுமே காணப்பட்டுக்கொண்டிருந்தாள் அவனது மனைவி. சரளமாகவே எல்லோருடனும் பழகினாள். எப்போதும் சிரித்துக்கொண்டிருக்கும் முகம் அவளுக்கு. 'எல்ஸி...எல்ஸி' என்று கத்தியழைத்தபடி சிலவேளை கணவன் அலெக்ஸ் கப்பலெங்கும் தேடித் திரிவான்.

சிலபோது ஒரு வேதனையோடு எல்ஸி சிகரெட் புகைத்தபடி வெளி நடைபாதையில் தன்னை மறந்த நிலையில் நின்றுகொண்டிருப்பதை கலாபன் கனதரம் கண்டிருக்கிறான். அழகான எல்ஸியின் முகம் அந்த நேரத்தில் அழகிழந்து சோகம், ஏமாற்றம், வேதனை, துயரம் என வரையறுப்புச் செய்ய முடியாத ஒரு வலைக்குள் அழுந்திக்கிடந்திருக்கும். அவளது சதா சிரிப்பும் கலகலப்பும்கொண்ட மேற்படைக்குள் கிடந்த உணர்வு அவ்வேளைகளிலெல்லாம் ஆச்சரியத்தையே விளைவித்தது கலாபனிடத்தில். விருப்பமில்லாதவளைக் கொண்டுவந்து அலெக்ஸ் கப்பலில் வைத்திருக்கிறானோ என்றுகூட அவன் யோசித்திருக்கிறான். அலெக்ஸைவிட அதிகமான வேளைகளிலும் அவள் பிறரோடு அல்லது தனியனாய்க் காணப்பட்டதை அவன் அவ்வாறுதான் விளங்கிக்கொண்டான். கப்பலில் மாலுமிகள் தரப்பில் அப்படித்தான் விளங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அவர்களது உல்லாசவேளைப் பேச்சுக்களில் அது தெளிவாய் வெளிவந்தது.

துயரம் தாளாமுடியாது 'கலா' என அழுதபடி தன்னைநோக்கி எல்ஸி கைகளை விரித்தபடி ஓடிவரும் காட்சிகள் கலாபன் கனவில் எழல் ஆரம்பமாயிற்று. அவனைத் தனிமையில் காணுகையில் 'கலா' என அவள் அழைக்கும் போது அவளது கண்களில் சுழிக்கும் குறும்பு அவனை கனவுலகத்துச் சஞ்சாரியாக்கியிருக்கலாம். 'கலா' என்ற கிரேக்கச் சொல்லுக்கு நல்லது என்று அர்த்தம். கலா என்பதை கேள்விபோல் தொனிக்கவைத்தால் நலமா? என அர்த்தமாகும். அப்போது மிகவும் நல்லது என்று அர்த்தமாகும் 'பொலி கலா' என்று பதிலிறுப்பார்கள் கிரேக்க மொழி தெரிந்தவர்கள். அவனைக் கண்டால், 'கலா' என்பாள் எல்ஸி. விளிப்பு அல்லது நலமாவெனும் விசாரிப்பு என்ற அர்த்தப் பிரிகை தெரியாது பேசி அவள் அவனோடு தாமாஷ் செய்பவள். அவளை அந்தளவுக்கு மேல் அவனால் நினைத்துவிடவும் முடியாது.

மாற்றான் மனைவியை இச்சைப்படக்கூடாதென்னும் பண்பாடுள்ள ஓரினத்தைச் சேர்ந்தவன் அவன். அந்தச் சிறிய சுக நினைப்பைத் தவிர்ந்த வேறு முயற்சியெதிலும் அவன் இறங்கிவிட மாட்டான்தான்.

குடியும் படுக்கையுமாகக் காலம் நகர்ந்துகொண்டிருந்தது.

ஒருநாள் காலை கப்பலில் ஏக தடல்புடல். கப்பல் கம்பெனியின் உரிமையாளரது மகனும், கம்பெனிப் பொறியியலாளரும் அன்று கப்பலுக்கு வந்திருந்தார்கள். கப்பற் பொறியியலாளர் கப்பல் முதன்மைப் பொறியாளரோடு எந்திர அறை சென்று எந்திரத்தின் நிலைபற்றி நன்கு பரிசீலித்தார். கூடநின்றிருந்த கலாபனுக்கு விஷயம் விளங்கிவிட்டது அவர்களது பேச்சிலிருந்து. கப்பல் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையே ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்பந்தப் பயணங்களை மேற்கொள்ளப்போகிறது.

பயணம் தொடங்கப்போகிறது என்பது மகிழ்ச்சியாக இருந்தாலும், அந்தமாதிரியான ஒப்பந்தப் பயணம் அவனுக்குப் பிடித்தமாக இருக்கவில்லை. அதுபோல் ஒப்பந்தப் பயணம் மேற்கொண்ட கப்பல்களில் அவன் அதுவரை வேலைசெய்திருக்காவிட்டாலும், அந்தவகைப் பயணத்தின் பிரதிகூலங்களை அவன் நண்பர்கள்மூலம் அறிந்திருக்கிறான். ஒப்பந்தப் பயணமென்பது ஆங்கிலத்தில் Time Charter எனப் படும். சாமான்களை ஒரு துறைமுகத்தில் இன்ன நாளில் இன்ன நேரத்தில் ஏற்றவேண்டும் என்பதும், அதுபோல் அதை இறக்கும் துறைமுகத்தில் இன்ன நாளில் இன்ன நேரத்தில் இறக்கவேண்டும் என்பதும்தான் இதன் முக்கியமான சாரம்.

ஏற்றுமதிக்கான சாமான்களும், துறைமுக மேடையும் அந்தக் கப்பலுக்காகத் தயாராக இருக்கும் அந்தத் திகதியிலும், நேரத்திலும். அதுபோல் இறக்குமதிக்கான மேடையும், அதை இறக்கிச் செல்வதற்கான ஆயத்தங்களும் அடுத்த துறைமுகத்தில் தயாராகவிருக்கும். தவறும் ஒவ்வொரு நாளுக்கும் கப்பல் கம்பெனி நட்டஈடு கட்டியாகவேண்டும். ஆக, இத்தனை நாள் பயணப்பட்டு இன்ன திகதியில் ஒரு துறைமுகத்தை அடையவேண்டுமென்பது நிச்சயிக்கப்பட்டிருந்தால், அந்தத் திகதியில் காற்றானாலும், புயலானாலும், இயந்திரக் கோளாறு ஏற்பட்டாலும் கப்பல் அடைந்தேயாக வேண்டும். ஓர் இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் உணவு உறக்கமின்றி அதை கப்பல் பொறியியலாளர்கள் சரிசெய்தே ஆகவேண்டும். பயணத்தின் போதும் தங்கள் கடமை நேரங்களில் அதிகூடிய கவனத்தோடு அவர்கள் இருக்கவேண்டி ஏற்படும்.

எப்படியோ மறுநாள் காலை ஜப்பானின் நாகோயா துறைமுகம்நோக்கிய பயணம் என்பது நிச்சயமாயிற்று.

மாலுமிகள் முகத்தில் இழந்திருந்த களை மறுபடி நிறையலாயிற்று.

கலாபனுக்கும் மகிழ்ச்சிதான். ஆனாலும் உள்ளுள்ளாய் ஒரு மெல்லிய அச்சம். எப்படியென்று தெரியாதபடி மர்மமாய் அவனுள் அது நுழைந்திருந்தது.

அன்று அதிகாலை கப்பல் புறப்பட்டபோது, வேலை முடிந்து மேலே வந்த கலாபன் தூக்கம் வராமல் கப்பலின் பின் தளத்தில் நின்றுகொண்டிருந்தான். சாமான்கள் எதுவும் ஏற்றாத வெறும் கப்பல் தன் குறைந்தளவு அடிப்பாகத்தை தண்ணீருள் ஆழ்த்திவிட்டு மெல்ல ஆடியபடி நகர்ந்துகொண்டிருந்தது. மெல்ல மெல்ல அது வேகமதிகரித்து சீரான வேகத்தில் செல்ல ஆரம்பிக்க கலாபன் தன் அறைக்குத் திரும்பினான்.

முதலில் நாகோயா, பின்னர் ஒசாகா, அடுத்து யொக்கோகமா என்று மூன்று பயணங்களை அது நிறைவேற்றிவிட்டது.

பிரதான இயந்திரம் இயங்கக்கூடிய ஆகக்கூடுதலான பதினெட்டு கடல்மைல் கதியைவிட சற்றுக்கூடுதலான வேகத்திலேயே விரட்டப்பட்டுக்கொண்டிருந்தது. ஒரு கோடையில் தொடங்கிய அந்த ஒப்பந்தப் பயணத்தின் முதல் புறப்பாட்டின்போதே எந்திர அறை கொண்டிருந்த சூட்டில் அது தன் இயல்புக்கு மீறிய கதியில் செல்லவைக்கப்பட்டுக் கொண்டிருப்பதை கலாபன் உணர்ந்துகொண்டான். ஆனாலும் அவனால் எதுவும் செய்து விட முடியாது.

ஏறக்குறைய இரண்டாயிரம் கார்களை ஒரு பயணத்தில் அது சுமந்துகொண்டு ஐக்கிய

தொடர்தல் 90ம் பக்கம்

89ம் பக்கத் தொடர்ச்சி...

# கலாபன் கதை 10

அமெரிக்கா வந்துகொண்டிருந்தது. அந்தக் கப்பல் கார் ஏற்றுவதற்கான நவீனவசதி பொருந்தியதல்ல. மட்டுமில்லை. அது உண்மையில் பின்னால் உருமாற்றி வடிவமைக்கப்பட்ட பலநோக்க கப்பல்தான்.

அதன் சாமான் ஏற்றும் ஐந்து தளங்களிலும் கார்களை கிறேன்மூலம் உள்ளே இறக்கி அவை நகர்ந்துவிடாதவாறு பிணைப்புகள் போட்டு தடுப்புகள் வைப்பார்கள். அது சாமான்களுக்குச் சேதத்தை ஒருபோது ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பினைக்கொண்டிருந்தது. ஆனாலும் அதுமாதிரி அந்த மூன்று பயணங்களிலும் நடக்கவேயில்லை.

கப்பலில் விசேஷமான ஓர் அம்சம் என்னவெனில், பிரதான எந்திரத்தைத் தவிர மற்ற எந்த எந்திரமும் மோட்டரும், ஒரு தயார் நிலையான இன்னொரு எந்திரத்தையோ மோட்டரையோ கொண்டிருக்கும். ஒரு மோட்டர் பழுதானால் அதன் இன்னொரு தயார்நிலை மோட்டரை இயக்கிவிட முடியும். ஆனால் அங்கேயுள்ள முக்கிய சங்கதி, அந்தப் பழுதான எந்திரம் உடனடியாகத் திருத்தப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டாக வேண்டும் என்பது. இரண்டாம் நிலைப் பொறியியலாளன் அலெக்ஸ் அது காரணமாய் அனேகமான பொழுதுகளையும் எந்திர அறையிலேயே கழிக்கவேண்டிய நிலையிலிருந்தான். கலாபனுக்கும் நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து மணிநேர மேலதிக வேலை கிடைத்தது. கடலிலே மேலதிக வேலைக்கு இரண்டு மடங்கு பணம். அது காரணமாகவே யாரும் மறுதலிக்கிற நிலையிலில்லை மேலதிக நேர வேலையை.

வெளியில் தாராளமான செலவும், வீட்டுக்கு தாராளமான பணம் அனுப்புகையுமாக இருந்தது. செலவை அமெரிக்கத் துறைமுகத்திலேதான் செய்ய முடிந்திருந்தது. ஜப்பானில் வீட்டுக்கு, நண்பர்களுக்கு சாமான்களாக வாங்கிக்கொண்டார்கள். ஜப்பானில் விலை மாதர்களை அணுகிவிட முடியாது. ஆகக் குறைந்த தொகை மூவாயிரம் யென்னாக இருந்தது. ஆனால் ஒரு 2 in 1 சோனி அல்லது நாஷனல் செற் இரண்டாயிரத்து அய்ந்நூறு யென்தான். யாருக்கு மனம் வரும், ஒரு சோனி செற்றை காமத்துக்காகச் செலவிட?

நான்காம் பயணம் நியூயார்க் நகருக்குக் கிட்டவுள்ள நியூவாக் என்ற துறைமுகத்திலிருந்து தொடங்கிய சமயத்தில், குளிர்காலம் ஆரம்பித்திருந்தது. முதல் பயணத்தில் வெறும் கப்பலாகப் புறப்பட்டதுபோலன்றி, மற்ற இரு பயணங்களிலும் பருத்திப்பொதிகளை ஏற்றிச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்திருந்தது கம்பெனிக்கு. அந்தப் பயணத்தின்போதும் வெறும் கப்பலாகவே செல்ல நேர்ந்துவிட்டது.

நியூவாக்கிலிருந்து புறப்பட்டபோதே (Funnel) கப்பலின் உச்சியில் முடிபோன்ற புகைபோக்கியிலிருந்து கரிய புகை போகத் தொடங்கியிருந்ததைக் கண்டுவிட்டு அலெக்ஸிடம் முறையிட்டிருந்தான் கலாபன்.

வலுத்த காற்று வடமேற்கு மூலையிலிருந்து வீசிக்கொண்டிருந்தது. மணிக்கு மணி காற்றின் உக்கிரம் வலுத்தது. சாமான்கள் கவிழ்ந்து விழுந்தன. தொலைக்காட்சிப் பெட்டிகள் சரிந்து நகர்ந்தோடி ஏதோவொன்றில் இடித்து உடைந்தன. சமையல் பகுதியில் சமைக்கவே முடியவில்லை. எல்லோருக்கும் பாணும், சூப்பும்தான் இரண்டு நாளாக உணவு. வேறு உணவானாலும் சாப்பிட்டிருக்க முடியாது. பல வருஷ அனுபவம் வாய்ந்த மாலுமிகளே கடல்வருத்தத்தில் வாந்தியெடுத்து அவஸ்தைப்பட்டனர்.

மேலும் ஒரு நாள் கடந்த பின்னர்தான் தெரிந்தது அவர்கள் திசையில் மிக்கவேகமான புயல் நகர்ந்து வந்துகொண்டிருப்பது.

எல்லோர் முகத்திலும் மறுபடி கலக்க ரேகைகள். பழகிப்போயிருந்தும் கலாபன் முகத்திலும் அந்தக் கலக்கம் பதியத் தவறவில்லை.

இன்னும் பன்னிரண்டு நாட்கள் இருந்தன கப்பல் நாகோயாவை அடைவதற்கு. முன்னர் ஒருபோது எம்.வி.சந்திரகுப்த என்ற இந்தியக் கப்பலுக்கு நேர்ந்த கதியை எண்ணுகையில் கலாபனுக்கு உடம்பே விறைத்துவந்தது.

துணிவை வரவழைக்கவே பலர் குடித்தனர். மரணத்தை எண்ணுவதிலிருந்து தப்பிக்க இன்னும் சிலர். ஏதேதோ பேச்சுக்களைப் பேசினர். ஒருபோது ஒரு மாலுமி சொன்னான், எல்ஸி கடந்த இரண்டு மூன்று தினங்களாகக் காணப்படாதிருப்பதாக. மெய்தான். அவளை யாரும் இரண்டு மூன்று தினங்களாகப் பார்த்திருக்கவில்லைத்தான். மார்க் என்ற முதன்மைச் சமையல்காரர் அப்போது வேடிக்கையாக மிகவும் முரட்டுத்தனமும் பெருத்த ஆகிருதியும் கொண்ட ஓர் ஆபிரிக்கனைக் கேட்டார், 'மோஸே, நீ அவளை இழுத்துக்கொண்டுபோய் கடலினுள் வீசவில்லையே?' என்று.

எல்லோரும் சிரித்தனர். மோஸேயும் சிரித்தான். ஆனால் அவரது பேச்சில் ஏதோவோர் உண்மை இருப்பது அறிந்து கலாபன் அவரைத் தனியாகச் சந்தித்த ஒருவேளை கேட்டபோது, மார்க் சொன்ன தகவல் அவனை அப்படியே ஸ்தம்பித்துப்போகச் செய்துவிட்டது.



**கப்பலாட்டம் அவளைச் சரிந்து சரிந்து வந்து அவன்மீது விழவைத்துக்கொண்ருந்தது அந்தப் பொன்முடிப் பெண்ணின் மோதல்களில் தான் உணர்ச்சிவசமாவது உணர்ந்து அவன் விலகிநிற்கவே முயன்றான். ஆனாலும்...**

அவர் சொன்னார்: 'மெய்தான், கலா. இது போல் பழைய காலத்திலே நடந்திருக்கிறது. கப்பலில் பெண்கள் செல்லும் வழக்கம் ஆரம்ப காலத்தில் இருந்ததில்லை. அது பாய்மரக் கப்பல்கள் வணிகத்தில் ஈடுபட்டிருந்த காலம். அப்போது பெண்கள் கப்பலில் இருந்தால் கடல் கொந்தளிக்கும், கப்பலையே மூழ்கடித்து விடும் என்ற நம்பிக்கை இருந்தது. ஒருபோது கப்ரின் ஒருவன் மனைவியோடு கப்பலில் இருந்த சமயம் கடல் கொந்தளித்து ஆர்ப்பரிப்புச் செய்யத் தொடங்கிவிட்டதாம். கப்ரினின் மனைவி கப்பலில் இருப்பதாலேயே அந்த உயிராபத்தான நிலை தமக்கு ஏற்பட்டதென எண்ணிய மாலுமிகள் கப்ரின் உடனில்லாத வேளையில் அவனது அறைக்குச் சென்று அவன் மனைவியை இழுத்துப்போய் கடலினுள் வீசிவிட்டார்கள். அதன்பிறகு கடலின் சீற்றம் குறைந்து கப்பல் நிதானமாகப் பயணித்ததாம். இதுபோல பல கதைகளை நான் என் வாழ்நாளில் கேட்டிருக்கிறேன்.'

அதன் பின்னர் இரண்டு மூன்று நாளாக மோஸே என்ற பயங்கர ஆகிருதி எல்ஸியை கதறக் கதற இழுத்துப்போய் கடலினுள் வீசுவதான காட்சி கனவாகிக்கொண்டிருந்தது கலாபனுக்கு.

ஓர் அதிகாலை நான்கு மணிக்கு தன் வேலையை முடித்து வெளியே வந்த கலாபன் சிகரட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு சாப்பாட்டுக் கூடத்திலேயே அமர்ந்திருந்தான். அப்போதுதான் அதன் கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே நெருப்புப் பொறிகள் பறந்துகொண்டிருப்பதை அவன் கவனித்தது. அவன் உடனடியாக அறைக்குச் சென்று ஜொனி வோக்கரை குளிருக்கான துணையாக உள்ளிறக்கிக்கொண்டு பின்தளம் வந்தான். புகைபோக்கியிலிருந்து தீக் கங்குகள் பறந்து கொண்டிருந்தன. புகைபோக்கியின் வாயில் நெருப்பு கனிந்திருந்ததுபோலிருந்தது. அது சாதாரண நிலைமையில்லை. அவன் தாமதிக்காமல் முதன்மைப் பொறியாளரை எழுப்பி நிலைமையை விளக்கினான். முதன்மைப் பொறியாளர் பார்த்துவிட்டு வந்து கப்ரினை எழுப்பினார்.

அந்தளவிலேயே நிலைமை மோசம் என்பது கலாபனுக்குப் புரிந்தது. அது கப்பல் தீப்பிடிக்கும் அபாயத்தைக் கொண்டிருந்ததுதான். பிரதான எந்திரத்தின் பிஸ்டனின் அழுத்த வளையங்கள் உடைந்துபோயிருக்கின்றன. எந்திரம் உடனடியாகத் பழுது பார்க்கப்பட்டாக வேண்டும். ஆனால் நடுக்கடலில் அந்தப் புயலுக்குள் கப்பலை நிறுத்துவதும் சாத்தியமான விஷயமல்ல.

கப்பல் வேகம் குறைந்ததை உணர்ந்தான் கலாபன்.

அவன் படுத்து பத்து நிமிடம் ஆகியிருக்காது. அலெக்ஸ் வந்து கதவைத் தட்டி, 'காலை எட்டு மணிக்கு எழுந்து எந்திர அறைக்கு வந்துவிடு' என்று கூறிவிட்டுப் போனான்.

ஏழே முக்காலுக்கு அலாரத்தை வைத்துவிட்டு படுத்த கலாபன் காலையில் எழுந்தபோது கப்பல் மவுனத்தில் மூழ்கிப்போயிருந்தது. அதன் அதிர்வுகள் அடங்கிப்போயிருந்தன. பிரதான எந்திரம் நிறுத்தப்பட்டாயிற்று என்று தெரிந்தது. இனி பழுதுபார்க்கும் வேலை முடிகிறவரையில் தூக்கமுமில்லை, ஓய்வுமில்லை, உணவுமில்லை.

அன்று மாலை ஒரு மணியளவில் அமுக்க வளையங்கள் மாற்றப்பட்டு முடிந்தன. இனி பிஸ்டன் இறக்கப்படவேண்டியதுதான் பிரதான வேலை. மேலே சிலிண்டர் முடியைப் பூட்டி எண்ணெய் இன்ஜெக்டர், மற்றும் அதைக் குளிரவைக்கும் கடல்நீர்க் குழாய்களைப் பொருத்திவிட்டால் வேலை முடிந்தது.

வேலைகள் மனித சக்தியைமீறிய கதியில் நடந்துகொண்டிருந்தன.

பத்து மணியளவில் கப்பல் புறப்படத் தயாராகிவிடும் என்று தெரிந்தது. எட்டு மணியளவில் கலாபனை விளித்த முதன்மைப் பொறியாளர் இரவு பன்னிரண்டு மணிக்கு அவன் வேலைக்கு வரவேண்டியிருப்பதால் சென்று ஓய்வெடுக்கும்படி அனுப்பினார்.

கலாபன் குளித்துவிட்டு அதுவரை உறங்காமல் விளித்திருந்த மாலைதீவு நண்பன் அகமத்துடன் சிறிது பேசிவிட்டு கீழே இன்னும் உறங்காமல் இருக்கக்கூடிய மாலுமி நண்பர்களோடு உரையாட கீழ்த்தளம் வர முயன்ற போது, மேலே ஏறிவந்துகொண்டிருந்தாள் எல்ஸி. படுக்கை உடுப்போடு இருந்தாள். அந்தநேரத்தில் எங்கிருந்து வருகிறாள் என யோசிப்பதற்குள், 'கலா, மறுபடி வாஷர் மெசின் தொல்லை கொடுக்கிறது. நீ வந்தால்தான் சரியாகும், வா' என்று கீழே மறுபடி இறங்கினாள்.

பின்தளத்து ஒரு மூலையிலிருந்தது சலவை செய்யும் அறை. அதிகாரி நிலையிலுள்ளவர்களுக்கானது. மாலுமிகளுக்கு வெளுத்த படுக்கைவிரிப்பு, தலையணை உறை, துவாய் கொடுப்பார்கள். உடைகளை அவர்களேதான் தோய்த்துக்கொள்ள வேண்டும்.

இந்தமாதிரி கப்பல் சுழன்றடித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், இவளுக்கு உடுப்புத் தோயல் கேட்டதா? என்று மனத்துள் சினந்தாலும், இயல்பான செயல்களைச் சந்திக்கையில் புயல் அபாயத்தின் பயங்கரத் தோற்றம் அவனுள்ளே மங்கத் தொடங்கியதால், பின்னர் அவளது அழைப்பை அவன் ஆனந்தமாகவே ஏற்க முடிந்திருந்தான்.

வாஷர் மெசினது பிழையை உடனடியாகவே கண்டுபிடித்து தீர்த்துவிட்டான் கலாபன். ஆனாலும் எல்ஸி, 'நில், நானும் வருகிறேன்' என்றுவிட்டு ஒரு தோயலில் காயப்போட்ட உருப்படிகளை எடுத்து மடிக்க ஆரம்பித்தாள்.

கப்பலாட்டம் அவளைச் சரிந்து சரிந்து வந்து அவன்மீது விழவைத்துக்கொண்டிருந்தது. அந்தப் பொன்முடிப் பெண்ணின் மோதல்களில் தான் உணர்ச்சிவசமாவது உணர்ந்து அவன் விலகிநிற்கவே முயன்றான். ஆனாலும் அந்தப் பாழும் கப்பல் அவனிருக்கும் இடத்தை நோக்கியே அவளைத் தள்ளிக்கொண்டிருந்தது.

ஒருபோது அவள் சொன்னாள், 'சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறாயே, என்னைப் பிடித்துக்கொள், கலா' என்று. அவன் அவளது தோட்பட்டைகளைப் பிடித்தான். 'அப்படிப் பிடித்தால் நான் துணிகளை மடிப்பது எப்படி? கீழே பிடி' என்றாள் எல்ஸி. அவன் இடுப்பை வளைத்துப் பிடித்தான். மெல்லமெல்ல பிடி இறுக்கமாவதை அவனே உணர்ந்தான். அந்த இதத்தை அவளும் அடைந்ததாகவே தெரிந்தது. பின் அணைத்துப் பிடித்தான். ஒற்றை மெல்லிய லாஸ்ரிக் கொண்டிருந்த இரவுடையின் அவளது கீழாடை நழுவியது.

அவர்கள் இருவருக்குமே தேவைகள் வெகுத்திருந்தன.

எல்ஸியும் கலாபனும் வெளியே வந்தனர். அவள் நீண்டநாள் இழந்திருந்த மலர்ச்சியை அப்போது முகத்தில் கொண்டிருந்தாள். கலகலப்பாய்ச் சிரித்துப் பேசியபடி வந்தாள். அவர்கள் மேல்தளம் செல்ல படிக்கட்டருகே வந்தபோது எல்ஸியை முறைத்துப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான் அலெக்ஸ்.

பார்வையா அது? கனல்! எரித்துவிடுகிற கனல்!

இருவரும் திகைத்தனர்.

அலெக்ஸ் கொண்டிருக்கக்கூடியது நடந்திருக்கக்கூடியதின் ஊகம் மட்டுமே. அதையே தாங்கமுடியாமலிருந்தது கலாபனால்.

அப்படியே அவளைத் தறதறவென இழுத்துப் போய் கப்பலுக்கு வெளியே வீசிவிடுவானோ? மார்க் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் நடந்ததாய்ச் சொன்னதுபோல, இந்தச் சந்தர்ப்பத்திலும் நடக்க பெருவாய்ப்பிருந்ததை கலாபன் கண்டான்.

கலாபன் சிரிக்க முனைந்தான். வரவில்லை. ஒரு வார்த்தையில்லை அலெக்ஸிடமிருந்து. கலாபன் மேற்றளம் வந்ததும், தனது அறைப் பக்கம் திரும்பி நடந்தான்.

அதுபோலவே எல்ஸியும் தனது தளத்துக்கு ஏறத் தொடங்கினாள்.

பத்து மணியளவில் கப்பல் மறுபடி புறப்பட்டது. அன்று காலை நான்கு மணிக்கு கலாபனுக்கு வேலை முடிந்தபோது வந்து பாரமேற்ற அலெக்ஸின் முகத்தில் வடுவின் கனதி தெரிந்தது. மேலே வந்தபிறகு கலாபன் நினைத்தான், இனி கனநாளைக்கு எல்ஸி அங்கே இருக்கமாட்டாள் என்று. ஒன்றில் அவளாகச் செல்ல நினைப்பாள், அல்லது அலெக்ஸே அவளை அனுப்பிவைத்துவிடுவான்.

அந்தக் கப்பல் இரண்டு வருடங்களாக அந்த ஒப்பந்தப் பயணத்தைத் தொடர்ந்தது. அலெக்ஸ் இடையே ஒரு முறை ஒரு மாதமளவான விடுமுறையில் கிரேக்கம் போய்வந்தான். எல்ஸி திரும்பிவரமாட்டாள் என்றுதான் நினைத்திருந்தான் கலாபன். ஆனால் தக்கமாச்சு என்ற ஜப்பானிய தீவுத் துறைமுகத்தில் கப்பல் நின்றபோது அவசரமாக மேலே ஏறி ஓடிவந்தது முதலில் எல்ஸிதான்.

அலெக்ஸூம் எல்ஸியும் பயண ஒப்பந்தம் முடியும்வரை
கப்பலில்
இருந்தார்கள்.

கலாபனும்கூட.



devakanthan@thaiveedu.com

## வீடா? வியாபாரமா?? காணியா?? கட்டிடமா?? வர்த்தகத் தொகுதியா???

எல்லா விலைகளிலும் எரி பொருள் நிலையங்கள், உணவுச் சாலைகள், சில்லறைக் கடைகள், Pizza / Fast food/ fish & Chips கடைகள் தனியாகவும் காணியுடனும் விற்பனைக்கு உள்ளன. மேலும் எல்லாவிதமான வியாபாரங்களும் செய்யக் கூடிய கடைகள் குறுகிய / நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு உள்ளன.


**COMMERCIAL**




**CONVENIENCE STORE BUSINESS**
*Weekly Sale $8000.00 **Cheap rent; ***ATM, 649 etc




**PIZZA + FAST FOOD BUSINESS**
*Weekly Sale $4500.00 **Cheap rent; ***Downtown Location




**BUSINESS + INCOME PROPERTY**
*Sale $52000/mth **Add. Income$ 2800; ***Main Street





**4 APART.+CONVENIENCE+ESSO**
*Very Profittable Property + Business **New Pumps





**COFFEE TIME+CONVENIENCE+GAS**
*Property included! New pump!! ** Highway location!! ***15%Cap

**RESIDENTIAL**




**LEASE TO OWN!!**
*Large Bed Room ** Less than rent **Walk to mall/ Doctor/ TTC




**ZERO DOWN!!!**
*Luxury 2 BR+2 WR ** Walk to University/Hospital/ TTC & GO




**LESS THAN A YEAR NEW!**
*3BR+3WR **Walk to all amnesties** Miniutes to 407




**DON'T MISS THIS!!**
** 5 Yr new 4BR Home**Walk to YRT/TTC/ Shopping ** Hwys 407




**MODEL HOME!!**
4BR+4WR -2650Sqft **Fin. Basmnt ** Hardwood/ Moulding!

**We have locations for Lease / Sale suitable for **Doctor's office/ Pharmacy** and related Businesses.
**Design/ permits also can be arranged at very competitive rates.

** உடனடியாக பின்வரும் இடங்களில் வீடுகள் விற்பதற்குத் தேவைப்படுகின்றன!!!

=Stains & Finch; 14th avenue & 9th Line; Sheppard & Meodoville ; Port Union/ Lawrence; Ellesmere & Morish & Other parts of GTA=

** இருபத்து ஓர் நாட்களுக்குள் நம்பிக்கையாக நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்!!!

அழையுங்கள்!!!

Uthayan Nadarajah
Broker
Direct : 416-724-9945

RE/MAX
RougeRiver realty ltd, Brokerage
416-286-3993

Vijay Thiagarajah
Broker
Direct: 647-297-7144

****** Every office is independantly owned and operated ****** Not intended to solicit any property under contract ******

# JRS COLLEGE

OUR COMMITMENT IS QUALITY TRAINING

## Scarborough Campus

**English Class (Business Communication)**
Starts on Apr 18th 2010 @ 1.00 PM (Sunday)

**Cashier Training**
Starts on May 2nd @ 9.00 AM (Sunday)

**Food Handler Training**

**FREE COMPUTER BASIC CLASS**
Etobicoke Campus Starts on Mar 27th @ 10:00 AM

Are you unemployed or laid off ?

Please call for more Info.
(416) 292-2455

✱ Some Courses are not available in Etobicoke

## DIPLOMA PROGRAMS

**Office Assistant**




**Computerized Accounting**



**Accounting and Payroll Administration**



**Health Office Administrator (HOA)**



## CERTIFICATE COURSES

- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Accpac
- Bank Teller
- Cahier
- Food handling
- Tax Class
- Simply Accounting

**SCARBOROUGH CAMPUS**
(Midland & Finch)
PH 16-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
☏: 416-292-2455

**ETOBICOKE CAMPUS**
(Kipling & Dundas)
300-5359 Dundas St West
Etobicoke, ON M9B 1B1
☏: 416-207-9975

## காதல் வாழ்க்கை - 16

# இயற்கையைப் பேணிய இதயங்கள்

வி. கந்தவனம்

பாரி மன்னன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பறம்பு மலைக்குத் தலைவன். உடல் வலிமை மிகுந்தவன். மாரியைப் போல வாரி வழங்கிக் கொடைக்குப் பாரி என்னும் முத்திரையைப் பதித்தவன். இயற்கை வனப்பைப் பெரிதும் இரசித்தவன்.

ஒருமுறை ஒலிக்கும் மணிகளையுடைய நெடிய தேரிலே பாரி மன்னன் சென்று கொண்டிருந்தபோது வழியிலே அழகிய முல்லைக் கொடி ஒன்று அவனது கண்ணைக் கவர்ந்தது. தேரை விட்டு இறங்கி முல்லைக் கொடியைப் பார்வையிட்டான். பெருங் காற்றினால் அடியுண்டுபோலும் அது சரிந்து விழுந்து குலைந்து கிடந்தது. அன்பிற் சிறந்த அவனது இதயம் முல்லைக்கு இரங்கியது.

> “
> **சுற்றாடல்**
> **உள் ஊர் மட்டத்திலும்**
> **தனிப்பட்டவர்களாலும்**
> **அழுக்கடைகின்றது.**
> **கஞ்சல்**
> **குப்பைகளையும்**
> **அழுகும்**
> **பண்டங்களையும்**
> **கண்டபடி வீசிச்**
> **சூழலை**
> **அசுத்தப்படுத்துகின்றனர்.**
> **இதனால்**
> **கிருமிகள் பெருகி**
> **நோய்கள் பரவுகின்றது.**
> **சுத்தம் சுகம் தரும்.**
> **அசுத்தம்**
> **நோயையே தரும்.**
> ”

‘மனிதருக்கு இந்த உலகத்தில் மனம்போல வாழ்வதற்கு உரிமை இருப்பதுபோலவே முல்லைக் கொடிக்கும் வாழ்க்கைச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். அது படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாது தவிக்கலாமா? புலவர்கள் தமது நாவன்மை காட்டிய பொழுதெல்லாம் வாரி வழங்கியிருக்கிறேன். முல்லைக் கொடிக்கு அவ்விதம் பாடமுடியுமா, என்ன? அதன் அவலத்தைப் போக்குவதும் மன்னவனின் கடமையே யாகும். வாயில்லாத உயிரினங்களுக்கு உதவுதலே உண்மையான அறம்’ என்றெல்லாம் வள்ளல் சிந்தித்திருத்தல் வேண்டும்.

தேரைத் தெருவோரம் நிறுத்தி அதன்மேல் முல்லைக் கொடியைப் படரவிட்டு அழகு பார்த்தான் பாரி. இப்பொழுது முல்லைக் கொடி பொலிவுற்றுக் காணப்பட்டது. அது தழைத்து நன்றாகப் படரவேண்டும் என்று வாழ்த்தி, மனநிறைவோடு நடந்து தன் அரண்மனைக்குச் சென்றான் மன்னன்.

நெஞ்சை அள்ளும் இந்த விந்தைமிகு சம்பவத்தைக் கபிலர் பின்வறுமாறு பாராட்டுகின்றார்:

...பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி...
(புறம் - 200)

ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
(புறம் - 201)

சிறுபாணாற்றுப்படை என்ற நூலிலும்,

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி விழுஞ் சாரற்
பறம்பிற் கோமான்...

என்று பாரியின் பெருந்தன்மை புகழப்பட்டுள்ளது.

பேகன் என்று இன்னொரு குறுநில மன்னன், கடையெழு வள்ளல்களில் ஒருவன், பாண்டி நாட்டில் பழனி மலையை ஆண்ட தலைவன். கான மயிலின் ஆடலைக் கண்டு களித்துப் பரிசாக அதற்குப் பட்டாடை போர்த்திய பெருமையுடையவன்.

உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
(புறம் - 141)

என்று பரணர் புகழ்கின்றார் பேகனின் கொடை வளத்தை. மஞ்ஞை உடாது, போராது என்று தெரிந்தும் பட்டாடையை அதற்குப் பரிசாக அளித்த எங்கோமான் என்று வியக்கின்றார் புலவர்.

மயில்கள் குளிர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் இயல்பின. பொதுவாக மழைக் காலத்திலே அவை நடமாடிக் களிக்கும். மழைப் பனியில் மயில் நடுங்குமென அஞ்சியே பேகன் ஆடை அளித்தான் என்று மற்றுமோர் இடத்தில் குறிப்பிடுகின்றார் புலவர்.

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமான்
பெருங்கல் நாடன் பேகன்

என்று சிறுபாணாற்றுப்படையிலும் இவன் புகழப்படுகின்றான்.

இந்நிகழ்வுகள் தமிழர் இயற்கை குறித்துக் கொண்டிருந்த கொள்கைக்கான உதாரணங்கள். சம்பந்தப்பட்டவர்கள் மன்னர்கள். எனவே அவர்கள் தத்தம் நாடுகளில் இயற்கையைப் பேணிப் பாதுகாத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.



ஓவியம்: மு.சு. சிவகுமாரன்

இக்காலத்தில் காடுகளை அழித்தும் விலங்குகளைக் கொன்றும் இயற்கையைச் சின்னாபின்னமாக்குகின்றன பல நாடுகள். கைத்தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அளவுக்கு மீறிய நச்சுப் புகைகளாலும் இரசாயனங்களாலும் இயற்கைச் சூழலை மாசுபடுத்தி வருகின்றன கைத்தொழில் நாடுகள். இவற்றால் ஏற்படும் பாதிப்புகளை அறிவியலாளர் சுட்டிக்காட்டியதன் விளைவாக, இன்று இயற்கையைப் பேண வேண்டும் என்னும் கொள்கை ஓர் இயக்கமாகவே வளர்ந்து வருகின்றது.

உள் ஊர் மட்டத்திலும் சுற்றாடல் தனிப்பட்டவர்களால் அழுக்கடைகின்றது. கஞ்சல் குப்பைகளையும் அழுகும் பண்டங்களையும் கண்டபடி வீசிச் சூழலை அசுத்தப்படுத்துகின்றனர் பலர். இதனால் கிருமிகள் பெருகி நோய்கள் பரவச் செய்கின்றன. சுத்தம் சுகம் தரும். அசுத்தம் நோயையே தரும்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் சூழலைப் பாதுகாக்க வேண்டியது குடிமக்களின் தலையாய கடமையாகின்றது. இயற்கைப் பாதுகாப்பு ஓர் மகத்தான அறம். இல்லறத்தில் இருப்பவர் விரும்பிச் செய்யவேண்டிய அறம். குப்பைகளைக் குறிப்பிட்ட இடத்தில் கொட்டுதல், குறித்த காலத்தில் அவற்றை எரித்தல் அல்லது எருவாக்குதல் போன்றவற்றில் குடும்பத்தவர் கவனம் செலுத்தல் வேண்டும். மேலும் பொருட்களைப் பொறுப்புடன் கையாளுதல், மீளப் பாவித்தல், புதிப்பிக்க முடியுமானாற் புதுப்பித்தல் முதலிய வழிமுறைகளால் குப்பைகளைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

அறம் பொருள் இன்ப அடிக்கல் இயற்கை
இறைதரும் சுகமும் இயற்கையின் நிழலே.

இயற்கைத் தமிழ்
(சூழற் பாதுகாப்பு)



kandavanam.v@thaiveedu.com

இணைந்து
கொள்ளுங்கள்
‘தாய்வீடு’
facebookஇல்
www.facebook.com/thaiveedu

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200
Dir: 416.908.6003



3 Bedroom, 3 Washroom
End unit like semi,
Double Garage
7 Years Old
Morningside & Finch
Exclusive



பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்
CALL 416.908.6003 SAVE MONEY


வீடு, வியாபாரம், காணி
வாங்க விற்க அழையுங்கள்!
Mortgage 2.19% ..Refinance also.
416- 490-7653
SOLD
SOLD
SOLD
SOLD
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
416-894-1187
email: rpushpakanthan@trebnet.com
NEED MORE HOMES FOR BUYERS
selling commission only 1.25%
sell your home
in 72 Hrs*
EXPERIENCE! COMMITMENT! RESULTS!
Pat Pushpakanthan
Real Estate BROKER
CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07
OPEN HOUSE
Friday sat, sun
Ellesmere/B'mount
249 000/-
2bm 2wsrm newer tridel
0% Downpayment
Available
Only pay 958/- /mo mortgage call for detail
Security, executive living
Markham
9' Ceilings, Upgraded Gourmet Kitchen With Granite Counter-top, Gleaming Oak Floors On Main, Stairs
Nielson/ mclevin
2 BM /2wsrm CONDO
APT FR SALE
$153 900
0% down pymnt
670/- mo pymnt mortgage call fr detail
25 Acre Lot
Warden/Stouffville
Scarborough
4 bm/wsrm $444000, bsmnt finished
Mccowan/ 16 th ave
439 000/--
Excellent area best high school
Well kept 4 bdrm/2 garage
Harwood...ajax
325000--
Excellent location 3 bm/ 3 wsrm close to 401, school, shoping
East scaborough
3 bm / 3 wsrm closed to uft
East scaborough
Excellent area interlock driveway Well kept 5 bdrm/5 wsrm finished bsmnt $50000 spent..
Ellesmere/m.vale
Great Location! Custom Interior Design,Extra Hude Corner Lot,Lots Of Upgrades,Balcony,Hardwood Floors,Granite Kit Counter Top,Int & Ext Pot Lights,Top Custom Kit Appliances,Upgraded Cabinets,4Arched Headers,Whirlpool Tub 6Jets,Oak Stairs With Railing,Over $60K In Upgrades,T
Brand new homes call me
for detail
Starts from
Upper 300 000.....
Condo for sale..
newer also
2bm 2 wm in Scar 139000/-
2bm 2 wm in Scar 147000/-
Studio newer in Scar 169000/-
1 bm 1 wm in Scar 185 000/-
1+1 newer in Scar 229 000/-
Monthly payment
start from
$670/- /month*
Business
Bar for sale
Be your own boss
4 bar available
Cafetaria
Location ! Location ! Open 7- 4:30 pm only
Rent is less .....high income
Located in High rise building
3 cafeteria available
*some condition applies ** not intended to solicit to the buyers under contract *Each office independently owned and operated
** not intended to solicit property currently listed for sale *individual performance**Also available

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 6

# ஆழத்து முத்துக்கள்

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S.* பாலச்சந்திரன்

# 'பொப்பிசைத் திலகம் எஸ். இராமச்சந்திரன்



ப.ஸ்ரீஸ்கந்தன்

'வானவில்லின் வர்ண ஜாலமே
வாலிபப் பருவ காலமே
காலை மலரும் மலர் யாவுமே – ஒரு
மாலை யானவுடன் வாடுமே'

நாளை மாறும் இந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கலாம் ஓடிவா என்று எம்மையெல்லாம் அழைத்து மேடையில் ஆடிப் பாடிய அந்த மதுரக் குரலுக்குச் சொந்தக்காரன் தான் எங்கள் பொப்பிசைத் திலகம் எஸ். இராமச்சந்திரன். அரியாலை மண்ணில் தவழ்ந்து இலங்கை முழுவதும் புகழ் பெற்ற இந்த அற்புதமான கலைஞனைப் பற்றி எழுதுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

அமைதியான சுபாவம். அதிகம் பேசமாட்டார். முகத்தில் என்நேரமும் தவழும் புன்சிரிப்பு, அரியாலை சனசமூக நிலையத்தின் கலைகள் நிரம்பிய காசிப்பிள்ளை அரங்கையும் இவரது வீட்டையும் நிலையத்தின் விளையாட்டு மைதானமே இணைக்கிறது. இவரது ஆரம்ப கால கலைவாழ்வு இலகுவானதற்கு இதுவே காரணமாக அமைந்து போனது.

அப்போது நாடகங்களில் காட்சிகளுக்கு இடையேயான இடைவெளியை நிரப்ப பின்னணியில் பாடகர்கள் சினிமாப் பாடல்களைப் பாடுவார்கள். அவ்வாறு ஆண், பெண் இரு குரலிலும் பாடவல்ல 15 வயதே நிரம்பிய இராமச்சந்திரன் பின்னணியில் பாடிய போது இவ்வளவு பெரும் பாடகராக பின்னாளில் புகழ் பெறுவார் என்று அப்போது யாரும் எதிர்பார்க்கவில்லை.

இவரது கலைப்பிரவேசம் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசலையில் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போதே ஆரம்பமாகி விட்டது. ஆசிரியர் தம்பாபிள்ளை, சங்கீதபூஷணம் பரமசாமி ஆகியோர் போட்டி வைத்து இவரைத் தேர்ந் தெடுத்து கலைவிழாவில் பாட வைத்துள்ளார்கள். இவர் முதல்முறை மேடை ஏறி ஆடிப்பாடி நடித்த பாட்டு "குன்றுதோர் ஆடி வரும் குமரவடிவேலன்" என்பதாகும்.

காசிப்பிள்ளை அரங்கில் மேடையேறிய அரியாலை நாடகமன்ற நாடகங்களில் பெண் பாத்திரங்கள் பாடும் காட்சிகளுக்கு இவரே குரல் கொடுத்தார். நடனக் காட்சி ஒன்றுக்கு இவர் பாடிய "பளிங்கினால் ஒரு மாளிகை – பருவத்தால் மணி மண்டபம்" இன்றும் மனதில் நிற்கிறது. பின்னர் சாந்தி என்ற நாடகத்தில் பிறந்த நாள் கொண்டாடும் காட்சியில் நேரடியாகத் தோன்றி "பிறந்த நாள் - இன்று பிறந்த நாள்" என்ற பாடலைப் பாடி ஆடி அனைவரையும் அசரவைத்தார்.

பாடகராக வேண்டும் என்ற வெறி அவர் உள்மனதில் அப்போதிருந்தே ஆட்கொண்டிருக்க வேண்டும். 1974ல் சனசமூகநிலைய வெள்ளி விழாவின் போது அதே அரங்கில் இடம் பெற்ற மாபொரும் பொப்பிசை நிகழ்ச்சியில் மைதானம் நிரம்பிய மக்கள் முன் பொப்பிசைச் சக்கரவர்த்திகளுடன் இவரும் ஒருவராக மேடையில் ஆடிப் பாடியது மகிழ்ச்சியை விட பெருமிதத்தையே தந்தது. ஒரு இளைஞனின் விடாமுயற்சியின் வெற்றி, பலன் அதில் தெரிந்தது.

பொப்பிசைப் பாடல்களில் இராமச்சந்திரன் அவர்களது பாடல்கள் கேட்பதற்குச் சற்று இதமாக இருக்கும். அவரது மதுரக் குரலுக்கு



ஏற்ற விதத்தில் பாடல்கள் அமைந்திருக்கும். அல்வாய் சுந்தரம் எழுதிய 'வானநிலவில் அவளைக் கண்டேன் நான்', வண்ணை தியாகன் எழுதிய 'நத்தை என ஊர்ந்து நடக்கின்றார் நாலு காலில் முருகேசனார்', ஈழத்து இரத்தினம் இயற்றிய 'ஆடாதே ஆடாதே சூதாட்டம் ஆடாதே' என்பன இவருக்குப் புகழ் சேர்த்த பாடல்கள் ஆகும்.

எனினும் 'கனவில் வந்த கனியே' என்ற பாடலே இவரது முதல் பொப்பிசைப் பாடலாகும். இவரது பெரும்பாலான பாடல்களை இசையமைப்பாளர் கே.எம். சவாஹிர் (இசையமைப்பாளர் பயாஸின் தந்தை) அவர்களே இசையமைந்திருந்தார். இவரது பாடல்கள் சமூக சீர்திருத்தங்கள் பற்றியனவாக இருந்தமை சிறப்பு அம்சங்களாகும். பொப்பிசைப் பாடல்களைப் பாடியது மட்டுமல்ல பல தமிழ்ப் பொப்பிசைப் பாடல்களின் உருவாக்கத்திற்கும் காரணகர்த்தாவாக விளங்கினர். இதன் பின்புலத்தைச் சற்றுப் பார்ப்போம்.

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் பாட்டோடு நடிப்பையும் சிறப்பாகச் செய்து வந்தார். கண்டி அரசன் நாடகத்தில் அரசிளங்குமாரி ஹாமியாகத் தோன்றி பாடி நடித்ததைக் கண்டு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் கட்டித்தழுவிப் பாராட்டியது இவரது வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாக அமைந்தது.

இதே காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய இசைக்குழுக்களான மண்டலேஸ் வரனின் கலாலயாவில் தேவராஜா என்ற பாடகருடனும், பின்னாளில் அருணா இசைக்குழுவில் பரமசிவம் என்ற பாடகருடனும் இணைந்து பட்டி தொட்டிகள் எல்லாம் பாடி வந்தார்.

இவ்வாறான இவரது கலை அனுபவங்கள் காரணமாக 1990ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராக இணைந்து கொண்டார். அப்போது இவருக்கு வயது 21. வானொலிக்காக தென்னிந்தியக் கலைஞர்களான பாலமுரளி கிருஷ்ணா, சீர்காழி கோவிந்தராஜன். ரி.எம்.சௌந்தரராஜன், எம்.எல். வசந்தகுமாரி, கே.ஜே.யேசுதாஸ் போன்றோரின் இசைக் கச்சேரிகளையும், பேட்டிகளையும் இவர் ஒலிப்பதிவு செய்துள்ளார். இவை அவருக்கு ஊக்கத்தைக் கொடுத்தன.

பிரபல அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீதும் இவரும் கொழும்பில் ஒரே அறையில் நான்கு வருடங்கள் தங்கியிருந்துள்ளனர். அப்போது வர்த்தக சேவையில் இடம் பெற்ற துள்ளிசையில் ஆங்கில, சிங்களப் பாடல்களே இடம்பெற்றன. இதில் தமிழ்ப் பாடல்களை ஒலிபரப்பினால் என்ன என்று இருவருள்ளும் எழுந்த கேள்வியால்தான் தமிழ்ப் பொப்பிசைப் பாடல்கள் பின்னாளில் பல்கிப் பெருகிப் பெருக்கெடுத்தன.

இவர் மேடைப் பாடல்கள் மட்டுமல்லாது ஈழத்துத் திரைப்படங்களுக்கும் பின்னணி பாடியுள்ளார். "யார் அவள்" என்ற படத்தில் ஏ.இ.மனோகரன், மாலினி பொன்சேகா ஆடிப்பாடும் காட்சிக்கான பாடலை சுஜாதா அத்தநாயக்காவுடன் சேர்ந்து பாடியிருந்தார். இதேபோல் "நான் உங்கள் தோழன்" படத்தில் இடம்பெற்ற "பொங்கலோ பொங்கல்" பாடலை கனகாம்பாள் சதாசிவத்துடன் இணைந்து பாடினார்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்புத் துறையில் 31 வருடங்கள் கடமையாற்றிய எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் நிகழ்ச்சி அமைப்பாளராக உயர்ந்து ஓய்வு பெற்றவர். பின்னர் இலங்கை தமிழோசை இணைய வானொலியில் ஊடக ஆலோசகராகவும், மக்ஸ் தொலைக்காட்சி, வானொலி நிறுவனத்தின் முகாமையாளராகவும் பணிபுரிந்தார்.

இலங்கை வானொலியில் பணிபுரியும் போது எவ்வாறு மற்றக் கலைஞர்களைத் தேடி, உருவாக்கி ஊக்கம் கொடுத்தாரோ, அதே போல் ஓய்வு பெற்ற பின்னரும் எம்.மோகன் என்ற கலைஞருடன் சேர்ந்து ஒலி-ஒளிபரப்பு பயிற்சி நிலையத்தை அமைத்து புதிய இளம் கலைஞர்களை அறிமுகம் செய்து வருகிறார்.

ராமு அல்லது ராமர் என்று நண்பர்களால் அழைக்கப்படும் சந்திரன் என்ற இந்த நிலவினை நினைக்கும் போதெல்லாம்

"வான நிலவில் அவளைக் கண்டேன் நான்
வாச மலரில் அவளைக் கண்டேன் நான்"

என்ற அவரது பிரபலமான பொப்பிசைப் பாடல் நினைவுக்கு வருவது தவிர்க்க இயலாது.

sriskandan@thaiveedu.com

■ ■ ■

தொடர்தல் 97ம் பக்கம்



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RESP SPECIAL!**

இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

## Life Insurance

**Critical Illness Insurance**

Home Equity Line of Credit

## Disability Insurance

## Mortgage Insurance



RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)


INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200



# Thinking of Buying or Selling

$499,900

Markham & Passmore
4+2 Bedrooms, 5 Washrooms


$365,000

Morningside & Sheppard
3+2 Bedrooms, 3 Bedrooms

$226,500

Islington & Dixon
3 Bedrooms, 2 Washrooms

$434,900

9th & Reeves Way Blvd.
4 Bedrooms, 3 Washrooms

$434,900

Warden & Finch
3+1 Bedrooms, 4 washrooms

$69,900

Island Rd. & Hwy 401

$529,900

Main & Maple (Milton)
4 Bedrooms, 3 Washrooms, 2500 Sq.ft

$99,000 + Stock


Dufferin & Eglinton
Discount Variety Store with Lotto

* Complimentary Evaluation of Your Home
* Written cancellation guarantee
* Professional Home Staging
* Guarantee advertising
* Public Open House

Also Contact in Regards to Investing in Newly Built
HOMES - CONDOS COMMERICAL

HomeLife/Future Realty Inc.,
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
B: 905.201.9977 F: 905.201.9229

*Independently Owned and Operated, REALTOR

Raja V.S. Rajagopal
Sales Representative
Dir : 416.727.8647
Email : sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com




மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey,
4+2 Bedrooms,
5 Washrooms
Veterans/Touchette (Barrie)
For Sale
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
Warden/407
For Sale
$299,000
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Gore/Ebenezer
For Sale
$339,000
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Castlemore Blvd / Goreway Dr.
For Sale
$374,905
Semi-Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms
Mcvean / Castlemore
For Sale
$479,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
For Sale
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Mcvean/Hunts Point
For Sale
$479,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Castlemore/ Mcvean
For Sale
$529,900
Detached 2-Storey, 4 Washrooms, 4 Bedrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
Call before you list, See the Difference!!!
TOP PRODUCER - 2009
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# நகைச்சுவைக்கலைஞர் 'கிளவுன்' சுந்தரம்

இப்பொழுதும் நல்ல நினைவிருக்கின்றது. நாங்கள் அப்பொழுது எஸ்.எஸ்.சி வகுப்பில் படித்துக்கொண்டிருந்தோம். பொதுவுடமை-யாளரும், குறிப்பிடத்தக்க சிறந்த பேச்சாள-ருமான எங்கள் ஆசிரியர் வி. பொன்னம்பலம் அவர்கள் ஒருநாள், கூத்துக்கள், நாடகங்கள், நகைச்சுவைகள் பற்றிப் பேச்சு வந்த பொழுது, இவ்வாறு சொன்னார்.

"இப்பொழுது இருப்பவர்கள் என்ன நகைச்சுவை நடிகர்கள்? கிளவுன் சுந்தரம் என்ற நகைச்-சுவை நடிகருக்கு என். எஸ் கிருஷ்ணன் கூடக் கிட்ட நிற்கமுடியாது. நான் மாணவ-னாக இருந்த காலத்தில், அவர் நாடகம் ஒன்றில் நடிக்கின்றார் என்றால், மேடைக்கு முன்பாகவே நான் போய் இருப்பேன். அப்படி ஒரு நடிப்பு. பபூன் சுந்தரம் என்று பலராலும் அழைக்கப்படுவர். இந்தியாவில் அவர் இருந்திருந்தால் சினிமாவில் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகனாக அவர் இருந் திருப்பார். என்ன செய்வது இங்கு இருக்கிறார்" என்று சொல்லி முடித்தார், வி. பொன்னம்பலம் ஆசிரியர்.

பிறகு மாணவன் ஒருவர் அந்த நகைச்-சுவைக்கலைஞரை எனக்கு அறிமுகப்படுத்-தினார். அதன் பின் அவரைக்கண்டு கலந்து பேசி மகிழ்ந்ததெல்லாம் ஒரு காலம்.

பாடசாலை நாடகம் ஒன்றில் உருவேறி மயக்கம் வருவதான காட்சி ஒன்றில் தத்ரூப-மாக நடித்து மயங்கி விழுந்தபொழுது மேடையின் முன்வரிசையில் இருந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவரது தாயார், அழுதுபுலமபிக் கொண்டு ஒப்பனை செய்யும் இடத்திற்கு ஓடியிருக்கின்றார். அந்தநேரத்தில் 'கிளவுன்' சுந்தரம் அடுத்தகாட்சிக்கு தயா-ராகிக்கொண்டு நிற்கிறார். மற்றைய நடிகர்கள், தாயாரை ஆறுதல்படுத்தி அனுப்புகின்றார்கள். கிளவுன் சுந்தரம் அதுபற்றிப் பினனர் கூறு-கையில் "எனது நடிப்பிற்குக் கிடைத்த முதல் பாராட்டுத் தான் அது" என்பார்.

இத்தனை சிறந்த பாராட்டைப்பெற்ற கிளவுன் சுந்தரம் அவர்கள் ஓர் ஆசிரியர், ஓவியர், ஒப்பனைக் கலைஞர், மேடை அலங்காரக் கலைஞர், சிலேடைக்கதையாளர். கலை-வடிவில் தன் திறமைகளை எங்கெங்கு காட்ட முடியுமோ அங்கங்கு அந்தந்த வடிவில் அழகுறக்காட்டிய உண்மையான கலைஞன்.

1921ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் திரு.வெற்றிவேலு இராசம்மா தம்பதிகட்கு சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தார். சண்டிலிப்-பாய் தமிழ் சைவப் பாடசாலையில் (சிறப்பர் பள்ளிக்கூடம்) ஆரம்பக் கல்வியையும் அளவெட்டி சீனகலட்டி ஞானோதய வித்தி-யாசாலையில் உயர்தரக் கல்வியையும் பெற்றார். ஆரம்ப காலத்தில் அமெச்சூர் நாடகங்களில் நடித்து வந்த திரு.சுந்தரமூர்த்தி அவர்கள், இந்தியா சென்று வந்த பின் தொழில் நடிகராக மாறத்தொடங்கினார்.

பேராசிரியர் சரவணமுத்து அவர்களின் ஆசீர்வாதத்துடன் நாடகங்களில் நடிக்கத் தொடங்கியவர் கரவெட்டி கிருஷ்ணாழ்வார், புன்னாலைக்கிருஷ்ணன், கே.கே.வி.செல்லையா (அறிவிப்பாளரும், கலைஞருமான ரேலங்கி செல்வராகாவின் தந்தை) ரேடியோ சிலோன் சாணா, நாடக மேதை கலையரசு சொர்ண-லிங்கம், மாசிலாமணி, முத்துக்குமார் இவர்க-ளுடனும் சேர்ந்து பல நாடகங்களில் நடித்துள்ளார். பிற்காலத்தில் ஆசிரியர் ஏ.ரி.பொன்னுத்துரை, சைவம் மு.சிவானந்தன், கவிஞர் வி.கந்தவனம் போன்றவர்கள் இவ-ருடன் நடித்த சிறந்த நடிகர்கள்.


லட்சுமிகாந்தன் நாடகத்தில் வித்தியாசமான ஐந்து பாத்திரங்களை ஏற்றுத்திறம்பட நடித்-ததால், பேராசிரியர் சரவணமுத்து அவர்களால் பாராட்டப்பட்டு கிளவுன் என்ற பட்டத்தைப் பெற்றார். கிளவுன், பவூண், சி.வி.எஸ் என்ற பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்ட இவர், நாடக உலகில் அந்தக்காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்.

"மேடையில் சுந்தமூர்த்தி என்றால்
வீட்டில் யாரும் இருப்பாரோ
கூடித்திரள்வார் விழுந்தடித்து
கூத்தைக்கண்டு களிப்பதற்கே"

என்று அவருடன் சேர்ந்து நடித்த கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் கூறியுள்ளார்.

வெறுமனே நகைச்சுவை என்று மட்டும் இல்லாமல், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் போன்று சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தனது நாடகங்களில் சொல்லி வந்தார். மதுவிலக்கு, சாதி ஒழிப்புப் பிரச்சாரங்களை யும் நாடகமேடைப்பாடல்கள் மூலம் செய்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் "தினகரன்" பத்திரிகை நடாத்திய விழாவில் ஆசிரியர் ஏ.ரி.பொன்னுத்-துரை 'அந்தர் ஆறுமுகம்' எனும் நாடகத்தில் நடிக்க வைத்தார். இவர் நடித்த பாத்திரத்தில் வழமையாக நடிக்கும் கலையரசு சொர்ண-லிங்கம், அன்று அந்த நாடகத்தைப் பார்க்க வந்திருந்தார். நாடகத்தைக் கருத்தூன்றிப் பார்த்த கலையரசு "இனிமேல் நான் இந்தப் பாத்திரம் செய்யப் போவதில்லை. அது சுந்தரமூர்த்திற்குரியதே." என்று மேடையில் வைத்தே பகிரங்கமாகக் கூறி கிளவுன் சுந்தரம் அவர்களைப் பாராட்டினாராம். இதைவிட அவர் நடிப்பிற்கு வேறு என்ன சான்றிதழ் வேண்டும்?



## சமயோசிதம்.

சாவகச்சேரியில் ஒரு பாடசாலையில் நாடகம் கிளவுன் சுந்தரம் அமெச்சூர் நடிகராக அதில் பங்கேற்கின்றார். அவருடன் கூட இன்னும் ஒரு ஆசிரியரும் சேர்ந்து நடிக்கின்றார். அவர் பண்டிதர் (பெயர் நினைவில்லை) முன்னமே தயார்ப்படுத்திய வசனங்கள் எதுவும் மனப்-பாடம் செய்யாமல், எழுந்தமானத்துக்கு பேசி நடிக்கும் நாடகம். பண்டிதர் தனது வித்துவத்-தனத்தை மேடையில் காட்டநினைத்து இவ்வாறு சொன்னார்.

"தமிழில் இருந்து வந்த பலசொற்கள் தான் இன்று ஆங்கிலத்தில் இருக்கின்றன. மழைக்-குப் பிடிக்கின்ற குடையை ஆங்கிலத்தில், அம்பிரல்லா என்கிறார்கள். அது சுத்தத்தமிழ் - அம்பு என்றால் தண்ணீர், இல்லா (நில்லா) என்றால் நிற்கமாட்டாது. அதுதான் அம்பி-ரல்லாவாகியது என்று புது விளக்கம் அளித் தார். பண்டிதரின் கண்டுபிடிப்புக்கு நல்ல பாராட்டுக்கள். அதற்கு சரியான பதிலடி கொடுக்க நினைத்தார், கிளவுன் சுந்தரம். உடனே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "பண்டிதர் படித்தவர், அவர் சொல்வதில் தவறு இருக்கமாட்டாது – ஆனால் எனக்குத் தெரிந்த-வரையில் உங்கள் அனுபவத்தில் பாருங்கள், ஒரு கல்யாணவீடு, மரணவீடு இப்படியான இடங்களில் நாங்கள் வைத்த குடை எங்க ளுக்குக் கிடைப்பதில்லை. அம்பிரல்லா என்றால் எங்களுக்கு அம்பிடுறேல்ல. அம்பிடுறேல்ல என்ற சொல் தான் திரிபு பெற்று அம்பிரல்லா என்ற பெயர் வந்திருக்குமோ என்று எனக்கொரு சந்தேகம்".

என்று கிளவுண் சுந்தரம் சொல்லிமுடிக்க, சபையில் ஒரே கரவொலி. மேடையில் இருந்து இறங்கிய பின் சுந்தரம் சமயோசிதமாச் சமாளித்துக் கரவொலி பெற்றதை பண்டிதரே கைகொடுத்துப் பாராட்டினாராம்.

நடித்துக்கொண்டிருக்கும் பொழுது பொய்யாக வைத்த மீசை தவறிக்கீழே விழுந்தாலும், அது தானாகவே விழுந்தது போல் காட்டாமல் சாமர்த்தியமாக அதற்கும் ஏதோ ஒன்றைச் சொல்லிச்சமாளித்துவிடுவார். ஒருமுறை சண்டிலிப்பாய் இளைஞர் மன்றம் நடத்திய "நீதி எங்கே" நாடகம். சுந்தரமூர்த்தி அவர்-களும் நடித்தார். பெரிய ஒட்டுமீசை. மன்ன-ராட்சியின் கொடுமைகளைச்சொல்லும் கட்டம். ஏதிர்பாராதவிதமாக இவரது ஒருபக்கமீசை விழுந்துவிட்டது. உடனே இப்படிச்சொல்லி-யிருக்கிறார். "மன்னனின் கொடுமைகளை நினைக்க என்மீசையே துடித்து தாங்காமல் விழுந்து விட்டது" எப்படி சமயோசிதம். இந்த சமயோசித புத்தியுள்ள சிறந்த நடிகர் தன் நடிப்பிற்காக பல இடங்களில் பரிசும், பாராட்டும் பெற்றவர்.

அகதிமுகாம்களுக்குப் பக்கத்தில் ட்ரம்மில் தண்ணீர் வைத்திருப்பார்கள். அதில் "குடி தண்ணீர்" என்று எழுதியும் இருப்பார்கள். நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது போன்று ஓரிடத்தில் பார்த்த சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் "இங்கு வந்தால் கட்டாயம் தண்ணீர் குடிக்கவேண்டும் போல் இருக்கின்றது. அதனால் தான் "குடி தண்ணீர்" என்று கட்டாயப்படுத்-துவது போல எழுதியிருக்கிறார்கள்" என்றார்.

**ஏ.எஸ். மகாலிங்கம்**



திரு.சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் நடிப்-புலகோடு மட்டும் அன்றி சிறந்த சித்திர ஆசிரியராகவும் திகழ்ந்தார். அதிபர் பொ.கனக-சபாபதி அவர்களின் மூத்தசகோதரரான முருகேசபிள்ளையும் இவரும் பால்யகால நண்பர்கள். அவரே சுந்தரமூர்த்தி அவர்களை ஆசிரியப்பணிக்கு அழைத்தவர். 1943-44ம் ஆண்டுக்காலத்தில் மாத்தளை தோட்டப்-பாடசாலையில் தன் ஆசிரியத்தொழிலை ஆரம்பித்து, பின்னர் சித்திரஆசிரியராக பல பாடசாலைகளிலும் பணியாற்றி இறுதிக்காலத்-தில், 1971ம் ஆண்டு தெல்லிப்பழை மகா-ஜனக்கல்லூரிக்கு மாற்றலாகி வந்து 1983ம் ஆண்டு ஓய்வு பெறும் வரை அங்கேயே கடமையாற்றி வந்தார்.

அந்தக் கல்லூரியின் நாடகங்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் சாகித்ய மண்டலப்பரிசு பெறுவதற்கு அளவெட்டி கவிஞர் செ.கதிரேசர்-பிள்ளை அவர்களுடன் சேர்ந்து பணியாற்றி-யவர். கதிரேசர்பிள்ளை எழுதிய பாரதக்கதை-களை அடிப்படையாகக்கொண்ட இந்த ஐந்து நாடகங்களுக்கான ஒப்பனை, பலசோடனை-கள், அலங்கார ஊர்திகள் என்று அழகுறச் செய்து கல்லூரியின் புகழுக்கு கைகொடுத்-தார் என்று அதிபர் பொ.கனகசபாபதி அவர்-களால் விதந்துரைக்கப்பட்டவர். இந்த ஐந்து நாடகங்களும், அதிபர் இட்ட தலைப்பான "பாரதம் தந்த பரிசு" எனும் பெயருடன் நூல்-வடிவில் வெளிவந்தது என அறிகிறோம். "பாரதம் தந்த பரிசு" என்பதில் உள்ள சிலேடை புரிகிறதல்லவா?

நாடகம், கூத்து, நகைச்சுவை, சிலேடை, ஓவியம், அலங்காரம், ஒப்பனை என்று பல துறைகளிலும் சிறந்து விளங்கிய சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் தனது அன்பிற்குரிய மனைவி சு.விசாலாட்சி, பாசத்திற்குரிய குழந்தைகளைப் பிரிந்து 05-19-1998ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

as.magalingam@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலக-றியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**இணைந்து கொள்ளுங்கள்**
**'தாய்வீடு'**
**facebookஇல்**
**www.facebook.com/thaiveedu**

# தவணைக் காப்புறுதி
# (Term Insurance)



**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -

இது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கப்படும் காப்புறுதித் திட்டம். எவ்வளவு காலப்பகுதிக்கு காப்புறுதி தேவை என்பதை காப்புறுதி பெறுபவர் முடிவு செய்யமுடியும். அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் இப்படியான திட்டங்களை வழங்குகின்றனர். 5 வருடம் முதல் 40 வருடங்கள் வரை விரும்பிய வருடங்களுக்கு காப்புறுதி செய்ய முடியும். இப்படியான திட்டங்கள் காலப்பகுதி குறைவாக இருக்கும்போது கட்டணம் மிகவும் குறைவாக இருக்கும். வருடங்கள் அதிகரிக்கும் போது காப்புறுதியின் கட்டுப்பணம் அதிகரிக்கும்.

தவணைக் காப்புறுதித் திட்டங்களில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்:

- காலப்பகுதி முடிவடைந்ததும் மீண்டும் தொடரக்கூடிய வசதி (Renewable).
- ஒரு தவணைக் காப்புறுதியை ஆயுட் காப்புறுதியாக மாற்றக்கூடிய வசதி.

இந்த இரண்டு அம்சங்களுடன் கூடிய தவணைக் காப்புறுதித் திட்டங்கள் மிகவும் பயனளிக்கக்கூடிய திட்டங்கள். தனிப்பட்ட ஒருவர் காப்புறுதி பெறும் போது அவரது காப்புறுதித் தேவை காலத்துக்குக் காலம் மாறுபடுவதால் காலத்தின் தேவைக்கேற்ப சரியான காப்புறுதித் திட்டத்தைப் பெறமுடியும்.

ஒருவர் சிறு வயதாக இருக்கும்போது கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக்கொள்வதற்கு தவணைக் காப்புறுதி மிகவும் உகந்தது. உதாரணமாக ஒருவர் 30 வயதில் 10 வருடங்களுக்கான காப்புறுதியை மிகக்கூடிய தொகைக்குப் பெற்றுக்கொண்டால் 10 வருடம் முடிவடைந்ததும் காப்புறுதியின் கட்டுப்பணம் அதிகரிக்கும். அப்போது காப்புறுதியின் தொகையைக் குறைப்பதன் மூலம் கட்டுப் பணத்தை அதிகரிக்காமல் செய்யமுடியும்.

தவணைக் காப்புறுதித் திட்டங்களில் அதிகமானவை 85 வயதுக்கு மேல் நீடிக்கமுடியாது. தவணைக் காப்பறுதித் திட்டங்கள் குறுகிய காலத் தேவையைப் பூர்த்திசெய்ய மிகவும் சிறந்த திட்டங்களாகும்.

அத்துடன், ஒருவரின் ஆயுட் காலத்தில் அவர் வேலைசெய்யும் காலம் 65 வயதுவரை என்பதால் அந்தக் காலப்பகுதியை தவணைக் காப்புறுதி செய்வதன்மூலம் காப்புறுதி செய்ய முடியும். 65 வயதுக்குப் பின்னர் காப்புறுதி தேவையானால் அந்தத் தவணைக் காப்புறுதியை ஆயுட் காப்புறுதியாக மாற்ற முடியும்.

தவணைக் காப்புறுதிக்கும் நிரந்தர ஆயுட் காப்புறுதிக்கும் உள்ள மிகவும் பெரிய வேறுபாட்டை இலகுவாக விளக்குவதானால்; தவணைக் காப்புறுதி ஒருவாடகை வீட்டில் வசிப்பதற்கும், நிரந்தர ஆயுட் காப்புறுதி ஒரு சொந்த வீட்டை வாங்கி வசிப்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் போலவே இருக்கும். காரணம் வாடகை வீட்டுக்கு கட்டுப்பணம் அந்தக் காலப்பகுதிக்கு மட்டுமே பயன்படும். அதன் பின்பு விரயமாகிவிடும். சொந்த வீட்டுக்கு கட்டும் பணத்தில் ஒரு பகுதியாவது உங்களுக்கு கடைசிவரை சொந்தமாக இருக்கும். நிரந்தர ஆயுட் காப்புறுதி கட்டிய பணம் விரயமாகாமல் பாதுகாப்பையும் கொடுப்பதற்கு உகந்த திட்டமாகும்.

### தவணைக் காப்புறுதி பெற்றுக் கொள்வதா நிரந்தர ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்வதா சிறந்தது?

நாங்கள் ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்ளும்போது தவணைக் காப்புறுதி பெற்றுக்கொள்வதா அல்லது நிரந்தர ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்வதா. எது சிறந்தது?

இதற்கான சரியான பதில் இரண்டுமே சிறந்தது.

ஆனால், எது உகந்த திட்டம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஆயுட் காப்புறுதித் திட்டங்களை அடிப்படையாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நிரந்தர ஆயுட் காப்புறுதி, மற்றது தவணைக் காப்புறுதி. நிரந்தர ஆயுட் காப்புறுதியை குறிப்பிட்ட காலத் தவணையில் செலுத்தி முடிக்கலாம் அல்லது ஆயுட் காலம்வரை பணம் கட்டலாம். நிரந்தரக் காப்புறுதியை நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் பணம்செலுத்தி முடிக்கலாம். அதன்பின்பு மாதாந்தப் பணம் எதுவும் கட்டவேண்டியதில்லை. அல்லது ஆயுட் காலம்வரை பணம்செலுத்தி நிரந்தர ஆயுட் காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Universal life with Guaranteed paid up option அல்லது whole life insurance with Guaranteed paid up option. இந்தத் திட்டம் குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடிப்பதால் பலரும் இந்தத் திட்டத்தையும் தவணைக் காப்புறுதித் திட்டத்தையும் ஒன்றாகப் பார்த்து இரண்டு திட்டங்களையும் தவறாகப் புரிந்து கொள்வதுமுண்டு.

### Term Insurance (தவணைக் காப்புறுதி):

இந்தத் திட்டம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே காப்புறுதி செய்யப்படும். அந்தக் காலம் முடிந்தவுடன் மாதாந்தக் கட்டுப்பணம் அதிகரிக்கும் அல்லது காப்புறுதித் திட்டம் இரத்துச் செய்யப்படும்.

ஆனால் தவணைக் காப்புறுதித் திட்டத்தின் மாதாந்தக் கட்டுப்பணம் நிரந்தர ஆயுட் காப்பறுதியுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாக இருக்கும். ஆனால் வயது கூடும்போது தவணைக் காப்புறுதியின் மாதாந்தக் கட்டுப் பணம் அதிகரிக்கும். நிரந்தர ஆயுட் காப்புறுதியைப் பொறுத்தவரையில் ஆயுட் காப்புறுதியின் மாதாந்தக் கட்டுப்பணம், தவணைக் காப்புறுதித் திட்டத்துடன் ஒப்பிடும் பொழுது ஆரம்பத்தில் அதிகமாக இருக்கும். ஆனால், அந்தக் கட்டணம் ஆயுட்காலம்வரை அதிகரிக்காது. காப்புறுதிக்கு வயது எல்லை கிடையாது. அதாவது ஒரு நிரந்தர ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொண்டவர் எத்தனை வயதில் இறந்தாலும் காப்புறுதிப் பணம் கிடைக்கும்.

**தவணைக் காப்புறுதி:**

தவணைக் காப்புறுதியானது சாதாரணமாக 10, 20 அல்லது 30 வருடங்களுக்கு மட்டுமே பாதுகாப்பானது. அந்த வருடங்களுக்குப் பின்னர் மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கும் அல்லது திட்டம் நிராகரிக்கப்படும்.

அதிகமான தவணைக் காப்புறுதித் திட்டங்கள் 85 வயதில் முடிவடையும். உதாரணமாக 30 வயது நிரம்பிய ஒருவர் 20 வருடத்திற்கு தவணைக் காப்புறுதித் திட்டம் 100,000 டொலர்களுக்கு பெற்றுக்கொண்டால் அதற்கான மாதாந்தக் கட்டுப்பணம் மாதாந்தம் 15 டொலர்களுக்குக் குறைவாக இருக்கும். அதேவேளை அவருக்கான நிரந்தர ஆயுட் காப்புறுதியின் மாதாந்தக் கட்டுப்பணம் சுமார் 38 டொலர்களாக இருக்கும். ஆனால் இந்தக் கட்டுப்பணம் ஆயுட் காலம்வரை 38 டொலர்களாகவே இருக்கும். ஆனால், தவணைக் காப்புறுதியின் கட்டுப்பணம் 20 வருடங்களின் பின்பு 40 டொலர்களாகவும் அடுத்த 20 வருடத்தில் மாதம் 305 டொலர்களாகவும் அதிகரிக்கும். அத்துடன் இத்திட்டம் ஒருவரின் 85 வயதுக்குப் பின்பு நீடிக்காது.

ஒருவர் 85 வயதுக்குப் பின்பும் வாழ்ந்தால் இவ்வளவு காலமும் கட்டிய பணம் விரயமாகும்.

நிரந்தர ஆயுட் காப்புறுதியில் நீங்கள் கட்டிய பணம் ஒருபோதும் வீணாகப் போகாது.

எனவே, எந்தத் திட்டம் சிறந்தது என்பதிலும் பார்க்க எந்தத் திட்டம் எங்கள் தேவைகளுக்கு உகந்தது என்பதை கருத்தில் கொண்டு ஒரு சரியான திட்டத்தை தெரிவுசெய்ய வேண்டும்.

உதாரணமாக ஒருவர் வீடு வாங்கும்போது அவரின் ஈட்டுக்கடனைப் பாதுகாப்பதற்கு தவணைக் காப்புறுதி சிறந்த திட்டமாகும். காரணம் அவரின் கடன்கால எல்லைக்கு ஏற்றவாறு தவணைக் காப்புறுதி பெற்றுக் கொள்ளலாம். கடன் கட்டி முடிந்ததும் காப்புறுதியை இரத்துச் செய்யலாம்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

> “தவணைக் காப்புறுதி
> ஒருவாடகை வீட்டில் வசிப்பதற்கும்,
> நிரந்தர ஆயுட் காப்புறுதி
> சொந்த வீட்டை வாங்கி வசிப்பதற்கும்
> உள்ள வேறுபாட்டைப் போலவே இருக்கும்.
> காரணம்
> வாடகை வீட்டுக்கு கட்டுப்பணம்
> அந்தக் காலப்பகுதிக்கு மட்டுமே பயன்படும்.
> அதன் பின்பு விரயமாகிவிடும்.”

இணையத்தளத்திலும்‘தாய்வீடு’
www.thaiveedu.com

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance | Industrial Alliance Insurance and Financial Services Inc. | Unity Life of Canada | Canada Life

# ஆயுட்காப்புறுதிகளும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்
- நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

| | Age 30 Male | Age 30 Female | Age 40 Male | Age 40 Female | Age 50 Male | Age 50 Female |
|---|---|---|---|---|---|---|
| Term 10 (R & C) $100,000 | $11.25 | $9.00 | $13.77 | $12.33 | $24.48 | $19.77 |
| Whole Life $100,000 | $38.17 | $33.63 | $57.16 | $47.36 | $106.64 | $81.75 |

### Critical Illness Insurance
25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்
நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

•

### Universal Life Insurance
ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

### Term Insurance
குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

## RESP
குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

Canada Learning Bond upto $500.00
Government Grant upto $40%
Industrial Alliance Education Bonus 15%

- digi Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x:407



Assumption Life · IA Industrial Alliance Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LiLand Insurance Inc.

**இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு**

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ♥ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**குரு அரவிந்தன்**

கனடா ரொறன்ரோவில் நிதிக் கட்டுப்பாட்டாளராகப் பணிபுரியும் சிறுகதை எழுத்தாளரான இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi